# வெளிப்படுத்தல் புத்தகம்

(எதிர்காலத்தைப் பற்றின வெளிச்சம்)

ஜான் குரு



# வெளிப்படுத்தல் புத்தகம்

(எதிர்காலத்தைப் பற்றின வெளிச்சம்)

ஆசிரியர்

**ஜான் குரு**

**Danny's Publications**

Tiruchengode

# வெளிப்படுத்தல் புத்தகம்

**ஜான் குரு**

Book of Revelation

John Guru

First Edition : October 9, 2021
5000 Copies
200 Pages (A5 size)
Rs. 80/-

**Editors**
Allen Anbarasan
Dr. Vinolia Rachel

**Proofreading**
Arul Mary Daniel

**Typing**
Sangeetha Nebhukathnesar
Jeya Chandra Roslin
Jeyamani
Mitharsana Mercy

**Contact**
Revelationtamil@gmail.com

**Audio-book:**

இந்த புத்தகத்தை ஆடியோ வடிவில் கேட்க,
கீழ் உள்ள Link யை பயன்படுத்தவும்.
https://bit.ly/30NnTE7

**Printed at:**

Danny's Publications, Tiruchengode

Mobile: 8904072759

இந்த புத்தகம் வெளிவர உதவிபுரிந்த
அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.
தேவன்தாமே அவர்களையும், அவர்கள்
குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக.

தேவனுடைய வார்த்தையை வாஞ்சையோடும்,
உண்மையோடும் தேடுகின்ற ஒவ்வொருவருக்கும்
இந்த புத்தகத்தை நான் அர்ப்பணிக்கிறேன்.

**இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைகொள்கிறவர்களும் பாக்கியவான்கள். காலம் சமீபமாயிருக்கிறது.**

**வெளிப்படுத்தல் 1:3**

*இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை வாசிக்கிற ஒவ்வொருவரையும், தேவன்தாமே இந்த வாக்குத்தத்தத்தினாலே ஆசீர்வதிப்பாராக. ஆமென்*

# அணிந்துரை

அநேக கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் பலமுறை வேதாகமத்தைப் படித்தும், வெளிப்படுத்தின புத்தகத்தை புரிந்துகொள்ள முடியாத புத்தகமாகவும், முத்திரை போடப்பட்டு விளங்கிக் கொள்ள முடியாத புத்தகமாகவும் இருக்கிறது என நினைக்கின்றனர். ஆனால் வெளிப்படுத்தின புத்தகத்தை வாசிக்கின்ற, கேட்கின்ற, அதன்படி செய்கின்றவர்கள் பாக்கியவான்கள் என்று வேதம் சொல்லுகிறது. கடமைக்காக வேதத்தை வாசிப்பவர்கள் அதை புரிந்து கொள்ள முடியாது. வேதத்தை ஆராய்ந்து தேடினால் மட்டுமே, ஆவியானவர் சத்தியத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே இந்த சத்தியங்களைப் புரிந்து கொள்ள முடியும். *தானியேல் 12:10* அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்.

எத்தனையோ குழப்பங்கள் நிறைந்த கிறிஸ்தவ உலகத்தில் வாழ்கின்ற நமக்கு சத்தியத்தின்படி இருக்கிறோமா, இல்லையா, உண்மை என்ன? கடைசி காலத்திலே எந்த சபையிலே நான் என்னை இணைத்துக் கொள்ள வேண்டும்? எது உண்மையான சத்தியம்? நான் இப்பொழுது இருக்கிற சபை என்னை ரட்சிப்பின் பாதையில் அழைத்துச் செல்லுமா என்பதை அறிந்துகொள்வதற்கு வெளிப்படுத்தின புத்தகத்தை வேதத்தோடு ஒப்பிட்டு படித்து புரிந்து கொண்டால் சரியான ரட்சிப்பின் பாதையில் ஆவியானவர் நம்மை வழி நடத்துவார். கிறிஸ்துவின் சிலுவை பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துகிறது இப்புத்தகம்.

இந்த அருமையான புத்தகத்தின் ஆசிரியர் திரு ஜான் குரு அவர்கள், தேவனை வாலிப பிராயத்திலே தேடி, இயேசுதான் உண்மையான தேவன் என்று அறிந்து, வேதத்தை ஆராய்ந்து அதன் மூலமாக சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அவர் பெற்றுக் கொண்ட சத்தியத்தையும் ஆசீர்வாதத்தையும் அநேகர் பெறும்படியாக ஜெபத்தோடும், தேவ ஆவியானவரின் உதவியோடும் வேத சத்தியங்களை வேதத்தோடு ஒப்பிட்டு, இந்த வெளிப்படுத்தின புத்தகத்திற்கு விளக்கம் தந்து, வேதத்தை வாசிக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் புரிந்து கொள்கின்ற விதத்திலே அருமையாக, எளிமையாக விளக்க உரை எழுதி இருக்கிறார். ஆத்தும இரட்சிப்புக்கு ஏதுவாக வழிநடத்துகின்ற இந்த புத்தகம் மிகவும் பாராட்டுக்குரியது. அதிக பயன் உள்ளது. ஜான் குரு அவர்களின் முயற்சியையும், ஊழியத்தையும் பாராட்டுகிறேன். ஜெபத்தோடு தியானிப்போம். இரட்சிப்பு நம் அருகில் இருக்கிறது.

என்றும் உங்களுடன் கிறிஸ்துவின் பணியில்
**போதகர் டேவிட் நேசகுமார் சாலமன் ராஜ்**
**பெங்களூர்**

மாரநாதா! வெளிப்படுத்தின விசேஷத்தை எளிமையாக வெளிப்படுத்துகிறது சகோதரர் ஜான் குரு எழுதிய இப்புத்தகம். பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக புரிந்துகொள்ள இப்புத்தகம் உதவுகிறது. இப்புத்தகத்தை வாசித்த பிறகு வெளிப்படுத்தின விசேஷத்தில் புரிந்துகொள்ள முடியாத பகுதி எதுவும் இருக்காது.

தேவனுடைய மாறா அன்பையும், மனுக்குலத்தை இரட்சிக்க தேவனின் ஏற்பாடுகளையும், நன்மைக்கும் தீமைக்கும் உள்ள ‘‘மாபெரும் போராட்டத்தில்’’ தேவனின் பக்கத்தில் இருப்பவர்களை, யுகங்கள் முழுவதும் தேவன் எப்படி பாதுகாக்கிறார் என்பதை சரித்திரங்கள், தீர்க்கதரிசனங்கள் மூலமாக இந்த ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

சூரியன், நட்சத்திரம், ஆட்டுக்குட்டி, கொம்பு, மிருகம், தலை, வால், தண்ணீர், சமுத்திரம் போன்ற அநேக அடையாள குறியீடுகளின் பொருளை எளிமையாக தெளிவுப்படுத்துகிறது இப்புத்தகம். வரலாற்று பின்னணியோடு 7 சபைகள், 7 முத்திரைகள், 7 எக்காளம், மிக நீண்ட தீர்க்கதரிசனமாகிய 2300 வருடங்கள் போன்றவை வாசிப்போரின் மனதைவிட்டு மறையாது, மற்றும் உலக வரலாற்றின் நிறைவு பகுதியில் வாழும் நாம் எங்கு இருக்கிறோம் என்பதை துல்லியமாக புரிய வைக்கிறது.

144000 பேர் பற்றின சத்தியத்தில் பலவித கருத்துக்கள் உலாவினாலும், எது மிகவும் சரியானது என்பதை தெளிவுபடுத்தியிருப்பது தேவ ஆவியானவரின் துணையோடுதான் இந்த ஆசிரியர் எழுதியுள்ளார் என புரிகிறது.

தேவன் தம்முடைய சாயலாக படைத்த மனிதனை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் மீட்டுக்கொண்டு உலகின் இறுதிவரை பரிசுத்த ஆவியானவரால் நம்மை சபையாக ஆயத்தப்படுத்த சகோதரர் ஜான் குருவின் இந்தப் புத்தகம் உதவுகிறது.

இதைப்போல எளிமையான புத்தகங்களை இன்னும் வெளிக்கொண்டுவர தேவன் தாமே அவரை வழிநடத்துவாராக என வாழ்த்துகிறேன்.

**போதகர் ஆஸ்பர்ன் ஜோயல்**

கோயம்புத்தூர்

‘‘நீ காண்கிறவைகளை எழுது’’ என்று இயேசுவால் கட்டளை பெற்று, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதினார் அன்பு சீஷன் யோவான். அதைப்போல ‘‘நீ படித்தவைகளை எழுது’’ என்று இயேசுவால் கட்டளைபெற்று வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் அர்த்தத்தை இந்த புத்தகத்தின் ஆசிரியரும் ஏவப்பட்டு எழுதியிருக்கிறார்.

7 சபை, 7 முத்திரை, 7 எக்காளம், 7 வாதை என்று பரலோக அடையாள மொழிகளால் நிறைந்த வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை அனைவரும் அறிந்துகொள்ளும்படி எளிமையான விதத்தில் வண்ணம் தீட்டியிருப்பது ஆசிரியரின் சிறப்பம்சம். புரியாத புதிராக பூட்டிக்கிடக்கும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை விடைகிடைத்த விடுகதைப்போன்று வாசிக்கும் வாசகர் முகத்தில் மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தும் என்பதில் எந்த விதத்திலும் சந்தேகம் இல்லை. இந்த புத்தகத்தை வெளிக்கொண்டுவருவதில் ஆசிரியருக்கு இணையான பங்கு பதிப்பாசிரியருக்கும் உண்டு. இந்த புத்தகம் வெளிவர உதவிய தட்டச்சு செய்தவர்கள், பொருளாதார உதவிசெய்தவர்கள், ஜெபத்தில் தாங்கிய நண்பர்கள் யாவரையும் தேவன் நிச்சயம் ஆசீர்வதிப்பாராக. இப்புத்தகத்தின் பிரதி இன்னும் பல ஆயிரம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு, மக்கள் மனதில் விதைக்கப்பட வேண்டுமென்பது எனது ஆசை. காலம் சமீபமாயிற்று.

**பீட்டர் மாதவன்**

தமிழ் பைபிள் ஸ்கூல்

# வெளிப்படுத்தல் புத்தகம்

(எதிர்காலத்தைப் பற்றின வெளிச்சம்)

1. வெளிப்படுத்தல் புத்தகத்தின் பின்னணி ______ 1
2. 7 சபைகள் ______ 10
3. 7 முத்திரைகள் ______ 25
4. 7 எக்காளங்கள் ______ 50
5. தேவனுடைய கடைசிகால திருச்சபை ______ 68
6. பிரெஞ்சு புரட்சி - நாத்திகம் உருவான கதை ______ 83
7. மாபெரும் ஆன்மீக போராட்டம் ______ 95
8. மிருகத்தின் முத்திரை என்றால் என்ன? ______ 128
9. உலகத்திற்கான கடைசி தூது ______ 143
10. நியாயந்தீர்க்கும் தேவன் ______ 157
11. புதிய எருசலேம் ______ 174

(குறிப்பு: நீங்கள் எந்த அத்தியாயத்தைப் படிக்க விரும்புகிறீர்களோ, அதற்கு நேரடியாக செல்ல, அந்த அத்தியாயத்தை தொடவும்)

## அத்தியாயம் – 1

# வெளிப்படுத்தல் புத்தகத்தின் பின்னணி



வேதாகமத்தில் உள்ள வெளிப்படுத்தல் பலருக்கு புரியாத புதிராக உள்ளது. பலருக்கு புரியாத இந்தப் புத்தகத்தைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இப்பொழுது பார்க்கலாம்:

### 1. இது ஒரு பூட்டப்பட்ட புத்தகம்

இதைப் படித்தால் நமக்குப் புரியாது. இது ஒரு பூட்டப்பட்ட புத்தகம் என்று பலர் சொல்வதுண்டு. இது உண்மையிலேயே பூட்டப்பட்ட புத்தகமா என்று ஆராய்ந்து பார்க்கும்போது, *(வெளிப்படுத்தல் 22:10)*-ம் வசனம் *"பின்னும் அவர் என்னை நோக்கி: இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோட வேண்டாம்: காலம் சமீபமாயிருக்கிறது"* என்று கூறுகிறது. இந்த வசனத்தில் - நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து காலம் சமீபமாயிருப்பதால், இந்தப் புத்தகத்தை முத்திரை போட வேண்டாம் என்று கூறுகிறார். ஆம், இது பூட்டப்பட்ட புத்தகம் அல்ல என்பதற்கு இந்தப் புத்தகத்தில் உள்ள வசனமே சாட்சியாக இருக்கிறது. தேவன் இந்தப் புத்தகத்திற்கு முத்திரைப் போட்டு வைக்கவில்லை என்றால் இது அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய வெளிப்படையான புத்தகமாகவே வைத்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளலாம். உண்மையோடும், வாஞ்சையோடும் தேடுகிற பிள்ளைகளுக்கு தேவன் நிச்சயமாக இந்த வெளிப்டுத்தல் புத்தகத்தில் உள்ள இரகசியங்களை வெளிப்படுத்துவார். இதுவே, தேவன் நமக்குக் கொடுத்த வாக்குத்தத்தம்.

### 2. இது கடந்த காலத்திற்குரிய புத்தகம்

இந்தப் புத்தகத்தில் உள்ள அனைத்தும் முதல் நூற்றாண்டிலே, இயேசு கிறிஸ்து காலத்திலே நடந்து முடிந்தது என்று சிலர் சொல்கிறார்கள்.

ஆனால், இந்தக் கருத்து முற்றிலும் தவறானது. ஏனென்றால், வருங்காலத்தில் சம்பவிக்கவேண்டிய அவருடைய இரண்டாம் வருகை, பரலோகத்தில் உள்ள புதிய எருசலேம் நகரம், இரண்டாம் மரணம், ஆகிய முக்கியமான சம்பவங்களைப் பற்றி இந்தப் புத்தகம் கூறுகிறது. அதனால், இந்தப் புத்தகம் கடந்த காலத்தில் நடந்த சரித்திரப் புத்தகம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது.

### 3. இது எதிர்காலத்திற்குரிய புத்தகம்

இந்தப் புத்தகத்தில் உள்ள சம்பவங்கள் அனைத்தும் எதிர்காலத்தில் சம்பவிக்க வேண்டியவைகள் என்று பலரும் நம்புகிறார்கள். இதுவும் ஒரு தவறான கண்ணோட்டம் தான். இந்தப் புத்தகத்தை ஆராய்ந்து படிக்கும்போது, கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை இந்தப் புத்தகம் சொல்கிறதை அறிந்துகொள்ளாலம்.

### 4. இயேசு கிறிஸ்துவைப் பற்றி இந்தப் புத்தகத்தில் சொல்லப்படவில்லை

15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகவும் பிரபலமான சீர்திருத்தவாதியாகிய மார்டின் லூத்தர் வெளிப்படுத்தல் புத்தகத்தைப் படித்தப்பின்பு "இந்தப் புத்தகத்தில் இயேசு கிறிஸ்துவை பற்றியே இல்லை. இது வேதாகமத்தில் இருக்கவேண்டிய புத்தகம் அல்ல" என்று கூறினார். ஆனால், எட்டு வருடங்களுக்குப் பின்பாக இந்தப் புத்தகத்தை நன்கு படித்து முடித்த பின்பு "இந்தப் புத்தகம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அதிகமாகச் சொல்கிறது. ஒவ்வொரு அதிகாரமும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்கிறது. இயேசு கிறிஸ்து தான் வெளிப்படுத்தல் புத்தகத்தின் மையப்புள்ளி என்றும், இயேசு கிறிஸ்து தான் வெளிப்படுத்தல் புத்தகத்தின் நாயகன்" என்று கூறினார்.

இப்படி அநேகர் இந்தப் புத்தகத்தைப் பற்றித் தவறானக் கருத்துக்களை மனதில் வைத்திருக்கிறார்கள். சுவிசேஷப் புத்தகங்களில் உள்ளதைப்போல இயேசு கிறிஸ்துவை பற்றி அன்பான காரியங்களும், அற்புதங்களும், அவரைப் பற்றின விரிவான கருத்துகளும் இந்தப் புத்தகத்தில் இல்லை என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட கண்ணோட்டங்கள் தவறானவை. இயேசு கிறிஸ்துவிற்கு சுமார் 200 நாமங்கள் வேதாகமத்தில் உள்ளது. அதில் கிட்டத்தட்ட 36 நாமங்கள் வெளிப்படுத்தல் புத்தகத்தில்தான் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவைப் பற்றியே வெளிப்படுத்தல் புத்தகம் அதிகமாகப் பேசுகிறது. இந்தப் புத்தகத்தின் மையப் புள்ளியே இயேசு கிறிஸ்துதான்.

இப்படிப்பட்ட தவறான கண்ணோட்டத்தின் காரணமாகவே, பலருக்கு இந்தப் புத்தகம் எப்பொழுதும் பூட்டப்பட்ட புத்தகமாகக் காணப்படுகிறது.

## எதற்காக வெளிப்படுத்தல் புத்தகத்தைப் படிக்க வேண்டும்?

### 1. இது இயேசு கிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்துகிறது

இயேசு கிறிஸ்துவைப் பற்றி 36 நாமங்கள் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக..

- ஆட்டுக்குட்டியானவர்

- ❖ தாவீதின் வேர்
- ❖ ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு பூட்டுகிறவர்
- ❖ ஆமென் என்பவர்
- ❖ யூத சிங்கம்

மேலும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அநேக பொக்கிஷங்கள் வெளிப்படுத்தல் புத்தகத்தில் உள்ளது. ஆகவே இந்தப் புத்தகத்தை படிப்பது மிக அவசியம்.

**2. இது கடைசி காலத்திற்குரியப் புத்தகம்**

இந்தப் புத்தகம் கடந்த காலம், நிகழ்காலத்தைப் பற்றி மட்டுமல்லாமல், கடைசி காலத்தைப் பற்றியும் பேசுகிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அப்போது உலகத்தில் நடைபெறும் சம்பவங்கள்? பிசாசானவன் எப்படி வஞ்சிப்பான்? நாம் என்ன ஆயத்தங்கள் செய்ய வேண்டும்? போன்ற முடிவு காலத்தைப்பற்றின காரியங்களை இந்தப் புத்தகம் நமக்கு வெளிப்படுத்துகிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் புத்தகத்தை நாம் படித்தால் மட்டுமே, இனி இந்த உலகத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். சாத்தானுடைய கடைசி கால வஞ்சகத்திலிருந்து தப்பித்து, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தமாக முடியும்.

**3. ஆசீர்வாதத்தின் புத்தகம்**

வேதாகமத்தில் உள்ள அனைத்துப் புத்தகத்தையும்விட, இந்த புத்தகம் தனித்தன்மை வாய்ந்தது. *வெளிப்படுத்தல் 1:3*-ம் வசனம் *இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது* என்று கூறுகிறது. அப்படியானால், வேதாகமத்தின் மற்றப் புத்தகங்களை வாசித்து, கைக்கொள்ளும்போது பாக்கியம் இல்லை என்று அர்த்தமா? இல்லை. வேதாகமத்தின் எல்லா புத்கங்களையும் படிக்கும்போது ஆசீர்வாதம் கிடைக்கும். ஆனால், இந்தப் புத்தகத்தைப் படித்து, கைக்கொள்ளும்போது பரலோகம் என்னும் பாக்கியம் கிடைப்பதற்கு மற்றப் புத்தகத்தைப் பார்க்கிலும் பெரிதும் உதவுகிறது. இது ஒரு ஆசீர்வாதத்தின் புத்தகம் என்பதை இதன் மூலம் நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

**4. சபை மீது இயேசுவின் அன்பு**

இயேசு கிறிஸ்து சபை மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை இந்தப் புத்தகம் வெளிப்படுத்துகிறது. அநேகர் இந்த புத்தகத்தை Love story என்று குறிப்பிட்டுள்ளனர். ஏனென்றால், இந்தப் புத்தகத்தில் ஏழு சபைகளுக்கு கிறிஸ்து அப்போஸ்தலனாகிய யோவான் மூலமாக செய்திகளை கொடுக்கிறார். அந்த செய்திகளை ஒரு கடிதம்போல எழுத வேண்டுமென்று கூறுகிறார். கடிதத்தில் சபையின் குறைகளைக் கண்டிப்பார். கண்டித்தப்பின்பு, நீ ஜாக்கிரதையாக இருந்து மனம்திரும்பு என்று சொல்லியிருப்பார். நீ மனந்திரும்பினால் நான் உனக்கு அநேக ஆசீர்வாதங்களைத் தருவேன் என்றும் சொல்லியிருப்பார். இதன் மூலமாகத் தேவன் சபையை மிகவும் நேசிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஏழு முத்திரைகளைப் பற்றின காரியங்களைப் பார்க்கும்போது தேவன் திருச்சபையை ஒவ்வொரு காலத்திலும் எப்படி

வழி நடத்துகிறார் என்றும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு எப்படிப்பட்ட தடைகள் வந்தது என்றும், சுவிசேஷம் உலகம் முழுவதும் எப்படி சென்றது என்றும், பார்க்கலாம்.

ஏழு எக்காளங்கள் தேவனுடைய மக்களை எதிர்க்கிற எதிரிகளை அவர் எப்படியாக நியாயம் தீர்த்தார் என்கிற சரித்திரத்தைப் பற்றிய விளக்கங்களைப் பார்க்கலாம். *வெளிப்படுத்தல் 12,13,14* அதிகாரங்களைப் படிக்கும்போது திருச்சபையை அழிப்பதற்காக வந்த வலுசர்ப்பத்திடமிருந்து, தேவன் திருச்சபையை எப்படி காப்பாற்றுகிறார் என்பதைப் பார்க்கிறோம். கடைசியாக 19-ம் அதிகாரம் 20-ம் அதிகாரத்தில் திருச்சபையை மணவாட்டியாகவும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மணவாளனாகவும் இந்தப் புத்தகம் சித்தரிக்கிறது.

## 5. இரட்சிப்பைத் தீர்மானிக்கும் புத்தகம்

உண்மையிலேயே நாம் இரட்சிக்கப்டுவதற்கு வேதாகமத்தில் உள்ள எல்லாப் புத்தகமுமே அவசியம் தான். ஆனால், விசேஷமாக இந்தப் புத்தகம் முடிவு காலத்தில் வாழந்து கொண்டிருக்கிற நமக்கு மிகவும் அவசியமானது. ஏனென்றால், *வெளிப்படுத்தல் 22:18,19* வசனங்கள் *"இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிறயாருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்"* என்று கூறுகிறது.

இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளவைகளில் ஒருவன் எதையாகிலும் கூட்டினாலும், வசனங்களில் எதையாகிலும் எடுத்துப்போட்டாலும் அவனுடைய பெயரை ஜீவப்புத்தகத்திலிருந்து ஆண்டவர் எடுத்துப்போட்டுவிடுவார் என்று வசனம் கூறுகிறது. எதற்காக இந்தப் புத்தகத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? இரட்சிப்பைத் தீர்மானிக்கிற அளவுக்கு ஒரு முக்கியமானப் புத்தகமாக இது காணப்படுகிறதினால் தான். இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை ஆராய்ந்து, படித்து, அதில் உள்ள சத்தியங்களைக் கடைபிடித்தால் மட்டுமே, ஜீவபுஸ்தகத்திலிருந்து நம் பெயரை கிறுக்கிப்போடாமல் தேவன் பார்த்துக்கொள்வார்.

முதலாம் வகுப்பிலிருந்து நேரடியாக பத்தாம் வகுப்பிற்கு செல்வது எப்படி சாத்தியமற்றதோ, அதைப்போல் வேதாகமத்தில் உள்ள மற்ற புத்தகங்களைப் படித்து புரிந்துகொள்ளாமல் இந்தப் புத்தகத்தை புரிந்துகொள்ள முடியாது. ஆம், இந்த புத்தகத்தைப் படித்து புரிந்துகொள்வதற்கு ஒரு ஒழுங்குமுறை தேவைப்படுகிறது.

வெளிப்படுத்தல் புத்தகத்தைப் படித்து புரிந்துகொள்ளவதற்கு நாம் வேதாகமத்திலிருந்து எவற்றை அறிந்திருக்க வேண்டும் என்பதை இப்பொழுது பார்ப்போம்.

### 1. தானியேல்

பழைய ஏற்பாட்டின் வரிசையில் உள்ள 27-வது புத்தகம் தான் தானியேல். இது ஒரு தீர்க்கதரிசன புத்தகம். சரித்திரம் மாத்திரமல்லாமல்

தீர்க்கதரிசனங்களையும் கொண்ட புத்தகமே தானியேல் புத்தகம். இந்த புத்தகத்தில் உள்ள காலத் தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொண்டால் மட்டுமே வெளிப்படுத்தல் புத்தகத்தைப் புரிந்துகொள்ள முடியும். இந்த இரண்டு புத்தகங்களுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளது. இந்த இரண்டுப் புத்தகங்களுமே ஒரே மாதிரியாக எழுதப்பட்டு இருக்கிறது. தானியேல் புத்தகத்தைப் புரிந்துகொள்ள என்னென்ன விதிகளை பயன்படுத்துகிறோமோ, அதை அப்படியே வெளிப்படுத்தல் புத்தகத்திற்கும் நாம் பயன்படுத்தலாம். **இதை இரட்டை சகோதரர்கள் என்றும் சொல்வதுண்டு.** பழைய ஏற்பாட்டில் **தானியேல் புத்தகம் 27-வது புத்தகமாக இருக்கிறது. அதைப்போல், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தல் புத்தகம் 27-வது புத்தகமாக இருக்கிறது.** என்ன ஒரு ஆச்சரியம்? பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக எழுதப்பட்ட தானியேல் புத்தகத்திற்கும், வெளிப்படுத்தல் புத்தகத்திற்கும் இத்தனை ஒற்றுமைகளை தேவன் ஏற்படுத்தியிருப்பதற்கு காரணமில்லாமல் இருக்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## 2. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொரு புத்தகங்களும் வெளிப்படுத்தல் புத்தகத்தோடு ஒத்துப்போகிறது. வெளிப்படுத்தல் புத்தகத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள சம்பவங்களைப்பற்றி சுமார் 508 குறிப்புகள் இருக்கிறது. உதாரணமாக யேசபேல் ராணியைப் பற்றி இராஜாக்கள் புத்தகத்திலே உள்ளது. இந்தப் பெண்ணின் பெயர் வெளிப்படுத்தல் புத்தகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், பாலாக், பிலேயாம் போன்ற நபர்களைப் பற்றி வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் யாரென்று நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், பழைய ஏற்பாட்டை படித்தால் மட்டுமே முடியும். எப்படி பழைய ஏற்பாட்டை படிக்காமல் நேரடியாக புதிய ஏற்பாட்டை படித்தால் பல காரியங்களைப் புரிந்துகொள்ள முடியாதோ, அதைப்போலவே பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டை முழுவதுமாக அறிந்தால் மாத்திரமே வெளிப்படுத்தல் புத்தகத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

## 3. காலத் தீர்க்கதரிசனங்கள்

வெளிப்படுத்தல் புத்தகம் எந்தக் காலத்தைப் பற்றி பேசுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு காலத் தீர்க்கதரிசனங்களை அறிந்திருக்க வேண்டும். 70 வாரம், 1260 நாள், 2300 இராப்பகல் போன்ற காலத் தீர்க்கதரிசனங்கள் தானியேல் புத்தகத்தில் இருக்கிறது. தானியேல் 9-ம் அதிகாரத்தில் 70-வாரத் தீர்க்கதரிசனத்தையும், தானியேல் 7-ம் அதிகாரத்தில் 1260 நாள் தீர்க்கதரிசனத்தையும், தானியேல் 8-ம் அதிகாரத்தில் 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தையும் பார்க்கலாம். (வரைபடம் : பக்கம் 191). இவை அனைத்தையும் சரியாக புரிந்துகொண்டால் மட்டுமே வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்படும் வார்த்தைகள், வசனங்கள் எந்தக் காலத்தைப் பற்றி பேசுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். வேதாகமத்திலுள்ள எல்லாப் புத்தகங்களையும் சரியாகப் புரிந்துகொண்டால் மட்டுமே வெளிப்படுத்தல் புத்தகத்தை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். வேதாகமத்தின் மற்றப் புத்தகங்களைப் புரிந்துகொண்டு கடைசியாக வெளிப்படுத்தல் புத்தகத்தைப் படித்தால் மட்டுமே இந்தப் புத்தகம் பயனுள்ளதாக இருக்கும். அதற்காகவே தேவன் இந்தப் புத்தகத்தை வேதாகமத்தின் கடைசி புத்தகமாக வைப்பதற்கு அனுமதித்துள்ளார்.

## 4. வெளிப்படுத்தல் புத்தகத்தின் வடிவமைப்பு

இந்தப் புத்தகத்திற்கென்று ஒரு வடிவமைப்பு உள்ளது. **பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரியைப் போன்றே இந்தப் புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.** பரலோகத்தின் ஆசரிப்புக் கூடார மாதிரியின்படியே மோசே பூலோக ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டினார். ஆசரிப்புக் கூடாரம் என்றால் தேவனுடைய ஆலயம். வெளிப்படுத்தல் முதல் அதிகாரத்தில் "அவர் நமக்காக இரத்தம் சிந்தி மீட்டுக்கொண்டார்" என்ற வாக்கியத்தைப் பார்க்கலாம். இந்த வாக்கியம் ஆசரிப்புக் கூடாரத்தில் பிரகாரத்தில் உள்ள பலிபீடத்தைக் குறிக்கிறது.

அடுத்ததாக "இயேசு கிறிஸ்து ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் இருந்தார்" என்ற வாக்கியத்தைப் பார்க்கலாம். இந்த குத்து விளக்குகள் ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறது. பின்பு "மேஜை மற்றும் சமூகத்து அப்பம்" பற்றி வெளிப்படுத்தல் 4 மற்றும் 5-ம் அதிகாரங்களில் பார்க்கலாம். மேலும், அவர் "தூபபீடத்திற்கு" பக்கத்தில் இருந்தார் என்பதையும் பார்க்கலாம். இவை அனைத்தும் ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பொருட்கள் ஆகும். *"அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது: அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின"* என்று *வெளிப்படுத்தல் 11:19*-ம் வசனம் கூறுகிறது. இதில் ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள உடன்படிக்கைப் பெட்டியை நாம் பார்க்கலாம்.

பிரகாரத்தில் துவங்கி, பரிசுத்த ஸ்தலத்தை நோக்கி பயணித்து, இறுதியாக மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிகிறது வெளிப்படுத்தல் புத்தகம். ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரியின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட இந்தப் புத்தகத்தை புரிந்துகொள்வதற்கு ஆசரிப்புக் கூடார சத்தியத்தைப் புரிந்துகொள்வது அவசியமாகும்.

## 5.ஒரே காரியம் மீண்டும், மீண்டும் கூடுதல் விவரங்களோடு சொல்லப்படுதல்

தானியேல் 2-ம் அதிகாரத்தில் 4 ராஜ்யங்களைப் பற்றி கூறுகிறது. இதில் ஒவ்வொரு உலோகமும், ஒவ்வொரு ராஜ்யங்களைக் குறிக்கிறது. அடுத்ததாக தானியேல் 7-ம் அதிகாரத்தில், அதே நான்கு ராஜ்யங்களைப் பற்றியே கூறுகிறது. இங்கே உலோகங்களுக்குப் பதிலாக மிருகங்களைப் பார்க்கிறோம். ஆனால், 2-ம் அதிகாரத்தில் உள்ள அதே செய்தியை கூடுதல் விவரங்களோடு பார்க்கிறோம். மேலும், தானியேல் 8 மற்றும் 11-ம் அதிகாரமும் இதே ராஜ்யங்களைப் பற்றி பேசினாலும், கூடுதலான தகவல்கள் நமக்கு கிடைக்கிறது. இதைப் போன்றே வெளிப்படுத்தல் புத்தகத்திலும் 7 சபைகள், 7 முத்திரைகள், 7 எக்காளங்கள் போன்ற மூன்றும் ஒரே காலத்தையே குறிக்கிறது. ஆனால், மீண்டும், மீண்டும் சொல்லப்படும்போது கூடுதல் விவரங்கள் சொல்லப்படுகிறது.

## 6. அடையாளக் குறியீடுகள்

*வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது என்று 2 பேதுரு 1:20* வசனம் கூறுகிறது. அதாவது இயேசு கிறிஸ்து விதைகளைப் பற்றின உவமையைக் கூறினார். அதில் உள்ள விதைகள் சத்திய வசனங்களைக் குறிக்கிறது. அதைப்போல், தானியேல் 7-ம் அதிகாரத்தில் சொல்லப்படும் மிருகங்கள், ராஜ்யங்களைக் குறிக்கிறது. *அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள் (தானியேல் 7:17).* இதைப் போன்ற பல அடையாளக் குறியீடுகள் வெளிப்படுத்தல் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் இவைகளை வாஞ்சையோடு தேடிப் படித்து புரிந்துகொள்வதற்கும், **இவைகளை சாத்தான் அழிக்காதபடி அவனிடமிருந்து பாதுகாப்பதற்காகவும் இவை அடையாங்களாக சொல்லப்பட்டிருக்கிறது.**

### 7. ஆசரிப்புக் கூடாரம்

தானியேல் 8 முதல் 12-ம் அதிகாரம் வரையிலும் உள்ள பகுதி பூட்டப்பட்டதாகக் காணப்படுகிறது. இந்தப் பகுதியை திறப்பதற்கான சாவி ஆசரிப்புக் கூடார சத்தியம் ஆகும். முக்கியமாக 2300 இராப்பகல் தீர்க்கதரிசனங்களை அறிந்துகொள்வதற்கு, ஆசரிப்புக் கூடாரத்தின் அடிப்படை காரியங்கள் நமக்கு தெரிந்திருக்க வேண்டும். இதை நாம் தவறாகப் புரிந்துகொண்டால் நம்முடைய முற்பிதாக்களைப் போல ஏமாற்றத்திற்கு ஆளாவது நிச்சயம். **தானியேல் புத்தகத்தின் தொடர்ச்சியாக கருதப்படும் வெளிப்படுத்தல் புத்தகத்தின் இரகசியத்தை அறிந்துகொள்வதற்கு அவசியமான ஒரு சாவிதான் - ஆசரிப்புக் கூடார சத்தியம்.**

### 8. காலமும், இடமும்

வெளிப்படுத்தல் புத்தகத்தில் உள்ள வசனங்களைப் புரிந்துகொள்வதற்கு, அதன் பின்னணியைப் புரிந்துகொள்வது அவசியமாகக் காணப்படுகிறது. அதாவது அந்த வசனம் எந்தக் காலத்தைப் பற்றி கூறுகிறதென்றும், எந்த இடத்தைப் பற்றி கூறுகிறதென்றும் புரிந்துகொள்ள வேண்டும். இதில் இடத்தை, பிரகாரமா? பரிசுத்த ஸ்தலமா? மகா பரிசுத்த ஸ்தலமா? என்று ஆசரிப்புக் கூடார சத்தியத்தின் மூலம் அறிந்துகொள்ள வேண்டும். காலத்தை புரிந்துகொள்வதற்கு 70 வாரம், 1260 நாள் மற்றும் 2300 இராப்பகல் தீர்க்கத்தரிசனங்களை வைத்து அறிந்துகொள்ள வேண்டும்.

| **வெளிப்படுத்தல் புத்தகத்தின் அமைப்பு** | **அதிகாரம்** |
|---|---|
| ➢ 7 சபைகள் | 1-3 |
| ➢ 7 முத்திரைகள் | 4-8 |
| ➢ 7 எக்காளங்கள் | 9-11 |
| ➢ மாபெரும் ஆன்மீகப் போராட்டம் | 12-14 |
| ➢ 7 வாதைகள் | 15-16 |
| ➢ மிருகம் மற்றும் வேசியின் நியாயத்தீர்ப்பு | 17-18 |
| ➢ இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை | 19 |
| ➢ ஆயிரவருட அரசாட்சி | 20 |
| ➢ புதிய எருசலேம் | 21-22 |

## ஏழு (7)

வெளிப்படுத்தல் புத்தகத்தில் அநேக எண்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலும், அதிக முறை பயன்படுத்தப்பட்ட எண் தான் - ஏழு. இந்த எண் தேவனுடைய எண்ணாக இருக்கிறது. இந்த எண் சுமார் 58 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் சிலவற்றை நாம் காண்போம்:

- ✓ 7 கடிதங்கள்
- ✓ 7 சபைகள்
- ✓ 7 தூதர்கள்
- ✓ 7 நட்சத்திரங்கள்
- ✓ 7 குத்துவிளக்குகள்
- ✓ 7 முத்திரைகள்
- ✓ 7 எக்காளங்கள்
- ✓ 7 கொம்புகள்
- ✓ 7 கண்கள்
- ✓ 7 இடிமுழக்கங்கள்
- ✓ 7 தலைகள்
- ✓ 7 மலைகள்
- ✓ 7 முடிகள் (கிரீடங்கள்)
- ✓ 7 ஆவிகள்
- ✓ 7 அக்கினி தீபங்கள்
- ✓ 7 வாதைகள்
- ✓ 7 ராஜாக்கள்
- ✓ பாக்கியவான்கள் என்ற வார்த்தை ஏழு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
- ✓ ஜீவ புஸ்தகம் என்ற வார்த்தை ஏழு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

எதற்காக தேவன் 7 என்ற எண்னை தேர்ந்தெடுத்தார்? இதற்குப் பின்னால் இருக்கிற இரகசியம் என்ன?

முதன் முதலாக வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரத்தில் தான் ஏழு என்கிற எண் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆம், ஏழாம் நாளை மட்டும் விசேஷமாகப் பிரித்தெடுக்கிறார். அதை ஆசீர்வதித்து, பரிசுத்தமாக்கினார். இந்த நாள் ஓய்வுநாளாகவும் ஆசீர்வாதத்தின் நாளாகவும் இருக்கிறது. **மேலும், 7 என்ற எண் முழுமையையும் பரிபூரணத்தையும் குறிக்கிறது. ஏனென்றால், தேவன் ஆறு நாட்களுக்குள் எல்லாவற்றையும் படைத்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இந்த ஏழாம் நாள் சபைக் கூடுதலின் நாளாகவும் இருக்கிறது.**

## அடையாளக் குறியீடுகளும் அதன் பொருளும்

வெளிப்படுத்தல் புத்தகத்தைப் புரிந்துகொள்வதற்கு அடையாளக் குறியீடுகள் மிகவும் அவசியமானது. ஏனென்றால், அடையாளக்

குறியீடுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டால், வசனங்களை தவறாகப் புரிந்துகொள்ளும் ஆபத்து ஏற்படும்.

தீர்க்கதரிசனத்தில் என்ன வார்த்தைக்கு, என்ன அர்த்தம் என்பதை பார்ப்போம்.

| **எண்** | **வார்த்தை** | **அர்த்தம்** | **வசன ஆதாரம்** |
|---|---|---|---|
| 1 | காற்று | யுத்தம் | எரே 5:1<br>தானி 11:40 |
| 2 | தண்ணீர் சமுத்திரம் | ஜனங்கள், தேசங்கள், ஜனக்கூட்டம் நிறைந்த தேசம், இடம் | ஏசாயா 17:12,13<br>வெளி 17:15 |
| 3 | மிருகம் | ராஜ்யங்கள், அரசியல் வல்லமைகள் | தானி 7:17,23 |
| 4 | கொம்பு | ராஜாக்கள், இராஜ்ஜியங்கள், அதிகாரங்கள் | தானி 7:24<br>வெளி 17:12 |
| 5 | தலை | ராஜ்யங்கள். ராஜ்யங்களின் பிரிவு | தானி 7:6<br>வெளி 7:9,10 |
| 6 | செட்டைகள் | வேகம், துரித முன்னேற்றம் | ஆப 1:6,8<br>எரே 4:13 |
| 7 | நாட்கள் | வருடங்கள் | ஆதி 29:27<br>எண் 14:34<br>எசே 4:6 |
| 8 | நட்சத்திரம் | ஊழியர்கள், தேவஜனம், இயேசு, அப்போஸ்தலர்கள், சாத்தான் | வெளி. 1:20<br>தானி 12:3,<br>வெளி 22:16<br>வெளி 12:1 |
| 9 | கற்புள்ள ஸ்திரீ | பரிசுத்த சபை | ஏசாயா 51:16<br>எரே 6:2,<br>2 கொரி 11:2 |
| 10 | வேசி | விழுந்துபோன சபை | வெளி 17:5 |
| 11 | சூரியன் | இயேசு, நீதியாகிய பிரமாணம், மேற்கு ரோமின் அரசியல் தலைவர்கள் | மல் 4:2,<br>சங் 84:11<br>ஏசாயா 62:11 |

| | | | |
|---|---|---|---|
| | | | வெளி 8:12 |
| 12 | சந்திரன் | பழைய ஏற்பாட்டின் நிழல், நியாயப் பிரமாணத்தின் பிரதி பலிப்பாகிய சாட்சியாகமம் | வெளி 12:1 |

இப்படிபட்ட பல அடையாளக் குறியீடுகள் வெளிப்படுத்தல் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அட்டவணையின் அடிப்படையில் படித்தால் மட்டுமே வெளிப்படுத்தல் புத்தகத்தை சரியான விதத்தில் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

அத்தியாயம் – 2

# ஏழு சபைகள்




**ஆலோசனை: வெளிப்படுத்தல் 2,3 அதிகாரங்களைப் படித்துவிட்டு இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

*“அது நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது”* என்று *வெளிப்படுத்தல் 1:11* வசனம் கூறுகிறது. அப்போஸ்தலனாகிய யோவான் கண்ட தரிசனத்தைப் பற்றி இங்கே பார்க்கிறோம். நீ காண்கிறவற்றை 7 சபைகளுக்கு எழுதி அனுப்பு என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். ஏன் இந்த 7 சபைகளுக்கு மாத்திரம் எழுதப்படுகிறது? **7 என்ற எண் பரிபூரணத்தைக் குறிக்கிறது இந்தக் கடிதங்கள் காலங்கள் நெடுகிலும் உள்ள தேவனுடைய திருச்சபையைக் குறிக்கிறதற்காக எழுதப்பட்டவை.**

**இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு போன காலத்திலிருந்து, அவர் மறுபடியும் இரண்டாம் முறை வரும் காலம் மட்டும், ஒவ்வொரு காலகட்டத்தில் தேவனுடைய சபை எப்படி இருந்தது என்பதை இந்த ஏழு சபைகளுக்கான தூதில் படிக்கலாம்.**

*“சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்”* என்று வெளிப்படுத்தல் புத்தகத்தின் முதல் வசனம் துவங்குகிறது. **இதன் மூலம் இந்த ஏழு சபைகளைப் பற்றின காரியங்கள் எதிர்காலத்தில் நடக்கப்போகிற சம்பவங்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.**

**பரிசுத்த ஸ்தலத்தில் இயேசு கிறிஸ்து**



*வெளிப்படுத்தல் 1:12,13* வசனங்கள் *"அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்: திரும்பினபோது ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சைகட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்" என்று கூறுகிறது.* இதில் மனுஷ குமாரனுக்கு ஒப்பானவர் என்னும் சொற்றொடர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. அவர் தான் 7 குத்துவிளக்குகளுக்கு மத்தியில் இருக்கிறார். **7 குத்துவிளக்குகள் ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறது.** (வரைபடம் : பக்கம் 186) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து பரமேறிப்போன பின்பாகத் தான் பரிசுத்த ஸ்தலத்திற்குள் போய் ஆசாரிய ஊழியம் செய்து கொண்டிருக்கிறார். அவர் தான் நம் "**பிரதான ஆசாரியன்**" என்று எபிரெயர் (9:11) புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. 2000 வருடங்களுக்கு முன்பாக அவர் மரித்து பரமேறியப் பின்பாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் காட்சியே இங்கு யோவானுக்கு தரிசனமாகக் கொடுக்கப்பட்டது. இதுதான் இந்த தரிசனத்தின் தொடக்கமாகவும் இருக்கிறது. இதனுடைய முடிவு என்பது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தான் உள்ளது. ஏனென்றால் 7 முத்திரைகள், 7 எக்காளங்கள் போன்ற அனைத்தும் இரண்டாம் வருகையைக் குறிக்கிறதாக இருக்கிறது. இந்த காலத்திற்குள்ளாக உள்ள திருச்சபையின் காலத்தையே தேவன் 7 பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்.

*வெளிப்படுத்தல் 1:14-16* வசனங்கள் *"அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது: அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலையைப் போலிருந்தது. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது: அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார். அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது" என்று கூறுவது* இயேசு கிறிஸ்துவைப் பற்றிதான்.

*வெளிப்படுத்தல் 1:19,20* வசனங்கள் *"நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது: என் வலது கரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது. அந்த* ***ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம், நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்****"* என்று கூறுகிறது. இதன் மூலம் தேவன் சில காரியங்களை அடையாளக் குறியீடுகளாக, இரகசியமாகக் கூறுகிறார் என்பதை அறிந்துகொள்ளலாம். (வரைபடம் : பக்கம் 185). ஏழு நட்சத்திரங்களும், ஏழு குத்துவிளக்குகளும் எதை குறிக்கிறது என்று வசனம் தெளிவாக சொல்கிறது.

## ஏழு சபைகளுக்கான செய்தி

வெளிப்படுத்தல் புத்தகத்தின் 2 மற்றும் 3-ம் அதிகாரங்களில் 7 சபைகளைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. 7 சபைகளுக்கும் இயேசு

கிறிஸ்து, யோவான் மூலமாகக் கடிதங்களை அனுப்புகிறார். இந்த 7 கடிதமும் ஒரேவிதமாக எழுதப்பட்டுள்ளது. இதில்

- ✓ இயேசு கிறிஸ்துவின் அறிமுகம்
- ✓ சபைக்கான பாராட்டுகள்
- ✓ சபைக்கான கடிந்துகொள்ளுதல்
- ✓ ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் போன்றவை இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு சபைக்கும் முதலில் இயேசு கிறிஸ்து தன்னை சபைக்கு அறிமுகப்படுத்துகிறார், பாராட்டுகிறார், கடிந்துகொண்டு, ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களையும் கொடுக்கிறார்.

## 1. முதலாம் சபை - எபேசு சபை - வெளிப்படுத்தல் 2:1-7 (கிபி. 31 முதல் கிபி. 100 வரை)

### பட்டணத்தின் சிறப்பு

- ❖ எபேசு சபை, ஆதி அப்போஸ்தலத் திருச்சபையைக் குறிக்கிறது.
- ❖ எபேசு என்ற பெயரின் அர்த்தம் **“விரும்பப்படத்தக்க”**. ஆதி அப்போஸ்தலத் திருச்சபை தேவன் விரும்பப்படத்தக்க இருந்தது.
- ❖ இந்த 7 பட்டணங்களும், அதனின் பெயரும் அந்தந்த காலக்கட்டத்தில் வாழ்ந்த தேவ ஜனத்தின் குணத்தை பிரதிபலிப்பதாக இருக்கிறது.
- ❖ கிறிஸ்தவர்கள் அதிகமாக இருக்கக் கூடிய மிகவும் பிரபலமான இடம் தான் எபேசு பட்டணம். இந்த இடத்தில் பவுல் சுமார் மூன்று வருடங்களாக ஊழியம் செய்தார். *(அப்போஸ்தலர் 20:31)*
- ❖ அஞ்ஞான உலகத்தார் எபேசுவை தங்களுடைய புனித பட்டணமாகக் கருதினார்கள்.
- ❖ உலக அதிசயத்தில் ஒன்றான தியானாளின் கோவில் இங்குதான் இருந்தது. *(அப்போஸ்தலர் 19:27,28,35)*
- ❖ அப்பல்லோ, தீமோத்தேயு, மற்றும் பவுல் ஆகியோர் இங்கு ஊழியம் செய்தார்கள்.

### வெளிப்படுத்தல் 2:1-7 வசனங்களின் விளக்கம்

### இயேசு கிறிஸ்துவின் அறிமுகம்

*எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது; (வெளிப்படுத்தல் 2:1)*

**குத்துவிளக்கின் மத்தியில் இயேசு கிறிஸ்து இருக்கிறார்** என்னும் அதே கருத்து மீண்டுமாக எழுதப்பட்டுள்ளது. இதற்கு திருச்சபைகளின் மத்தியில் அவர் இருக்கிறார் என்பதே பொருள்.

### பாராட்டுகள்

*உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும், நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும்,*

*பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன். (வெளிப்படுத்தல் 2:2,3)*

**1.** உன்னுடைய கிரியை, நீ பட்ட பிரயாசம், எனக்காக சாட்சியாக நின்றது, எல்லாவற்றையும் நான் அறிவேன். இந்த திருச்சபை சத்தியத்தில் நன்கு வேரூன்றி நின்றது. **ஆண்டவருக்காக வேலை பார்த்த ஒரு திருச்சபை, அவருடைய நாமத்துக்கு அவருடைய ஊழியத்துக்காக இளைப்படையாமல் பிரயாசப்பட்ட திருச்சபை.**

2. **அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்த இந்தத் திருச்சபை, ஆண்டவருக்காக உபத்திரவத்தை சகித்த ஒரு திருச்சபையாக விளங்கியது.** பொய்யர்களை கண்டுபிடித்தது. பல பிரச்சனைகள் திருச்சபைக்குள்ளாக வந்தும், திருச்சபை சத்தியத்தில் உறுதியாக நின்றது.

### கடிந்துகொள்ளுதல்

*ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன். (வெளிப்படுத்தல் 2:4,5)*

இந்தத் திருச்சபை எப்பொழுதும் பரிசுத்தமாகவும், தேவனுக்குப் பிரியமாகவும் வாழவில்லை. ஒரு கட்டத்தில் வழி விலகி போகக் கூடிய நிலைமை சபைக்கு ஏற்பட்டது. **ஆகவே, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்யாவிட்டால் விளக்குத் தண்டை உன்னிடத்திலிருந்து நீக்கிவிடுவேன் என்று எழுதப்பட்டுள்ளது.** *மத்தேயு 5:14 வசனம் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது"* என்று கூறுகிறது. விளக்குத்தண்டை எடுப்பேன் என்பதற்கு வெளிச்சம் இல்லாமற்போகப் பண்ணுவேன், கைவிடுவேன் என்றும் அர்த்தம். ஆகவே, நீ அதற்குள் மனந்திரும்பு என்று திருச்சபைக்கு ஆலோசனையாகக் கூறுகிறார்.

### ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்

*நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய். இது உன்னிடத்திலுண்டு. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப்புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது. (வெளிப்படுத்தல் 2:6,7)*

தேவன் வெறுக்கும் நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை எபேசு சபையும் வெறுக்கிறது. **நிக்கொலாய் மதஸ்தர் - பொய்ப்போதகம் செய்த ஒரு கூட்டத்தார்.** ஆண்டவருடையக் கடிந்து கொள்ளுதலைக் கேட்டு மனந்திரும்புகிறவர்களாகிய, பாவத்தை ஜெயிக்கிறவர்களுக்கு தேவன் கொடுக்கப்போகும் **பரிசு ஜீவ விருட்சத்தின் கனி** என்றும் எழுதப்பட்டுள்ளது. ஜீவ விருட்சத்தின் கனியைப் பற்றி ஆதியாகமம்

புத்தகத்தின் மூன்றாம் அதிகாரத்தில் நீங்கள் பார்க்கலாம். ஏதேன் தோட்டத்தின் மத்தியில் தேவன் ஜீவ விருட்சத்தின் கனியை வைத்திருப்பார். பாவம் செய்த பின்பாக மறுக்கப்பட்ட இந்த ஜீவவிருட்சத்தின் கனி வெளிப்படுத்தல் புத்தகத்தில் கொடுக்கப்படுகிறது. **இந்தக் கனியை சாப்பிடும்போது நித்திய ஜீவனும், இளைப்பாறுதலும் கிடைக்கும்.** தேவனுடைய கடிந்துகொள்ளுதலைக் கேட்டு மனம்திரும்பும்போது, அவர் மிகப்பெரிய ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார்.

## 2. இரண்டாம் சபை - சிமிர்னா சபை - வெளிப்படுத்தல் 2:8-11 (கிபி. 100 முதல் கிபி. 313 வரை)

### பட்டணத்தின் சிறப்பு:

- ❖ சிமிர்னா என்பதன் பொருள் **"இனிய நருமணம்"**.
- ❖ **"ஆசியாவின் அலங்காரம்"** என்று சிமிர்னா அழைக்கப்பட்டது.
- ❖ மிகவும் அழகான ஒரு நகரம். அதேப்போல இந்த காலக்கட்டததில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும் தேவனுக்கு உண்மையாய் வாழ்ந்து, அழகானவர்களாக இனிய நருமணம் உடையவர்களாக இருந்தார்கள்.
- ❖ அதே வேளையில் முற்றுகை, படுகொலை, பூமியதிர்ச்சி, தீ விபத்து மற்றும் வாதைகளால் அதிகம் வாதிக்கப்பட்ட ஒரு பட்டணம். அதேப்போல இந்த காலக்கட்டததில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும் அநேக உபத்திரவங்கள் அனுபவித்தார்கள்.
- ❖ யோவானின் நேரடி சீடனான பாலிக்கார் இங்குள்ள திருச்சபையில் தான் போதகராக பணியாற்றினார் என்று நம்பப்படுகிறது.

### வெளிப்படுத்தல் 2:8-11 வசனங்களின் விளக்கம்

### இயேசு கிறிஸ்துவின் அறிமுகம்

*சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்:* ***முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர்*** *சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். (வெளிப்படுத்தல் 2:8,9)*

### பாராட்டுகள்

புதிய ஏற்பாட்டில் ரோமர் புத்தகத்தில் (ரோமர் 1-8) 'யூதர்கள்' என்னும் பதம் ஆவிக்குரிய விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதைப்போலவே **இங்கும் 'யூதர்கள்' என்னும் பதம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களைக் குறிக்கிறது.** அதாவது திருச்சபைக்குள் இருக்கும் பலர், "தேவனுடைய வார்த்தைகளைப் பின்பற்றுவேன்" என்று கூறுகிறார்கள். ஆனால், அவருடைய வார்த்தைகளுக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றிதான் இங்கே சொல்லப்படுகிறது.

*நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளிப்படுத்தல் 2:10)*

இந்த சபையினர் படப்போகிற பாடுகளைப் பற்றி இந்த வசனங்கள் கூறுகிறது. தீர்க்கதரிசனங்களைப் படிக்கும்போது 1 நாளை, ஒரு வருடமாக கணக்கிட வேண்டும்.

*நீ இவைகளை நிறைவேற்றினபின்பு, மறுபடியும் உன் வலதுபக்கமாய் ஒருக்களித்து, யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பதுநாள் வரைக்கும் சுமக்கவேண்டும்; ஒவ்வொரு வருஷத்துக்குப்பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன். (எசேக்கியேல் 4:6)*

இந்த வசனம்தான் இதற்கு அத்தாட்சி. அதன்படி 10 நாள் என்பது 10 வருடங்களைக் குறிக்கிறது. சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கும்போது இது "டயோகிளர்சியன் கலேரியஸ்" என்ற ரோம ராஜாக்களின் நாட்களில் கிறிஸ்தவர்கள் 10 வருடங்களாக மிகவும் உபத்திரவப்படுத்தப்பட்ட காலத்தைக் குறிக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். **இப்படிப்பட்ட உபத்திரவம் நிறைந்த காலத்திலும் உண்மையாயிருக்கும்போது, தேவன் அதை பாராட்டி ஜீவ கிரீடத்தைக் கொடுப்பேன் என்று கூறுகிறார்.** இந்த ஏழு சபைகளுக்கு சொல்லப்படும் பொதுவான காரியங்கள் அனைத்தும் நமக்கும் பொருந்தும், குறிப்பிட்ட காலத்திற்குரிய திருச்சபைக்கும் இது பொருந்தும். **ஆகவே, பாடுகள் மத்தியில் வாழும் நாமும் தேவனுக்கு உண்மையாயிருந்தால், ஜீவ கிரீடத்தைப் பெறலாம் என்பதே அவர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்.**

## ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்

*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது. (வெளிப்படுத்தல் 2:11)*

ஜெயங்கொள்ளுகிறவர்கள் இரண்டாம் மரணத்தை சந்திப்பது கிடையாது என்பதே இந்த வசனத்தின் கருத்து. வேதாகமத்தில் இரண்டாம் மரணம் என்கிற பதம் வெளிப்படுத்தல் புத்தகத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பதம் வேறு எங்கும் பயன்படுத்தப்படவில்லை. இந்த வசனம் தவிர வெளிப்படுத்தல் 20-வது அதிகாரத்திலும் இந்தப் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. **"இரண்டாம் மரணம்" என்னும் பதம் இரண்டு முறை மரிப்பதைக் குறிக்காமல், நித்திய மரணத்தைக் குறிக்கிறது.** நாம் பூமியில் மரிப்பது முதல் மரணம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பின் பாவிகளுக்கான நியாயத்தீர்ப்பு நடைபெறும். அந்த நியாயத்தீர்ப்பிற்குப்பின் துன்மார்க்கர் அனைவரும் நித்தியமாக அழிக்கப்படுவார்கள். அந்த நித்தியமான மரணத்தையே இரண்டாம் மரணம் என்னும் பதம் குறிக்கிறது. நாம் உபத்திரவத்தைக் கடந்து தேவனுக்கென்று உண்மையாக நிற்கும்போது, இந்தப் பூமியில் மரித்தாலும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது உயிரோடு எழுந்திருப்போம். நியாயத்தீர்ப்பிற்குப்பின் துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள். இரண்டாம் மரணத்தில் நமக்கு பங்கு இல்லை

என்பது நிச்சயம். **சிமிர்னா சபைக்கு எந்த எச்சரிப்புகளும் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

## 3. மூன்றாம் சபை - பெர்கமு திருச்சபை - வெளிப்படுத்தல் 2:12-17 (கிபி. 313 – கிபி. 538)

### பட்டணத்தின் சிறப்பு

- ❖ பெர்கமு என்பதன் பொருள் **"உயர்த்துதல், மேல்நோக்கிய சரிவு"**. இது இந்த சபையின் காலக்கட்டத்தில் கத்தோலிக்கத்தின் மூலமாக தவறான உபதேசங்கள் சபைக்குள் வந்ததையும், சபை சத்தியத்திலிருந்து சரிந்துபோனதையும் குறிக்கிறது.
- ❖ கோவிலின் நகரம் என்று பெர்கமு அழைக்கப்பட்டது.
- ❖ அஞ்ஞான மதங்களின் தலைநகரமாக இது செயல்பட்டது.
- ❖ பாம்பு கடவுள் என்று சொல்லப்படும் "அஸ்கூலே பியஸ்" என்னும் விக்கிரகத்தை இவர்கள் வணங்கினார்கள்.
- ❖ இன்றும் உயிருள்ள பாம்பை அவர்கள் கோயிலுக்குள் வைக்கும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.
- ❖ இங்கு ஒரு மிகப்பெரிய மருத்துவ கல்லூரி உள்ளது. அதற்கு ஒரு தடியின் கீழ் தொடங்கி, மேலாக இரண்டு பாம்புகள் பின்னியவாறு காணப்படும் சின்னம் இந்தக் கல்லூரியின் அடையாளமாகக் காணப்படுகிறது.
- ❖ இன்று இந்த சின்னம் உலகம் முழுவதும் உள்ள மருத்துவத் துறையினரின் சின்னமாக காணப்படுகிறது.

### வெளிப்படுத்தல் 2:12-17 வசனங்களின் விளக்கம்

### கிறிஸ்துவின் அறிமுகம்

*பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: **இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர்** சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப்பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன். (வெளிப்படுத்தல் 2:12,13)*

### பாராட்டுகள்

இந்த வசனத்தின்படி சாத்தானுடைய சிங்காசனம் எதைக் குறிக்கிறது? தானியேல் 2 மற்றும் 7ஆம் அதிகாரத்தில் 4 அந்நிய ராஜ்யங்கள் இருந்தன. இந்த ராஜ்யங்கள் தேவ ஜனத்தைத் துன்புறுத்துகிறார்கள். இதில் சின்ன கொம்பாகிய - ரோமன் கத்தோலிக்கம் என்னும் மார்க்கம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறேன் என்று தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு, கிறிஸ்துவுக்கு விரோதமாக செயல்பட்டது. (இதைப்பற்றி 7ஆம் அத்தியாயத்தில் விரிவாக நீங்கள் படிக்கலாம்). ஆதியிலே சாத்தான் தேவனுடைய சிங்காசனத்திற்கு ஆசைப்பட்டான். அந்த ஆசையை பூமியின் ராஜாக்கள் மூலமாக பெற்றுக்கொள்ள விருப்பப்பட்டான். இந்த மூன்றாம் சபைக்கான தூது ரோமத் திருச்சபை உருவான கால கட்டமாயிருக்கிறது. இதைத்தான் சாத்தானுடைய

சிங்காசனம் என்று வசனம் கூறுகிறது. சாத்தான் இவர்கள் மூலமாக செயல்பட்டாலும், அங்கும் தேவனுக்கு உண்மையாக இருந்த பிள்ளைகளும் உண்டு. அப்படி தேவனுக்கு விரோதமாக இருந்த செயல்பாட்டை எதிர்த்து நின்ற ஒரு கூட்டத்தை குறிக்கும் சொல்தான் - இந்த அந்திப்பா. சரித்திரத்தில் இப்படிப்பட்ட ஒரு நபர் இருந்தாரா என்பது தெரியவில்லை. ஆனால், **அந்திப்பா என்ற பதத்திற்கு தகப்பன்களுக்கு எதிரானவர்கள் (against the fathers) என்று அர்த்தம்.** ரோமத் திருச்சபையில் பாதிரிமார்களை father என்று அழைப்பதுண்டு. எனவே, அந்திப்பா என்னும் பதம் ரோமப் பாதிரிமார்களுக்கும், அவர்களுடைய தவறான உபதேசத்திற்கும் எதிரானவர்கள் என்று அர்த்தம். **ஆகவே, ரோமத் திருச்சபைக்கு எதிராக செயல்பட்டவர்களை கொலை செய்தபோது, தேவனுடைய பிள்ளைகள் அவரை மறுதலியாமலிருந்தார்கள் என்பதே இதன் பொருள்.**

### கடிந்துகொள்ளுதல்

*ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனைசெய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. (வெளிப்படுத்தல் 2:14)*

இந்த சபையில் பல நல்ல காரியங்கள் இருந்தபோதிலும் சில குறைகளும் காணப்பட்டதென்று தேவன் கூறுகிறார். முக்கிய குற்றச்சாட்டு பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்கிறவர்கள் சபையில் இருந்தார்கள் என்பதே. யார் இந்த பிலேயாம்? தேவனுடைய வார்த்தைகளை மீறும்படியாக இஸ்ரவேல் மக்களை தவறான ஒரு வழியில் நடத்தினவன்தான் இந்தப் பிலேயாம். பிலேயாமைப் பற்றின விவரங்களை எண்ணாகம் (அதிகாரம் 22-24) புத்தகத்தில் பார்க்கலாம். **பிலேயாம் எப்படி தவறானப் போதனைகளைக் கொடுத்தாரோ, அதே போல ரோமன் கத்தோலிக்கமும் தவறான போதனைகளைக் கொடுத்தது.** தேவனுடைய ஜனங்களில் அநேகர் அவர்களுடைய போதனைகளை ஏற்றுக்கொண்டார்கள். **இப்படிப்பட்டவர்களை தேவன் வெறுக்கிறார். இன்று நாமும் தவறான போதகத்தைப் பின்பற்றினால் நம்மையும் தேவன் வெறுப்பார் என்பதே இந்த வசனத்தின் கருத்து.**

### ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்

*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது. (வெளிப்படுத்தல் 2:17)*

**ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மறைவான மன்னாவையும், நாமம் எழுதப்பட்ட வெண்மையான குறிக்கல்லையும் கொடுப்பேன் என்று தேவன் கூறுகிறார்.** இதில் ஆச்சர்யம் என்னவென்றால் அந்த கல்லின்மேல் எழுதப்பட்ட நாமம், அதை பெறுகின்ற நபரைத் தவிர வேறொருவனும் அறியக்கூடாத இரகசியமானதாக இருக்கும் என்பதே.

என்ன ஒரு பாக்கியம். இப்படிப்பட்ட பாக்கியத்தை அடைவதற்கு எதிரியான சாத்தானோடு நடக்கும் யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என்பது அவசியம்.

### 4. நான்காம் சபை - தியத்தீரா திருச்சபை - வெளிப்படுத்தல் 2:18-29 (கிபி. 538 - கிபி. 1517)

#### பட்டணத்தின் சிறப்பு

- ❖ தியத்தீரா என்பதன் பொருள் **“தியாகம், தாழ்மை”**. கத்தோலிக்க ஒடுக்குமுறை காலத்தில், தேவனுக்கு உண்மையாகவும் தாழ்மையாகவும் தேவ ஜனம் இருந்ததை குறிக்கிறது.
- ❖ வெளிப்படுத்தல் புத்தகத்தில் உள்ள ஏழு சபைகள் உள்ள பட்டணங்களில் அதிக முக்கியமில்லாத ஒரு பட்டணம் தான் தியத்தீரா.
- ❖ இந்த பட்டணத்தை சேர்ந்த “லீதியாள்” என்பவள் தான் பவுலின் பிரசங்கத்தை கேட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டாள். *(அப்போஸ்தலர் 16:14*)
- ❖ ஐரோப்பாவின் முதல் விசுவாசி லீதியாள் என்கிற இந்தப் பெண்மணி தான்.

### வெளிப்படுத்தல் 2:18-29 வசனங்களின் விளக்கம்

#### கிறிஸ்துவின் அறிமுகம்

*தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: **அக்கினிஜுவாலைபோன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம்போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன்** சொல்லுகிறதாவது; (வெளிப்படுத்தல் 2:18)*

#### பாராட்டுகள்

*உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன். (வெளிப்படுத்தல் 2:19)*

ரோமன் கத்தோலிக்க ஆட்சி காலத்தின்போது இருந்த சபைதான் தியத்தீரா. அந்தக் காலத்தில் வேதாகமத்தைப் பின்பற்றிய உண்மைக் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்த சமயத்தில் கிறிஸ்தவர்கள் ஓடி ஒழிந்து குகைகளிலும், குன்றுகளிலும் வாழ்ந்து தேவனுக்கு உண்மையாக இருந்தார்கள்.

#### கடிந்துகொள்ளுதல்

*ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறைஉண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய். (வெளிப்படுத்தல் 2:20)*

இப்படிப்பட்ட துயரங்களை சகித்தாலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு என்று தேவன் கூறுகிறார். என்ன குறை என்று பார்த்தால், **யேசபேலுக்கு இடம் கொடுக்கிறாய் என்று கூறுகிறார்**. யார் இந்த யேசபேல்? ஆகாப் என்ற இஸ்ரவேலின் ராஜாவின் மனைவிதான் யேசபேல் என்பவள். இவளைப் பற்றி *1 இராஜாக்கள் 16,17,18* அதிகாரங்களில் நாம் பார்க்கலாம். அந்நிய தேசத்தாளான இவள் தான் ஆகாப் ராஜாவைத் தவறான வழியில் நடத்தி, தவறான போதனைகளைப் புகுத்தி தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவள்.

வேதாகமத்தில் பெண் அல்லது ஸ்திரீ என்கிற பதம் திருச்சபையைக் குறிக்கிறது.

*கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார் (எபேசியர் 5:22).*

**வேசி என்னும் பதம் தவறான பொய் போதகம் செய்யும் திருச்சபையைக் குறிக்கிறது. தவறான போதனைகள், விக்கரக வழிபாடுகள், பாவத்தை ஒரு மனிதனிடம் அறிக்கை செய்வது போன்ற தவறான போதனைகளைக் கற்றுக்கொடுத்து தேவனுடைய மக்களை வேசித்தனத்திற்குள்ளாக நடத்தும் போப்பு மார்க்கத்தையே வேசி என்னும் பதம் குறிக்கிறது.** கிறிஸ்தவர்களை தேவனைவிட்டு வழி விலகச் செய்யும் படியாக செய்தது - ரோமன் கத்தோலிக்க மார்க்கம்தான். **அவர்களுடைய பொய் போதகத்திற்கு தேவனுடைய ஜனங்களும் இடம் கொடுத்தார்கள்.** இதுதான் அந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்த தேவனுடைய ஜனங்கள் செய்த தவறு. இதையே யேசபேலுக்கு இடங்கொடுப்பதாக தேவன் கூறுகிறார். இன்றைக்கு நாமும் பொய் போதகத்திற்கு இடம் கொடுக்கவே கூடாது. நமது திருச்சபைகளிலோ, நமது குடும்பத்திலோ, நம்முடைய மனதிலோ பொய்ப் போதகத்திற்கு இடம் கொடுக்கவே கூடாது என்று தேவன் கூறுகிறார். வேதத்தை ஆராய்ந்துப் படித்து எது சரி, எது தவறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

*இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி, அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்; அப்பொழுது நானே உள்ளந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன். (வெளிப்படுத்தல் 2:22,23)*

நீ அவளுடைய செய்கையை விட்டுத் திரும்பவில்லை என்றால், நான் உன்னை நியாயம் தீர்ப்பேன் என்று தேவன் கூறுகிறார். **நாமும் தவறான போதனைகளிலிருந்து மனந்திரும்பாவிட்டால் நிச்சயமாக நம்மையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.**

**ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்**

*ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். (வெளிப்படுத்தல் 2:26)*

தேவனுக்கு உண்மையாக வாழ்ந்து ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு **ஆளுகையையும், அதிகாரத்தையும் தேவன் கொடுப்பார்.**

## 5. ஐந்தாம் சபை - சர்தை திருச்சபை - வெளிப்படுத்துல் 3:1-6 (கி.பி. 1517 – கி.பி. 1755 வரை)

### பட்டணத்தின் சிறப்பு

- சர்தை பெயரின் பொருள் **"அதிபதி, சந்தோஷசத்தின் பாடல், மீதியாயிருப்பது"**
- சம பூமியிலிருந்து சுமார் 1500 அடி உயரத்தில் அமைந்த பட்டணம்தான் சர்தை.
- ஏதிரிகளால் எளிதில் வெல்ல முடியாத, மிகவும் பாதுகாப்பான பட்டணமாக இருந்தது.
- இந்த நகரத்தை Death City என்று சொல்வார்கள். இந்த பெயர் இந்த சபைக்கு சொன்ன செய்தியோடு ஒத்துப்போகிறது. *நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.(வெளி 3:2)*
- அதன் பொருள் - இந்த காலக்கட்டத்தில் மார்டின் லூதர் போன்ற அநேக சீர்திருத்தவாதிகள் எழும்பினார்கள். கத்தோலிக்க சபையின் தப்பான உபதேசத்தை எதிர்த்தார்கள். மக்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்திலே நின்றுவிட்டார்கள். அதற்கு மேல் முன்னேற்றம் அடையவில்லை.

### கிறிஸ்துவின் அறிமுகம்

*சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்:* ***தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர்*** *சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை. (வெளிப்படுத்தல் 3:1,2)*.

### கடிந்துகொள்ளுதல்

இது அதிகமாக சீர்த்திருத்தவாதிகள் எழும்பிய காலமாகும். கத்தோலிக்க மார்க்கம் செய்த தவறுகளை இந்த சீர்த்திருத்தவாதிகள் சுட்டிக்காட்டினார்கள். தவறுகளைச் சுட்டிக்காட்டின சீர்திருத்தவாதிகளின் வலிமை குறைந்துவிட்டது. மக்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்திலே நின்றுவிட்டார்கள். அதற்கு மேல் முன்னேற்றம் அடையவில்லை.மக்கள் பழையபடி தவறான உபதேசத்திற்கும், தவறானப் போதனைகளுக்கும் அடிமைகளானார்கள். இப்படிப்பட்ட தவறான உபதேசத்தைக்கொண்டே திருச்சபைகள் தற்போது இயங்கிக்கொண்டு வருகிறது. முன்பு இருந்தவர்களைக் காட்டிலும் தற்போது இருக்கின்றவர்களிடம் அந்த உண்மை இல்லை. ஆரம்பத்தில்

இந்த காலத்தின் திருச்சபை எழும்பிப் பிரகாசித்தாலும் பின்பு வீழ்ந்துபோனதைப் பார்க்கலாம். இவைகளையே "*உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்*" என்று தேவன் கடிந்துகொள்கிறார்.

## ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்

*ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். (வெளிப்படுத்தல் 3:5)*

துவக்கத்தில் கொண்டிருந்த விசுவாசத்தை கடைசிவரைக்கும் காத்துக்கொண்டு ஜெயம்கொள்ளும்போது, தேவன் வெண்வஸ்திரத்தைக் கொடுக்கிறார். அதாவது ஜீவ கிரீடத்தைத் தருகிறார். ஜீவபுஸ்தகத்தில் நமது பெயரை இடம் பெறச் செய்வார்.

# 6. ஆறாம் சபை - பிலதெல்பியா திருச்சபை - வெளிப்படுத்தல் 3:7-13 (கி.பி. 1755 முதல் 1844 வரை)

## பட்டணத்தின் சிறப்பு

- பிலதெல்பியா பெயரின் பொருள் **"சகோதர சிநேகம்"**. இந்த சபை காலகட்டத்திலிருந்த தேவ ஜனம் தேவ அன்பு நிறைந்தவர்களாக இருந்தார்கள்
- இந்தப் பட்டணம் அடிக்கடி பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டது
- இந்த பட்டணத்தின் மக்கள் ஒருவித பய உணர்விலேயே வாழ்ந்துகொண்டு வந்தார்கள்.
- கிரேக்க கலாச்சாரத்தை பரப்புவதற்காக உருவாக்கப்பட்ட நகரம்தான் பிலதெல்பியா. அதனால் இதை மிஷனரி சிட்டி என்று அழைப்பார்கள்.
- இந்த சபையின் காலக்கட்டத்தில் (கிபி 1755 - 1844), ஊழியம் உலகம் முழுவதும் வல்லமையாக நடந்தது. பல மிஷனரிகள் உலகம் முழுவதும் சென்று ஊழியம் செய்தார்கள். வேதாகம சங்கங்கள் (Bible Societies) உருவானது.

## கிறிஸ்துவின் அறிமுகம்

*பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது; (வெளிப்படுத்தல் 3:7)*

**பாராட்டுகள்**

*உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். (வெளிப்படுத்தல் 3:8)*

**சிமிர்னா திருச்சபையைப் போன்றே பிலதெல்பியா திருச்சபையும் எந்தக் குறைவும் இல்லாமல் இருக்கிறதை நாம் பார்க்க முடிகிறது.** இந்தக் காலக் கட்டத்தில் வாழ்ந்த மக்கள் தானியேல் புஸ்தகத்தை ஆராய்ந்து படித்தார்கள். **2300 இராப்பகலை படித்து, அதிலுள்ள சத்தியங்களைப் புரிந்துகொண்டு தேவனுடைய வருகை மிகவும் சமீபமாக இருக்கிறது என்பதை நம்பினார்கள்.** சத்தியத்தை அறிவிப்பதற்காக பல தியாகங்கள் செய்தார்கள்.

**ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்**

*இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். (வெளிப்படுத்தல் 3:8)*

பரிசுத்த ஸ்தலத்தின் கதவைப் பூட்டிவிட்டு, மகா பரிசுத்த ஸ்தலத்தின் கதவுகளை நமக்காக திறக்கிறார். இந்தச் சபைக்கு ஆண்டவர் சொல்கிற ஆசிர்வாதம் என்னவென்றால் - புதிய நகரத்தின் நாமத்தை எழுதுகிறேன் என்று சொல்கிறார். புதிய நாமம் என்பது நித்திய ஜீவனைக் குறிக்கிறது.

1844-ம் ஆண்டில் இயேசு கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்திலிருந்து, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் போனார். (இதைப்பற்றி 5 மற்றும் 9 ஆவது அத்தியாயத்தில் விவரமாக நீங்கள் படிக்கலாம்) அப்பொழுதுதான் அந்தக் கதவு திறக்க ஆரம்பித்தது. இது தான் மிகப்பெரிய ஆசீர்வாதம். தேவனுடைய நுட்ப நியாயவிசாரணை, தொடங்கினது என்பதை இதன் மூலம் நாம் தெரிந்துகொள்ளலாம்.

## 7. ஏழாம் சபை - லவோதிக்கேயா திருச்சபை - வெளிப்படுத்தல் 3:14-22 (கி.பி. 1844 முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை)

**பட்டணத்தின் சிறப்பு**

- ரோமாபுரியின் **கடைசிப் பட்டணம்** தான் - லவோதிக்கேயா.
- இது செல்வ செழிப்பும் செல்வாக்கும் நிறைந்த ஒரு பட்டணம்.
- லவோதிக்கேயா என்றால் **"நியாயத்தீர்ப்பின் மக்கள்" அல்லது "மக்கள் நியாயந்தீர்க்கப்படுதல்"** என்று பொருள்.

இந்தத் திருச்சபையின் காலக்கட்டத்தில் தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

**கிறிஸ்துவின் அறிமுகம்**

*லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு*

*ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது; (வெளிப்படுத்தல் 3:14)*

### கடிந்துகொள்ளுதல்

*உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன். (வெளிப்படுத்தல் 3:15,16)*

நீ குளிருமின்றி, அனலுமின்றி இருக்கிறாய் என்று இந்தத் திருச்சபையை தேவன் கடிந்துகொள்கிறார்.

*நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்; (வெளிப்படுத்தல் 3:17)*

நம்மிடம் ஒன்றும் இல்லை. நீதி கிடையாது. பரிசுத்தம் கிடையாது. கிறிஸ்துவின் குணம் கிடையாது. ஆனால், எல்லாமே நம்மிடம் இருக்கிறது என்பதாக நாம் நினைத்துக்கொண்டு இருக்கிறோம். அது தான் இந்தத் திருச்சபையினுடைய நிலைமை.

நாம் மற்றவர்களைப் போல் கிடையாது. நம்மிடம் சத்தியம் இருக்கிறது. நாம் எல்லாவற்றிலும் சரியாக இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், **சத்தியத்தை அறிந்தும் அதை நாம் செயலில் காட்டவில்லை என்பதுதான் உண்மை. அப்படி ஒரு மனநிலையோடு இந்தத் திருச்சபை இருக்கிறது.** இது மிகவும் மோசமான மனநிலை. பரிசேயரிடம் இருந்த அதே மனநிலை இந்தக் கடைசிகாலத் திருச்சபையிலும் இருக்கிறது.

*நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். (வெளிப்படுத்தல் 3:18)*

**"நெருப்பிலே புடமிடுதல்"** என்பது **சுத்திகரிப்பைக்** குறிக்கிறது. **"பொன்"** என்பது **"விசுவாசத்தை"** குறிக்கிறது **(1 பேதுரு 1:7). "வெண்வஸ்திரம்"** என்பது **கிறிஸ்துவின் நீதியைக் (ஏசாயா 61:10)** குறிக்கிறது. **"கண்களுக்குக் கலிக்கம்போடுதல்"** என்பது **ஆவிக்குரிய கண்கள்** உனக்கு வேண்டும் என்பதை குறிக்கிறது.. நீ அதை என்னிடத்திலிருந்து வாங்கிக்கொள் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இந்த காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நமக்கே உரித்தான ஒரு செய்தி இது. சில சமயங்களில் நாமும் பரிசேயரைப் போலவே இருக்கிறோம். எல்லா நீதி உடையவர்களாகவும், எல்லாமே அறிந்தவர்களாகவும் நம்மைக் காண்பித்துக்கொள்கிறோம். ஆனால், நாம் ஒன்றுமே கிடையாது. நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து தேவன் கொடுக்கிற ஆலோசனையைக் கேட்டு அவரிடமிருந்து நீதியையும், பரிசுத்தத்தையும், அன்பையும், குணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்

*நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. (வெளிப்படுத்தல் 3:19)*


தேவன் தாம் நேசிக்கிறவர்களையே கடிந்துகொண்டு சிட்சிக்கிறார். நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாயிருந்து மனந்திரும்ப வேண்டும். இப்படி நாம் மாறும்போது, தேவன் நமக்கு அவருடைய சிங்காசனத்தில் இடம் தருகிறார்.

ஏழாம் திருச்சபைக்கான இந்தச் செய்தி நமக்கே உரித்தான ஒரு விசேஷித்த செய்தி. தேவன் நம்மைக் கண்டித்தாலும், நம்மைக் குறைகூறினாலும், நம் மத்தியிலே இருந்து, நம்முடைய குறைகளை உணர்த்தி, நம்மை மனந்திரும்பச் செய்து, நமக்குப் பரலோக ராஜ்யத்தைக் கொடுக்கவே விருப்பப்படுகிறார். நம்மை அழிப்பதற்கு அவர் விரும்பவில்லை. தேவனுடைய ராஜ்யத்தில் நாம் நித்தியமாக வாழ்வதற்கு மனந்திரும்பி அவரைப் பின்பற்றுவோம்.

| **எண்** | **சபை** | **காலகட்டம்** |
|---|---|---|
| 1 | எபேசு | கிபி 31-100 |
| 2 | சிமிர்னா | கிபி 100-313 |
| 3 | பெர்கமு | கிபி 313-538 |
| 4 | தியத்தீரா | கிபி 538-1517 |
| 5 | சர்தை | கிபி 1517-1755 |
| 6 | பிலதெல்பியா | கிபி 1755-1844 |
| 7 | லவோதிக்கேயா | கிபி 1844 - இரண்டாம் வருகை |

அத்தியாயம் – 3

# ஏழு முத்திரைகள்



**ஆலோசனை: வெளிப்படுத்தல் 4,5,6 மற்றும் 7 அதிகாரங்களைப் படித்துவிட்டு இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

*அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன். (வெளிப்படுத்தல் 5:1)*

ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள எந்தப் பொருள் இந்த ஏழு முத்திரையைக் குறிக்கிறது என்பதை அறிந்துகொள்வதற்கு *வெளிப்படுத்தல் 4 மற்றும் 5* அதிகாரங்களைப் படிக்க வேண்டும்.

*வெளிப்படுத்தல் 4*-ம் அதிகாரத்தில் யோவானுக்கு ஒரு தரிசனம் காண்பிக்கப்படுகிறது. (வரைபடம் - பக்கம் 187) அதில் பரலோக ஆலயத்தின் கதவு திறக்கப்படுகிறது. அங்கு சிங்காசனத்தில் ஒருவர் வீற்றிருக்கிறார். அவரை சுற்றி 4 ஜீவன்கள் மற்றும் 24 மூப்பர்கள் இருக்கிறார்கள். அவருக்கு முன்பாக 7 அக்கினித் தீபங்கள் இருக்கிறது.



பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற அந்த **ஏழு குத்துவிளக்கு தான் அந்த ஏழு அக்கினி தீபங்களை** குறிக்கிறது. அதற்கு முன்பாக அவர் உட்கார்ந்து இருக்கிறார் என்றால் அவர் எங்கே இருக்கிறார்? அந்த **மேஜை சமூகத்து அப்பம் இருக்கின்ற இடத்தில் தான் அவர் நிச்சயமாக இருக்க வேண்டும்.** ஏனென்றால், அங்கே இருந்து பார்த்தால்தான் முன் இருக்கிற அந்த ஏழு குத்துவிளக்கும் தெரியும். இதன்படி சமூகத்து அப்பத்தின் மேஜையின் மத்தியில்தான் தேவன் இருக்கிறார். (வரைபடம் - பக்கம் 187)

**முத்திரையை உடைக்கக்கூடியவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து:**

வெளிப்படுத்தல் 4ம் அதிகாரத்தில் ஒரு காட்சியானது யோவானுக்கு காண்பிக்கப்படுகிறது. அவருடைய கையில் ஒரு சுருள் இருக்கிறது. அதை யாராலும் திறக்க முடியாத ஒரு சூழல் இருக்கிறது. அதில் ஏழு முத்திரைகள் இருக்கிறது. இந்தச் சுருளை யாராவது திறக்க மாட்டார்களா என்று அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது இதை யார் திறக்க முடியும் என்று சொல்லி கேள்விகள் கேட்கப்படுகிறது. இதை திறக்க கூடிய ஒருவர் வருகிறார். அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. அங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் வருகிறார் என்று நாம் புரிந்து கொள்வது எப்படி?

*அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். (வெளிப்படுத்தல் 5:6)*

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்து தான். பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை நாம் பார்க்கும்பொழுது, **ஆட்டுக்குட்டியை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு ஒப்பிட்டு பல வசனங்கள் இருக்கின்றது.** யோவான் கூட "இதோ, தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து" (யோவான் 1:29) என்று கூறுவதை நாம் காண முடியும். அதன்படி இந்த ஆட்டுக்குட்டியானது இயேசு கிறிஸ்துவைதான் குறிக்கிறது என்று அறிந்துகொள்ளாலாம்.

*அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார். அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்குமூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து (வெளிப்படுத்தல் 5:7,8)*

## ஏழு முத்திரைகள் எங்கே கொடுக்கப்படுகிறது?

இந்த தரிசனமானது எங்கே நடக்கிறது? - **பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள சமூகத்து அப்பம் இருக்கிற மேஜையினிடத்தில் நடக்கிறது.** அங்கு பிதாவாகிய தேவன் இருக்கிறார். அவர் கையில் ஏழு முத்திரைகள் கொண்ட ஒரு சுருள் இருக்கிறது. அந்தச் சுருளை இயேசு கிறிஸ்து வாங்குகிறார். ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவால் மட்டுமே அந்த முத்திரைகளை உடைக்க முடியும்.

அந்த ஆட்டுக்குட்டி ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாய் இருந்தது. அந்தக் கண்கள் பூமி எங்கும் அனுப்பப்படுகிற தேவனுயை ஏழு ஆவிகளேயாம் என்று *வெளிப்படுத்தல் 5:6*-ம் வசனம் கூறுகிறது. இதில் அந்த **ஏழு ஆவிகள் பரிசுத்த ஆவியானவரை குறிக்கிறது.** ஏழு என்பது ஒரு முழுமையின் அடையாளம். ஆவி என்பது பரிசுத்த ஆவியானவரை குறிக்கிறது. **பரிசுத்த ஆவியானவருடைய நிறைவான அபிஷேகம் பூமி எங்கும் பொழியப்படும்** என்பதே இந்த வசனத்தின் கருத்து.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் எப்பொழுது ஊற்றப்படும்? என்றால் **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தில் நுழையும்போது.** இயேசுகிறிஸ்து எப்பொழுது பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்தார்? அவர் பூமியில் மரித்து, உயிர்தெழுந்து பரலோகத்திற்குச் சென்றப்பின் பரலோக ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்தார். அவர் அங்கே சென்றப்பின், ஏழு ஆவிகளை அனுப்புகிறார். அதாவது பரிசுத்த ஆவியை பூமியில் உள்ள தன்னுடைய திருச்சபையின் மேல் ஊற்றுகிறார். இதைத்தான் *அப்போஸ்தலர் 2*-ம் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம்.

எதற்காக ஆவியானவருடைய அபிஷேகம் சபையின் மீது ஊற்றப்படுகிறது? சுவிசேஷத்தை உலகம்முழுவதும் கொண்டு செல்வதற்காகவே. ஏழு முத்திரைகளின் சுருளை குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவின் கையிலிருந்து வாங்கியபிறகு, அந்த முத்திரைகளை உடைக்கப் போகிறார். **முத்திரைகள் உடைக்கப்படும்பொழுது நமக்கு என்ன கிடைக்கும்?** அந்தச் சுருளில் இருக்கிற ரகசியங்கள் வெளிப்படுத்தப்படும்.

இந்தச் செய்தி ஒரு சாதாரண செய்தி இல்லை. தேவனுடைய திருச்சபைக்கு மிக மிக அவசியமான ஒரு செய்தியாக இருக்கும். **அந்தச் செய்தி என்ன?** தேவன் தன்னுடைய ஜனத்திற்கு கொண்டு செல்கிற செய்தி என்ன என்பதை இப்பொழுது பார்க்கப்போகிறோம்.

## ஏழு முத்திரைகள் எதை குறிக்கிறது?

ஏழு திருச்சபைகள், ஏழு எக்காளங்கள், ஏழு முத்திரைகள் ஆகிய மூன்றுமே பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள ஒவ்வொரு பொருளைக் அடிப்படையாகக் கொண்டது. ஏழு குத்துவிளக்கின் மத்தியிலிருந்துதான் ஏழு சபைக்கு தேவன் கடிதங்களைக் கொடுக்கிறார். முத்திரையை பற்றி நாம் பார்க்கும்பொழுது, சமூகத்து அப்பத்தின் மேஜையின் பக்கத்தில் இருக்கிறார். **அப்பம் என்பது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது.** (மத்தேயு 4:4). அந்த முத்திரை போடப்பட்ட புத்தகத்தின் செய்தி தேவனுடைய வார்த்தையைப் பற்றியதாகும். **திருச்சபை தேவனுடைய வார்த்தையை உலகிற்கு கொண்டுசெல்லும்போது என்னென்ன உபத்திரவங்களைச் சந்தித்தது என்றும், சுவிசேஷம் எப்படியாக உலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பதை பற்றின காரியங்களும் இந்த ஏழு முத்திரைகளில் அடங்கியிருக்கிறது.** (வரைபடம் - பக்கம் 188)

## முதலாம் முத்திரை

*ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான். (வெளிப்படுத்தல் 6:1,2)*

இங்கே இயேசு கிறிஸ்து முதலாம் முத்திரையை உடைக்கிறார். அப்பொழுது, ஒரு வெள்ளைக்குதிரை காண்பிக்கப்பட்டது. அதன்மேல் இருக்கிறவன் ஒரு வில்லைப் பிடித்திருக்கிறான். அவனுக்கு ஒரு கீரிடம் கொடுக்கப்பட்டது என்று பார்க்கிறோம். இவை அனைத்திற்கும் அர்த்தம் இருக்கிறது. அநேகக் குறியீடுகளைக் கொண்ட ஒரு புத்தகம்தான் வெளிப்படுத்தல் புத்தகம். தீர்க்கதரிசன புத்தகத்தை படிக்கும்போது

சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு நேரடி அர்த்தத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்பம் என்ற பதம் தேவனுடைய வார்த்தையைக் குறிப்பதுபோல, வில் மற்றும் கிரீடம் போன்ற வார்த்தைகளுக்கும் தீர்க்கதரிசனத்தின்படி ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது.

**இதற்குப் பின்னால் இருக்கும் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?**

*கிழக்கே இருக்கிற ஜன்னலைத் திறவும் என்றான்; அவன் அதைத் திறந்தபோது, எலிசா: எய்யும் என்றான்; இவன் எய்தபோது, அவன்: அது கர்த்தருடைய ரட்சிப்பின் அம்பும், சீரியரினின்று விடுதலையாக்கும் ரட்சிப்பின் அம்புமானது; நீர் ஆப்பெக்கிலே சீரியரைத் தீர முறிய அடிப்பீர் என்றான். (2 இராஜக்கள் 13:17)*

**இந்த வசனத்தின்படி, வில் மற்றும் அம்பு எதைக் குறிக்கிறது?**

வில் மற்றும் அம்பு - **தேவன் நம்மை இரட்சிக்கிறார், விடுவிக்கிறார்** என்பதைக் குறிக்கிறது. அடுத்ததாக ஜீவ கிரீடம் எதைக் குறிக்கிறது?

*நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளிப்படுத்தல் 2:10)*

**இங்கே ஜீவ கிரீடம் ஜெயத்தைக் குறிக்கிறது.** உண்மையாய் இருந்து, ஜெயம் கொள்ளும்போது, அந்த கிரீடம் நமக்கு கொடுக்கப்படுகிறது. இதன்படி வில் தேவன் நம்மை எதிரிகளிடமிருந்து விடுவிக்கிறார் என்பதைக் குறிக்கிறது. ஜீவ கிரீடம் உண்மையாய் இருந்து ஜெயிப்பதை குறிக்கிறது. **இது முதல் சபையாகிய எபேசு சபையோடு தொடர்புடையது. எபேசு திருச்சபை ஆதிகால அப்போஸ்தலர்களுடைய திருச்சபையாகும்.** ஆதிகால அப்போஸ்தலருடைய திருச்சபை தேவனுக்கு உண்மையாக இருந்தது. பாவத்தை ஜெயித்தது. **சுவிசேஷத்தை வல்லமையாக உலகிற்கு கொண்டு சென்றது. பெரிய அறுவடைகளை செய்தது.**

*அப்போஸ்தலர் 2*-ம் அதிகாரத்தில் பேதுரு பிரசங்கம் பண்ணுகிறார். 3000 பேர் ஞானஸ்நானம் எடுத்தார்கள். அதனால்தான், இந்த சபையைப் பற்றி சொல்லும் முதல் முத்திரை, வெள்ளைக்குதிரையில் ஏறியிருந்தவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான் என்று கூறுகிறது. சுவிசேஷத்தை வல்லமையாக உலகிற்கு அறிவித்து, அநேகரை கிறிஸ்துவுக்காக ஜெயித்தது. அதன் காரணமாகவே அதற்கு ஒரு கிரீடம் மற்றும் வில் இருந்தது.

அநேகர் பாவத்திற்கு அடிமையாக இருந்தபோது இந்த திருச்சபை சுவிசேஷத்தின் வார்த்தையைக் கொடுத்து, பாவத்திலிருந்து விடுதலை செய்தது. இந்த **வெள்ளைக் குதிரை ஆதிகால அப்போஸ்தலர் திருச்சபையையும், அதின் மேல் உள்ள நபர் - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது.**

**இரண்டாம் முத்திரை**

*அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப்*

*பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 6:3,4)*

இரண்டாவது முத்திரை உடைக்கப்பட்டபோது, **ஒரு சிவப்பான குதிரை புறப்பட்டது. அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யதக்கதாக சமாதானத்தை பூமியில் இருந்து எடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது.** ஒரு பெரிய பட்டயமும் அவனுக்கு கொடுக்கப்பட்டது. வெள்ளைக் குதிரைக்குப் பின்பாக ஒரு சிவப்பு குதிரை வருகிறது. சிவப்பு என்பது ரத்தத்தைக் குறிக்கிறது.

**இந்த முத்திரை, இரண்டாவது சபையாகிய சிமிர்னா திருச்சபையின் காலக்கட்டத்தை சார்ந்தது.** சிமிர்னா திருச்சபை பத்து வருடங்கள் உபத்திரவத்திற்குள்ளாக கடந்துசென்றது. அநேகர் இரத்த சாட்சிகளாக மரித்தனர். இந்த சம்பவங்களுக்கு ஒத்துப் போகின்றவாறே இங்கே ஒரு சிவப்பான குதிரை வருகிறது. **சிவப்பு என்பது இரத்தம் சிந்துதலைக் குறிக்கிறது. இந்த காலக்கட்டத்தில் வாழ்ந்தவர்கள் தேவனுடைய வார்த்தையைப் போதித்ததின் காரணமாக கொலை செய்யப்பட்டார்கள்.** இந்த சிவப்பு குதிரையின்மேல் ஏறியிருந்தவனுக்கு ஒரு பெரிய பட்டயம் கொடுக்கப்பட்டது என்று வசனம் கூறுகிறது. பட்டயம் என்றால் என்ன? இதற்கு இரண்டு அர்த்தங்கள் வேதத்தில் பார்க்கலாம்.

**முதல் அர்த்தம்**

*தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரேயர் 4:12)*

இங்கே **பட்டயம் என்பது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது.** தேவனுடைய வார்த்தையை கொண்டுசெல்லும்போது ஏன் கொலை செய்யப்பட வேண்டும்? தேவனுக்கு உண்மையாக ஊழியம் செய்த காரணத்தால் சாத்தான் உபத்திரவத்தை கொண்டு வருகிறான். உதாரணமாக, ஸ்தேவானைப் பற்றி அப்போஸ்தலர் புஸ்தகத்தில் பார்க்கும்போது, அவர் தேவனுடைய வார்த்தையை வல்லமையாகப் பிரசங்கித்த காரணத்தால்தான் கொலை செய்யப்பட்டார். **இந்த சிமிர்னா சபையிலும் அநேகர் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்ததற்காக கொலை செய்யப்பட்டார்கள்.**

**இரண்டாவது அர்த்தம்**

இந்த திருச்சபையில் பட்டயம் என்பதற்கு மற்றொரு அர்த்தமும் இருக்கிறது.

*எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான்; அப்படி*

*எதிர்த்துநிற்கிறவர்கள் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். (ரோமர் 13:1,2)*

இங்கே நமக்கு மேல் உள்ள அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று பவுல் நமக்கு சொல்லுகிறார். திருச்சபைக்கான அதிகாரத்துக்கு மட்டுமல்லாமல் அரசாங்க அதிகாரத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதே இந்த வசனங்களின் பொருள்.

*மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே. (ரோமர் 13:3,4)*

அரசாங்கங்கள், ராஜ்யங்கள் போன்ற அனைத்தும் தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அதிகாரத்திற்கும் நாம் கீழ்ப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் கையிலும் பட்டயம் இருக்கிறது. **அரசாங்கங்கள், ராஜ்யங்கள் ஆகிவைகளுடைய அதிகாரமே பட்டயம்.** அந்தப் பட்டயம் தண்டிக்கிற அல்லது நியாயம் தீர்க்கிற பட்டயமாக இருக்கிறது. இங்கே சிமிர்னா திருச்சபை தேவனுடைய வார்த்தையான பட்டயத்தை கொண்டுசெல்கிறது. அதினால் உபத்திரவத்தை சந்திக்கிறது என்று நாம் பார்த்தோம். இதற்கு மற்றொரு அர்த்தம் என்னவென்றால்: இந்த திருச்சபை தேவனுடைய வார்த்தையை கொண்டு செல்வதினால், உலக அரசாங்கங்கள் அதனுடைய பட்டயத்தை பயன்படுத்தி இந்த திருச்சபையை உபத்திரவபடுத்தியது என்பதே.

## மூன்றாம் முத்திரை

*அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன். (வெளிப்படுத்தல் 6:5,6)*

**இங்கே ஒரு கறுப்பு குதிரையை பார்க்கிறோம். அந்தக் கறுப்புக் குதிரையில் ஏறி இருந்தவன் ஒரு தராசை வைத்திருக்கிறான்.** இங்கே

1. கறுப்பு எதை குறிக்கிறது?
2. தராசு எதை குறிக்கிறது?
3. வாற்கோதுமை எதை குறிக்கிறது?
4. கோதுமை எதை குறிக்கிறது?
5. திராட்சரசம் எதை குறிக்கிறது?

6. எண்ணெய் எதை குறிக்கிறது? என்பதை முதலாவதாக புரிந்துக்கொள்ளவேண்டும்.

## கறுப்பு எதைக் குறிக்கிறது?

கறுப்பு என்பது காரிருளை குறிக்கிறது. வெளிச்சம் என்பது வேத வசனம். **காரிருள் என்பது வேத வசனம் இல்லாத ஒரு இடத்தைக் குறிக்கிறது.** இந்த மூன்றாம் முத்திரையில் ஏன் கருப்பு குதிரை வருகிறது? அங்கே வெளிச்சம் இல்லை.

இந்தக் காலக்கட்டத்தில் வேதம் என்பது அரிதான ஒன்றாக இருந்தது. **இது மூன்றாம் திருச்சபையாகிய பெர்கமு திருச்சபையின் காலக்கட்டம்.** இந்த பெர்கமு திருச்சபையில் தான் சாத்தானுடைய சிங்காசனத்தைப் பற்றி பார்க்கிறோம். "சாத்தானுடைய சிங்காசனம்" என்றால் ரோமன் கத்தோலிக்கம் உருவான காலகட்டம். **ரோமன் கத்தோலிக்கம் வந்தபிறகு தேவனுடைய வேதம் யாருடைய கையிலும் கிடைக்கவில்லை. அதனால் உலகத்தில் வெளிச்சம் இல்லாமல் காரிருள் சூழ்ந்துகொண்டது.** வேத வசனம் என்பது மிகவும் அரிதாகிவிட்டது. இதற்காகவே இந்த வசனத்தில் கறுப்புக் குதிரை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

## கோதுமை மற்றும் வாற்கோதுமை எதைக் குறிக்கிறது?

*அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4:4)*

வேதாகமத்தின் காலத்தில் கோதுமை மற்றும் வாற்கோதுமை என்பது உணவுக்குப் பயன்படுத்தப்படும் தானியம். அதிலிருந்து தான் அப்பம் செய்யப்படுகிறது. இந்த உணவு வெறும் சாப்பாட்டை மாத்திரம் குறிக்கவில்லை. **தேவனுடைய வார்த்தையையும் குறிக்கிறது.** அப்பத்தை தேவனுடைய வசனத்துடன் ஒப்பிட்டுப்பேசும் பல வசனங்கள் வேதாகமத்தில் இருக்கிறது (மத்தேயு 4:4). **இங்கே கோதுமையும், வாற்கோதுமையும், வேத வசனத்தை குறிக்கிறது. 'ஒரு பணத்திற்கு ஒரு படி கோதுமையும், ஒரு பணத்திற்கு மூன்று படி வாற்கோதுமை' என்கிற வாக்கியத்திற்கு என்ன அர்த்தம்?** ஒரு பணம் என்பது வேதாகமத்தின் காலத்தில் தினக்கூலியாக இருந்திருக்கிறது. ஒரு பணத்திற்கு ஒரு படி கோதுமை தான் வாங்க முடியும். அந்த அளவிற்கு பஞ்சம். இந்த உணவுப் பஞ்சம் போன்ற வசனப் பஞ்சம் இருந்தது. **கறுப்பு குதிரையின் காலக்கட்டத்தில் தேவ வசனமானது மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.** வேதத்தைப்பற்றி தெரிந்துகொள்வது மிகவும் அரிதான காரியமாக இருந்தது. திருச்சபையே வேதத்தை யாரும் வைத்திருக்கக் கூடாது என்ற சட்டத்தை இயற்றியது. இந்தக் காரியத்தைக் குறிப்பதற்காகவே இங்கே ஒரு பணத்திற்கு ஒரு படி கோதுமையும், ஒரு பணத்திற்கு மூன்று படி வாற்கோதுமையும் என்று கூறப்படுகிறது.

## திராட்சரசம் எதைக் குறிக்கிறது?

*போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (1 கொரிந்தியர் 11:25)*

இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன்பதாக செய்த ஒரு சடங்குதான் வசனத்தில் பார்க்கிறோம். இந்த சடங்கு இப்பொழுதும் திருவிருந்து என்றப் பெயரில் சபைகளில் ஆசரிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து பாத்திரத்தில் திராட்சைரசத்தை ஊற்றி எல்லோருக்கும் கொடுத்து இது என்னுடைய ரத்தமாய் இருக்கிறது என்று கூறுகிறார். ஆகவே, **திராட்சை ரசம் என்பது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை குறிக்கிறது.**

### எண்ணெய் எதைக் குறிக்கிறது?

*கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும் (ஏசாயா 61:1)*

தேவன் யாரை அபிஷேகம் பண்ணினார்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே அபிஷேகம் செய்தார். இதே கருத்துள்ள வசனத்தை *லூக்கா 4*-ம் அதிகாரத்திலும் பார்க்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தேவன் அபிஷேகம் செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் அவருக்குள் இருக்கிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் அபிஷேகம் செய்யப்படும்போது, எண்ணெய் தலையில் ஊற்றப்படும். **இந்த எண்ணெய் ஆவியானவர் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்றும், ஆவியானவருடைய வல்லமை அவர்கள் மீது இருக்கிறது என்பதையும் குறிக்கிறது.** எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியானவரை குறிப்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

இந்த வசனங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றால் பரிசுத்த ஆவியானவரையும், இயேசு கிறிஸ்துவையும் சேதப்படுத்தக்கூடாது என்பதே அர்த்தம். **இந்த கறுப்பு குதிரையின் காலகட்டத்தில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மிகத் தவறாக காண்பித்தது. தவறான உபதேசத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவை சேதப்படுத்தியது. பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தியது. அதன் காரணமாகவே இந்த நான்கு ஜீவன்களிடமிருந்து சேதப்படுத்தாதே என்ற சத்தம் வருகிறது.** இந்தக் கறுப்பு குதிரை ரோமன் கத்தோலிக்க திருச்சபை ஆட்சி செய்த இருண்ட காலத்தைக் குறிக்கிறது. அந்தக் காலத்தில் வேதாகமம் கிடைப்பதற்கு அரிதான காரியமாக மாறியது. இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் சேதப்படுத்தப்பட்டார்கள் என்பதையே இந்த மூன்றாம் முத்திரை குறிக்கிறது. நன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது, ஏழு முத்திரை ஏழு சபைகளோடு ஒத்துப்போகும். முதலாம் முத்திரை முதல் சபையோடும், இரண்டாம் முத்திரை இரண்டாம் சபையோடும், மூன்றாம் முத்திரை மூன்றாம் சபையோடும் ஒத்துப்போகிறது.

### நான்காம் முத்திரை

*அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது.*

*பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 6:7,8)*

நான்காம் முத்திரையில் ஒரு மங்கின நிறமுடைய குதிரை காணப்பட்டது. அந்தக் குதிரையின் மேல் ஏறி இருக்கிறவன் பெயர் மரணம். இதுவும் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் காலகட்டத்தை தான் குறிக்கிறது. **இந்த காலம் நான்காம் திருச்சபையாகிய தியத்தீரா திருச்சபையோடு ஒத்துப்போகிறது.** இந்த திருச்சபையும் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாரின் 1260 வருடகால உபத்திரவத்தை சந்தித்தது. இந்த சமயத்தில் சுமார் பத்துக் கோடி உண்மையான கிறிஸ்துவர்களை கத்தோலிக்க மார்க்கத்தார் கொலை செய்ததாக சரித்திரம் கூறுகிறது. அதன் காரணமாகவே இந்தக் குதிரைக்கு மரணம் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. **இந்தக் குதிரை மங்கின நிறமுடைய குதிரையாக இருக்கிறது. ஏனென்றால், தேவனுடைய வசனம் இல்லாமல் மிகவும் மங்கின காலகட்டமாக இருந்தது.** இந்தக் குதிரை பூமியில் உள்ள காற்பங்கு மனிதர்களை கொலை செய்வதற்கான அதிகாரத்தை கொண்டிருந்தது. இதன்படி ரோமன் கத்தோலிக்க திருச்சபையானது உலகிலுள்ள அனைவரையும் கொலை செய்யவில்லை, துன்ப படுத்தவில்லை. ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ளவர்களை மட்டும் உபத்திரவப்படுத்தியது. விசேஷமாக ஐரோப்பாவில் உள்ளவர்களை துன்பப்படுத்தியது.

**பட்டயம், பஞ்சம் மற்றும் துஷ்ட மிருகம் ஆகிய வார்த்தைகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது?**

*நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். திராட்சபழம் பறிக்குங் காலம் வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும்; விதைப்புக் காலம்வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங் காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள். தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள்; துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை. (லேவியராகமம் 26:3-6)*

தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய கட்டளைப்படி நடக்கும்போது தேசத்தில் சமாதானம் இருக்கும். துஷ்ட மிருங்கள் இருக்காது. **துஷ்ட மிருங்கள் என்பது எதிரிகளை குறிக்கிறது.** எதிரிகள் இருக்க மாட்டார்கள். போர் இருக்காது. சமாதானம் இருக்கும். பட்டயம் இருக்காது. இங்கே அதற்கு மாறாக பட்டயம் இருக்கிறது, பஞ்சம் இருக்கிறது, சாபம் இருக்கிறது. துஷ்ட மிருகங்கள் இருக்கிறது. இவை எதற்காக? தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ளாத போதுதான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் வருகிறது என்று வசனம் கூறுகிறது.

*உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன். ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறைஉண்டு;*

*என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய். (வெளிப்படுத்தல் 2:19,20)*

**நான்காம் சபையான தியத்தீராவின் காலகட்டத்தில் வாழ்ந்த தேவனுடைய ஜனம் யேசபேலின் தவறான உபதேசங்களைப் பின்பற்றி வேசித்தனத்திற்கும், விக்கிரக வழிபாட்டிற்கும் போனார்கள்.** இங்கே யேசபேல் ஒரு பெண்ணைக் குறிக்கிறது. தீர்க்கதரிசனத்தின்படி பெண் சபையைக் குறிக்கும். வேசியான பெண் பொய்யான திருச்சபையைக் குறிக்கிறது. யேசபேல் ஒரு பொய்யான திருச்சபை. அந்த திருச்சபை ரோமன் கத்தோலிக்கம்தான். **ரோமன் கத்தோலிக்கம் அநேகரை தவறான உபதேசத்திற்குள்ளாக வழிநடத்தியது. அதற்கு உண்மை கிறிஸ்தவர்கள் இடம் கொடுத்தார்கள்.** இந்த உண்மையான திருச்சபையினர் கொஞ்சம் கொஞ்சமாக உபத்திரவத்தின் மத்தியிலும் பாவத்தின் மத்தியிலும் சமரசமடைகிறார்கள். இதன் காரணமாகவே பட்டயமும், பஞ்சமும், சாவும், துஷ்ட மிருகங்களும் வருகிறது. மிகப்பெரிய ஒரு உபத்திரவம் ஏற்பட்டதுமல்லால், பஞ்சம் வந்தது. அந்தப் பஞ்சம் உணவிற்காக இல்லை.

*இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்மல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (ஆமோஸ் 8:11)*

இந்த வசனத்தின்படி இந்த காலத்தில் கர்த்தருடைய வசனத்திற்கு பஞ்சம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஐந்தாம் முத்திரை

*அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலை செய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. (வெளிப்படுத்தல் 6:9-11)*

மூன்று மற்றும் நான்காம் திருச்சபைகளின் காலத்து முத்திரைகளில், தேவனுடைய சத்தியத்தை மற்றவர்களுக்கு சொன்னதும், அதினால் அவர்கள் அனுபவித்த உபத்திரவத்தையும் தொடர்ந்து பார்த்தோம். அநேகர் இரத்த சாட்சியாகவும் மரித்திருக்கிறார்கள். **ஐந்தாம் முத்திரையின் காலத்தில் பலி பீடத்தருகில் கொல்லப்பட்ட ஆத்துமாக்கள், எதுவரைக்கும் நீங்கள் நியாயம் தீர்க்காமல் இருப்பீர்கள் என்று**

**கேட்கிறதாகப் பார்க்கிறோம்.** அதற்கு தேவன் கொஞ்சம் காலம் உங்களுடன் பணிவிடைகாரரும் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் காத்திருங்கள் என்று கூறுகிறார்.

**பரிசுத்தவான்களின் ரத்தம் கூப்பிடுகிறது என்று சொல்லப்படும் வாக்கியம் எதைக் குறிக்கிறது?**

*பின்பு, ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூபபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, காளையினுடைய மற்ற இரத்தம் முழுவதையும் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு (லேவியராகமம் 4:7)*

இந்த வசனத்தின் அடிப்படையில் பலியிட்ட மிருகத்தின் இரத்தத்தை உள்ளே இருக்கிற தூப பீடத்தின் கொம்புகளில் பூச வேண்டும். மீதி இருக்கிற இரத்தம் முழுவதையும் பலிபீடத்திற்கு கீழேயே ஊற்றவேண்டும். ஆசரிப்புக் கூடாரத்தில் கைக்கொள்ளப்பட்ட முறைமைகளின் அடிப்படையில்தான் வெளிப்படுத்தல் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

*அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன். (வெளிப்படுத்தல் 16:6)*

இந்த வசனத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, பரிசுத்தவான்களின் இரத்தம் சிந்துதலுக்கு காரணமான துன்மார்க்கரை நியாயத்தீர்ப்பைப் பற்றி கேட்கப்படுகிறதை அறிந்துகொள்ளலாம்.

*புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். (எபிரேயர் 12:24)*

இங்கே ஆபேலுடைய இரத்தத்தை விட நன்மையான காரியங்களை பேசுகிற இரத்தம் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என்று வசனம் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எதைப் பற்றி பேசுகிறது? நியாயத்தைப் பற்றியே பேசுகிறது. ஆபேலுடைய இரத்தம் எப்பொழுது பேசியது?

*அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. (ஆதியாகமம் 4:10)*

ஆபேல் தன் சகோதரனால் கொலை செய்யப்பட்டு மரித்தார். மரித்தப்பின்னர் அவருடைய இரத்தம் எப்படி பேசியது? இரத்தம் பேசுமா? மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் (பிரசங்கி 9:5) என்று வேதம் கூறுகிறது. அப்படியானால், ஆபேலுடைய இரத்தம் பேசினது என்பதற்கு என்ன அர்த்தம்? ஆபேலுக்காக தேவன் நியாயம் தீர்க்கிறார். ஆபேலுடைய இரத்தத்தைக் காட்டிலும் நன்மையான காரியங்களைப் பேசுகிறது இயேசு கிறிஸ்து. இப்பொழுது நியாயத்தைப் பற்றி பேசுகிறவராக இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவர் மத்தியஸ்தராகவும் இருக்கிறார். ஒவ்வொரு நபருக்காகவும் இயேசு கிறிஸ்துதான் பேசுகிறார். மரித்த நபர் நியாயம் கேட்பது போல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நியாயம் கேட்கிறார்.

மரித்தவர்கள் கல்லறையில் உறங்கிக் கொண்டு இருக்கலாம். ஆனால், அவர்களுக்காகவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் நியாயம் கேட்கிறார். அதைத்தான், வேதாகமம் ஆபேலுடைய ரத்தம் பேசினது (ஆதியாகமம் 4:10) என்று கூறுகிறது. ஆனால், உண்மையிலேயே நியாயம் கேட்கிறவர் - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான். **அதன்படி, பலிபீடத்தின் கீழ் ரத்தம் கொட்டப்பட்டது என்பது தேவனுக்காக மரித்த பரிசுத்தவான்களைக் குறிக்கிறது. அவர்கள் பேசுவது போல உண்மையிலேயே அவர்களுக்காக பேசினது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.**

ஐந்தாம் முத்திரை என்பது ஐந்தாம் திருச்சபையாகிய சர்தையுடன் ஒத்துப்போகிறது. இந்தக் காலக்கட்டத்தில் அநேக சீர்திருத்தவாதிகள் எழும்புகிறார்கள். அவர்கள் தேவனுக்காக உண்மையாக வாழ்ந்து, அவருக்காக மரித்துப் போவதை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். ஜான் ஹஸ், ஜேரோம், மார்டின் லூதர் போன்ற பல சீர்திருத்தவாதிகள் உண்மையாக வாழ்ந்த காரணத்தால் கொல்லப்பட்டார்கள். இவர்களுடைய மரணத்திற்கு காரணமானவர்களுக்கும் முந்திய திருச்சபைகளின் காலத்தில் கொல்லப்பட்ட பரிசுத்தவான்களின் மரணத்திற்கு காரணமானவர்களுக்கும் எப்பொழுதுதான் நியாத்தீர்ப்பு கொடுக்கப்படும் என்பதே கேள்வியாக இருக்கிறது.

**தேவன் நிச்சயமாக நியாயந்தீர்ப்பார். ஆனால், அதற்கு முன்பாக இவர்கள் கொல்லப்பட்டது போலவே இன்னும் அநேகர் சத்தியத்திற்காக ரத்த சாட்சியாக மரிக்கவேண்டும்.** அப்படி மரிக்கிறவர்களுடைய தொகை நிறைவேறும்போது, தேவன் நியாயந்தீர்ப்பார் என்பதே பதிலாக இருக்கிறது. அதுவரைக்கும் மரித்த பரிசுத்தவான்கள் பொறுமையாக இளைப்பாறிக் கொண்டிருக்க வேண்டுமென்று வசனம் கூறுகிறது. **இளைப்பாறுதல் என்பது நித்திரையைக் குறிக்கிறது.** அநேக இடங்களில் மரணத்தை நித்திரைக்கு ஒப்பிட்டு இயேசு கிறிஸ்து பேசியிருக்கிறார்(யோவான் 11:11). லாசரு இறந்து விட்டார் என்ற செய்தி வருகிறது. இயேசு கிறிஸ்துவோ லாசரு நித்திரை செய்கிறான் என்று கூறுகிறார். இன்னும் அநேகர் சுவிசேஷத்தை பிரசங்கித்து, சுவிசேஷத்திற்காக மரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த தொகை நிறைவேறும் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

## ஆறாம் முத்திரை

*அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும்,*

*ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள். (வெளிப்படுத்தல் 6:12-17)*

**ஆறாம் முத்திரை உடைக்கப்பட்டபோது ஆறு சம்பவங்கள் நடக்கிறது:**

1. சூரியன் கறுப்பாக மாறுகிறது.
2. பூமி அதிர்கிறது.
3. சந்திரன் ரத்தம் போல் மாறுகிறது.
4. நட்சத்திரங்கள் விழுகிறது.
5. வானம் சுருட்டப்பட்ட புத்தகம் போல் ஆகிறது.

6. மலைகளும் தீவுகளும் தங்கள் இடத்தை விட்டு அகன்று போனது. இந்த ஆறு சம்பவங்களின் முடிவில் ராஜாக்கள் அனைவரும் தேவனுடைய கோபத்திற்கு எங்களை மறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி குகைகளுக்குள் சென்று தங்களை மறைத்துக்கொள்கிறார்கள். இங்கே **மகா நாள் என்பது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.** ஆறாம் முத்திரை என்பது பல காரியங்களுக்கு தொடர்புடையதாக இருக்கிறது. **இந்த ஆறாம் முத்திரையின் முடிவிலே கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடந்தேறும்** என்று பார்க்கிறோம்.

*இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான். முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர். (வெளிப்படுத்தல் 7:1-4)*

### யார் இந்த 1,44,000 பேர்?

இவர்கள்தான் பூமியின் கடைசி நாட்களில் வாழக்கூடியவர்கள். **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் சமயத்தில் இந்த 144000 கூட்டத்தார்தான் இருப்பார்கள். இந்த கூட்டத்தார் தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் எழும்பிய பின்னரே கர்த்தருடைய மகா நாள் வரும் என்ற செய்தியை தேவன் நமக்குக் கூறுகிறார்.**

முதல் ஐந்து முத்திரைகளின் காலம் முடிந்துவிட்டது. **இப்பொழுது நாம் வாழ்ந்துகொண்டிருப்பது ஆறாம் முத்திரையின் காலமாகும்.** இதுவே ஏழு

முத்திரைகளில் இருக்கிற மிகப் பெரிய ரகசியம். ஐந்து முத்திரைகளின் காலத்தில நடந்த அனைத்தும் சரித்திரங்கள். ஆனால் இந்த ஆறாம் முத்திரையின் சம்பவங்கள் அனைத்தும் நமக்கான முக்கியமான செய்தியாகும். பூமியினுடைய முடிவு - இந்த 144000 உருவாகும்போது தான் இருக்கிறது என்பதே இந்த முத்திரையில் உள்ள தேவரகசியமாகும்.

## யார் இந்த திரள் கூட்டத்தார்?

*இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள். அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார் என்றான். (வெளிப்படுத்தல் 7:9-17)*

இங்கே ஒரு திரள் கூட்டத்தைப் பற்றி பார்க்கிறோம். **இவர்கள் வெள்ளை அங்கியை தரித்திருக்கிறார்கள். குருத்தோலையை பிடித்திருக்கிறார்கள். ஆட்டுக்குட்டியானவரின் முன்பாக நிற்கிறார்கள். ஆட்டுக்குட்டியானவரைத் துதித்துப் பாடுகிறார்கள். முகங்குப்புற விழுந்து வணங்குகிறார்கள். ஆட்டுக்குட்டியானவரோடேயே இருக்கிறார்கள். மிகுந்த உபத்திரவத்தைக் கடந்து வந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பசி அடைவதில்லை, தாகம் அடைவதில்லை** என்று பார்க்கிறோம். ஆட்டுக்குட்டியானவர் என்ன செய்கிறார் என்றால் இந்தக் கூட்டத்தாரை மேய்த்து ஜீவத்தண்ணீரண்டை நடத்துகிறார். *வெளிப்படுத்தல் 7*-ம் அதிகாரத்தில் திரள் கூட்டத்தாரைப் பற்றிய செய்தியும் இருக்கிறது. 144000 பேரைப் பற்றிய செய்தியும் இருக்கிறது.

5 முத்திரைகளை பற்றின காரியங்கள் தெளிவாக இருந்தாலும், இந்த ஆறாம் முத்திரையின் செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள 144000 பேர் மற்றும் திரள் கூட்டத்தைப் பற்றிய காரியங்கள் சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. இதைப் பற்றி புரிந்துகொள்வதும், விளக்குவதும் மிகவும் கடினமாக இருக்கிறது.

## 1. இவர்கள் யூதர்களா?

பொதுவாக இவர்கள் யூதர்கள் என்று ஒரு கருத்து இருக்கிறது. **ஆனால் இவர்கள் யூதர்கள் கிடையாது.** ஏனென்றால், யூதர்கள் இயேசு கிறிஸ்துவை நிராகரித்துவிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் அனைவருக்கும் பிரசங்கிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின் திருச்சபைகளில் யூதர்களும் இருந்தார்கள், புற ஜாதியினரும் இருந்தார்கள். மரித்த கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் யூதர்கள் கிடையாது. இப்பொழுது கிறிஸ்தவ சமுதாயமானது உலகமெங்கும் திரளாகக் காணப்படுகிறது. இதில் யூதர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள். ஆசீர்வாதங்களைப் பற்றி பார்க்கும்போது: தேவன் யூதர்களுக்கு என்று தனி ஆசீர்வாதங்களும், புறஜாதிகளுக்கென்னு தனி ஆசீர்வாதங்களையும் கொடுக்கவில்லை.

யாரெல்லாம் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்குள்ளாக வந்தார்களோ, அவர்கள் எல்லோரும் ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள் எனறு வேதாகமம் கூறுகிறது. அனைவரையும் ஒரே விதமான கண்ணோட்டத்தில்தான் தேவன் பார்க்கிறார். யூத குலத்திலிருந்து வந்தவர்களுக்கு விசேஷமான ஆசீர்வாதங்களை தேவன் வைக்கவில்லை. புதிய ஏற்பாட்டில் உள்ள பல வசனங்களில் தேவன் இதைப்பற்றி தெளிவுப்படுத்தியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அனைவரும் ஆபிரகாமுடைய சந்ததியினர்தான்.

**இதன்படி தேவனுக்காக மிகப்பெரிய உபத்திரவத்தை கடந்து, சுவிசேஷத்தை வல்லமையாக பிரசங்கித்து, உலகத்திற்கு சாட்சியாக வாழக்கூடிய இந்த 144000 நபர்கள் அடங்கிய கூட்டம் என்பது வெறும் யூதர்களை மட்டும்தான் குறிக்கிறது என்பது தவறான கருத்து.** இது அனைவரையும் குறிக்கிறது. அதுமட்டுமல்லாமல், இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது மற்றும் நிராகரித்தது யூதர்கள்தான். 70 வார கால தீர்க்கதரிசனத்தின் (தானியேல் 9:24-27) முடிவு யூதர்களுடைய கிருபையின் காலத்தின் முடிவாக இருந்தது. (வரைபடம் : பக்கம் 191). தேவன் யூதர்களை விசேஷமாக தெரிந்தெடுத்து வைத்தார். அவர்கள் மனந்திரும்புவதற்காக பல தீர்க்கதரிசிகளை அனுப்பினார். ஆனால், அவர்கள் மனந்திரும்பவில்லை. கடைசியில் அவரே வந்து சுவிசேஷத்தை அறிவித்தார். அப்பொழுதும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசு கிறஸ்துவை கொலை செய்தார்கள். கடைசியாக மூன்றரை வருடங்களைக் கொடுக்கிறார். அந்த வாய்ப்பிலும் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி பகிர்ந்த ஸ்தேவானையும் கொலை செய்தார்கள். அதன்பின், தேவன் அவர்கள்மீதிருந்த விசேஷ கனத்தை எடுத்து போட்டார்.

## 2. இவர்கள் 12 கோத்திரத்தார்களா?

அதுமட்டுமல்லாமல், இந்த 144000 பேர் பன்னிரண்டு கோத்திரத்திலிருந்து வந்தார்கள் என்று ஒரு பெயர் பட்டியல் *வெளிப்படுத்தல் 7*-ம்

அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெயர் பட்டியல் பழைய ஏற்பாட்டில் உள்ள கோத்திரங்களின் கணக்கிற்கும் இங்கே கொடுக்கப்பட்டுள்ள கோத்திரங்களின் கணக்கிற்கும் சிறிய வேறுபாடுகள் இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் கோத்திரத்தின் வரிசையில் ரூபன் முதலில் இருப்பார். ஆனால் இங்கு கொடுக்கப்பட்டுள்ள வரிசையில் யூதா கோத்திரம் முதலாவதாக இடம்பெறுகிறது. மேலும், பழைய ஏற்பாட்டில் லேவி கோத்திரம் சேர்க்கப்பட்டிருக்காது. ஆனால் இங்கே லேவி கோத்திரம் இடம்பெற்றிருக்கிறது. இதைப்போல் இன்னும் சில வேறுபாடுகளும் இருக்கிறது.

**இதன்படி இஸ்ரவேலர்கள் மாத்திரமே அந்த 144000 என்ற கணக்கில் வருவார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியுமா? இல்லை. ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள் என்றுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.** ஏனென்றால் பழைய ஏற்பாட்டின் காலத்திலே, சாலமோன் நாட்களுக்குபின் இஸ்ரவேலர் இரண்டாகப் பிரிந்தபோது, பத்துக் கோத்திரங்கள் வட திசையிலும், யூதா மற்றும் பென்யமீன் கோத்திரங்கள் தென் திசையிலும் தங்கள் ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். இதிலே வட திசை ராஜ்யத்தில் உள்ள பத்துக் கோத்திரங்களும் அசீரியர்களின் படையெடுப்பினால் சிதறிப்போனார்கள். அதற்குப்பின், அந்தக் கோத்திரங்கள் இல்லாமலே போய்விட்டது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் அந்த பத்துக் கோத்திரங்கள் இல்லை. அவைகள் இருந்ததற்கான எந்த ஒரு ஆதாரமும் புதிய ஏற்பாட்டில் இல்லை. இதன்படி இந்த 144000 பேர் 12 கோத்திரங்களிலிருந்துதான் எழுவார்கள் என்று நினைப்பது தவறான காரியம். அவர்கள் இஸ்ரவேலர்கள் கிடையாது. ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள்.

## திரள் கூட்டத்தார் யார்?

திரள் கூட்டத்தாரைப் பற்றி **ஐந்து விதமான கண்ணோட்டங்கள்** இருக்கிறது:

1. இந்தக் கூட்டம் இரட்சிக்கப்பட்ட அனைவரையும் குறிக்கிறது. ஆதாம் முதல் உள்ள இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவருமே இந்த திரள்கூட்டத்தார்தான் என்பது முதலாம் கண்ணோட்டம்.

2. இந்தக் கூட்டம் உபத்திரவத்தை கடந்து போனவர்களை மட்டுமே குறிக்கும். ஏனென்றால், மிகுந்த உபத்திரவத்தை கடந்து செல்வார்கள் என்று வசனம் கூறுகிறது. இதன்படி ஆதாம் முதல் உபத்திரவத்தை சந்தித்தவர்கள் அனைவரையும் உள்ளடக்கியதே இந்தக் கூட்டமாக இருக்கும் என்பது இரண்டாம் கண்ணோட்டம்.

3. இந்தக் கூட்டம் 144000 பேர்களின் கடைசி கால ஊழியத்தின் மூலம், அவர்களால் கொண்டுவரப்பட்ட கூட்டம் என்றும், இவர்கள் உபத்திரவத்தின் காரணமாக மரித்துவிடுவார்கள் என்பதே மூன்றாம் கண்ணோட்டம்.

4. இந்தக் கூட்டம் 144000 பேரால் கொண்டு வரப்பட்டவர்கள் என்றும் அவர்களோடு சேர்ந்து உபத்திரவத்தை கடந்து இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது உயிரோடிருப்பார்கள் என்பது நான்காம் கண்ணோட்டம்.

5. இந்த திரள் கூட்டமும் 144000 பேரும், ஒன்றுதான் என்பதே ஐந்தாம் கண்ணோட்டம்.

இந்த ஐந்து கண்ணோட்டங்களில் எது சரியானது? எதற்காக இத்தனை கருத்து வேறுபாடுகள் இருக்கிறது? இதை தெளிவாகப் புரிந்துகெள்வதற்கு ஆறாவது முத்திரையின் கீழ் வேறு என்னென்ன காரியங்கள் நடக்கிறது என்று பார்ப்போம். ஆறாவது முத்திரையின் கீழ் 6 சம்பவங்கள் நடக்கிறதைப் பார்த்தோம். இந்த சம்பவங்கள் அனைத்தும் நடந்து விட்டதா என்று வரலாற்றைப் பார்க்கும்போது, முதல் நான்கு சம்பவங்கள் நடந்து விட்டதை அறிந்துகொள்ளலாம்.

1. **1755 நவம்பர், 1-அன்று மாபெரும் பூமியதிர்ச்சி லிஸ்பன்** என்ற இடத்தில் நடைபெற்றது. அது ரிக்டர் ஸ்கேல் அளவின்படி 9-ஆக பதிவானது. லிஸ்பனில் உள்ள 80 சதவீதமான வீடுகள் சேதமடைந்தன. இது ஆறாம் முத்திரையில் குறிப்பிடப்பட்டுள்ள பூமியதிர்ச்சியாக எடுத்து கொள்ளப்படுகிறது.
2. **1780 மே, 19-**அன்று ஒருநாள் முழுவதுமாக வடதுருவத்தில் **சூரியன் கறுப்பாக காட்சியளித்தது.**
3. அதே நாளில் **சந்திரன் இரத்தமாக மாறியது.**
4. **1833 நவம்பர், 13-அன்று வட துருவத்தில், இரண்டு லட்சத்திற்கும் மேலான நட்சத்திரங்கள் ஒருமணி நேரத்தில் விழுந்தது.** இதைப்போல் தொடர்ச்சியாக 6 மணி நேரமாக நட்சத்திரங்கள் விழுந்தது.

இப்படியாக இந்த நான்கு சம்பவங்களும், ஆறாம் முத்திரையின் செய்தியில் சொல்லப்பட்டது போலவே நடந்தது. ஒவ்வொரு முத்திரையின் செய்தியையும், ஒவ்வொரு காலக்கட்டத்தை சார்ந்த திருச்சபையோடு ஒத்துப் பார்க்க வேண்டும். ஐந்தாவது முத்திரை சீர்திருத்தவாதிகள் வந்த காலம். அது 15 முதல் 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காலம். இதற்குப் பின்புதான், ஆறாம் முத்திரை வருகிறது. இதன்படி இது போப் ஆதிக்கத்தின் முடிவு காலக்கட்டத்தில் (கிபி 1798) இருக்க வேண்டும். சரியாக அதே காலக்கட்டத்தில்தான் இந்த நான்கு அடையாளங்களும் நடந்திருக்கிறது. நான்கு அடையாளங்கள் நடந்து முடிந்தது. ஆனால், ஐந்து மற்றும் ஆறாம் அடையாளம் இன்னும் நடக்க வில்லை. ஏனென்றால், அவைகள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சம்பவிக்க வேண்டியவைகளாகும். முதல் நான்கு சம்பவங்களுக்கும், கடைசி இரண்டு சம்பவங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். **இதன்படி ஆறாம் முத்திரையின் காலம் கி.பி. 1755 ஆண்டு முதல் தொடங்கியது என்று கணிக்கப்படுகிறது.**

*வெளிப்படுத்தல் 7*-ம் அதிகாரத்தில் உள்ள இரண்டு கூட்டத்தாரையும் இந்த சம்பவங்களை வைத்து அந்த ஐந்து கண்ணோட்டங்களோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அப்படி பார்க்கும்போது அவைகளில் எது சரியானது என்பதை அறிந்துகொள்ளலாம்.

1. அந்த திரள் கூட்டம் ஆதாம் முதல் இரட்சிக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்கியது என்பதே முதல் கண்ணோட்டம். இது தவறான

கண்ணோட்டம். ஏனென்றால் கி.பி. 1755-ம் ஆண்டிற்குப் பின்பே ஆறாம் முத்திரையின் அடையாளங்கள் நடைபெறுகிறது.

2. இந்தக் கூட்டம் உபத்திரவத்தை கடந்து போனவர்களை மட்டுமே குறிக்கிறது என்பதே இரண்டாம் கண்ணோட்டம். இது தவறான கண்ணோட்டம். கி.பி. 1755-ம் ஆண்டிற்குப் பின்பே ஆறாம் முத்திரையின் அடையாளங்கள் நடைபெறுகிறது.

3. இந்த திரள் கூட்டம் 144000 பேரின் கடைசிகால ஊழியத்தின் பலனாக கொண்டுவரப்பட்ட கூட்டம் என்றும், இவர்கள் உபத்திரவத்தில் மரித்து விடுவார்கள் என்பதே மூன்றாம் கண்ணோட்டம். 144000 பேர் மட்டும் உபத்திரவத்தை கடந்து இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது உயிரோடு இருப்பார்கள் என்று பார்த்தோம். இதற்கு வேத வசனத்தில் ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? **144000 பேர் ஊழியம் செய்து, இந்த திரள் கூட்டத்தாரை கொண்டு வருவார்கள் என்று வசனங்கள் கூறுகிறதா என்று ஆராய்ந்துப் பார்த்தோமானால், இல்லை என்பதே பதில்.** பூமியின் கடைசி காலத்தில் தேவன் பூமியை அழிப்பதற்கு முன்பதாக, எதற்கு அந்த நான்கு தூதர்களையும் காற்றுகளை பிடித்திருக்க சொல்லுகிறார்? தேவ ஜனமாகிய 144000 பேரின் கூட்டத்தை முத்திரை போடுவதற்காகவே. **கடைசிகாலத்தில், உலக அழிவிற்குமுன் தேவன் 144000 கூட்டத்தை முத்திரை போடுகிறாரே தவிர முன்பே அவர்கள் முத்திரைபோடப்பட்டு மற்றவர்களை சத்தியத்திற்குள் கொண்டுவருவார்கள் என்றில்லை .** அப்பொழுது முத்திரையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே கூட்டத்தார் இந்த 144000 பேர் மட்டுமே. அப்படி இருக்கும்பொழுது இவர்கள் இன்னொரு கூட்டத்தாரை கொண்டு வருவார்கள் என்று நாம் சொல்ல முடியாது. இதன்படி இந்தக் கண்ணோட்டமும் தவறானது.

4. இந்த திரள் கூட்டம் 144000 பேரின் கடைசிகால ஊழியத்தின் பலனாக கொண்டுவரப்பட்ட கூட்டம் என்றும், இவர்கள் அவர்களோடு சேர்ந்து உபத்திரவத்தை அனுபவித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது உயிரோடிருப்பார்கள் என்பதே நான்காம் கண்ணோட்டம். இதுவும் ஏறத்தாழ மூன்றாம் கண்ணோட்டத்தின்படியே இருக்கிறது. அங்கே இந்தக் கூட்டத்தார் மரிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இங்கே அவர்கள் உயிரோடிருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கண்ணோட்டமும் தவறானது என்பதை உறுதி செய்யலாம்.

5. முதல் நான்கு கண்ணோட்டங்களும் தவறானது என்றால், ஐந்தாவது கண்ணோட்டம் தான் சரியானது. **ஆம், 144000 பேரும் திரள் கூட்டத்தாரும் ஒன்றுதான்.** இந்தக் கண்ணோட்டம் சரியானதா? *வெளிப்படுத்தல் 7:1-8* **வசனங்கள் 144000 பேரை பற்றி பேசுகிறது.** *வெளிப்படுத்தல் 7:9-17* **வசனங்கள் திரள் கூட்டத்தாரைப் பற்றி பேசுகிறது.** 144000 பேரை பற்றி பார்க்கும்போது அவர்கள் பூமியில் உள்ள பரிசுத்தவான்கள் என்று சொல்லப்படுகிறது. திரள் கூட்டத்தாரைப் பற்றி பார்க்கும்போது அவர்கள் பரலோகத்திலிருக்கும் பரிசுத்தவான்களாக காட்டப்படுகிறது. ஆனால், திரள் கூட்டத்தாருக்கு உண்டான குணமும், 144000 பேருடைய குணமும் ஒன்றாகக் காணப்படுகிறது.

## 1,44,000 பேரும், திரள்கூட்டமும் ஒன்று என்பதற்கான ஆதாரங்கள்:

## முதல் ஆதாரம்

*பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன். அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். (வெளிப்படுத்தல் 14:1-4)*

*வெளிப்படுத்தல் 7*-ம் அதிகாரத்தில் 144000 பேர் பூமியில் இருப்பதாக சொல்லப்படுகிறது, *வெளிப்படுத்தில் 14*-ம் அதிகாரத்தில் அவர்கள் பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருப்பதாக சொல்லப்படுகிறது. திரள் கூட்டத்தாரைப் பற்றி *வெளிப்படுத்தல் 7*-ம் அதிகாரம் இதே காரிங்களைத்தான் கூறுகிறது. இதுவே இந்த இரண்டு கூட்டத்தாரும் ஒன்று என்பதற்கு முதல் ஆதாரம்.

## இரண்டாவது ஆதாரம்

இரண்டாவதாக ஒரு ஆதாரத்தையும் பார்ப்போம். வேதத்தில் ஒரு காரியம் இரண்டு முறை சொல்லப்படும். இதை “ரிப்பீட் பேட்டன்” (Repeat Pattern) என்று கூறுவார்கள். அதாவது கேட்டது என்ன என்று எழுதப்படும், அதே காரியத்தை பார்க்கும்போது என்ன தெரிந்தது என்றும் எழுதப்படும்.

## இதற்கு 3 உதாரணங்கள் பார்க்கலாம்

**1**

*கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். (வெளிப்படுத்துதல் 1:10)*

இங்கே யோவான் எக்காள சத்தம் போன்ற சத்தத்தைக் கேட்டதாக வசனம் கூறுகிறது.

*அது: நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில்எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது. (வெளிப்படுத்தல் 1:11)*

**யோவான் கேட்ட எக்காளம் போன்ற அந்த சத்தம் நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன் என்று கூறுகிறதாக கேட்கிறார்.**

*அப்பொழுது என்னுடனே பேசினசத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகேபொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன். (வெளிப்படுத்துதல் 1:12,13)*

பேசின அந்த சத்தத்தைப் பார்ப்பதற்காக யோவான் திரும்பியபோது அங்கே மனுஷகுமாரனுக் கொப்பானவரை கண்டதாகக் கூறுகிறார். இங்கே யோவான் கேட்கின்ற காரியங்களையும், பார்க்கின்ற காரியங்களையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கும்போது, அங்கே பேசினவர் இயேசு கிறிஸ்து என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. **இதன்படி இங்கே யோவான் கேட்கிறதும், பார்க்கிறதும் ஒரே காரியத்தைதான் என்று அறிந்துகொள்ளலாம்.**

**2**

இதைப் போன்ற மற்றொரு சம்பவத்தையும் பார்க்கலாம்:

*அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். (வெளிப்படுத்தல் 5:5)*

இங்கே யோவான் புத்தகத்தை திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் ஜெயங்கொண்டிருக்கிறார் என்று கேட்கிறார்.

*அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார். (வெளிப்படுத்தல் 5:6,7)*

**ஆனால், அவர் பார்த்தது சிங்கத்தை அல்ல அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியை.** மேலும், ஆட்டுக்குட்டியானவர் அந்தப் புத்தகத்தை வாங்கியதாகப் பார்க்கிறோம். **இதன் அடிப்படையில் பார்க்கும்போது யோவான் கேட்டதும், பார்த்ததும் ஒரே நபராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியே என்று அறிந்துகொள்ளலாம்.**

அதைப்போன்றே இங்கே *வெளிப்படுத்தல் 7:4*-ம் வசனத்தில் முத்திரை போடப்பட்ட தொகை 144000 பேர் என்பதைக் கேட்கிறார். பின்பு *வெளிப்படுத்தல் 7:9*-ம் வசனத்தில் எந்த மனிதனாலும் எண்ண முடியாத திரள் கூட்டமான மக்கள் சிங்காசனத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்னால் நிற்பதைப் பார்க்கிறார். **எப்படி எக்காள சத்தத்தைக் கேட்டு அதைப் பார்க்கும்பொழுது இயேசு கிறிஸ்துவாக இருந்தாரோ, எப்படி சிங்கம் இருக்கிறார் என்று கேட்டு**

**ஆட்டுக்குட்டியானவரைப் பார்த்தாரோ, அதைப்போல, 144000 பேர் என்று கேட்டார். பார்க்கும்போதோ திரள் கூட்டத்தாரைப் பார்க்கிறார். இதன் மூலம் 144000 பேரும், திரள் கூட்டத்தாரும் ஒன்றுதான் என்பதை அறிந்துகொள்ளலாம்.**

**3**

இந்த கண்ணோட்டம் சரிதான் என்பதை உறுதி செய்வதற்கு மற்றொரு ஆதாரத்தையும் பார்ப்போம்.

*பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி (வெளிப்படுத்தல் 21:9)*

இந்த வசனத்தின்படி ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியைக் காண்பிக்கிறேன் என்று தூதன் யோவானிடம் கூறுகிறான்.

*பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான். (வெளிப்படுத்தல் 21:10)*

ஆனால், யோவான் பார்த்தது ஒரு ஸ்திரீயை அல்ல! அவர் பரிசுத்த நகரமாகிய எருசலேமைப் பார்க்கிறார். இதன்படி புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரமே இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி என்பதை அறிந்துகொள்ளலாம்.

## 144000 பேருக்கும், திரள் கூட்டத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

1. இரண்டு கூட்டத்தாரும் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கிறார்கள்.

2. தேவனை சேவிக்கிறார்கள்.

3. ஆட்டுக்குட்டியானவரோடே இருக்கிறார்கள்.

4. ஆட்டுக்குட்டியானவரை பின்பற்றுகிறார்கள்.

5. மூப்பர்களும் நான்கு ஜீவன்களுக்கும் முன்பாக இருக்கிறார்கள். வெண் வஸ்திரம் தரித்தவர்களாக இருக்கிறார்கள்.

6. பெரும் உபத்திரவத்தை கடந்து வந்தவர்களாக இருக்கிறார்கள்.

7. பூமியில் இருந்து மீட்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

8. தேவனை உரத்த சத்தத்தால் துதிக்கிறவர்களாக இருக்கிறார்கள். இப்படியாக இந்த இரண்டு கூட்டத்தாரும் ஒரே குணநலன்களை உடையவர்களாக இருக்கிறார்கள்.

## அப்படியானால் எதற்காக இந்தக் கூட்டத்தை 144000 பேர் என்று சொல்ல வேண்டும்?

12 கோத்திரங்களிலிருந்து 12000 பேர் என்றால் 144000 பேர் வருகிறார்கள். 12 என்ற எண்ணிலிருந்தே இந்த 144000 என்ற எண்ணிற்கான கணக்கு

துவங்குகிறது. ஆகவே, **இந்த 12 என்ற எண்ணுடைய சிறப்பை வேதாகமத்தின் மூலம் அறிந்துகொள்ள வேண்டும்.**

12 கோத்திரங்கள்

12 அப்போஸ்தலர்கள்

12 நியாயாதிபதிகள்

12 ஆசாரியர்களை எஸ்றா தேர்ந்தெடுத்தார்

12 நபர்கள் கானானை வேவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்டார்கள்

12 கற்கள் யோர்தான் நதியில் இருந்து எடுக்கப்பட்டது

12 ஆசாரிப்புக் கூடாரத்தின் சமூகத்து அப்பங்கள்

பிரதான ஆசாரியனுடைய மார்கச்சையில் உள்ள 12 வித கற்கள்

12 வித பழங்கள் தரும் ஜீவவிருட்சம்

12 புதிய எருசலேமின் வாசல்கள்

12 அஸ்திபார கற்கள்

12 பரலோக வாசலில் நிற்கும் தூதர்கள்.

வேதாகமத்தில் 12 என்ற எண் மிகவும் விசேஷமாக பயன்படுத்தப்பட்டிருக்கிது. **12 என்ற எண் தேவ ஜனத்தைக் குறிக்கிறது. 12 என்பது தேவனுடைய திருச்சபையைக் குறிக்கிறது.** இங்கே 144000 பேர் என்று சொல்லப்படுவதற்கான காரணம் என்ன? 12 என்ற எண்ணுடைய பெருக்கல்தான் - இந்த 144000. **கடைசி காலத்தில் வாழக்கூடிய தேவ ஜனத்தைக் குறிப்பதற்காக தேவன் இந்த எண்ணை பயன்படுத்துகிறார்.**

$$12 \times 12 \times 1000 = 144000$$

ஏனென்றால், பழைய ஏற்பாட்டில் தம்முடைய ஜனத்தைக் குறிப்பதற்காக தேவன் 12 கோத்திரங்களை தெரிந்துகொண்டார். புதிய ஏற்பாட்டில் 12 அப்போஸ்தலர்களை தெரிந்துகொண்டார். புதிய எருசலேமிலும், 12 வாசல்கள், 12 அஸ்திபாரங்கள், 12 தூதர்களை வைத்திருக்கிறார். இதன்படி 12 என்ற எண்ணை தேவன் தம்முடைய ஜனத்தின் அடையாளமாக வைத்திருக்கிறார். இங்கே 12 என்ற எண்ணிற்கான விளக்கத்தைப் பார்த்தோம். ஆனால் ஆயிரம் எங்கிருந்து வந்தது?

**1000 என்ற எண் எதைக் குறிக்கிறது?**

*இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலும் ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரம்பேரை யுத்தத்திற்கு அனுப்பவேண்டும் என்றான். அப்படியே இஸ்ரவேலராகிய அநேகம் ஆயிரங்களில், ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரமாயிரம் பேராகப் பன்னீராயிரம்பேர் யுத்தசன்னத்தராய் நிறுத்தப்பட்டார்கள். (எண்ணாகமம் 31:4,5)*

**இங்கே எதற்காக ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் 1000 பேரை தேவன் தெரிந்து கொள்கிறார்?**

*உடனே சபையார் பலவான்களில் பன்னீராயிரம்பேரை அங்கே அழைத்து: நீங்கள் போய், கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளை ஸ்திரீகளோடும் பிள்ளைகளோடும் பட்டயக்கருக்கினால் வெட்டுங்கள். (நியாயதிபதிகள் 21:10)*

**இங்கே எதற்காக 12000 பேரை தேவன் தெரிந்து கொள்கிறார்?**

*சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். (சங்கீதம் 50:10)*

இங்கே தேவன் சகலவித காட்டு ஜீவன்களும் என்னுடையவைகள் என்று சொல்லியிருக்கலாம். ஆனால், இங்கேயும் ஆயிரம் என்ற எண்ணை தேவன் பயன்படுத்துகிறார். **எப்படி 7 என்ற எண் பூரணமான எண் என்று சொல்லப்படுகிறதோ, அதைப்போல் இங்கு 1000 என்கிற எண்ணும் முழுமையைத்தான் குறிக்கிறது.** ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஆயிரம் பேரை தேவன் தெரிந்து கொள்வதற்கு காரணம் முழுமையைக் குறிப்பதற்காகவே.

**ஒவ்வொரு கோத்திரத்தில் இருந்தும் 12000 பேரை தேவன் தேர்ந்தெடுப்பது ஒரு அடையாளமே.** இந்த எண் தேவனுடைய திருச்சபையைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, இதற்கு 144000 பேர்தான் இரட்சிக்கப்படப் போகிறார்கள் என்று அர்த்தம் இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

தற்போதைய உலகில் சில யூதர்கள் மாத்திரம் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இங்கே இஸ்ரவேல் என்கிற வார்த்தை எப்படி ஆவிக்குரிய இஸ்ரவேலரைக் குறிக்கிறதோ அதைப்போல இந்த 144000 என்ற எண்ணும் பரிசுத்தவான்களைக் குறிக்கும் ஒரு அடையாளம்தான்.

**இதற்கு முன்பாக உலகத்தில் ஏற்பட்ட அழிவுகளில் தேவன் எத்தனைபேர் அழிவிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்பதை முன்னறிவித்தாரா?**

நோவாவின் காலத்தில் வெள்ளம் வரும் என்பதையும், உலகத்திற்கு அழிவு உண்டு என்பதையும் தேவன் கூறினார். **ஆனால், எத்தனை பேரை மீட்பேன் என்று தேவன் நோவாவிடம் சொல்லவில்லை.** அதைப்போல் சோதோம், கொமோரா பட்டணம் அழிக்கப்படும்போதும், எத்தனை பேர் உண்மையாய் இருந்தால் பட்டணத்தைக் காப்பாற்றுவீர்கள் என்று ஆபிரகாம் தேவனிடம் கேட்கிறார். ஆனாலும் கடைசி வரைக்கும் எத்தனை பேரை மீட்பேன் என்று தேவன் சொல்லவில்லை.

தேவனுடைய செயல்பாடுகள் மாறாதவைகள். **எப்போது முடிவு வரும் என்பதை மட்டுமே தேவன் கூறுவார். எத்தனை பேரை மீட்கப் போகிறார் என்பதை ஒருவரும் அறியார்கள்.** ஆதியிலிருந்து மீட்கப்படும் நபர்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்தாத தேவன், இந்தக் கடைசி காலத்தில் ஆண்டவர் இத்தனை பேர்தான் மீட்பேன் என்று சொல்வாரா? நிச்சயமாக சொல்லமாட்டார்.

இதன் அடிப்படையில், 144000 என்பது ஒரு அடையாள எண் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அப்படியானால் ஒரு திரள் கூட்டத்தார் கடைசி காலத்தில் இரட்சிக்கப்படுவார்கள் என்று சொல்லலாமே. **எதற்காக 144000 என்கிற எண்ணை பயன்படுத்த வேண்டும்?** அழிந்துபோன

கோத்திரங்களின் பெயர்களை எதற்காகப் பயன்படுத்த வேண்டும்? **வெளிப்படுத்தல் புத்தகம் முழுவதும் குறியீடுகள் மற்றும் அடையாளங்களால் நிறைந்திருக்கிறது. தேவன் ஒரு பெயரை குறிப்பிடுகிறார் என்றால் அந்த பெயரை நாம் அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது.** அந்த பெயருக்கு உண்டான அர்த்தம் இருக்கிறது. அதன் மூலம் தேவன் நமக்கு என்ன சொல்ல வருகிறார் என்று நாம் பார்ப்போம். ஒவ்வொரு பெயருக்கும் அர்த்தம் இருக்கிறது.

அதைப்போல், ஒவ்வொரு கோத்திரத்தின் பெயர்க்கும் ஒரு அர்த்தம் உள்ளது. யூதாவிற்கு துதித்தல் என்று அர்த்தம். ரூபன் என்றால் ஆண்டவர் என்னுடைய இக்கட்டில் நோக்கி பார்த்தார் என்று அர்த்தம். இதைப்போல் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கிறது. இந்த அர்த்தத்தை எல்லாம் சேர்த்து பார்த்தோமென்றால் ஒரு செய்தி நமக்கு கிடைக்கிறது. அந்த செய்தி என்ன?

"இக்கட்டில் என்னை பார்த்த என் தேவனை துதிப்பேன். எனக்கு எதிராக ஒரு கூட்டம் வந்தது, நான் போராடிக் கொண்டிருந்தேன். ஆனால் தேவன் என்னை பாக்கியவான் என்று கூப்பிட்டார். கடைசியாக நான் என்னுடைய கஷ்டங்களை எல்லாம் மறந்தேன். என் தேவன் என் கூப்பிடுதலைக் கேட்டார். என்னை அவரோடு சேர்த்துக்கொண்டார். நான் எனது மணவாளனோடு இருப்பேன். அவர் என்னை தமது வலது கரத்தில் சேர்த்துக் கொள்வார்" என்பதே.

இதில் நமக்கு கிடைக்கும் செய்தி என்னவென்றால் - 144000 பேர் பூமியின் கடைசி காலத்தில் வாழ்கிறார்கள். பூமியின் மிகக்கொடுமையான உபத்திரவங்களில் பங்கெடுக்கிறவர்கள். அவர்களுடைய நிலைமையை விளக்குகிற ஒரு கருத்தை உடையதாக இந்தப் பெயர்கள் இருக்கிறது. அவர்கள் ஆட்டுக்குட்டியானவரோடு உட்காருவார்கள் என்று கூறும் இந்த கோத்திரங்களின் பெயருடைய அர்த்தமும், வேதத்தில் சொல்லப்பட்ட வசனமும் ஒன்றாக இருக்கிறது.

**144000 என்பது அடையாள எண்தான் என்பதற்கு இன்னும் சில விளக்கங்கள்:**

1. வெளிப்படுத்தல் 7ஆம் அதிகாரத்தில் 14400 பற்றிய பகுதியிலுள்ள எல்லா காரியங்களையும் (யூதர்கள், 12 கோத்திரம், தேவனுடைய முத்திரை) அடையாளங்களாக இருக்கும்போது, இந்த 144000 எண்ணும் ஒரு அடையாள எண்ணாகத்தான் இருக்கமுடியும்.

2. சிலர் ஒவ்வொரு கோத்திரத்திலும் 12000 பேர் என்கிற எண்ணை அடையாளமாக எடுத்துகொண்டு, 144000 எண்ணை அடையாளமாக எடுத்துக்கொள்வதில்லை. அது தவறு. ஒரு குறிப்பிட்ட வேதப்பகுதியிலுள்ள, ஒரு வார்த்தையை அடையாளமாக எடுத்துக்கொண்டு, மற்றொரு வார்த்தையை அப்படியே எடுத்துக்கொள்ள முடியாது.

3. கடைசி காலத்தில் வெறும் 144000 பேர்தான் இரட்சிக்கப்படுவார்கள் என்று சொல்லப்படும்போது, மக்கள் நம்பிக்கையற்றுபோவதற்கு வாய்ப்பிருக்கிறது. தேவையில்லாத பயத்தை கொண்டுவருகிறது. தேவன் சொல்லாத விஷயத்தை சொல்லி, மக்களை பாரப்படுத்த கூடாது. தேவன் அதை விரும்புவதில்லை.

4. யார் இரட்சிப்படைவார்கள், எத்தனைபேர் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை தீர்மானிப்பது தேவனுடைய வேலை. நாம் அதைப்பற்றி பேச தேவையில்லை.

**5.** வெறும் 14000 பேர் மட்டும்தான் இரட்சிக்கப்படுவார்கள் என்று நாம் நம்பும்போது, மற்றவர்களுக்கு சத்தியத்தை சொல்லவேண்டும், ஊழியம்செய்ய வேண்டும் என்ற வாஞ்சை குறைய வாய்ப்பிருக்கிறது. நோவாவிடம் தேவன் 8 போரை மட்டும்தான் காப்பாற்றப்படுவார்கள் என்று சொல்லியிருந்தால், நோவா 120 வருடங்கள் பிரசங்கம் செய்திருப்பாரா? ஊழியம்செய்வதுதான் நம் வேலை, எத்தனைபேர் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை தேவன் பார்த்துக்கொள்வார்.

**ஆறாம் முத்திரையின் காலத்தில் வாழும் நாம் என்ன செய்ய வேண்டும்?**

ஆறாம் முத்திரையில் கொடுக்கப்ட்ட நான்கு அடையாளங்கள் நிறைவேறியது. **144000 என்று பெயர் சூட்டப்பட்ட கூட்டம் எழுப்பப்படுவதற்காக உலகத்தின் முடிவு காத்திருக்கிறது. இந்தக் கூட்டத்தார் மட்டுமே தேவனுடைய முத்திரையை பெற்றுக்கொள்வார்கள்.**

அந்த மேலான கூட்டத்தில் ஒருவராக இருக்க வேண்டுமென்பதே கடைசி காலத்தில் வாழும் நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் இடம்பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? *வெளிப்படுத்தல் 7* மற்றும் *14*-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள குணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேவனுக்கு உண்மையாக ஊழியம் செய்ய வேண்டும்.

**தேவன் எதற்கு இந்தச் செய்திகளை வேதத்தில் வைத்திருக்கிறார்?**

இந்தச் செய்திகளைப் படித்து புரிந்துகொண்டு நாமும் இந்தக் கூட்டத்தில் ஒருவராக மாற வேண்டும் என்பதற்காகத்தான். ஆம், நாமும் இந்தக் கூட்டத்தில் ஒருவராக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். 144000 என்று பெயர் சூட்டப்பட்ட கூட்டத்தில் ஒருவராக நாம் இருப்பதற்கு தேவன் கிருபை செய்வாராக.

## ஏழாவது முத்திரை:

*அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று. - வெளிப்படுத்தல் 8:1*

“பரலோகத்தில் அரைமணி நேரம் அமைதல்” என்பது இயேசு **கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறிக்கிறது.**

அத்தியாயம் – 4

# ஏழு எக்காளங்கள்



**ஆலோசனை: வெளிப்படுத்தல் 8,9,10 மற்றும் 11 அதிகாரங்களைப் படித்துவிட்டு இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள **ஏழு குத்துவிளக்குகள் ஏழு சபைகளுக்கான தூதோடு தொடர்புடையது** என்றும், மேசையில் உள்ள சமுகத்து **அப்பங்கள் ஏழு முத்திரைகளோடு தொடர்புடையது** என்றும் பார்த்தோம். இவைகளைத் தவிர பரிசுத்த ஸ்தலத்தில் வேறு என்ன பொருள் இருக்கிறது? மீதமாக உள்ளது தூபபீடம் மட்டுமே. இந்த தூபபீடத்திலிருந்துதான் ஆசாரியன் ஜெபம் செய்வார். இந்த **தூபபீடம் ஏழு எக்காளங்களோடு தொடர்புடையது.** முதலில் எக்காளம் என்ற வார்த்தைக்கு அர்த்தத்தைப் பார்ப்போம். பின்பு ஏழு எக்காளங்களுக்கும், தூபபீடத்துக்கும் உள்ள தொடர்பைப் பற்றி பார்ப்போம்.

| ஆசரிப்புக் கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலத்திலுள்ள பொருட்கள் | எதை குறிக்கிறது? |
|---|---|
| குத்துவிளக்கு | 7 சபைகள் |
| அப்பங்கள் | 7 முத்திரைகள் |
| தூபபீடம் | 7 எக்காளங்கள் |

**எக்காளம் எதைக் குறிக்கிறது?**

*உங்கள் தேசத்தில் உங்களைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கக்கடவீர்கள்; அப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவுகூறப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள். உங்கள் மகிழ்ச்சியின் நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்க தகனபலிகளும் சமாதான பலிகளும் செலுத்தப்படும்போது பூரிகைகளை ஊதவேண்டும்; அப்பொழுது அவைகள் உங்கள் தேவனுடைய சமூகத்தில் உங்களுக்கு ஞாபகக்குறியாயிருக்கும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றார். (எண்ணாகமம் 10:9,10)*

**எக்காளத்திற்கு மறுபெயர் பூரிகையாகும்.** யுத்தத்திற்குப் போகிறபோது எக்காளங்கள் ஊத வேண்டுமென்றும், அப்பொழுது தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே அவர்கள் நினைவு கூறப்பட்டு, பகைஞருக்கு நீங்கலாக்கி இரட்சிக்கப்படுவார்கள் என்றும் தேவன் கூறுகிறார். **எதிரி நாட்டினர் இஸ்ரவேல் தேசத்திற்கு படையெடுத்துவரும்போது, அவர்கள் தேவனை நோக்கி எக்காளம் ஊத வேண்டும். அது தேவனை நோக்கி ஜெபம் செய்து, மன்றாடுகிறதற்கு சமமாகும்.** இதன்படி அவர்கள் எக்காளத்தை ஊதும்போது தேவன் அவர்களை நினைவுகூர்ந்து, எதிரிகளுக்கு நீங்கலாக்கி இஸ்ரவேல் மக்களை இரட்சிப்பார். இந்த வசனங்களின் அடிப்படையில் எக்காளம் என்பது எதைக் குறிக்கிறது? **தேவன் நமக்காக நம்முடைய எதிரிகளை வீழ்த்தி, நம்மை இரட்சிப்பார் என்பதையே குறிக்கிறது.** (வரைபடம் - பக்கம் 189)

மேலும், யுத்தத்திற்கு போகும் போது மாத்திரம் அல்ல நாம் சந்தோசமாக இருக்கும் போதும், தேவனை தொழுதுகொள்ளும் வேளையிலும், பண்டிகை காலத்திலும், மாதப்பிறப்களிலும், பலி செலுத்தும் வேளையிலும் எக்காளங்களை ஊத வேண்டும் என்று தேவன் சொல்லியிருக்கிறார். இதன்படி, பண்டிகையின் நாட்களிலும், ஆலய ஆராதனையின் வேளையிலும் எக்காளங்களை ஊத வேண்டும். **எக்காளம் என்பது இந்த பண்டிகை ஆசரிப்பு, ஆலயம், மாதப்பிறப்பு மற்றும் தேவன் நம்மை விடுவிக்கிறார், தேவன் நம்மை நியாயம் தீர்க்கிறார் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.**

*கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது: நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில்எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது. (வெளிப்படுத்தல் 1:9,10)*

**இந்த வசனம் தேவனுடைய சத்தத்தை எக்காளத்தோடு ஒப்பிடுகிறது.** நான் அல்பாவும், ஒமெகாவும், முந்தினவரும், பிந்தினவருமாய் இருக்கிறேன் என்று அந்த சத்தம் சொல்லிற்று. அந்த சத்தத்திற்கு சொந்தக்காரர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. எக்காள சத்தம் சில

சமயங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் குறிக்கிறது என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ளலாம். மேலும், தேவன் நம்மை நியாயம் தீர்க்கிறார் என்பதையும், நம்மை விடுவிக்கிறார் என்பதையும் குறிக்கிறது.

**இந்த ஏழு எக்காளங்கள் மூலம் தேவன் நமக்கு நியாயம் செய்து, நம் எதிரியைத் தகர்க்கிறார் என்னும் விசேஷ செய்தியைப் பார்க்கப்போகிறோம்.**

பலிபீடத்தின் கீழ் பரிசுத்தவான்களுடைய இரத்தம் எத்தனை நாள் நீங்கள் நியாயம் தீர்க்காமல் இருப்பீர் என்று கேட்டதாக ஏழு முத்திரைகளின் செய்தியின் மூலம் படித்தோம். அதற்கான பதிலே இந்த ஏழு எக்காளங்களின் செய்தி. சபை சுவிசேஷத்தை எடுத்துக்கொண்டு செல்லும்போது, சபைக்குத் உபத்திரவத்தைக் கொடுத்த, தேவனுடைய பிள்ளைகளின் எதிரிகளுக்கு தேவன் இந்த ஏழு எக்காளங்கள் மூலமாய் நியாயத் தீர்ப்பு செய்கிறார். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தேவனுடைய சபையை துன்பப்படுத்தியவர்களை தேவன் எப்படியாக நியாயம் விசாரித்தார் என்பதைப் பற்றி இந்த ஏழு எக்காளங்களின் செய்தியின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

*பின்பு, தேவனுக்குமுன்பாக நிற்கிற ஏழு தூதர்களையுங் கண்டேன்; அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 8:2)*

இங்கே ஏழு தூதர்களைப் பார்க்கிறோம், அவர்கள் அனைவருக்கும் எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.

*வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 8:3)*

இங்கே வேறொரு தூதனும் வருகிறான், அவன் கையிலே தூபம் காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துக்கொண்டு, பலிபீடத்தின் படியிலே நின்றான். இந்த தூபங்காட்டும் பொற்கலசம் என்பது ஆசாரியன் கையில் இருக்கிற ஒரு சின்ன பொருள். இந்த பொருளின் உதவியோடு பலிபீடத்தில் இருக்கிற அக்கினியை தூபபீடத்தில் போடுவார்கள்.

இங்கே சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடு செலுத்தும் படி மிகுந்த தூபவர்க்கம் அந்த தூதனுக்குக் கொடுக்கப்பட்டது. தூபபீடம் ஜெபங்களைக் குறிக்கிறது. அங்கிருந்தே இயேசு கிறிஸ்து நம் ஜெபங்களை எல்லாம் பிதாவுக்கு முன்பாக சமர்ப்பிப்பார். **அப்படியானால் அந்த தூதன் யார்? அந்த தூதன் இயேசு கிறிஸ்துவே. அவரே நமக்காக தூபபீடத்திற்கு முன்பாக நின்று ஜெபிக்கிறவர்.** நமக்காக பரிந்துபேசுகிறவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே என்பதை எபிரெயர் (9:11) புஸ்தகத்தில் பார்க்கலாம்.

*அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்குமுன்பாக எழும்பிற்று. (வெளிப்படுத்தல் 8:4)*

இந்த வசனத்தில் நிச்சயமாக இந்த தூதன் தான் அங்கே ஜெபித்துக்கொண்டு இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். இந்த தூதன் யாருக்காக பரிந்துபேசுகிறார்? பரிசுத்தவான்களுடைய ஜெபத்தோடு மிகுந்த தூபவர்க்கம் செலுத்தப்பட்டது என்று சொல்லப்படுகிறது. பூமியில் பரிசுத்தவான்கள் ஜெபித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. என்ன ஜெபம் ஜெபித்தார்கள் என்று முத்திரைகளில் படித்தோம். பலிபீடத்திற்கு கீழாக நின்று பரிசுத்தவான்களுடைய இரத்தம், எதுவரைக்கும் நியாயம் தீர்க்காமல் இருப்பீர் என்று சொல்லி பரிசுத்தவான்கள் ஜெபித்தார்கள் என்று பார்த்தோம்.

அப்படியானால் அந்த ஜெபத்தை, அந்த மன்றாடுதலைத் தான் இயேசு கிறிஸ்து, பிதாவுக்கு முன்பாக சமர்ப்பிக்கிறார். **உமது சத்தியத்திற்காக மரித்த பரிசுத்தவான்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும், அவர்களுடைய எதிரிகளை நியாயம் தீர்க்கவேண்டும் என்பதுதான் இயேசு கிறிஸ்துவினுடைய ஜெபமாக இருக்க வேண்டும்.**

*பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின. (வெளிப்படுத்தல் 8:5)*

அடுத்ததாக நடக்கிற சம்பவம் என்னவென்றால்: பலிபீடத்தில் இருக்கிற நெருப்பை தூபகலசத்தில் நிரப்பி பூமியின் மேல் இயேசு கிறிஸ்து கொட்டினார். உடனே சத்தங்களும் இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சிகளும் வருகிறது. **தேவன் நியாயம் தீர்க்கிறார், தேவன் துன்மார்க்கர்களை நியாயம் தீர்க்கிறார் என்பதையே இச்சம்பவம் குறிக்கிது.**

*அப்பொழுது, ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். (வெளிப்படுத்தல் 8:6)*

ஏழு எக்காளங்களையுடைய தூதர்கள் எக்காளங்களை ஊதுகிறதற்கு ஆயத்தப்படுத்தினார்கள். இந்த ஏழு எக்காளங்கள் எதைக் குறிக்கிறது என்பதைப் பார்ப்போம்.

## முதல் எக்காளம்

*முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று. (வெளிப்படுத்தல் 8:7)*

முதல் எக்காளம் ஊதப்பட்டபோது, பூமியின் மீது இரத்தம் கலந்த கல்மழையும், அக்கினியும் கொட்டப்படுகிறது. அதினால் மரங்களில் மூன்றில் ஒரு பங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று என்பதாகப் பார்க்கிறோம். “தீர்க்கதரிசனங்களெல்லாம் சுய தோற்றம் உடைய பொருளை உடையது அல்ல” என்று பார்த்தோம். (2 பேதுரு 1:21). அப்படியானால், கல்மழை, அக்கினி, மரங்கள், பசும்புல் போன்ற அனைத்தும் எதைக் குறிக்கிறது?

**கல்மழையும், அக்கினியும் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது.** வானத்திலிருந்து அக்கினி இறங்குவதும் கல்மழை பூமியில் கொட்டப்படுவதும் **"தேவன் நியாயம் தீர்க்கிறார்"** என்பதின் அடையாளம்.

**மரங்களும், பசும்புல்லும் மனிதர்களைக் குறிக்கிறது.** நீங்கள் மனம் திரும்பி கனிகொடுங்கள் என்று யோவான் (மத்தேயு 3:8) இஸ்ரவேல் மக்களைப் பார்த்து கூறுகிறார். மரம் தான் கனி கொடுக்கும், மனிதன் கனி கொடுப்பதில்லை. ஆகவே, இஸ்ரவேல் மக்களை கனிகொடுங்கள் என்று சொல்வதன் மூலம் இஸ்ரவேல் மக்களை யோவான் மரத்தோடு ஒப்பிட்டு பேசுகிறார் என்பதை அறிந்துகொள்ளலாம்.

**தேவன் யாரை நியாயம் தீர்க்கிறார்?** மரங்களில் மூன்றில் ஒரு பங்கும் பசும்புல்லும் எரிந்து போயிற்றென்றால், மரங்களையும், பசும்புல்களையும் தேவன் நியாயம் தீர்க்கிறாரா? இல்லை. **மனிதர்களை. அதாவது ஒரு குறிப்பிட்ட மூன்றில் ஒரு பங்கு மக்கள் தான் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள்.** அப்படியானால், நியாயந்தீர்க்கப்பட்ட மக்கள் யார் என்று அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு வேதாகமத்தில் எங்காவது 'மூன்றில் ஒரு பங்கு' என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். அப்படி பார்க்கும்போது, *வெளிப்படுத்தல் 12*-ம் அதிகாரத்தில் மூன்றில் ஒரு பங்கு தூதர்கள் பரலோகத்திலிருந்து விழுந்துபோனார்கள் என்பதாக கூறுகிறது. இதன்படி மூன்றில் ஒரு பங்கு தூதர்கள் கெட்டவர்களாகவும், மீதமுள்ள இரண்டு பங்கு தூதர்கள் நல்லவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம். இங்கே 'மூன்றில் ஒரு பங்கு' என்னும் பதம் கெட்ட தூதர்களைக் குறிக்கிறதுபோல, **'மூன்றில் ஒரு பங்கு மரங்கள் வெந்துபோயின' என்னும் சொற்றொடர் கெட்ட மனிதர்களைக் குறிக்கிறது.** அப்படியானால், தேவன் வானத்திலிருந்து கல்மழையையும், அக்கினியையும் இறங்கச்செய்து, மூன்றில் ஒரு பங்கான கெட்ட மனிதர்களை நியாயந்தீர்க்கிறார் என்றே அர்த்தம். முதலாம் எக்காளத்தின்போது நியாயம் தீர்க்கப்பட்ட கெட்ட மனிதர்கள் யார்?

ஏழு சபை, ஏழு முத்திரை மற்றும் ஏழு எக்காளங்களும் ஒரே காலக் கட்டத்தில் சம்பவித்த காரியங்களே. இதன் அடிப்படையில் முதலாம் எக்காளம், முதலாம் திருச்சபையோடு தொடர்புடையது. **முதல் சபையின் காலத்தில் தேவனுடைய திருச்சபையின் எதிரியாக இருந்தவர்கள் யூதர்களே.** ஆம். அப்போஸ்தலர் சபைக்கு அநேகம் உபத்திரவங்களைக் கொடுத்தது யூதர்கள்தான். சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும்போது, அப்போஸ்தலர்களையும், கிறிஸ்தவர்கள் அநேகரையும் யூதர்கள் துன்பப்படுத்தி கொலை செய்தார்கள் என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பார்க்கலாம். இதன்படி, இந்த முதல் எக்காளத்தின் நியாயத்தீர்ப்பு யூதர்களுக்கானது. **தன் திருச்சபையைக் கொடுமைப்படுத்தியதின் காரணமாக தேவன் யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பான எருசலேம் நகரத்தின் அழிவுதான் இந்த முதல் எக்காளம்.**

*நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? (1 பேதுரு 4:17)*

ஆம். தேவனுடைய வீட்டில். தேவ ஜனத்திடமிருந்து தான் நியாயத்தீர்ப்பு தொடங்குகிறது.

*அவர் சணல்நூல் அங்கி தரித்திருந்த புருஷனை நோக்கி: நீ கேருபீனின்கீழ் இருக்கிற சக்கரங்களுக்கு நடுவிலே பிரவேசித்து, கேருபீன்களின் நடுவே இருக்கிற அக்கினித்தழலில் உன் கை நிறைய எடுத்து, அதை நகரத்தின்மேல் இறையென்றார்; அப்படியே அவன் என் கண் காண உள்ளே பிரவேசித்தான். (எசேக்கியேல் 10:2)*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பலிபீடத்தில் உள்ள நெருப்பை எடுத்து பூமியின் மீது கொட்டுகிறார் என்றும். அந்த செயல் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது என்றும் பார்த்தோம். அதைப் போன்ற ஒரு சம்பவத்தைதான் மேற்கண்ட வசனத்தில் பார்க்கிறோம். எருசலேம் நகரத்தை தேவன் நியாயம் தீர்க்கப்போகிறார் என்பதைக் இந்த வசனம் குறிக்கிறது. நாம் *வெளிப்படுத்தல் 8*-ம் அதிகாரத்தில் பார்த்த அதே சம்பவத்தை தேவன் முன்பே பயன்படுத்தியிருக்கிறார். இந்த சம்பவம் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது என்பதற்கு இந்த வசனமே அத்தாட்சி.

*மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே. (மத்தேயு 23:23)*

*சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்? (மத்தேயு 23:33)*

முதல் எக்காளத்தில் யூதர்கள் நியாயம் தீர்க்கப்படுகிறார்கள். இதைப் பற்றி இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்தபோதே சொல்லியிருக்கிறார். நாம் எக்காளத்தின் செய்தியைப்போலவே 'ஆக்கினைக்கு எப்படி தப்பித்துக்கொள்வீர்கள்' என்ற கேள்வி இங்கும் எழுப்பட்டிருக்கிறது.

*ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்; (மத்தேயு 23:34)*

*எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். (மத்தேயு 23:37,38)*

## எருசலேமின் அழிவு

கி.பி. 34-ம் ஆண்டோடு தானியேல் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள 70 வார தீர்க்கதரிசனம் (வரைபடம் : பக்கம் 191) நிறைவடைகிறது. அந்த ஆண்டிலிருந்து எருசலேமின் நியாயத்தீர்ப்பு தொடங்கியது. கி.பி. 70-ம் ஆண்டில் எருசலேம் நகரம் ரோமர்களால் அழிக்கப்பட்டது என்பதை சரித்திரத்தில் பார்க்கலாம்.

எருசலேமுக்கு இப்படிப்பட்ட கொடூரமான அழிவுவரும் என்று இயேசு கிறிஸ்து முன்பே பலமுறை சொல்லியிருக்கிறார். ஏன் எருசலேமுக்கு இப்படி ஒரு தண்டனையை தேவன் கொடுக்கிறார்? பல முறை தீர்க்கதரிசிகளை அனுப்பி எச்சரிப்புகளைக் கொடுத்து வேத வார்த்தைகளைச் சொல்லியும், இந்த எருசலேமின் நகரத்தாரான யூதர்கள் அவ்வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. தீர்க்கதரிசிகளை நிராகரித்தார்கள், கொலைசெய்தார்கள், கடைசியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே மனிதனாக வந்து சாட்சிகொடுத்தார். அவரையும் ஏற்றுக்கொள்ளவில்லை. சிலுவையில் அறைந்தார்கள். தொடர்ந்து நிராகரித்ததினால், அவர்களுடைய அழிவை அவர்களே தேடிக்கொண்டார்கள்.

**எந்த ரோம அதிகாரத்தைப் பயன்படுத்தி இயேசு கிறிஸ்துவை யூதர்கள் கொலை செய்தார்களோ, அதே ரோமர்கள் மூலமாக தேவன் எருசலேமை நியாயந்தீர்த்தார்.** ரோமர்கள் எருசலேம் நகரத்தை முற்றுகையிட்டார்கள். எருசலேம் நகரம் மிகப்பெரிய அழிவை சந்தித்தது. லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள்.

*வெளிப்படுத்தல் 16*-ம் அதிகாரத்தில் ஏழு வாதைகளைப்பற்றி பார்க்கிறோம். அதில் கல்மழை வானத்திலிருந்து மனிதர்கள்மேல் விழுந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்மழை என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்பதற்கு இந்த வசனங்களும் அத்தாட்சியே.

வேதாகமத்தில் மக்கள், மரங்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள். *மத்தேயு 3:7-10* வசனங்களில் இயேசு கிறிஸ்து கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று கூறுகிறார். இங்கே இஸ்ரவேல் மக்களை மரத்தோடு ஒப்பிட்டு பேசுகிறார். *(சங்கீதம் 37:1,2)* வசனங்களில் பொல்லாத மக்கள் புல்லுக்கு ஒப்பிடப்படுகிறார்கள்.



இந்த வசனங்கள் அனைத்தையும் சேர்த்து முதல் எக்காளத்தின் செய்தியோடு இணைத்துப் பார்க்கும்போது, செய்தியின் கருத்தை கிதியோனுடைய வாழ்வில் நடந்த சம்பவம் போன்று தோன்றுகிறது. கிதியோன் போருக்குப் போகும்போது (நியாயதிபதி 6-8) ஆண்டவர் எக்காளத்தை ஊது என்று சொல்கிறார். அவன் எக்காளத்தை

ஊதும்போது எதிரி நாட்டினர் அவர்களுக்குளே ஒருவருக்கொருவர் வெட்டி செத்துப்போவார்கள். (வரைபடம் - பக்கம் 189)

இங்கேயும் முதலாம் தூதன் எக்காளம் ஊதுகிறான். **அப்போது ஆண்டவருடைய எதிரிகளாகிய ரோமும், எருசலேமும் ஒருவருக்கொருவர் அவர்களுக்குள்ளே வெட்டி, சாகிறார்கள்.** ரோமும் ஆண்டவருடைய எதிரிதான், எருசலேமும் ஆண்டவருடைய எதிரிதான். இயேசு கிறிஸ்துவை ரோமர்களும், யூதர்களும் சேர்ந்தே சிலுவையில் அறைந்தார்கள். இவர்கள் இரண்டு பேர்களுமே தேவனுடைய எதிரிகளாக, தேவனுடைய திருச்சபையின் எதிரிகளாக இருந்தார்கள்.

## இரண்டாம் எக்காளம்

*இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று. (வெளிப்படுத்தல் 8:8)*

இரண்டாம் எக்காளம் ஊதப்பட்டபோது, அக்கினியால் எரிகிற பெரிய மலைப்போன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது என்று வசனம் கூறுகிறது.

**மலை என்றால் என்ன?** தீர்க்கதரிசனத்தின்படி, மலை என்னும் பதம் **ராஜ்யத்தைக் குறிக்கிறது.** *தானியேல் 2*-ம் அதிகாரத்தில் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தை ‘கையால் பெயர்க்கப்படாத ஒரு கல்’ என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**சமுத்திரம் என்றால் என்ன?** சமுத்திரம் என்னும் பதம் தீர்க்கதரிசனத்தின்படி **ஜனக்கூட்டத்தைக் குறிக்கிறது.** இங்கே ஜனக்கூட்டத்திற்கும், ராஜ்யத்திற்கும் யுத்தம் நடைபெறுகிறது. அதன் காரணமாக, சமுத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு இரத்தமாயிற்று. சமுத்திரம் என்பது உலக ஜனம். அதில் மூன்றில் ஒரு பங்கு ஜனங்கள் மட்டும் இரத்தமாக மாறுகிறார்கள். அதாவது, தண்டிக்கப்படுகிறார்கள். முதலாம் எக்காளத்தில் பார்த்ததுபோல இங்கே தேவனுக்கு விரோதமாக செயல்படுகிற மூன்றில் ஒரு பங்கு ஜனங்கள் நியாயந்தீர்க்கப்படுவதைப் பார்க்கலாம்.

*சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று. (வெளிப்படுத்தல் 8:9)*

**கப்பல் என்றால் என்ன?** கப்பல் என்னும் **பதம் வணிகத்தையும், செல்வத்தையும் குறிக்கிறது.** கப்பற் சேதம் என்பது செல்வத்திரட்சியின் அழிவைக் குறிக்கிறது.

*பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம். (வெளிப்படுத்தல் 17:15)*

சமுத்திரம் ஜனங்களையும், கூட்டங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரர்களையும் குறிக்கும் என்பதற்கு இந்த வசனமே சாட்சி.

*தங்கள் தலைகள்மேல் புழுதியைப்போட்டுக்கொண்டு: ஐயையோ, மகா நகரமே! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இவளுடைய உச்சிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே! ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப்போனாளே! என்று அழுது துக்கித்து ஓலமிடுவார்கள். (வெளிப்படுத்தல் 18:19)*

கப்பல் என்பது வணிகத்தையும், ஐஸ்வர்யத்தையும் குறிக்கும் என்பதற்கு இந்த வசனமே ஆதாரம்.

**இரண்டாம் எக்காளமாகிய இரண்டாம் நியாயத்தீர்ப்பு யாருக்கு கொடுக்கப்பட்டது?** இரண்டாம் நியாயத்தீர்ப்பு ரோமர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஏனென்றால், எருசலேம் நகரத்தின் அழிவிற்குப் பின்பு, கிறிஸ்தவர்களுக்கு மிகப்பெரிய உபத்திரவத்தைக் கொடுத்துவந்தது ரோம ராஜ்யம்தான். இரண்டாம் திருச்சபையை துன்பப்படுத்தியது இந்த ரோம ராஜ்யம்தான். இதன் மூலமாக இரண்டாம் எக்காளத்தின் காலமும், இரண்டாம் திருச்சபையின் காலமும் ஒன்றே என்று தெளிவாகப் புரிகிறது.

இரண்டாம் சபையான சிமிர்னா சபை ரோமர்கள் மூலமாக மிகப்பெரிய உபத்திரவத்தைச் சந்தித்தது. ரோமர்கள் 10 வருடங்களாக கொடிதான உபத்திரவத்தினால் சிமிர்னா சபையை வாதித்தார்கள். **ரோமர்களைத் தேவன் நியாயந்தீர்க்கிறார். அவர்களுடைய செல்வத்தையும், வணிகத்தையும், பொருளாதாரத்தையும் தேவன் முற்றிலுமாக தகர்க்கிறார்.** ரோமை நியாந்தீர்ப்பதற்கு தேவன் அதனைச் சுற்றியுள்ள சிறிய ராஜ்யங்களைப் பயன்படுத்தினார். அவர்கள் எல்லோரும் ரோமை தொடர்ந்து படையெடுத்து வந்தார்கள். அப்படி படையெடுத்து வந்ததினால், ரோம் வலுவிழந்து உடைந்து போனது. சரித்திர ஆசிரியர்கள் “ரோமில் உள்ள எல்லா ஆதிக்கமும் உடைந்துபோனது. ரோம் உருவாக்கிய கத்தோலிக்க சபையின் அதிகாரம் மட்டுமே மிஞ்சியது” என்று எழுதினார்கள்.

*இப்பொழுதும் நான் இந்தத் தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன்; அவனுக்கு ஊழியஞ்செய்யும்படி வெளியின் மிருகஜீவன்களையும் கொடுத்தேன். (எரேமியா 27:6)*

பழைய ஏற்பாட்டில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக்கொண்டு தேவன் இஸ்ரவேலை நியாயம் தீர்த்தார். இஸ்ரவேல் மக்கள் வழி விலகிப்போனார்கள். அதனால், ஆண்டவர் நேபுகாத்நேச்சார் மூலமாகத் தண்டனையைக் கொடுத்தார்.

*ஆகையால், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் அசீரியா ராஜாவைத் தண்டித்ததுபோல் பாபிலோன் ராஜாவையும் அவன் தேசத்தையும் தண்டித்து (எரேமியா 50:18)*

முதலில் இஸ்ரவேலர்களைத் தண்டிப்பதற்கு தேவன் நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தினார். பின்பு, நேபுகாத்நேச்சாரை தண்டிக்கிறார். ஏன்? ஆண்டவர் அவரைப் பயன்படுத்திதானே இஸ்ரவேலை அடிமைப்படுத்தினார். பின் ஏன் பாபிலோனுக்கு தண்டனைவருகிறது?

தேவன் அங்கே யாரையும் தூண்டிவிடவில்லை. நேபுகாத்நேச்சாருடைய எண்ணம் இஸ்ரவேல் மக்களை அழிக்கவேண்டும் என்பதாகத்தான் இருந்தது. சுற்றியுள்ள புறதேசத்தார் எல்லோரும் இஸ்ரவேலை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இருந்தார்கள். ஆனால், தேவன் இஸ்ரவேலைச் சுற்றிலும் வேலி அடைத்து பாதுகாப்பை கொடுத்துவந்தார். ஆனால், இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய அன்பையும், பாதுகாப்பையும் உணராமல் நிராகரித்துக்கொண்டிருந்தபடியால், அந்த பாதுகாப்பின் வேலியை தேவன் எடுத்துப்போடுகிறார். அப்படி எடுக்கும் போது சுற்றியுள்ள தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தை அழிப்பார்கள். இப்படியாக பலமுறை நடந்திருப்பதை நியாயாதிபதிகள் புத்தகத்தில் பார்க்கலாம்.

இஸ்ரவேல் மக்கள் விக்கிரக வழிபாட்டிற்க்குப் போய்விடுவார்கள், தேவனுடைய வார்த்தையை மீறுவார்கள், அப்பொழுது தேவன் அவர்களை வேறொரு தேசத்திற்கு அடிமையாக அனுப்புவார். பின்பு, அவர்கள் தேவனிடம் முறையிடுவார்கள், அவர் மறுபடியும் அவர்களை விடுவிப்பார். இதுவும் அப்படிப்பட்ட ஒரு சம்பவம் தான். இதில் நேபுகாத்நேச்சார் செய்தது சரி என்று ஆகிவிடாது. அதன் காரணமாகவே பாபிலோனும் தண்டிக்கப்படுகிறது. **முதலாம் எக்காளத்திலே எருசலேமை அழிப்பதற்காக ரோம ராஜ்யத்தை தேவன் பயன்படுத்தினார்.** தேவன் ரோமை தூண்டிவிடவில்லை. ஆனால், எருசலேமின் பாதுகாப்பு வேலியை எடுத்துவிட்டார். அவர்கள் எருசலேமை அழித்தார்கள். ரோமர்கள் செய்ததும் சரியல்ல தவறுதான். அதனால், **இங்கே ரோமர்களைத் தேவன் தண்டிக்கிறார். இரண்டாம் எக்காளத்தில் ரோம ராஜ்யம் நியாயந்தீர்க்கப்பட்டு அழிக்கப்பட்டது.**

## மூன்றாவது எக்காளம்

*மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுந்தது. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள். (வெளிப்படுத்தல் 8:10,11)*

மூன்றாவது எக்காளம் ஊதப்பட்டபோது ஒரு பெரிய நட்சத்திரம் தீவெட்டியைப்போல் எரிந்து வானத்திலிருந்து விழுகிறது. வானத்திலிருந்து விழுந்த அந்த நட்சத்திரம் யார்? சாத்தானா? இந்த எக்காளத்திலே சாத்தானைக் குறிப்பதாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், அவன் ஆதியிலே விழுந்துபோய்விட்டான். அப்படியானால் இங்குள்ள நட்சத்திரம் யார்?

### நட்சத்திரம் யாரைக் குறிக்கிறது?

நட்சத்தரம் என்பது தேவதூதர்களை மட்டும் குறிக்கவில்லை. அது **மனிதர்களையும் குறிக்கும்.** உதாரணத்திற்கு, *வெளிப்படுத்தல் 12*-ம் அதிகாரத்தில் ஒரு ஸ்திரீ இருக்கிறாள். அவள் சூரியனை அணிந்திருக்கிறாள். அவள் தலையின் மீது 12 நட்சத்திரங்கள் இருக்கிறது. இந்த ஸ்திரீ யார்? மெய்யான திருச்சபையே அந்த ஸ்திரீ. அவள்

தலையின்மேல் உள்ள 12 நட்சத்திரங்கள் 12 அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது.

*ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். (தானியேல் 12:3)*

இங்கே, ஞானவான்களை நட்சத்திரங்கள் போல இருக்கிறார்கள் என்று வசனம் கூறுகிறது. இதன் மூலம் **மனிதனும் வேதத்திலே நட்சத்திரத்தோடு ஒப்பிடப்படுகிறான் என்பதை அறிந்துகொள்ளலாம்.** இங்கு ஒரு பெரிய நட்சத்திரம் தீவெட்டியைப் போல் எரிந்து வானத்திலிருந்து விழுந்தது என்றால் அது ஒரு மனிதனைக் குறிக்கிறது. வீழ்தல் என்றால் அவன் பாவத்திற்குள்ளாய் வீழ்ந்தான் என்பதைக் குறிக்கிறது.

*சீயோனினிமித்தமும் எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும், அதின் நீதி பிரகாசத்தைப்போலவும், அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப்போலவும் வெளிப்படுமட்டும் அமராமலும் இருப்பேன். (ஏசாயா 62:1)*

எருசலேமின் நீதி தீவட்டியைப் போல இருக்கிறதாம். மூன்றாவது எக்காளத்தில் பெரிய நட்சத்திரம் தீவெட்டியைப் போல் எரிந்து வானத்திலிருந்து விழுந்தது. இதன்படி அந்த நட்சத்திரம் வீழ்ந்துபோன ஒரு மனிதனைக் குறிக்கிறது. **அந்த மனிதன் எரிந்து அதற்குப்பின் கீழே விழுகிறான். அதாவது, உண்மையாக இருந்து பின்பு ஒரு கேடான மனிதனாக மாறுகிறான்.**

அந்த நட்சத்திரம் ஆறுகளில் மூன்றில் ஒரு பங்கின் மேலும், நீரூற்றுகளில் மூன்றில் ஒரு பங்கின் மேலும் விழுந்தது. **அந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்று பெயர். அதனால் தண்ணீரில் ஒரு மூன்றில் ஒரு பங்கு எட்டியைப் போல கசப்பாயிற்று.** வீழ்ந்துபோன நட்சத்திரமாகிய வீழ்ந்துபோன மனிதன் ஆறுகளையும், நீரூற்றுகளையும் கசப்பாக மாற்றுகிறான்.

## ஆறுகள், நீரூற்றுகள் எதைக் குறிக்கிறது?

*சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார் என்றான். (வெளிப்படுத்தல் 7:17)*

**தண்ணீர், நீரூற்று இவைகள் பொதுவாக பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது.** பரிசுத்த ஆவியானவரை ஜீவத் தண்ணீரோடு ஒப்பிட்டு ஆண்டவர் பேசுகிறார். தாகமாய் இருக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு ஜீவத் தண்ணீரைத் தருவேன் என்று சொல்லுகிறார். (யோவான் 7:37-39) ஜீவத் தண்ணீர் பரிசுத்த ஆவியானவர்.

இந்த மூன்றாம் தூதனின் எக்காளத்தில் உள்ள செய்தி ஒரு விழுந்துபோன நட்சத்திரம் - அதாவது மனிதன் ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் விழுந்து அதை கசப்பாக மாற்றுகிறான். ஜீவத்தண்ணீரை கசப்பாக மாற்றினால் என்னவாகும்? மனிதர்கள் இறந்துபோவார்கள்.

ஜீவத்தண்ணீர் ஜீவனைக் கொடுக்கிறது. அதைக் கசப்பாக மாற்றும்போது அதைக் குடிக்கிற மனிதர்கள் செத்துப்போவார்கள். இது ரோமிற்குப் பின்வந்த ரோமன் கத்தோலிக்க திருச்சபையைக் குறிக்கிறது. **அந்த நட்சத்திரம் தன்னைப் பரலோகத்தின் பிரதிநிதியாகக் காண்பிக்கும் போப்தான்.** ஜீவத் தண்ணீரையும், இயேசு கிறிஸ்துவையும், வேதவசனத்தையும், பரிசுத்த ஆவியையும் கசப்பாக மாற்றியது போப்தான். இதனால், வேதாகமத்தின் மூலமாக ஜீவனை அடைய வேண்டிய மக்கள், பொய் போதகத்தின் காரணமாக கசப்பை உண்டு இருளிலே மாண்டு போனார்கள்.

இந்த மூன்றாவது எக்காளம் திருச்சபையின் வீழ்ச்சியைக் குறிக்கிறது. விசேஷமாக, இந்த ரோமன் கத்தோலிக்கம் பொய்க்குள்ளாக விழுந்துபோய், ஜீவத் தண்ணீரைக் கசப்பாக்கியதால், அந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

*நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறவர்களே, அவரைத் தேடுங்கள். (ஆமோஸ் 5:7)*

**நியாயத்தை எட்டியாக மாற்றுவது என்றால் பொய்யாக மாற்றுவது.** எட்டி என்பது கசப்பைக் குறிக்கிற ஒரு சொல். அப்படியானால், இந்த நட்சத்திரம் ஜீவத்தண்ணீரையும், நீரூற்றுகளையும் கசப்பாக மாற்றுகிறது. **திருச்சபையின் வீழ்ச்சியை - அதாவது சத்தியத்தில் குறைவுற்றுப்போய் பொய்க்குள்ளாய் வீழ்ந்துபோவது, மூன்றாம் திருச்சபையான பெர்கமு சபையோடு ஒத்துப்போகிறது.** இந்த திருச்சபையில் பிலேயாமின் போதனைகள் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## நான்காவது எக்காளம்

*நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொரு பங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது; பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று. (வெளிப்படுத்தல் 8:12)*

நான்காவது எக்காளம் ஊதப்பட்டபோது, சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கு இருளடைகிறது.

*கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர். (சங்கீதம் 27:1)*

இங்கே சூரியன் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது.

*அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள். (யோவான் 5:35)*

### சூரியன், சந்திரன் யாரைக் குறிக்கிறது?

இயேசு கிறிஸ்து எரிந்து பிரகாசிக்கிற ஒரு விளக்காய் இருக்கிறார் என்று யோவான் கூறுகிறார்.

*யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு, அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா*

*என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது. (யோவான் 5:36)*

இங்கே யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் என்னுடைய சாட்சி மேன்மையானதென்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இதன்படி, யோவான் ஒரு சிறிய வெளிச்சமாக இருக்கிறார் என்றும், இயேசு கிறிஸ்துவே பெரிய வெளிச்சமென்றும் அறிந்துகொள்ளலாம். இதன்படி, இயேசு கிறிஸ்து சூரியன் என்றால் அவருக்கு சாட்சிகொடுக்கிற யோவான் சந்திரன் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம்.

*வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவான் 5:39)*

இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான் மட்டுமே சாட்சி கொடுத்தாரா? வேதவாக்கியங்களும் அவரைக் குறித்து சாட்சிக் கொடுக்கிறதே! அப்படியானால், இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சிகொடுக்கின்ற அனைவரும் சிறிய வெளிச்சம் தான் என்பதை அறிந்துகொள்ளலாம். இதன் அடிப்படையில்தான், இயேசு கிறிஸ்து நம்மைப் பார்த்து நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்று கூறுகிறார்.

*தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் **உண்டாக்கினார். (ஆதியாகமம் 1:16)***

**இதன்படி சூரியன் என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும், சந்திரன் என்பது அவருக்கு சாட்சியாய் இருக்கிற வேதவாக்கியங்களையும், தீர்க்கதரிசிகளையும், நம்மையும் குறிக்கிறது.**

நட்சத்திரங்கள் மனிதர்களைக் குறிக்கிறது என்று பார்த்தோம். அவர்கள் எல்லோரும் இருளடைகிறார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிச்சம் இல்லாமல் உலகம் இருள் அடைந்தது. சின்ன சுடராகிய சந்திரன் என்று சொல்லப்படும் வேதத்தின் வெளிச்சமும், தீர்க்கதரிசிகளுடைய வெளிச்சமும் இல்லாமல் உலகம் இருளடைந்தது. தேவமனிதர்களுக்குள் தேவனுக்கு உண்மையாய் இருக்கிற ஞானவான்களாகிய நட்சத்திரங்களுடைய வெளிச்சமும் இல்லாமல் உலகம் இருள் அடைந்தது. இந்தக் காலம் போப்புடைய ஆதிக்கத்தின் காலமாகும்.

மூன்றாம், நான்காம் எக்காளங்கள் போப் ஆதிக்கத்தின் காலமாகும். **இந்தக் காலக்கட்டத்தில் வெளிச்சமே கிடையாது. பெரிய சூரியன் அதாவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சரியான புரிதல் மக்களுக்கு கிடைக்கவில்லை. சந்திரனாகிய வேதத்தைப் பற்றிய வெளிச்சமும் மக்களுக்கு கிடைக்கவில்லை. தேவனுக்கு உண்மையாய் இருக்கிற நட்சத்திரங்களாகிய ஊழியக்காரர்களில் அநேகர் வீழ்ந்தார்கள். தேவனுக்கு உண்மையாக வாழ்ந்த பலரை கொலை செய்தார்கள். அதனால் இருள் பூமியெங்கும் இருந்தது.** இதைத் தான் மூன்றில் ஒரு பங்கு இருள் அடைந்தது என்று வேதம் கூறுகிறது. அந்த ஆட்சியில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்ற எந்த வெளிச்சமும் இல்லாமல் பூமி இருளிலே இருந்தது.

## ஐந்தாவது எக்காளம்

*ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகைஎழும்பிற்று; அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 9:1-3)*

### புகை எதைக் குறிக்கிறது?

ஐந்தாம் எக்காளம் ஊதப்பட்டபோது, வானத்திலிருந்து பூமியின் மேல் ஒரு நட்சத்திரம் விழுகிறது. அதற்கு பாதாளத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாதாளத்தின் குழியை திறந்தவுடன் பெரும் சூளையின் புகை அந்த குழியிலிருந்து எழும்பிற்று. குழியின் புகையினாலே சூரியனும், ஆகாயமும் அந்தகாரப்பட்டது. புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் எழும்பியது. புகை எதைக் குறிக்கிறது?

*இப்போதும் அவர்கள் அதிகமதிகமாய்ப் பாவஞ்செய்து, தங்கள் வெள்ளியினால் வார்ப்பித்த சுரூபங்களையும், தங்கள் புத்திக்கேற்க விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டுபண்ணுகிறார்கள்; இவைகளெல்லாம் தட்டாருடைய வேலை; மனுஷரில் பலியிடுகிறவர்கள் கன்றுக்குட்டிகளை முத்தமிடலாமென்று இவைகளைக்குறித்துச் சொல்லுகிறார்கள். ஆகையால் அவர்கள் காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் ஒழிந்துபோகிற பனியைப்போலவும், பெருங்காற்று களத்திலிருந்து பறக்கடிக்கிற பதரைப்போலவும், புகைக்கூண்டில் ஏறிப்போகிற புகையைப்போலவும் இருப்பார்கள். (ஓசியா 13:2,3)*

இங்கே மக்கள் விக்கிரகத்தை உண்டுபண்ணி விக்கிரக வழிபாடு செய்தார்கள். **மக்கள் விக்கிரக வழிபாடு செய்யும்போது அவர்கள் புகையைப் போல எழும்பினார்கள் என்று சொல்லப்படுகிறது.** விழுந்த நட்சத்திரத்தைக் கண்டேன் என்று வசனம் சொல்லுகிறது. **விழுந்த நட்சத்திரம் போப்பை, அதாவது ரோமன் கத்தோலிக்கத்தைக் குறிக்கிறது.** இவர்கள் விக்கிரகத்தை வழிபட்டு தேவனுடைய பிரமாணத்தை மீறி வீழ்ந்து போனதினாலே, பூமியிலிருந்து புகை எழும்பிற்று. அந்த புகையிலிருந்து வெட்டுக்கிளி வந்தது.

### வெட்டுக்கிளிகள் யார்?

*நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும் (யோவேல் 2:25)*

**இந்த வசனத்தில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு விரோதமான எதிரிகளை வெட்டுக்கிளிகள் என்று சொல்லுகிறார்.** ஆண்டவர் தம் ஜனத்தை நியாயம் தீர்ப்பதற்காக, மற்றொரு தேசத்தை அனுப்பப்போகிறார். அவர்களை வெட்டுக்கிளி என்று கூறுகிறார். இங்கே நட்சத்திரம் விழும்போது, பூமியிலிருந்து புகையும் வெட்டுக்கிளிகளும்

வருகிறது என்று பார்க்கிறோம். இந்த வெட்டுக்கிளி யார் என்றால் அந்த நட்சத்திரத்திற்கு விரோதமாக தேவன் அனுப்புகிற ஒரு தேசமாகும்.

### வெளிப்படுத்தல் புத்தகத்தில் இஸ்லாமியர்கள்

போப்புக்கு விரோதமாக வெட்டுக்கிளியைப் போல் எழும்பினவர்கள் இஸ்லாமியர்களாவார்கள். நாம் சரித்திரத்தைப் பார்க்கும்போது, கி.பி. 538-ல் போப்பின் ஆதிக்கம் துவங்கியது என்பதை அறிந்துகொள்ளலாம். போப்பின் மூலம் ரோமன் கத்தோலிக்க திருச்சபை உருவாகிறது. அதற்கு பின்பாக உருவான ஒரு மிகப்பெரிய இயக்கம் என்றால் அது இஸ்லாமிய இயக்கமே. இந்த இயக்கம் கி.பி. 638-ல் உருவாகிறது. முகமது நபி மரித்த பின்னர் ஒக்மன் என்பவன் அரசனானான். இவர் பெயரை வைத்துதான் ஒட்டமனின் இராஜ்யம் உருவானது. கி.பி. 632-ல் ஒட்டமன் ராஜ்யம் உருவாகியது. இஸ்லாமியர் தங்கள் முதல் தாக்குதலை ஜீலை 27, 1299 முதல் 1449 வரைக்கும் நடத்தினார்கள். **கிட்டத்தட்ட 150 வருடங்களாக யுத்தத்தை நடத்தினார்கள். இவர்களுடைய முதல் எதிரி விக்ரக வழிபாடு செய்கிறவர்கள். விக்கிரகத்தை வணங்குகிறவர்களை இஸ்லாமியர் எதிரியாக கருதி, அவர்கள் மீது போர் செய்தார்கள்.**

ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் அதிகமாக விக்கிரக வழிபாடு செய்தார்கள். சபைக்குள்ளே அப்போஸ்தலர்களுக்கும், இயேசுவுக்கும், மரியாளுக்கும் சிலைகளை வைத்து வணங்கினார்கள். இஸ்லாமியர்கள் இவைகளைப் பார்க்கும்போது, அவர்களை வெறுத்தார்கள்.

அப்படியானால், இந்த வெட்டுக்கிளி என்பது இஸ்லாமியர்களைத்தான் குறிக்கிறது. **இங்கு ரோமன் கத்தோலிக்கத்தை தேவன் நியாயம் தீர்க்கிறார். வெட்டுக்கிளியைப் போன்ற இஸ்லாமியர்களை வரவழைத்து நியாயம் தீர்க்கிறார்.**

இஸ்லாமியர்கள் ரோமன் கத்தோலிக்கத்தாரின்மீது தாக்குதல் நடத்துகிறார்கள். ஆனால், சிலைகளை வணங்காத உண்மைக் கிறிஸ்தவர்கள்மீது அவர்கள் தாக்குதல் நடத்தவில்லை. அவர்களுடைய படையெடுப்பு உண்மைக் கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக இருந்தது. அப்பொழுது, "நீங்கள் இங்கே வந்து எங்களுடைய ராஜ்ஜியத்திற்கு கீழாய் பாதுகாப்பாய் இருக்கலாம்" என்று ஒட்டமன் ராஜ்யத்திலிருந்து மார்ட்டின் லூதருக்கு கடிதம் எழுதப்பட்டது குறிப்பிடத்தக்கது. **உண்மைக் கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்களின் ஆட்சிக்கு கீழே பாதுகாப்பாக இருந்தார்கள்.**

*பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 9:4)*

**புல், பூண்டு, மரங்கள் போன்ற அனைத்தும் மனிதர்களைக் குறிக்கிறது.** தேவனுடைய முத்திரைகளை பெற்றிராத மனிதர்களை மாத்திரம் சேதப்படுத்தும்படி இஸ்லாமியர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. **இங்கே தேவனுடைய முத்திரையைப் பெற்ற மனிதர்கள் யார்? தேவனுக்கு உண்மையாக இருந்து ஆவியினாலே தேவனுடைய முத்திரையைப் பெற்றார்களே ஆவர்.** பரிசுத்த ஆவியினாலே நாம் முத்திரிக்கப்படுகிறோம் என்று எபேசியர் (1:13) புஸ்தகத்தில் சொல்லப்படுகிறது. அப்படியானால்,

நாம் தேவனுக்கு உண்மையாய் இருந்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்கள் தான் முத்திரையைப் பெற்றவர்கள். இந்த தீர்க்கதரிசனம் சரியாக நிறைவேறியதை சரித்திரத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். (தேவனுடைய முத்திரைப்பற்றி 8 வது அத்தியாயத்தில் விவரமாக படிப்போம்).

*மேலும் அவர்களைக் கொலைசெய்யும் படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்துமாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது; அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப்போலிருக்கும். (வெளிப்படுத்தல் 9:5)*

ஐந்து மாதங்கள் என்பது 150 வருடங்களாகும். (5 மாதம் - 150 நாட்கள். தீர்க்கதரிசனத்தின்படி 1 நாள் என்பது 1 வருடம் (எண் 14:34). எனவே 150 நாள் என்பது 150 வருடங்கள்). கி.பி. 1299-ல் தொடங்கி 1499-வரை ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாருக்கு எதிராக இஸ்லாமியர்கள் போர் செய்தார்கள். இந்த காலக்கட்டத்தில் உண்மைக் கிறிஸ்தவர்களுக்கு இஸ்லாமிய தேசமான ஒட்டமனின் ராஜ்யம் அடைக்கலமாக இருந்தது.

வெட்டுக்கிளிகளைப் பற்றி சொல்லப்படும்போது அவர்கள் குதிரைக்கு ஒப்பாக இருந்தார்கள். கிரீடம் இருந்தது, கூந்தல் இருந்தது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இஸ்லாமியர்கள் குதிரையைப் பயன்படுத்தினார்கள். அரேபியக் குதிரைகளைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். குதிரையை வைத்து யுத்தம் செய்வதில் வல்லுனர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு எப்போதும் ஒரு கிரீடம் இருந்தது, கூந்தல் இருந்தது. அதாவது, நீள முடியை உடையவர்களாக இருந்தார்கள். கிதியோனுடைய சரித்திரத்தில் எக்காளம் ஊதப்பட்டபோது தேவனுடைய எதிரிகள் அடித்துக்கொண்டார்கள். அதைப்போல் இங்கே இஸ்லாமியர்களும் தேவனுடைய எதிரிதான். போப் மார்க்கமும் தேவனுடைய எதிரி தான். எக்காளங்கள் ஊதப்பட்டபோது, போப்பாதிக்கத்தை தண்டிப்பதற்கு தேவன் இஸ்லாமியர்களைப் பயன்படுத்தினார்.

## ஆறாவது எக்காளம்

*ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது தேவனுக்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி, எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள். (வெளிப்படுத்தல் 9:13-15)*

ஆறாம் எக்காளம் ஊதப்பட்டபோது பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலிருந்து ஒரு சத்தம் தோன்றினது. **பொற்பீடம் - ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கும் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறது. இதிலிருந்து நாம் இன்னும் பரிசுத்த ஸ்தலத்தில் தான் இருக்கிறோம் என்பதைத் அறிந்துகொள்ளலாம்.** ஆறாம் எக்காளத்தில் ஐபிராத் நதி அண்டையில் கட்டப்பட்ட நான்கு தூதர்களை அவிழ்த்துவிடு என்று கூறுகிற சத்தம்

கேட்கிறது. இந்த நான்கு தூதர்களும் *வெளிப்படுத்தல் 7*-ம் அதிகாரத்தில் வருகிற நான்கு தூதர்களும் ஒன்று கிடையாது. அந்த நான்கு தூதர்கள் பூமியை அழிக்கக்கூடாதபடிக்கு காற்றை இழுத்துப்பிடித்திருக்கிற நல்ல தூதர்கள். இந்த நான்கு தூதர்கள் அழிவைக் கொண்டுவருகிற கெட்ட தூதர்களாக இருக்கிறார்கள்.

## ஐபிராத் நதி

இந்த ஐபிராத் நதி யாரை அல்லது எதைக் குறிக்கிறது? ஐபிராத் நதி என்றவுடன் பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவம் நமக்கு ஞாபகம் வரும். பாபிலோனுக்கு நடுவில் ஓடுவது தான் இந்த ஐபிராத் நதி. பெர்சியர்கள், பாபிலோன் ராஜ்யத்தை வீழ்த்துவதற்காக இந்த ஐபிராத் நதியின் திசையைத் திருப்பி வற்றச்செய்தார்கள். **அங்கே பெர்சியர்களை தேவன் எப்படி பயன்படுத்தினாரோ, அதுபோல இங்கு இஸ்லாமியரை தேவன் பயன்படுத்தி போப்பை வீழ்த்தினார்.** இப்போது ஆண்டவர் இஸ்லாமியரையும் நியாயம் தீர்க்கிறார். **ஆறாம் எக்காளத்தில் இஸ்லாமியர்களுடைய ராஜ்யமாகிய ஒட்டமனின் ராஜ்யம் வீழ்ந்தது.** இந்த வீழ்ச்சி சரியாக எப்பொழுது நடைபெறும் என்பது இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மணிநேரமும், ஒரு நாளும், ஒரு மாதமும் ஒரு வருடமும் என்ற கால அளவு கொடுக்கப்பட்டுள்ளது.

- 1 வருடம் என்பது 360 நாட்கள், 360 நாட்கள் என்பது 360 வருடங்கள், (1 நாள் என்பது 1 வருடம் - எண் 14:34)
- 1 மாதம் என்பது 30 நாட்கள், 30 நாட்கள் என்பது 30 வருடத்தைக் குறிக்கிறது.
- 1 மணி நேரம் என்பது 15 நாட்கள்

360 வருடங்கள்+ 30 வருடங்கள்+ 15 நாட்கள் = 391 வருடங்கள் மற்றும் 15 நாட்கள்

ஜுலை 27, 1449 + 391 வருடங்கள் + 15 நாட்கள் = ஆகஸ்ட் 11, 1840

*Josiah Litch Article 1838 Fall of Ottaman falls in the hands of Egypt.*

தீர்க்கதரிசனக் கணக்கின்படி 1 நாள் என்பது ஒரு வருடத்திற்கு சமம். (எண் 14:34) எல்லாவற்றையும் கூட்டினால் 391 வருடம் 15 நாட்கள் வரும். **இஸ்லாமியர்கள் சரியாக 150 வருடங்களாக ரோமன் கத்தோலிக்கருடன் யுத்தம் செய்தார்கள் இருந்தது என்று பார்த்தோம். அந்தப் போர் கி.பி. 1449-ம் ஆண்டில் முடிந்தது.** அந்த 150 வருடங்களாக அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதற்குப்பின் இன்னும் எவ்வளவு நாட்கள் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது என்று பார்த்தால் சுமார் 391 வருடங்கள் மற்றும் 15 நாட்கள் என்று, அதன் அதிகாரம் ஆகஸ்ட் 11, 1840-யில் முடிவுக்கு வரும் என்பதே இந்தக் கணக்கு.

இந்த ஆறாவது எக்காளத்தைப் பற்றி, ஜோசியா லிட்ச் என்ற நபர் ஆராய்ச்சி செய்தார். **1 நாள் என்பது 1 வருடத்தைக் குறிக்கிறது என்று நம் முன்னோர்கள் ஆராய்ச்சி பண்ணிவைத்திருந்தார்கள். அந்த ஒரு விதியைப் பயன்படுத்தி ஒட்டமன் எம்பயர் 1840 ஆகஸ்ட் 11-ம் நாளில் வீழ்த்தப்படும் என்பதைக் கண்டுபிடித்தார். இதைப் பற்றின கட்டுரையை 1838-ம் ஆண்டில் வெளியிட்டார்.** அதாவது இஸ்லாமியர்களின் ஓட்டமன் எம்பயரின் வீழ்ச்சி நடப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பே இதைப்பற்றி

கூறினார். அவர் சொன்ன தேதியில் சரியாக இந்த ஒட்டமன் எப்பயர் வீழ்ந்துபோனது. இதைப் பற்றி நாம் சரித்திரத்தில் படிக்கலாம். **1840-ல் எகிப்தியர்கள் இஸ்லாமியர்களின் மீது படையெடுத்து, போர்க்கப்பலை கைப்பற்றி கொண்டு போகிறார்கள்.**

பின்பு, இஸ்லாமியர்கள் ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து ரஷியா, ஆஸ்திரேலியா, பெர்சியா ஆகிய நாடுகளிடம் உதவி கேட்கிறார்கள். அந்த நான்கு நாடுகளும் ஒன்றுகூடி எகிப்தை கடைசியாக எச்சரித்தார்கள். அந்த எச்சரிப்பைக் கொடுத்த நாள் தான் ஆகஸ்ட் 11, 1840. அந்த நாளில் ஒட்டமன் எம்பயர் அதன் வலிமையை இழந்தது. முற்றிலுமாக ஐரோப்பியர் கையிலும், எகிப்தியர் கையிலும் போய்விட்டது. ஜோசியா லிட்ச் கணித்த இந்த தீர்க்கதரிசனம் அவர் கூறின சரியான நாளில் சொன்னபடி நடந்தது.

தானியேல் புத்தகத்தில் உள்ள 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தின் உண்மைதன்மையை மக்கள் நம்புவதற்கு இந்த தீர்கதரிசனத்தின் நிறைவேறுதல் உதவியாக அமைந்தது. (2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தைப்பற்றி 5 மற்றும் 9 ஆவது அத்தியாயத்தில் நாம் படிக்கலாம் )

## ஏழாவது எக்காளம்

*ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.*
*(வெளிப்படுத்தல் 11:15)*

ஏழாவது எக்காளம் - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது. ஏழாம் எக்காளம் ஊதும்போது ஆண்டவர் எல்லா ராஜ்யங்களையும் தகர்த்தெறிந்து அவருடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார்.

- ✓ முதல் எக்காளத்தில் ஆண்டவர் எருசலேமை - அதாவது யூதர்களை நியாயம் தீர்த்தார்.
- ✓ இரண்டாவது எக்காளத்தில் ரோமை நியாயம் தீர்த்தார்.
- ✓ மூன்றாவது மற்றும் நான்காவது எக்காளங்கள் போப் ஆதிக்கத்தின் மத வீழ்ச்சியை குறிக்கிறது. பொய்யான போதகத்தை அது எப்படி உலகத்திற்குள் கொண்டு வந்தது என்பதைப் பார்க்கிறோம்.
- ✓ ஐந்தாவது எக்காளத்தில் போப்பாதிக்கத்தை ஆண்டவர் இஸ்லாமியர்கள் மூலம் நியாயம் தீர்த்தார் என்பதைப் பார்க்கிறோம்.
- ✓ ஆறாவது எக்காளத்தில் இஸ்லாமியர்களின் ஒட்டமன் ராஜ்யத்தை தேவன் எவ்வாறு நியாயம் தீர்த்தார் என்று பார்க்கிறோம்.
- ✓ ஏழாம் எக்காளத்தில் இயேசு கிறிஸ்து உலகத்தில் உள்ள எல்லா ராஜ்யங்களையும் வீழ்த்தி, தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார்.

அத்தியாயம் – 5

# தேவனுடைய கடைசிகாலத் திருச்சபை



**ஆலோசனை: வெளிப்படுத்தல் 10 ஆம் அதிகாரத்தைப் படித்துவிட்டு, இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

*வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரம், ஆறாம் எக்காளத்தின் தொடர்ச்சியாகும். தேவனுடைய மக்கள் ஆறாம் எக்காளத்தின் வேளையில் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? என்ற இரகசியம் இந்த ஆறாவது எக்காளத்தின் கீழாக இருக்கிறது. அதைக் குறித்துதான் வெளிப்படுத்தல் பத்தாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடைசிகாலத்தில், உண்மையான தேவ ஜனங்கள் எப்படி உருவானார்கள்? என்ன சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் என்பதைப் பார்ப்போம்.

## தேவனுடைய கடைசிகாலத் திருச்சபை

கி.பி. 1798-ம் ஆண்டிற்குப் பின்பு நடக்கும் சம்பவங்கள் - ஆறாவது எக்காளத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கி.பி. 1840-ம் ஆண்டில் ஒட்டமன் எம்பயர் விழுந்துபோன சம்பவம், ஆறாவது எக்காளத்தில் இடம்பெறுகிறது.

ஏழாம் எக்காளம் இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்துப் பேசுகிறது. **இப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற காலம்தான் - ஆறாவது எக்காளம்.** ஆறாவது எக்காளத்தில் உள்ள சத்தியங்கள் மற்றும் தூதுகள் நமக்குரியதாக இருக்கிறது. **ஆறாவது எக்காளத்திற்குக் கீழாக தேவன் எழுப்புகிற திருச்சபைதான் அவருடைய கடைசிகாலத் திருச்சபை.** அந்த திருச்சபையை தேவன் எப்படி உருவாக்கினார்? அந்த திருச்சபை என்ன செய்தது? அந்த திருச்சபைக்கு தேவன் என்ன செய்தியை கொடுத்தார்? போன்ற கேள்விகளுக்கு விடையை இப்பொழுது பார்க்கலாம்.

*பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போலவும் இருந்தது. (வெளிப்படுத்தல் 10:1)*

(வரைபடம் - பக்கம் 190)

## இயேசு கிறிஸ்து - தூதன்

இங்கு ஒரு தூதன் வானத்திலிருந்து இறங்குகிறார். அவரை சுற்றி மேகம் சூழ்ந்திருக்கிறது. வானவில் இருக்கிறது. அவருடைய முகம் சூரியனைப்போல் இருக்கிறது. அவருடைய கால்கள் அக்கினி ஸ்தம்பம் போல் இருக்கிறது. இதே அடையாளங்கள் இதற்கு முன்பாக வேதாகமத்தில் எங்காவது யாருக்காவது பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும்போது, *வெளிப்படுத்தல் 1*-ம் அதிகாரத்தில் இது போன்ற அடையாளங்கள் இருப்பதை பார்க்கலாம். இந்த அடையாளங்கள் இயேசு கிறிஸ்துவை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

*அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகேபொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன். (வெளிப்படுத்தல் 1:13)*

இங்கே மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தே சொல்லப்பட்டுள்ளது.

*அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருந்தது; அவருடைய சத்தம்பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம்வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது. (வெளிப்படுத்தல் 1:15,16)*

*வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தில் ஒரு தூதனுக்கு சொல்லப்பட்ட அடையாளங்களும், *வெளிப்படுத்தல் 1*-ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சொல்லப்பட்ட அடையாளங்களோடு பொருந்தியிருப்பதை நாம் பார்க்கிறோம்.

*வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று. (வெளிப்படுத்தல் 4:3)*

*வெளிப்படுத்தல் 4*-ம் அதிகாரத்தில் பிதாவாகிய தேவனைக் குறித்த அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவரைச் சுற்றி வானவில் இருந்ததாக கூறியிருக்கிறது. *வெளிப்படுத்தல் 10:1*-ம் வசனத்திலும் தூதனை சுற்றி வானவில் இருக்கிறதை பார்க்கிறோம். பிதாவாகிய தேவன் மற்றும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சொல்லப்பட்ட எல்லா அடையாளங்களும், இந்த தூதனுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இவை சாதாரண தேவதூதனைக் குறித்துச் சொல்லப்படாமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்று தெளிவாகப் புரிகிறது. **ஏன் இங்கு தூதன் என்று குறிப்பிடப்பட வேண்டும்? பிதா என்றோ இயேசு கிறிஸ்து என்றோ நேரடியாக சொல்லப்பட்டிருக்கலாம் அல்லவா?**

இங்கு மட்டுமல்லாமல் வெளிப்படுதல் 8-ம் அதிகாரத்திலும் இயேசு கிறிஸ்துவை தூதன் என்று தான் வசனம் கூறுகிறது.

*வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 8:3)*

இங்கு ஒரு தூதன் வந்து தூபம் காட்டினான், அவனுக்கு தூபவர்க்கம் கொடுக்கப்பட்டது. அவன் பிதாவுக்கு முன்பாக தூபம் காட்டினான் என்று வசனம் சொல்லுகிறது. பிதாவுக்கு முன்பாக தூபம் காட்டுகிறவர் என்றால் பரிந்துபேசுகிறவர் என்பதே அர்த்தம். பிதாவுக்கு முன்பாக பரிந்துபேசுகிறவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.

வேதம் சில சமயங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தூதராக காண்பிக்கிறது. “மிகாவேல்” என்கிற தூதனும் இயேசு கிறிஸ்துதான். **இயேசு கிறிஸ்துவை மனிதர்களில் ஒருவராக மாத்திரம் வேதம் பேசவில்லை. தூதர்களில் ஒருவராகவும் பேசுகிறது.** இதன்படி *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தில் உள்ள தூதன் ஆண்டவராகிய இயேசிறிஸ்துவாகத்தான் இருக்க வேண்டும்.

*திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலது பாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து (வெளிப்படுத்தல் 10:2)*

அவருடைய கையில் புத்தகம் இருக்கிறது. அவருடைய கால்களில் ஒன்று பூமியின் மேலும் மற்றொன்று சமுத்திரத்தின்மேலும் இருக்கிறது.

*அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்ல வேண்டும் என்றான். (வெளிப்படுத்தல் 10:11)*

உலகம் முழுவதும் செல்ல வேண்டிய ஒரு செய்தி அவரிடத்தில் இருக்கிறது என்பதை குறிப்பதற்காகத் தான் ஒரு காலை சமுத்திரத்தின்மேலும் மற்றொன்றை பூமியின்மேலும் வைத்திருக்கிறார் என்பது இந்த வசனம் மூலமாக தெளிவாகப் புரிகிறது.

**சமுத்திரம் - ஜனக்கூட்டம்**

தீர்க்கதரிசனத்தின்படி சமுத்திரம் மற்றும் தண்ணீர் ஜனக்கூட்டத்தைக் குறிக்கிறது. (வெளிப்டுத்தல் 17:15) தண்ணீர் என்பது ஜனக்கூட்டம் அதிகமாக இருக்கிற இடத்தையும், தரை என்பது ஜனக்கூட்டம் குறைவாகவும் உள்ள இடத்தையும் குறிக்கிறது. ஆகவே, இங்கு உலகம் முழுவதிற்கும் இந்தச் செய்தியை எடுத்துச் செல்கிறார்.

**திறக்கப்பட்ட புத்தகம்**

*வெளிப்படுத்தல் 10:2*-ம் வசனத்தில் திறக்கப்பட்ட புத்தகம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு புத்தகம் திறக்கபட்டிருக்கிறது என்று சொல்லும்போது, அந்தப் புத்தகம் ஒருகாலத்தில் பூட்டப்பட்டிருக்க வேண்டும். பூட்டப்பட்டிருந்து தூதனால் திறக்கப்பட்ட அந்த சிறு புஸ்தகம் எது?

*தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான். (தானியேல் 12:4)*

**பூட்டப்பட்டு புதைபொருளாக வைக்கப்பட்டது தானியேல் புஸ்தகமே.** நம்முடைய முன்னோடிகள், சீர்திருத்தவாதிகள் ஆண்டவருடைய உண்மையான பிள்ளைகள் யாராலும் *தானியேல் 8-12* அதிகாரங்களை புரிந்துகொள்ள இயலவில்லை. *தானியேல் 7*-ம் அதிகாரத்தில் ராஜ்யங்களை பற்றின தீர்க்கதரிசனத்தில் உள்ள சின்ன கொம்பு போப்பைத்தான் குறிக்கிறது என்று மார்ட்டின் லூத்தர் கூறினார். ***தானியேல் 8-12* அதிகாரங்கள் தான் பூட்டப்பட்ட பகுதிகளாக இருந்தது.** இதைத் தான் இயேசு கிறிஸ்து திறந்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவினால் பூட்டப்பட்ட இந்த தானியேல் புஸ்தகத்தைத் தான் அவரே திறந்திருக்கிறார். இந்த புஸ்தகத்தை திறந்த காலம் எது? ஆறாவது எக்காளத்தின் கீழ் தான் இந்த தரிசனம் கிடைக்கிறது. ஆறாவது எக்காளத்தின்போது, கி.பி. 1798-ம் ஆண்டிற்குப் பின்பாக தானியேல் புஸ்தகத்தை குறித்து முழுமையான வெளிப்பாடு மக்களுக்கு கிடைத்தது.

*சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின. (வெளிப்படுத்தல் 10:3)*

### சிங்கம் என்றால் என்ன?

*அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். (வெளிப்படுத்தல் 5:5)*

யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான். இதன்படி *வெளிப்படுத்தல் 10:3*-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **சிங்கம் இயேசு கிறிஸ்துவே.** அந்த ஏழு இடிகளும் வெறும் சத்தமல்ல. ஏதோ ஒரு செய்தியை இயேசு கிறிஸ்து கூறுகிறார் என்பதே அதற்குப் பொருள்.

### இடிமுழக்கம் என்றால் என்ன?

*பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறுசிலர்: தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள். (யோவான் 12:28,29)*

இங்கே இயேசு கிறிஸ்துவும், பிதாவாகிய தேவனும் பேசிக்கொண்டது மக்களுக்கு இடிமுழக்கமாக கேட்டிருக்கிறது. இதன்படி அந்த ஏழு இடிமுழக்கங்களையும் வெறும் இடிமுழக்கங்களாக எடுத்துக்கொள்ளாமல், **ஏதோ ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.**

*அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்ல வேண்டும் என்றான். (வெளிப்படுத்தல் 10:11)*

இங்கே தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டுமென்று தூதன் கூறிய காரணத்தால், உலகிற்கு அறிவிக்க வேண்டிய அந்த செய்தி தீர்க்கதரிசனமாகவே இருக்க வேண்டும். சகல ஜனங்களுக்கும், ஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் கூற வேண்டிய அந்த தீர்க்கதரிசன செய்தி என்ன?

*பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான். (வெளிப்படுத்தல் 14:6,7)*

*வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தில் உள்ள தீர்க்கதரிசன செய்தியும் இந்தச் செய்தியும் ஒன்றுதான். ஏனென்றால், இரண்டிலும் உலகம்

முழுவதும் அறிவிக்கப்படவேண்டும் என்றுள்ளது. *வெளிப்படுத்தல் 14:6*-ம் வசனம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட வேண்டிய நித்திய சுவிசேஷம் என்று கூறுகிறது.

### நித்திய சுவிசேஷம்

சுவிசேஷம் என்பது இயேசுவின் சிலுவை மரணம், உயிர்தெழுதல் மட்டும் உள்ளடக்கியதல்ல. **நித்திய சுவிசேஷம் என்பது இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதலைத் தாண்டி பரலோகத்தில் இயேசு என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதையும் உள்ளடக்கியது என *வெளிப்படுத்தல் 14*-ம் அதிகாரம் கூறுகிறது. அந்த நித்திய சுவிசேஷத்தின் ஒரு பகுதிதான் நியாயத்தீர்ப்பு *வெளிப்படுத்தல் 14:7*.**

இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்தார், நமக்காக மரித்தார், உயிர்த்தெழுந்தார், பரலோகம் சென்றார் என்பது மாத்திரமல்லாமல், பரலோகத்தில் நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார், நமக்காக நியாயத்தீர்ப்பின் வேலையை தொடங்கப் போகிறார், நியாயத்தீர்ப்பின் வேலையை முடித்தப்பின்பு பூமிக்கு வந்து, நம்மை பரலோகத்திற்கு அழைத்துக்கொண்டு செல்வார் என்பதும் சுவிசேஷத்தில் அடங்கியிருக்கிறது. *வெளிப்படுத்தல் 14*-ம் அதிகாரத்தை அறியாதோர், இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்தெழுதலுக்கு அடுத்த காரியங்களை சுவிசேஷமாக பிரசங்கிப்பதில்லை. *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தில் கூறியபடி, இந்தச் செய்தியை தேவன் நியமித்த கூட்டத்தாரால் மட்டுமே பிரசங்கிக்க முடியும். தேவனுக்கு பயந்து அவரை மகிமைப்படுத்த வேண்டும். அவருடைய நியாயத்தீர்ப்பின் வேளை வந்தது என்ற சுவிசேஷ செய்தி தான் அந்த சிறு புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது. நியாயத்தீர்ப்பின் வேளை எப்பொழுது வந்தது?

*கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். (ஏசாயா 34:16)*

### நியாயத்தீர்ப்பின் வேளை

இதன்படி ஒரு வசனத்திற்கு ஜோடியான வசனம் வேதாகமத்தில் எங்காவது இருக்கும். அதைப்போல், இந்த நியாயத்தீர்பை குறித்து தானியேல் புஸ்தகம் சொல்கிறது. ***தானியேல் 8*-ம் அதிகாரத்தில் நியாயத்தீர்ப்பு எப்பொழுது என்பதைக் குறித்து காலத் தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட்டுள்ளது.**

*அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான். (தானியேல் 8:14)*

இங்கே இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் முடிந்த பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என வேதம் சொல்லுகிறது.


### பரிசுத்த ஸ்தலம் என்றால் என்ன?

பரிசுத்த ஸ்தலம் என்பது ஆசரிப்புக் கூடாரத்தைக் குறிக்கிறது. *யாத்திராகமம் 25*-ம் அதிகாரத்தில் ஆண்டவர் மோசேயிடம் நான் மக்கள் மத்தியில் வாசம்பண்ணும்படியாக எனக்கொரு பரிசுத்த ஸ்தலத்தை

உண்டுபண்ணு என்று கூறுகிறார். அதாவது, ஆலயத்தை உண்டுபண்ணு என்கிறார். அதைத் தான் ஆசரிப்புக் கூடாரம் என்று படிக்கிறோம். **ஆசரிப்புக் கூடாரம்தான் பரிசுத்த ஸ்தலம். வருடத்திற்கு ஒருமுறை ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே சுத்திகரிப்பின் வேளை நடைபெறும்.** மற்ற நாட்களில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் யாரும் செல்வதில்லை. சுத்திகரிப்பின் வேளையின் போது, அந்த ஒரு நாளில் மாத்திரம் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு பிரதான ஆசாரியர் போய் வருவார். (ஆசரிப்பு கூடாரத்தில் இரு பிரிவுகள் உள்ளது - பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம்)(வரைபடம் : பக்கம் 186) இது நியாயத்தீர்ப்பு நாளைக் குறிக்கிறது.

## இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் தீர்க்கதரிசனம் எதைக் குறிக்கிறது?

மகா பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்து பரலோக ஆலயத்தில் அல்லது பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். **பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு போய் நியாயத்தீர்ப்பை துவங்கப் போகிறார். எப்பொழுது? இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகலுக்கு பின் என்பதே இந்த தீர்க்கதரிசனத்தின் அர்த்தம்.** இந்த தீர்க்கதரிசனத்தின் ஆரம்பத்தை *தானியேல் 9*-ம் அதிகாரத்தில் பார்க்கலாம். எருசலேம் ஆலயம் மீண்டும் எடுத்துக்கட்டப்படுதல் கி.மு. 457-ம் ஆண்டில் தொடங்குகிறது (தானியேல் 9:25). அந்த வருடத்திலிருந்து 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தை கணக்கிட்டால் கி.பி. 1844-ம் வருடத்தில் இந்த தீர்க்கதரிசனம் நிறைவடைகிறது. (இதைப்பற்றி இன்னும் விரிவாக 9 ஆவது அத்தியாயத்தில் படிக்கலாம்)




பூட்டப்பட்ட அந்த *தானியேலின் 8-12* அதிகாரங்கள் ஆறாவது எக்காளத்தின்போது கி.பி. 1800-களில் திறந்துவைக்கப்படுகிறது. 1800-களில் யார் இந்த தானியேலின் விளக்கத்தை சரியாக கூறினார்களோ, அவர்கள்தான் தேவன் எழுப்பின உண்மையான கூட்டத்தார். 1800-களில் ஆறாவது எக்காளத்தின் காலக்கட்டத்தில் எந்த ஜனம் *தானியேல் 8-12* அதிகாரத்தில் உள்ள தீர்க்கதரிசனங்களைக் குறித்தும், 2300 இராப்பகலைக் குறித்தும் பேசினார்கள் என்பதைக் குறித்து ஆராய்ந்துப் பார்க்க வேண்டும்.

## வில்லியம் மில்லர்

1800-களில் வில்லியம் மில்லர் என்னும் நபரை தேவன் தெரிந்துகொண்டு, வேதத்திலுள்ள இரகசியத்தை அவருக்கு வெளிப்படுத்தினார். இவர் ஒரு போதகர் அல்ல. **இராணுவத்தில் பணிபுரிந்து, தனது ஓய்வுக்காலத்தில் வேதத்தை நன்கு படித்தார்.** அந்த நேரத்தில் தேவன் தானியேலில் உள்ள 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தை இவருக்கு வெளிப்படுத்தினார். வருடக்கணக்கில் இவைகளையெல்லாம் படித்து, எருசலேமை எடுத்துக்கட்டுகிற சம்பவம் கி.மு. 457 தொடங்குகிறதையும், *தானியேல் 9:24-27*-ல் உள்ள 70 வார தீர்க்கதரிசனங்களையும் சரியாகப் படித்தார். (வரைபடம் - பக்கம் 191) இயேசு கிறிஸ்துவுடைய ஞானஸ்நானம், சிலுவை மரணம் போன்ற அனைத்து தீர்க்கதரிசனமும் கணக்கின்படி சரியாக நடந்திருந்தது. தீர்க்கதரிசனங்கள் எல்லாம் மெய்தான் என்று அனைவரும் புரிந்துகொண்டார்கள். 1818-ம் வருடத்தில் 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தை புரிந்துகொண்டார்.(வரைபடம் - பக்கம் 191) இணைய வசதிகள் எதுவும் இல்லாத அந்த காலத்தில் வேதத்தை பல முறைகள் மறுபடியும் மறுபடியும் வாசித்து ,தான் புரிந்துகொண்டது சரிதானா? என 13 வருடங்கள் ஆராய்ந்தார். 1831-ம் ஆண்டில் தான் புரிந்துகொண்டதை பிரசங்கிக்க தொடங்கினார்.

இதை பிரசங்கிப்பதற்கு வாய்ப்பளிக்ககோரி தேவனிடம் ஜெபித்தார். ஆலயத்தில் போதகர் இல்லாத காரணத்தினால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கிக்க வருமாறு அவருக்கு தெரிந்த நபர் ஒருவர் அவரை அழைக்க வந்தார். இவர் கூறிய 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம் சரியாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம், சிலுவை மரணம் குறித்த காலகட்டங்கள் சரியாக பொருந்திப் போகிறதைக் குறித்து மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். 1844-ம் ஆண்டில் 2300 இராப்பகலின் முடிவு சரியாகத்தான் இருக்கும் என மக்கள் நம்பினார்கள்.

ஆனால், வில்லியம் மில்லர் ஒரு காரியத்தில் தவறு செய்துவிட்டார். **பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிப்பு என்பது பூமியினுடைய முடிவைக் குறிக்கிறது, அது ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் நாள் எனத் தவறாக புரிந்துகொண்டார்.** 2300 இராப்பகலின் முடிவில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும் என பிரசங்கிக்க துவங்கினார். அமெரிக்காவின் பல இடங்களில் இதைக்குறித்து பிரசங்கித்தார். மக்கள் அனைவரும் இந்தச் செய்தியை ஏற்றுக்கொண்டார்கள். 1840-ல் ஜோசுவா ஹய்ம்ஸ், வில்லியம் மில்லரின் இந்தச் செய்தியைக் கேட்டு, உண்மை என உணர்ந்து, இதை பெரியளவில் மக்களுக்கு கொண்டுசேர்க்க வேண்டுமென்று, லண்டனில் உள்ள பிரதான நகரத்தின் செய்திதாளில் வெளியிட்டார். வில்லியம் மில்லர் மற்றும் ஜோசுவா ஹய்ம்ஸ் ஆகியோர் இணைந்தப்பின்பு இந்தச் செய்தி அமெரிக்க தேசமெங்கும் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பிரசித்தம்பெற்றது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - ஆகஸ்ட், 1844-ல் என்று குறித்தார்கள். இந்த தேதி கடந்துபோனது. அனைவரும் சோர்ந்துபோனார்கள்.

ஒரு முக்கியமான கூடுகையில், **சாமுவேல் ஸ்நோ** என்பவர் தேதியைக் குறிக்கும்பொழுது, **பண்டிகைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்** என எடுத்துரைத்தார். பாவ நிவாரண பண்டிகை (ஆலய சுத்திகரிப்பு

பண்டிகை) இஸ்ரவேல் நாட்காட்டியின்படி, ஏழாம் மாதத்தில் இலையுதிர்காலத்தில் பார்க்கவேண்டும் என்றார். **இஸ்ரவேல் நாட்காட்டியில் ஏழாம் மாதம் 10-ஆம் தேதி என்றால் நம்முடைய நாட்காட்டியின்படி, அக்டோபர் 22-ஆம் தேதி என்று காண்பித்தார்.** மக்களும் இதை ஏற்றுக்கொண்டார்கள். ஏனென்றால், இதற்கு முன்பாக ஏழு பண்டிகைகள் இருக்கிறது. பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை, முதல் அறுவடை பண்டிகை இம்மூன்றுமே இயேசு கிறிஸ்துவின் மரணம், மற்றும் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து பஸ்கா பண்டிகையின் ஆடு அடிக்கப்படும் வேளையில் தான் மரித்தார், முதல் பலன் பண்டிகையின் போது உயிர்தெழுந்து வந்தார். அதுபோல இவையெல்லாம் பண்டிகையின்படி நடக்கிறதென்றால், **சுத்திகரிப்பின் பண்டிகை நாள் வரும்பொழுது தான் ஆண்டவருடைய இரண்டாம் வருகையும் இருக்கும் என்று சாமுவேல் ஸ்நோ கூறினார்.**

இறுதியாக, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அக்டோபர் மாதம் 22-ஆம் தேதி 1844 நடைபெறும் என தேதியைக் குறித்தார்கள். அநேகர் தங்கள் ஆஸ்திகளை விற்று இந்த நற்செய்தியை உலகமெங்கும் பிரசங்கித்து கர்த்தருடைய வருகைக்காக காத்திருந்தார்கள். பிலதெல்பியா சபையில் பார்த்ததுபோன்று பல உண்மைகிறிஸ்தவர்கள் தங்கள் ஆஸ்திகளை விற்று மற்றவர்களுக்கு கொடுத்தார்கள். இதே காலக்கட்டத்தில் இருந்த சபையைக் குறித்தது தான் பிலதெல்பியா சபையின் செய்தி. **ஏழு சபைகளில் இரு சபைகளில்தான் குறைகள் இல்லை. அதில் ஒன்று சிமிர்னா சபை மற்றொன்று பிலதெல்பியா சபை.** இவர்கள் உண்மையிலேயே அவருடைய வருகைக்காக காத்திருந்தார்கள். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்கள் குறித்த நாளில் வரவில்லை. மிகுந்த ஏமாற்றமடைந்தார்கள். அவர்கள் கணித்த காலத்தீர்க்கதரிசனம் சரி, தானியேல் புஸ்தகத்தின் தீர்க்கதரிசனம் சரியாக இருந்தது, பண்டிகைகள் அவர்கள் குறித்த நாளும் சரியாகத் தான் இருந்தது. ஆனால், இயேசு கிறிஸ்து வரவில்லை என்ற ஏமாற்றத்தில் மனமுடைந்துபோனார்கள்.

## ஏன் இந்த ஏமாற்றம்?

இந்த ஏமாற்றம் ஏற்படும் என ஆண்டவர் முன்பே கூறியிருக்கிறார்.

*அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுதவேண்டுமென்றிருந்தேன். அப்பொழுது: ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். (வெளிப்படுத்தல் 10:4)*

அந்த ஏழு இடிமுழக்கங்களும் உலகுக்கு அறிவிக்கப்படவேண்டிய நியாயத்தீர்ப்பைக் குறித்த செய்தி என பார்த்தோம். எங்கு நடக்கிறது என்றும் பார்த்தோம். *தானியேல் 8*-ம் அதிகாரம் முத்திரையிடப்பட்டிருக்கிறதா? இல்லை. அதை தேவன் திறந்த புத்தகமாக வைத்திருக்கிறார் என பார்த்தோம். ஆனால், ஒரு குறிப்பிட்ட காரியத்தை தேவன் முத்திரையிட்டிருக்கிறார். அது என்ன? இவர்கள் கணித்த நாள் சரிதான். 2300 இரப்பகலின் தொடக்கத்தையும், அதன் முடிவு அக்டோபர் 22, 1844 என்பதையும் சரியாக கணித்தார்கள். **ஆனால், பரிசுத்த ஸ்தலத்தின் சுத்திகரிப்பு என்பதை உலகத்தின் அழிவு என புரிந்துகொண்டதுதான் இவர்கள் செய்த தவறாகும்.**

இவர்களால் புரிந்துகொள்ள இயலாத இந்த பகுதியைத் தான் ஆண்டவர் முத்திரைபோடு எனக் கூறியிருக்கிறார். இது போல பிழைகள் நடக்கும் என்பதையும், மக்கள் தவறாக புரிந்துகொள்ளுவார்கள் என்பதையும் தான் அந்த ஏழு இடிமுழக்கங்கள் செய்தியாக கூறியிருக்கவேண்டும். யோவான் இவைகளை எழுதியிருக்கும்போது, தேவன் அதை முத்திரைபோடு எனக் கூறியிருக்கிறார்.

ஏன் தேவன் இவைகளை முத்திரையிடச்சொன்னார்? இவைகளை வெளிப்படுத்தி இருக்கலாமே? ஏனென்றால், 1844-ம் ஆண்டின் காலக்கட்டத்தில் இரண்டு விதமான கூட்டத்தார்கள் இருந்தார்கள். ஒரு கூட்டத்தார் உண்மையிலேயே ஆண்டவருடைய வருகைக்கு காத்திருந்தவர்கள். மற்றொரு கூட்டத்தார் தேவன்மீது உண்மையான அனபில்லாமல், தேவன் நம்மை தண்டித்து விடுவாரோ என்ற பயத்தின் காரணமாக தேவனுடைய வார்த்தைகளைப் பின்பற்றினார்கள். இந்த இரண்டு கூட்டத்தாரையும் வேறுபடுத்திக் காட்டுவதற்காகத்தான் இந்த தவறை தேவன் அனுமதித்தார். **இந்த ஏமாற்றத்துக்கு பின் உண்மையிலேயே தேவனுக்காக அன்போடு காத்திருந்தவர்கள் அவரைவிட்டு பிரிந்துபோகாமல், எங்கு தவறு செய்தார்கள் என்று அறிவதற்காக வேதத்தை அதிகதிகமாய் ஆராய்ந்துப் படித்தார்கள்.**

ஆனால், பயத்தின் காரணமாக தேவனைப் பின்பற்றிக்கொண்டிருந்தவர்களுக்கு இயேசு கிறிஸ்து வரவில்லை என்பது ஆனந்தமான செய்தியாக இருந்தது. மறுபடியும் அவர்களுடைய பழைய வாழ்க்கைக்கு, திரும்பினார்கள். உண்மையான அன்பு வைத்திருப்பவர்களையும் பொய்யாக அன்பு வைத்திருப்பவர்களையும் கண்டறியும்படியாக இந்த ஏமாற்றத்தை தேவன் அனுமதித்தார். இதை எப்படி நம்புவது? இது போல தேவன் முன்பே ஒருமுறை செய்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது அவர் கழுதையின் மேல் ஏறி, மக்களின் ஆரவாரத்தோடு ஒரு ராஜாவைப் போல வருகிறார். மக்கள் குருத்தோலைகளை பிடித்து நின்றார்கள். தங்கள் சால்வைகளை விரிக்கிறார்கள், ரோம ராஜ்யத்தை வீழ்த்திவிட்டு இவர் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்துவார் என்ற எதிர்பார்ப்பில் இவ்வாறெல்லாம் நடந்துகொண்டார்கள். இவர்களுடைய இந்த எண்ணம் இயேசுவுக்கும் தெரியும். பின் ஏன் தேவன் இதை அனுமதித்தார்? ஏனென்றால், அப்பொழுது தான் உண்மையாக இருந்தவர்கள் யார் என்றும் உலக ராஜ்யத்திற்கு ஆசைப்பட்டு இதை செய்தவர்கள் யாரென்றும் தெரியவரும். உண்மையில் அன்பாய் இருந்தவர்கள் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தாலும் அவரைவிட்டு பின்வாங்கவில்லை, உலக ராஜ்யத்தை தருவார் என்ற எதிர்பார்ப்பில் வந்தவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தவுடன், இவரையா நம்பி வந்தோம்? எனக் கூறி அவரைவிட்டு பின்வாங்கினார்கள்.

**நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்பதை நமக்கும் உலகத்திற்கும் வெளிக்காட்டுவதற்காக சில ஏமாற்றங்களை தேவன் நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கிறார்.** அதைப்போல் உண்மையான அன்பு வைத்திருப்பவர்களையும், பயத்தின் காரணமாக கீழ்ப்படிந்தவர்களையும் பிரித்தெடுப்பதற்காகவே 2300 இராப்பகலில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தைப் பற்றிய செய்தியை தேவன் முத்திரைபோட்டு வைத்திருந்தார்.

*சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன், தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி: இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும் என்று (வெளிப்படுத்தல் 10:5,6)*

**இனி காலம் செல்லாது என்றால் இனி கால தீர்க்கதரிசனம் கிடையாது** என்று புரிந்துகொள்ள வேண்டும். இனி காலம் செல்லாது என்பது ஆண்டவருடைய வருகை சீக்கிரமாக இருக்கும் என்பதை குறிக்கிறதில்லை. ஏனென்றால், இதே அதிகாரத்தில் தான் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும் என கொடுக்கப்பட்டிருக்கிறது. அதினால் இன்னும் கொஞ்சக்காலம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். இனி காலம் செல்லாது என்பது தீர்க்கதரிசனத்தை பற்றியது. **2,300 இராப்பகல் தீர்க்கதரிசனத்துக்கு பின்பு வேறே எந்தக் கால தீர்க்கதரிசனங்களும் கிடையாது.** இனி நாட்களைக் குறித்தோ வருடங்களைக் குறித்தோ கால தீர்க்கதரிசனம் கிடையாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போய்விட்டார். நியாயத்தீர்ப்பின் வேளை தொடங்கி விட்டது என்பதையும், அவருடைய வருகை சமீபமாய் இருக்கிறது என்பதையும் இந்த வார்த்தைகள் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

*வெளிப்படுத்தல் 10:6*-ம் வசனத்தில் தேவரகசியம் நிறைவேறப் போகிறது என்று எழுதப்பட்டிருக்கிறது. ஏழாம் எக்காளத்தில் நடக்கவிருக்கும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைதான் அந்த இரகசியம்.

**வேறெந்த காரியங்களை தேவரகசியம் என்று வேதம் கூறுகிறது?**

*அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார். (1 தீமோத்தேயு 3:16)*

**தேவ ரகசியம் என்பது சுவிசேஷத்தைக் குறிக்கிறது.** தேவன் மரித்தார், தேவன் உயிர்த்தெழுந்தார், தேவன் பரலோகத்தில் இருக்கிறார். தேவன் மீண்டும் வருவார் என்பதுதான் தேவரகசியம். ஏழாவது எக்காளத்தில் தேவரகசியம் நிறைவேறும் என்றால் அது இயேசு கிறிஸ்துவையும், அவருடைய இரண்டாம் வருகையையும் சுவிசேஷத்தையும் குறிக்கிறது.

*நான் வானத்திலிருந்து பிறக்கக்கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி: சமுத்திரத்தின்மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள் என்று சொல்ல, நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான். நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்; என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருந்தது; நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று. (வெளிப்படுத்தல் 10:8-10)*

இந்த வசனங்களில், யோவான் தேவஜனத்தைக் குறிக்கிறார். **வில்லியம் மில்லரைச் சார்ந்த அந்த மக்கள் தான் ஆறாம் தூதின் தேவஜனம்.** அந்த மக்கள் சிறுபுஸ்தகத்தை *(தானியேல் 8-12)* வாங்கி புசிக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனத்தை உணர்ந்துகொண்டார்கள். 2300 இராப்பகலின் முடிவில் இயேசு கிறிஸ்து வரப்போகிறார் என புரிந்துகொண்டார்கள். அது அவர்கள் வாய்க்கு இனிப்பாயிருந்தது. ஆனால், குறித்த தேதியில் இயேசு கிறிஸ்து வரவில்லை என்பதால் ஏற்பட்ட ஏமாற்றம் அவர்கள் வயிற்றுக்கு கசப்பாயிற்று என்பதே இந்த வசனத்தின் கருத்து.

## வயிற்றுக்கு கசப்பு, வாய்க்கு இனிப்பு

வாயிலிருந்து தானே வயிற்றுக்கு செல்லும், பின் ஏன், தூதன் முதலில் வயிற்றுக்கு கசப்பாகவும் வாய்க்கு இனிப்பாக இருக்கும் எனக் கூறுகிறார்? யோவான் வாங்கி புசித்தவுடன் வாய்க்கு இனிப்பாகவும் வயிற்றுக்கு கசப்பாகவும் இருக்கிறது. ஏன் இங்கு இதை மாற்றிக் கூறுகிறார்?

இதை வாங்கி புசிக்கும்பொழுது 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம் உனக்கு இன்பமாயிருக்கும். ஆனால், நீ குறித்த தேதியில் ஆண்டவர் வரமாட்டார் என்பது உனக்கு கசப்பாக இருக்கும். அது கசப்பாக இருந்தாலும் கவலைப்படாதே, செய்த தவறை நீ உணர்ந்து தெளிவாக அந்த சத்தியத்தை அறிந்துகொள்ளும்போது உன் வயிற்றுக்கு கசப்பாக இருந்த காரியம் உன் வாய்க்கு இனிப்பாக மாறும் எனத் தூதன் கூறுகிறார்.

*அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்ல வேண்டும் என்றான். (வெளிப்படுத்தல் 10:11)*

## முத்தூது

அவர்கள் கூறிய தீர்க்கதரிசனம் *வெளிப்படுத்தல் 14:6-10 ல்* உள்ள முத்தூது. **முதலாம் தூது**: நியாயத்தீர்ப்பின் வேளை வந்தது. **இரண்டாம் தூது:** பாபிலோன் விழுந்தது. **மூன்றாம் தூது:** தேவனுடைய முத்திரை மற்றும் மிருகத்தின் முத்திரை. 1844-ம் ஆண்டிலேயே முதல் இரண்டு தூதுகளையும் பிரசங்கிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்தப் புஸ்தகத்தை வாங்கிப் புசி என்னும் சொற்றொடருக்கு சத்தியத்தை உணர்ந்துகொள்வது என்று அர்த்தம் எனப் பார்த்தோம். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் பழைய ஏற்பாட்டிலேயே இருக்கிறது.

*பின்பு அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ காண்கிறதைப் புசி; இந்தச் சுருளை நீ புசித்து, இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் அவர்களோடே பேசு என்றார். (எசேக்கியேல் 3:1)*

சுருளை புசித்தால் தான் போய் பேச முடியும் என்றால் சுருளில் எழுதப்பட்ட காரியங்களை உணர்ந்துகொள்வதென்றே அர்த்தம். *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தில் யோவான், அந்தச் சுருளை வாங்கி புசிக்கிறார் என்றால், அந்த சுருளில் உள்ள செய்தியை புரிந்துகொள்கிறார் என்றே பொருள். **சுருள் என்பது தானியேலின்**

**புஸ்தகம். யோவான் என்பது மில்லரைட் இயக்கம்.** மில்லரைட் இயக்கம் தானியேலின் செய்தியை உணர்ந்துகொண்டார்கள் எனப் பொருள்படும்.

## ஏமாற்றத்திற்குப்பின் என்ன நடந்தது?

அவர்கள் புசித்தது வாய்க்கு இனிப்பாகவும் வயிற்றுக்கு கசப்பாகவும் இருந்தது. மறுபடியும் வயிற்றுக்குக் கசப்பாக இருந்தது எப்படி தேனாக மாறியது? 1844 அக்டோபர், 22 அன்று இயேசு கிறிஸ்து வரவில்லை. அன்று இரவு வந்துவிடுவார் என உறங்காமல் காத்துக்கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றின சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தங்கள் ஆஸ்திகளையெல்லாம் விற்றுப்போட்டார்கள். அவர் வரவில்லை. ஏமாற்றத்தால் நிறைந்து கண்ணீருடன் இரவு முழுவதும் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். ஊக்கமான ஜெபத்தோடு, வேதத்தை திரும்ப திரும்ப படித்து, தாங்கள் என்ன தவறு செய்தோம் என ஆராய்ந்தார்கள். அப்பொழுது ஒரு சில விசேஷ சத்தியங்களை உணர்ந்தார்கள்.

இதைப் பற்றி படித்துக்கொண்டு வயல்வெளியில் நடந்து கொண்டிருக்கையில், மில்லரைட் இயக்கத்திலுள்ள இரண்டு சகோதரருக்கு ஒரு தரிசனம் கொடுக்கப்பட்டது. அதில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோக ஆலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதுபோல காண்பிக்கப்பட்டது. **அக்டோபர் 22, 1844 அன்று இயேசு கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு போனார் என்பதையும், "2300 இராப்பகல் செல்லும் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" என்று சொல்லும் வசனம் பூமியின் சுத்திகரிப்பை அல்ல பரலோக ஆலயத்தின் சுத்திகரிப்பைக் குறிக்கிறது என்பதையும் இந்த தரிசனத்தின் மூலமாகப் புரிந்துகொண்டார்கள்.** பரிசுத்த ஸ்தலம் என்ற வார்த்தைக்கான அர்த்தத்தை வேதாகமம் முழுக்க வாசித்து, அது ஆலயத்தை தான் குறிக்கிறது எனப் புரிந்துகொண்டார்கள். அவர்கள் நம்பின தீர்க்கதரிசனம் பொய்யல்ல உண்மைதான் என்பதையும், அவர்கள் செய்த தவறை உணர்ந்தபின்பு, கசப்பாக இருந்த அனுபவம் இனிப்பாக மாறியது. மறுபடியும், உலகம் முழுவதும் தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

அந்த முத்தூது தீர்க்கதரிசனம்தான், *வெளிப்படுத்தல் 14*-ம் அதிகாரத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆறாவது எக்காளத்தின் கீழாக தேவன் எழுப்பின அந்த **உண்மையான திருச்சபை இந்த மில்லரைட் கூட்டத்தினர்தான்.** அந்த சிறுபுத்தகத்தை வாங்கிப் புசித்தவர்களும், ஆறாவது எக்காளத்தின் கீழாக இதைப் புரிந்துகொண்டவர்களும் இவர்கள் தான். தானியேல் புத்தகத்தை உணர்ந்துகொள்ளுகிறதையும், கால தீர்க்கதரிசனங்களை கணிக்கிறதையும் வைத்து பார்க்கும் போது இவர்கள் தான் அந்த உண்மையான கூட்டத்தார் என்பது தெளிவாகப் புரிகிறது. பின்பு இந்த கூட்டத்தாரிலிருந்து தான் ஆசரிப்பு கூடாரத்தின் சத்தியம் வெளிப்படுகிறது. உலக கிறிஸ்தவமே மறந்த உன்னதமான ஓய்வுநாள் சத்தியம் வெளிப்பட்டது. இவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு வேதத்தையும், தீர்க்கதரிசனங்களையும் நன்கு புரிந்துகொண்டு அதை மாத்திரம் அடிப்படையாக வைத்து மில்லரைட் இயக்கத்திலிருந்து ஒரு கூட்டம் உருவானது. அந்த கூட்டம் தான் "Seventh day Adventists" "ஏழாம் நாள் அட்வெந்து திருச்சபை". கிறிஸ்தவ சமூகத்தில் இந்த கூட்டத்தார் மட்டுமே காலத்

தீர்க்கதரிசனங்களாகிய தானியேல் புத்தகத்தில் தீர்க்கதரிசனங்களையும், ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய சத்தியத்தையும் தெளிவாக போதிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய **சபையின் ஆரம்ப வரலாற்றிற்கு *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரமே ஆதாரம்.** ஆறாம் எக்காளத்திற்கு கீழ் இருக்கும் இந்த அதிகாரம், **தேவன் கடைசி காலத்தில் தமக்கென்று தெரிந்துகொண்ட சபையின் வரலாற்றைக் கூறுகிறது.**

இன்று இவர்களைக் குறித்து அநேக விமர்சனங்கள் வைக்கப்படுகிறது. அவற்றில் ஒன்று தீர்க்கதரிசனத்தை தவறாக கணித்து இயேசு கிறிஸ்துவுக்காக காத்திருந்து, பெரிய ஏமாற்றத்துக்குள் போனவர்கள் என்பதே. இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையின்போது ஆதிகால அப்போஸ்தல திருச்சபையே அவர் ரோம ராஜ்யத்திற்கு எதிரான ராஜ்யத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து, அவர் மரணத்தின்போது அவரைவிட்டு ஓடிப்போனார்கள். பின்பு, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து வந்து, அவர்களை கூட்டிசேர்த்து வசனங்களை விளக்கிக் கொடுத்தப்பின்பு, ஏமாற்றமடைந்த அதே திருச்சபையை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். ஆதி அப்போஸ்தல திருச்சபையே ஏமாற்றத்திற்குள் போய் தான் உருவாகி வந்தது. இந்த அட்வென்டிஸ்ட் திருச்சபையை மட்டும் ஏமாற்றத்திற்குள் போனதினால், இது தேவனால் எழுப்பப்பட்ட திருச்சபையல்ல என்று சொல்ல முடியாது. என்றைக்குமே, மனிதன் தேவனுடைய காரியங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாது. தேவன் தான் கிருபையாக மீண்டும் மீண்டும் அழைத்து மனிதனை வழிநடத்துகிறார். இது தான் வேதாகமம் முழுக்க இருக்கும் சத்தியம்.

**2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தின் நிறைவு 1844-ம் ஆண்டு என்பது சரியாகத்தான் கணிக்கபட்டு இருக்கிறது என்பதற்கு மற்றொரு ஆதாரமும் உண்டு.** ஒட்டமன் பேரரசின் விழுகை ஆகஸ்ட் 11, 1840 அன்று நடைபெறும் என்று ஜோசுவா கணித்ததையும், அந்த கணிப்பு நிறைவேறியதையும் பார்த்தோம். இந்த ஜோசுவா மில்லரைட் இயக்கத்தை சேர்ந்தவர் தான். அவர் குறித்த 1840 தீர்க்கதரிசனம் நிறைவேறியதினால், இவர்கள் சொல்லுகிறபடி 1844-ம் ஆண்டில் இயேசு கிறிஸ்து வருவார் என அநேகர் நம்பினார்கள். மேலும், 1260 வருட கால தீர்க்கதரிசனம் 1798-ம் ஆண்டில் முடியும் என்ற கணிப்பும் நிறைவேறியது. (1260 வருட தீர்க்கதரிசனத்தைப்பற்றி 8 ஆவது அத்தியாயத்தில் படிக்கலாம்). **போப்பின் வீழ்ச்சியையும், ஒட்டமன் பேரரசின் வீழ்ச்சியையும் வைத்து கால தீர்க்கதரிசனத்தின் கணக்கு சரியானதே என்று அறிந்துகொள்ளலாம்.** தீர்க்கதரிசனத்தின் காலத்தை அறிவதற்கு ஒரு நாளை ஒரு வருடமாக கணக்கெடுக்கிற முறை சரியானது என்பதை இந்த இரண்டு தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை வைத்து மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

2300 இராப்பகல் என்பது 2300 நாள். இந்த 2300 நாட்களை 2300 வருடமாக இவர்கள் கணித்தார்கள். எப்படி ஒரு நாளை ஒரு வருடமாக கணிக்கிறீர்கள் என்று கேட்டபோது, சில வேத ஆதாரங்களை காண்பித்தார்கள். என்னதான் வேத ஆதாரங்கள் இருந்தாலும் இந்த **நாளை வருடமாக கணிப்பது சரியா? தவறா? என்பதை இந்த இரண்டு தீர்க்கதரிசனங்களை (1798 - போப்பின் வீழ்ச்சி, 1840 - ஒட்டமன் பேரரசின் வீழ்ச்சி) வைத்துதான் சரியாக இருக்கும் எனப் புரிந்துகொண்டார்கள்.**

இந்த இரண்டு கால தீர்க்கதரிசனமும் சரியாக நிறைவேறியதினால், 1844-ம் ஆண்டிலும் சரியாகத்தான் நிறைவேறும் என நம்பினார்கள். **1844 சாதாரணமான வருடம் அல்ல. இயேசு கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்ற விசேஷமான வருடம்.**

## நியாயத்தீர்ப்பைப் பற்றின சுருக்கம்

உதாரணமாக, நீதிமன்றத்தை எடுத்துக்கொள்வோம். தீர்ப்பு மூன்று கட்டமாக நடைபெறும். முதலில் விசாரிப்பார்கள், பின்னர் தீர்ப்பை அறிவிப்பார்கள், பின்னர் தீர்ப்பில் கொடுக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றுவார்கள்.

- ✓ முதலில் குற்றம்சாட்டப்பட்ட நபர் குற்றவாளியா? இல்லையா? என்பதை விசாரனை செய்ய வேண்டும்.
- ✓ இரண்டாவது அவன் குற்றவாளி என்றால் அவனுக்கு என்ன தண்டனை என்று நீதிபதி தீர்ப்பு எழுதுவார்.
- ✓ மூன்றாவது தீர்ப்பில் எழுதப்பட்ட தண்டனையை நிறைவேற்றுதல்.

அது போல, இயேசு கிறிஸ்து இப்பொழுது எந்த கட்டத்தில் இருக்கிறார்? விசாரணை செய்யும் கட்டத்தில் இருக்கிறார். அக்டோபர் 22, 1844 அன்று பரலோகத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு போய், எல்லோருடைய பதிவுகளையும் **(ஜீவப் புத்தகம், ஞாபகப் புத்தகம், பாவப்புத்தகம்)** எடுத்துப்பார்த்து விசாரணை செய்து கொண்டிருக்கிறார். (இந்த புத்தகங்களைப்பற்றி 9வது அத்தியாயத்தில் நீங்கள் படிக்கலாம்). ஒருவேளை நம்முடைய புத்தகங்களில் ஏதாவது பாவம் அறிக்கைசெய்யாமல் இருந்தால், மனந்திரும்பாமல் இருந்தால், ஜீவபுஸ்தகத்தில் இருந்து நம்முடைய பெயரை கிறுக்கிப்போடுவார். இந்த விசாரணை கட்டத்தை இயேசு கிறிஸ்து முடித்துவிட்டார் என்றால் அவருடைய இரண்டாம் வருகை இருக்கும்.

ஆறாவது எக்காளத்தின் கீழாக வாழும் நமக்கு தேவன் கொடுக்கும் நற்செய்தி என்னவென்றால்: அவர் ஒரு திருச்சபையை ஏற்படுத்தியிருக்கிறார். அந்தத் திருச்சபைக்கு இந்த சிறிய புஸ்தகத்தைக் கொடுத்திருக்கிறார். திருச்சபையின் மூலமாக உலகத்திற்கு முத்தூதை அறிவித்துக்கொண்டிருக்கிறார். நாமும் அந்த உண்மையான கூட்டத்தாரோடு இருக்கவேண்டும். **ஆண்டவருடைய ஓய்வுநாள், அவர் கொடுத்த கட்டளைகள், ஆண்டவர் கொடுத்த ஆசரிப்புக் கூடார சத்தியம், கால தீர்க்கதரிசன சத்தியம் போன்ற அனைத்தையும் நாம் நன்கு ஆராய்ந்து உணர்ந்து, இந்த உலகிற்குக் கூறவேண்டும்.**

## நாமே - தூதர்கள்

தேவன் சொல்லுவதுபோல சகல ஜாதிகளுக்கும், சகல கோத்திரத்தாருக்கும், அறிவிக்கவேண்டிய நித்திய சுவிசேஷம் இருக்கிறது. நித்திய சுவிசேஷத்தை மூன்று தூதர்கள் அறிவிக்கமாட்டார்கள். அந்த தூதர்கள் நாம் தான். நாம் இந்த சுவிசேஷத்தை உலகம் முழுவதிற்கும் அறிவித்துவிட்டோம் என்றால், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சீக்கிரமாக வந்துவிடும். ஆம். **உலகத்தினுடைய முடிவு நம்முடைய கரத்தில் தான் இருக்கிறது என்று**

**வசனம் கூறுகிறது.** ஆண்டவருக்கு உண்மையாய் இருந்து இந்த தேவரகசியத்தை உலகிற்கு அறிவிக்கவேண்டும்.

மில்லரைட் இயக்கத்தின் செய்தி அமெரிக்காவையே உலுக்கியது. 1840-களில் இருந்த ஜனாதிபதி தேர்தல் பற்றின செய்திகள், செய்தித்தாளில் முதல் பக்கத்தில் வந்தது. அதே முதல் பக்கத்தில் இந்த மில்லரைட் இயக்கத்தைப் பற்றிய செய்தியையும் அச்சிட்டார்கள். இந்த செய்தி எவ்வளவு பிரபலமாக இருந்திருக்கும் என சிந்தித்துப் பாருங்கள். இன்று நாமும் அதே முத்தூதைத்தான் வைத்திருக்கிறோம். நாம் அதை பிரசங்கிக்கிறோமா? உலகம் நம்மை கண்டுகொள்கிறதா? இல்லை உலகத்திற்கு நாம் யாரென்றே தெரியாமல் இருக்கிறோமா? நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு மிகப்பெரியது என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

**மனிதர்கள் நியாயத்தீர்ப்பு ஒன்று இருக்கிறது என்ற எண்ணம் இல்லாமல் மனம் போன போக்கில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நம் ஒவ்வொரு செயலையும், சிந்தையையும், வார்த்தையையும்: தேவன் கணக்கில் வைத்து நியாயந்தீர்ப்பார்.** எனவே, ஒவ்வொருவரும் தங்கள் வழிகளை இன்றே சீர்தூக்கிப்பார்த்து சரி செய்யாவிட்டால், நியாயத்தீர்ப்பில் தண்டனைப்பெற வேண்டிய சூழ்நிலை வரும் என்ற இந்த எச்சரிப்பின் செய்தியை உலகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு பெரிய வேலையை தேவன் நம் கையில் கொடுத்திருக்கிறார். அதை நாம் எப்படி செய்துகொண்டிருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். **இந்த நியாயத்தீர்ப்பின் செய்தியை தேவனுடைய கடைசிகாலத் திருச்சபை உலகிற்கு எடுத்துச்செல்லும்.**

அத்தியாயம் – 6

# பிரெஞ்சு புரட்சி –நாத்திகம் உருவான கதை



**ஆலோசனை: வெளிப்படுத்தல் 11 ஆம் அதிகாரத்தைப் படித்துவிட்டு, இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

தேவன் வெளிப்படுத்தல் புத்தகத்தில் உலகத்தின் சரித்திரத்தையும், ராஜ்யங்களுடைய எழுச்சியும் வீழ்ச்சியும் யோவான் மூலமாகப் பதிவு செய்திருக்கிறார். பிரெஞ்சு புரட்சியைப் பற்றி *வெளிப்படுத்தல் 11*-ம் அதிகாரத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கும் நமக்கும் என்ன தொடர்பு? இதிலிருந்து தேவன் நமக்குச் சொல்லவிருக்கும் செய்தி என்ன?

**கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு வரலாற்றுச் சம்பவம்தான் பிரெஞ்சு புரட்சி. இதற்குப் பின்பாகத் தான் வேதாகமச் சங்கங்கள் உருவானது. இந்தக் காலகட்டத்திற்குப் பின்தான் வேதாகமம் பல மொழிகளில் அச்சடிக்கப்பட்டு, உலகம் முழுவதும் சென்றது.**

## அளவுகோல்

*பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது தேவதூதன் நின்று என்னை நோக்கி: நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார். (வெளிப்படுத்தல் 11:1)*

“பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது” என்பதாக இந்த அதிகாராம் தொடங்குகிறது. இங்கே பின்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், இதற்கு முன்பாக உள்ள *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தோடே தொடர்புடையது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த தரிசனத்தில், யோவானுக்கு கொடுக்கப்பட்ட கைக்கோலுக்கு ஒப்பான அளவுகோலை வைத்து, தேவனுடைய ஆலயத்தில் தொழுதுகொள்ளுகிறவர்களை அளந்துபார் என்று தேவன் கூறுகிறார்.

1. அளவுகோல் என்றால் என்ன?
2. அளப்பது என்றால் என்ன?
3. தேவனுடைய ஆலயம் என்றால் என்ன?
4. அதில் தொழுதுகொள்ளுகிறவர்கள் யாரைக் குறிக்கிறது?

*ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். (மத்தேயு 7:2)*

இந்த வசனத்தில் உள்ள **‘அளவு’ என்ற வார்த்தை நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது.** நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் என்று வசனம் சொல்கிறபடியால் அளப்பது என்பது நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது என தெளிவாகிறது. *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தின் கடைசி வசனம் சகல ராஜ்யங்களுக்கும், கோத்திரத்தாருக்கும், ஜனக்கூட்டத்துக்கும் நீ மறுபடியும் தீர்க்கதரிசனம் சொல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சகல ஜாதிகளுக்கும் அறிவிக்க வேண்டிய தீர்க்கதரிசனம் என்ன என்று வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, *வெளிப்படுத்தல் 14*-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள முத்தூது, சகல ஜாதிகளுக்கும் அறிவிக்கவேண்டியதாயிருக்கிறது. அது தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறிப்பதாகும். இதன்படி, *வெளிப்படுத்தல் 10*-ம் அதிரகாரத்தில் சொல்லப்படும் **சகல ஜாதிகளுக்கும் அறிவிக்கப்பட வேண்டிய தீர்க்கதரிசனம் - தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆகும்.** இதன் தொடர்ச்சியாகவே *வெளிப்படுத்தல் 11*-ம் அதிகாரத்தின் முதல் வசனத்தில் நியாயத்தீர்ப்பை பற்றிய செய்தி இருக்கிறது. அளவுகோலால் அளந்துபார் என்று கூறப்பட்டிருக்கிறது.

*நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; (1 பேதுரு 4:17)*

இந்த வசனத்தின்படி தேவனுடைய ஆலயத்திலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது. இந்த வசனத்திற்கு ஏற்ற தரிசனமாக *வெளிப்படுத்தல் 11:1* வசனம் இருக்கிறது. அளவுகோலை வைத்து தேவனுடைய ஆலயத்திலும் அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார்க்க வேண்டும். அக்டோபர் 22, 1844 அன்று தேவன் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா

பரிசுத்த ஸ்தலத்திற்கு போய் நியாயத்தீர்ப்பை துவங்கினார் என்று நாம் பார்த்தோம். **தேவனுடைய வீடாகிய ஆலயத்தில்தான் தேவன் நியாயத்தீர்ப்பை துவங்குகிறார். அதில் தொழுதுகொள்ளுகிறவர்களுக்கு முதலில் நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது.**

## தேவனுடைய வீடு - தேவனுடைய ஆலயம்

எதற்காக நியாயத்தீர்ப்பு ஆலயத்தில் துவங்க வேண்டும்? **கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களிடத்திலே தேவன் நியாயத்தீர்பை துவங்குகிறார்.** இதன் அர்த்தம் என்னவென்றால், ஆதாம் முதற்கொண்டு யார் யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்களோ அவர்களிடத்தில்தான் நியாயத்தீர்ப்பு நடந்துகொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக உண்மையாக இருந்தார்களா என்பதை தேவன் நோக்கிப்பார்ப்பார். எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பார். பாவங்களுக்காக மனம் வருந்தி பாவ அறிக்கை செய்திருக்கிறார்களா என்றும் பார்ப்பார். அறிக்கை செய்யாத பாவங்கள் இருக்குமேயானால், ஜீவபுத்தகத்திலிருந்து அவன் பெயரை கிறுக்கிப்போடுவார்.

## ஆசரிப்புகூடார முறைமை

இன்னும் எளிமையாக புரிந்துகொள்ளவதற்கு, பழைய ஏற்பாட்டு காலத்தல் ஆசரிப்பு கூடாரத்தில் நடந்ததைப் பார்க்கலாம். அங்கே ஆசாரியர்கள் இருப்பார்கள். அவர்கள் மக்கள் யாரெல்லாம், பலிகொடுத்து பாவ அறிக்கை செய்தார்களோ, அவர்களுக்காக தேவனிடம் மன்றாடி ஜெபிப்பார்கள். ஆசாரியர்கள் பலிகொடுத்த மிருகத்தின் இரத்தத்தை எடுத்துக்கொண்டு உள்ளே செல்லுவார்கள். அந்த மிருகத்தின் இரத்தம் பாவத்தை குறிக்கிறது. அப்பொழுது, ஆலயத்தில் வந்து பலி கொடுக்கிறவர்களுக்கு, **அதாவது இஸ்ரவேல் ஜனத்துக்காக ஆசாரியன் பரிந்துபேசுகிறார். அதேபோல, அவரை ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசிக்கிற பிள்ளைகளுக்காக இயேசு கிறிஸ்து பரலோகத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.** அங்கே நியாயத்தீர்ப்பு தொடங்கும்போது, தேவனுடைய வீட்டில், அவரை ஏற்றுக்கொண்ட பிள்ளைகளிடத்தில் நியாயத்தீர்ப்பை தொடங்குகிறார்.

**'ஆலயம்' என்ற வார்த்தையில் கிரேக்க மொழியில் பரிசுத்த ஸ்தலத்தைக் குறிக்கிறது.** ஏன் இந்த வார்த்தையை தேவன் இங்கு உபயோகித்திருக்கிறார்? இயேசுகிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு சென்ற பின்பு (அதாவது அக்டோபர் 22 1844 அன்று?) அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு நியாயத்தீர்ப்பை தொடங்கிவிட்டார் என அறிந்துகொள்ளலாம்.

தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார் என வேதம் கூறுகிறது. ஆலயம் பரலோகத்தில் இருக்கிறது. நாம் போய் பரலோகத்தில் தொழுதுகொள்ள முடியாதே. அப்படியானால், இந்த வசனம் யாரைக் குறிக்கிறது?

*வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்,*

*நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரெயர் 4:14-16)*

பரலோகத்திற்குப் போன இயேசுகிறிஸ்து **பரலோக ஆலயத்தில்** பிரதான ஆசாரியனாய் இருக்கிறார். அந்த ஆலயத்திற்கு **நம்மால் செல்ல இயலுமா? இயலாது.** ஆனால், பவுல் கூறுகிறார். தைரியமாய் கிருபாசனத்தண்டையில் வாருங்கள் என்று கூறுகிறார். அப்படியென்றால், நாம் நேரடியாக பரலோகம் செல்வதைக் குறித்து இங்கு பேசப்படவில்லை. **ஆவிக்குரிய விதத்தில் இயேசுகிறிஸ்து அங்கு பரலோகத்தில் இருக்கிறார் என்று விசுவாசித்து ஜெபத்தின் மூலமாக நாம் அவருக்கு முன்பாக அங்குள்ள ஆலயத்தின் கிருபாசனத்திற்கு போக வேண்டும்.** இது ஆவிக்குரிய அர்த்தம்கொண்டது. நேரடியாக நாம் அங்கு இருப்பதை குறிக்கவில்லை. தேவனுடைய ஆலயத்தில் தொழுதுகொள்ளுகிறவர்களை அளந்துபார் என்றால் நாம் அங்கு இல்லையே? என்று கேள்வி கேட்காமல், ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ளவேண்டும். இது தேவனை விசுவாசிக்கிறவர்களைக் குறிக்கிறது.

*ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள். (வெளிப்படுத்தல் 11:2)*

இங்கே புறஜாதிகளை அளக்க வேண்டாம் என்று தேவன் கூறுகிறார். **புறஜாதிகள் என்றால் தேவனை விசுவாசிக்காத மக்கள்.** புறஜாதிகளுக்கு முதலில் நியாயத்தீர்ப்பு இல்லை. **விசுவாசிகளுக்குத் தான் முதலில் நியாயத்தீர்ப்பு.** இங்கே பரிசுத்த நகரத்தை புறஜாதிகள் 42 மாதமளவும் மிதிப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரியம் எதைக் குறிக்கிறது? **பரிசுத்த நகரம் என்றால் தேவனுடைய நகரம்.** மிதிக்கிற புறஜாதிகள் நிச்சயமாக எதிரிகளாகத்தான் இருக்க வேண்டும். புறஜாதிகள் என்பதை தேவனை விசுவாசிக்காதவர்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படியானால், தேவனுடைய எதிரிகள் 42 மாதமளவும் பரிசுத்த நகரத்தை மிதிப்பார்கள் என்பதே இதன் அர்த்தம்.

### மிதிப்பது என்றால் என்ன?

வெறுப்பது, அழிப்பது, ஒதுக்குவது என்று மிதிப்பதற்கு அர்த்தங்களாக எடுத்துக்கொள்ளலாம்.

*அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, பூமியின்மேல் மிகுந்த இடுக்கண்ணும் இந்த ஜனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும். பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும். (லூக்கா 21:23,24)*

இங்கே எருசலேமின் அழிவைக்குறித்து இயேசு கிறிஸ்து பேசுகிறார். இங்கே மிதிக்கப்படும் என்பது அழிக்கப்படுவதையும். நிராகரிக்கபடுவதையும் குறிக்கிறது.

*தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள். (எபிரேயர் 10:29)*

இங்கே தேவகுமாரன் காலின்கீழ் மிதிக்கப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி, தேவகுமாரனை நிராகரித்தார்கள் என்றே அர்த்தம். **புறஜாதிகள் பரிசுத்த நகரத்தை 42 மாதம் மிதிப்பார்கள் என்றால், தேவனுடைய எதிரிகள் பரிசுத்த நகரத்தை, அதாவது அவருடைய திருச்சபையை 42 மாதமளவும் கொடுமைப்படுத்தி நிராகரிப்பார்கள்** என்பதே இதன் அர்த்தம்.

## இது எங்கு நடந்தது?

42 மாதங்கள். ஒரு மாதத்திற்கு 30 நாட்கள். 42 மாதங்களுக்கு 1260 நாட்கள். அதாவது 1260 வருடங்கள் என்று அர்த்தம். 1260 வருடங்களாக தேவனுடைய ஜனத்தை உபத்திரவப்படுத்தின புறஜாதியார் ரோமன் **கத்தோலிக்க மார்க்கத்தாரே. கி.பி. 538 முதல் கி.பி. 1798 வரை தேவனுடைய பிள்ளைகளை ஒடுக்கி, அவர்களை துன்பப்படுத்தி, வேதத்தின் வெளிச்சம் உலகத்திற்கு கிடைக்காமல் செய்தார்கள். இவர்கள் தான் பரிசுத்த நகரத்தை 42 மாதமளவும் மிதித்தார்கள்.** சரித்திரத்தைப் படிக்கும்பொழுது இது நமக்குத் தெளிவாகப் புரியும். போப்பை சார்ந்தவர்கள் பரிசுத்த நகரத்தை மிதிப்பார்கள் என்று தானியேல் புத்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. தானியேல் புத்தகத்திற்கும், வெளிப்படுத்தல் புத்தகத்திற்கும் நேரடி தொடர்புள்ளது.

*பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன்; அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக்குறித்தும், பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும், பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக்குறித்தும், உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். (தானியேல் 8:13)*

இந்த வசனமும் பரிசுத்த ஸ்தலமும், சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் என்று கூறுகிறது. மேலும், *தானியேல் 7-8* அதிகாரங்கள் சின்ன கொம்பைப் பற்றி பேசுகிறது. **அந்த சின்ன கொம்புதான் ரோமன் கத்தோலிக்கம்.**

*என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன். (வெளிப்படுத்தல் 11:3)*

42 மாதம் என்பது 1260 நாட்கள் என்பதை இந்த வசனத்தின் மூலம் புரிந்துகொள்ளலாம். அந்த 1260 வருட காலக்கட்டத்தில் தேவனுக்கு சாட்சியாக இரண்டு பேர் வஸ்திரமுடுத்திக்கொண்டு தீர்க்கதரிசனம் சொல்லுவார்களாம்.

## அந்த இரண்டு பேர் யார்?

*பூலோகத்தின் ஆண்டவருக்குமுன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே. (வெளிப்படுத்தல் 11:4)*

(வரைபடம் - பக்கம் 192)

அந்த 1260 வருட காலத்தில் போப் ஆதிக்க காலத்தில் தேவனுக்கு உண்மையாய் இருக்கிற இரண்டு சாட்சிகள், இரண்டு ஒலிவமரங்களும், இரண்டு குத்துவிளக்குத் தண்டுகள் என வசனம் கூறுகிறது. அது யார்? குத்துவிளக்கு மற்றும் ஒலிவமரம் என்னும் பதங்கள் *சகரியா 4*-ம் அதிகாரத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் விளக்கு என்பது வேதவசனத்தைக் குறிக்கிறது.

*உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம் 119: 105)*

இதைப்போல், **தீபம், ஒலிவமரம், குத்துவிளக்கு போன்ற அனைத்தும் வசனத்தைக் குறிக்கிறது.**

## பின்பு ஏன் இரண்டுபேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது?

இரண்டு பேர் என்னும் பதம் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் குறிக்கிறது.

*வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவான் 5:39)*

இயேசு கிறிஸ்து இந்தக் காரியத்தைப் பற்றி பேசியபோது பழைய ஏற்பாடு மாத்திரமே இருந்தது. அப்படியானால், பழைய ஏற்பாடு புஸ்தகத்தை தான் அவைகள் எனக்கு சாட்சி கொடுக்கிறது என்று கூறுகிறார் என்று சொல்லலாமா? பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டுமே தேவனுக்கு சாட்சிகொடுக்கிறது. ***வெளிப்படுத்தல் 11:4*** **-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும், இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் *வெளிப்படுத்தல் 11:3*-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் இரண்டு சாட்சிகளும் வேதத்தையே குறிக்கிறது.** இந்த 1260 வருடக்காலத்தில் புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாடும் தீர்க்கதரிசனம் சொல்லும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. போப் ஆதிக்கத்தின் காலமாகிய **இந்த 1260 வருடங்களில் வேதத்தை அழிப்பதற்கென்று போப் மார்க்கம் அநேக முயற்சிகளைச் செய்தது.** வேதத்தை யாரும் கையில் வைத்திருக்கக்கூடாது, படிக்கக்கூடாது, அச்சிடக்கூடாது என்றெல்லாம் சட்டம் இருந்தது. **வேதத்தை சாதாரண மனிதர்கள் படிக்கக்கூடாது, படித்தால் அதன் பரிசுத்தம் போய்விடும் என்று கூறினார்கள். வேதத்திலுள்ள வார்த்தைகள் மாற்றப்பட்டிருந்தது. லத்தீன் மொழியில் மாத்திரம்தான் வேதாகமம் இருக்கவேண்டும்** எனக் கூறினார்கள். குறிப்பாக **பத்து கற்பனைகளில் அநேக மாற்றங்கள் செய்யப்பட்டது. ஓய்வுநாள் மாற்றப்பட்டது. விக்கிரக வழிப்பாட்டைப் பற்றின இரண்டாம் கற்பனை மாற்றப்பட்டது.** இப்படி பல மாற்றங்கள் செய்யப்பட்டபோதும், பல தடைகளின் மத்தியிலும், உண்மை கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை பாதுகாத்து வந்தார்கள். கையாலே வேதாகமத்தை பலமுறை எழுதி நிறைய பிரதிகளை தயாரித்து பலருக்கும் கொடுத்தார்கள். வியாபாரம் செய்வதுபோல ஊருக்குள்

சென்று, தாங்கள் மறைத்து வைத்திருந்த வேதாகமத்தைக் கொடுத்து வந்தார்கள். அந்த இருண்ட காலத்தில் இரண்டு சாட்சிகளும் தீர்க்கதரிசனம் கூறியது.

## வேதம் அழியாதது

1260 வருடங்கள் நீடித்த மிகக் கொடுமையான இக்கட்டின் உபத்திரவத்தின் மத்தியிலே இந்த இரண்டு சாட்சிகளும் தீர்க்கதரிசனம் சொன்னது. இந்த இரண்டு சாட்சிகளை அழிக்க போப் நினைத்தாலும், பல முயற்சிகள் எடுத்தாலும், இந்த இரண்டு சாட்சிகளும் அழிந்து போகவில்லை. இந்த இரண்டு சாட்சிகளையும் தேவடைய ஜனம் காப்பாற்றிது. சத்திய வார்த்தை உலகம் முழுக்க சென்றது.

*ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும். (வெளிப்படுத்தல் 11:5)*

இந்த இரண்டு சாட்சிகளை யாராவது சேதப்படுத்த நினைத்தால், அவர்கள் அக்கினியினால் பட்சிக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தை சாதாரணமானதல்ல. அவருடைய வார்த்தையை வைத்து தான் வானத்தையும் பூமியையுமே உண்டாக்கினார். தேவனுடைய வல்லமையான உயிர்ப்பிக்கிற வார்த்தையை ஒருவன் அழிக்க நினைக்கும்போது, அதற்கான தண்டனையை நிச்சயமாகப் பெறுவான்.

*அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லி வருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு. (வெளிப்படுத்தல் 11:6)*

ஒருவன் தேவனுடைய வசனத்தை அழிக்க நினைக்கும்போது அவன் வாதைகளையும், நியாயத்தீர்ப்பையும் அடைவான் என்று வசனம் கூறுகிறது.

*அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும். (வெளிப்படுத்தல் 11:7)*

இந்த 1260 வருட காலகட்டம் முடியும்போது பாதாளத்தில் இருந்து ஒரு மிருகம் வரும்.

## மிருகம் என்றால் என்ன?

மிருகம் என்றால் **ராஜ்யம்** என்று *தானியேல் 7:17*-ம் வசனம் கூறுகிறது. அப்படியானால், ஏதோ ஒரு ராஜ்யம் 1260 வருடம் முடிவில் வந்து இந்த இரண்டு சாட்சிகளை கொலை செய்ய போகிறது என்று அர்த்தமா?

## யார் இந்த ராஜ்யம்?

சரித்திரத்தில் 1798-ம் வருடத்தின்போது, ஏதோ ஒரு ராஜ்யம் எழும்பி வரவேண்டும். இந்த இரண்டு சாட்சிகளையும் அழிக்க முயற்சி செய்ய

வேண்டும். **இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தது பிரான்ஸ் தேசம்தான்.** பிரெஞ்சு புரட்சியின் மூலமே இந்த காரியங்கள் நடந்தேறியது. கி.பி. 538 முதல் 1798 வரை ரோமன் கத்தோலிக்க ஆட்சி நீடித்தது. **இந்த ஆட்சியின்போது ரோமன் கத்தோலிக்க சபை எல்லா ராஜாக்களையும் அதன் கைக்குள் வைத்துக்கொண்டது.** ராஜாக்கள் மீது வரி விதித்தது. ஒவ்வொரு ராஜாவும் இந்த சபைக்கு வரி செலுத்த வேண்டும். ராஜா வரி செலுத்தவேண்டுமென்றால், நாட்டு மக்களிடமிருந்தே அந்தப் பணத்தை வசூலிக்க வேண்டும். இதன் காரணமாக மக்கள்மீது அதிக வரி சுமத்தப்பட்டது. இதனால் **மக்களுடைய வரிச்சுமை இரண்டு மடங்காக அதிகரித்தது.**

## ஏன் ராஜாக்கள் போப்பு மார்க்கத்திற்கு அடிபணிந்தார்கள்?

ரோமன் கத்தோலிக்க சபை என்பது வலிமையான ரோம சாம்ராஜ்யத்திலிருந்து உருவான சபை. ரோம சாம்ராஜ்யம் விழுந்துபோனாலும், பிரிந்து போன ராஜ்யங்கள் அனைத்தையும் இந்த ரோமன் கத்தோலிக்க சபை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது. இந்த தனது கொள்கையை ஏற்றுக்கொள்ளாத நாடுகள்மீது மற்ற நாடுகளின் துணையோடு பலவிதமான பொருளாதார தடைகள் ஏற்படுத்தி எச்சரிப்புகள் கொடுத்து, யுத்தமும் நடத்தப்பட்டது. இதன் காரணமாக எல்லா நாடுகளின் ராஜாக்களும் கத்தோலிக்க சபையைப் பகைத்துக்கொள்ளக் கூடாது என்ற மனநிலைக்கு வந்தார்கள். **அதிக வரி வசூலிப்பது ரோமன் கத்தோலிக்க சபையின் பழக்கமாக இருந்தது.** இதனால், மக்களும் அவதிப்பட்டார்கள். இது ஒரு புறம் இருக்க, **மக்களும் சபைக்கு நேரடியாக வரி பணம் செலுத்த வேண்டுமென்று ரோமன் கத்தோலிக்க சபை மக்களை நிர்பந்தப்படுத்தியது.** இதனால், மக்கள் சம்பாதிக்கும் பணம் எல்லாம் வரி என்ற பெயரில் ராஜாவுக்கும், சபைக்கும் சென்றது.

## பிரெஞ்சு புரட்சி

வேதத்தில் சாலோமோனின் நாட்களுக்குப்பின் வரி பிரச்சனையின் காரணமாக இஸ்ரவேல் தேசம் இரண்டாக பிரிந்தது. (1 இராஜா 12). சாலோமோனுடைய குமாரன் அதிக வரி வசூல் செய்தார் என்பதாகப் பார்க்கிறோம். அதைப்போல், **கத்தோலிக்க ஆதிக்க காலத்திலும் மக்கள் வரியினால் மிகவும் அவதிக்குள்ளானார்கள். இதன் காரணமாக ராஜாவும் வேண்டாம், திருச்சபையும் வேண்டாம், போப்பும் வேண்டாம் என்ற விரக்தியான நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.** கடவுள் என்று யாரும் இல்லை. திருச்சபையே எங்களுக்கு வேண்டாம் என்ற மனநிலைக்கு வந்தார்கள். இதனால், மக்கள் அரசாங்கத்திற்கும் திருச்சபைக்கும் எதிராக திரும்பினார்கள்.

### நாத்திகம் உருவானது, வேதம் மறுக்கப்பட்டது

இதனால் உள்நாட்டு யுத்தம் உருவானது. மக்கள் திருச்சபைகளையும், அரசாங்க கட்டிடங்களையும் அடித்து நொறுக்கினார்கள். இதன் உச்சமாக **"கடவுளே இல்லை"** என முழங்கத் தொடங்கினார்கள். இதுவரை கடவுள் மறுப்பு என்ற தத்துவம் இருந்ததே இல்லை. ஏதாவது ஒரு கடவுளை வணங்கிக்கொண்டு தான் இருந்தார்கள். **ரோமன் கத்தோலிக்கத்தின் அடக்குமுறையினாலும், துன்புறுத்தலினாலும், கடவுளே இல்லை என்ற எண்ணத்திற்கு வந்தார்கள்.**

சமீபத்தில் ஒரு பிரசங்கியாருடைய பிரசங்கத்தில் அவருடைய அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். அவர் ஒரு வேலை காரியமாக பிரான்சுக்கு சென்றிருந்தாராம். அங்கு இவரை வரவழைக்கவந்த ஒரு சகோதரியிடம் இங்கிருக்கும் பல்கலைக்கழகங்களில் இறையியல் படிப்பு இருக்கிறதா (Theology) எனக் கேட்டாராம். அதற்கு அந்த சகோதரி சிரித்தபடி, இங்கெல்லாம் அதைப் படிக்கிறேன் எனறு சொன்னால், வித்தியாசமாகப் பார்த்து சிரிப்பார்கள் எனக் கூறினார்களாம். அந்த அளவிற்கு நாத்திகம் (கடவுள் இல்லை என்ற கொள்கை) வேரூன்றி இருக்கிறது.

கலவரங்கள் வெடித்து ஒரு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. இந்த பிரெஞ்சு புரட்சியின்போது அநேக மக்கள் வேதங்களை சுட்டெரித்தார்கள். திருச்சபைகளும், வேதாகமங்களும் இருக்கவே கூடாது என்ற மனநிலைக்குச் சென்றார்கள். ரோமன் கத்தோலிக்கத்திற்கு மிகவும் ஆதரவாக இருந்த பிரான்ஸ் தேசத்தில் கத்தோலிக்கர்களின் ஒடுக்குமுறையினால், உள்நாட்டுக்குள்ளேயே ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக, **கி.பி. 1798-ம் ஆண்டு போப்பை கைது செய்தார்கள். இறுதியாக ப்ரெஞ்சு புரட்சி ஒரு முடிவுக்கு வந்தது.**

*வெளிப்படுத்தல் 11:7*-ம் வசனத்திபடி 1260 வருட முடிவில் கி.பி. 1798-ம் ஆண்டில் பாதாளத்திலிருந்து ஏறி வருகிற மிருகமாகிய பிரான்ஸ் தேசம் வேதாகமத்தை எரித்த சம்பவம் தான் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் வேதாகமத்தை எரித்ததுமட்டுமல்லாமல், ஒரு வேசியைப் பிடித்து, அவளை மேடையேற வைத்து இவள்தான் இனி நம் கடவுள் அதாவது, "நாத்திகத்தின் கடவுள்" என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். இந்த பிரெஞ்சு புரட்சியில்தான் நாத்தீக கொள்கை உருவானது. கடவுளை தவறாக சித்தரிக்கும்போது மக்கள் இறைவனை வெறுத்து இறைவனே இல்லை என்ற நிலைக்கு போய்விடுகிறார்கள் என்பதற்கு இதுவே சாட்சி.

**இன்று நாமும் தேவனை தொழுதுகொள்ளுகிறோம், பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிறோம். நாம் தேவனைப்போல் வாழாமல் அவரைத் தவறாக நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்கும்போது, நம்மை சுற்றியிருப்பவர்கள் கிறிஸ்துவத்தையும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் வெறுப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது. ரோமன் கத்தோலிக்கம் இயேசு கிறிஸ்துவை தவறாக சித்தரித்தது. இயேசு கிறிஸ்து என்ற பெயரை வைத்துக்கொண்டு மக்களை ஒடுக்கியது. மக்கள் இறைவன் இல்லை என்ற நிலைக்கு போனார்கள். இன்று கிறிஸ்துவத்தை தரித்திருக்கிற நாமும் சரியாக நடந்துகொள்ளாவிடில், இறைவனே வேண்டாம், இறைவனே இல்லை என்ற மனநிலைக்கு வந்துவிடுவார்கள். இதைக் குறித்து நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.**

*அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார். (வெளிப்படுத்தல் 11:8)*

### சோதோம், எகிப்து எதை குறிக்கிறது?

சோதோம், கொமோரா பட்டணங்களைப் பற்றி நமக்குத் தெரியும். லோத்தின் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். அதை தேவன் அழித்தார்.

அங்கு என்ன பாவம் அதிகமாயிருந்தது என்றும் நமக்கு தெரியும். சோதோம் கொமோராவை அழிக்கப்போகும்போது, லோத்துவின் வீட்டிற்கு சென்ற தேவதூதர்களை, தவறான உறவுகொள்ள வெளியே விடும்படியாக அந்த தேசத்தின் ஆண்களெல்லாம் சுற்றி நின்று கூப்பிட்ட சரித்திரம் நமக்குத் தெரியும். (ஆதியாகமம் 19:4,5) **அங்கு அதிகமாக விபச்சாரங்களும், வேசித்தனங்களும் நடந்தது. அதன் காரணமாக தேவன் நியாயந்தீர்த்தார்.**

எகிப்தில் என்ன பாவம் இருந்தது? கடவுள் யார்? உன் தேவன் யார் என்று எகிப்தின் ராஜா பார்வோன் கேட்கிறார். **எகிப்து, இறைவன் இல்லை என்று இறைவனை நிராகரிக்கிற தேசமாக இருக்கிறது.** பிரான்ஸ் நாட்டிலும் இப்படிப்பட்ட குணநலன்கள் இருக்கும். **பிரான்ஸ் நாட்டில் வேசித்தனங்கள் இருந்தது, கடவுள் இல்லை என்ற மனநிலையும் இருந்தது எனப் பார்க்கிறோம்.** இந்த இரண்டு காரியங்களும் பிரான்ஸ் நாட்டில் இப்பொழுதும் இருப்பதை பார்க்கிறோம். பிரான்ஸின் நிலைமையை புரிந்துகொள்ள சரித்திரத்தையும், வேதாகமத்தையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியமாயிருக்கிறது.

*ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரைநாள் வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள். (வெளிப்படுத்தல் 11:9)*

இந்த இரண்டு சாட்சிகளுடைய உடல்களை மூன்றரை நாளளவும் பார்ப்பார்கள். கி.பி. 1793-ம் வருடத்தில் வேதாகமத்தை தடைசெய்யும்படியாக பிரான்ஸ் அரசாங்கம் சட்டம்போட்டார்கள். இதனால், வேதாகமத்தை எரித்தார்கள். தேவனுக்கு உண்மையாக இருந்தவர்கள் தாக்கப்பட்டார்கள். தேசத்தில் தேவனை விசுவாசிக்கிற அதிகாரிகளும் தாக்கப்பட்டார்கள். அவர்களுடைய வேலைகளும் பறிக்கப்பட்டது. தேசத்தினுடைய நிர்வாகம் மிகவும் சரிந்தது. ஏனென்றால், வேதத்தை படிக்கிற தேவனுடைய பிள்ளைகள் ஞானவான்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் போய்விட்டார்களென்றால், மீதியாய் இருக்கிறவர்கள் சுயநலம் மற்றும் துர்குணமுள்ளவர்களாக இருந்தார்கள். இவர்கள் கையில் தேசத்தின் அதிகாரம் சென்றதால், தேசம் மிகவும் மோசமான நிலைமைக்கு சென்றது. மற்றவர்களின் உரிமை பறிக்கப்பட்டது, சுதந்திரம் இல்லை, பாதுகாப்பு இல்லை, மக்கள் பயத்திலேயே இருந்தார்கள். தேசத்தின் பொருளாதாரம் வீழ்ந்தது. மூன்றரை ஆண்டுகள் இப்படியாக நடந்தது.

## வேதாகம சங்கங்கள்

கி.பி. 1793-ம் ஆண்டில் அமல்படுத்தப்பட்ட இந்தச் சட்டம், மூன்றரை வருடங்கள் வரைதான் நீடித்தது. மூன்றரை வருடங்கள் கழித்து கி.பி. 1797-ம் ஆண்டில் வேதாகமத்தின் மீதுள்ள தடையை பிரான்ஸ் அரசாங்கம் நீக்கியது. லேதாகமத்தை தடையிட்டதால் தேசம் மிக பெரிய பிரச்சனைகளை (பஞ்சம், பசி, பெருளாதார சரிவு) சந்தித்தது. தடையிட்டபொழுது நிகழ்ந்த சம்பவங்களைப் பார்த்து, இனிமேல் தடையிடக்கூடாது என்றது. வேதாகம தீர்க்கதரிசனத்தின்படியே தடைகள் நீக்கப்பட்டு அநேக வேதாகம சங்கங்கள் உருவானது. கி.பி. **1817-ம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் வேதாகம சங்கம், அமெரிக்க வேதாகம**

**சங்கம் போன்றவை உருவானது.** அநேக வேதாகம சங்கங்கள் உருவாகிய காரணத்தால், வேதாகமம் பெரிய அளவில் அச்சடிக்கப்பட்டு, **சுமார் இறுநூறுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகம் முழுவதும் சென்றது.** இதற்கு முன்பாக வேதாகமத்தை வைத்திருப்பது, படிப்பது மிகவும் அரிதாயிருந்தது. ரோமன் கத்தோலிக்கம் அதற்கு பெரிய தடையாக இருந்தது. இவர்கள் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, பிரெஞ்சு புரட்சி முடிந்தபோது வேதாகமம் அச்சடிக்கப்பட்டு, உலகம் முழுவதும் சென்றது. இன்று நாம் வேதாகமத்தை சுதந்திரமாக வைத்திருக்கிறோம். இது இலவசமாக கிடைப்பதினால், இதன் மதிப்பு நமக்கு புரிவதில்லை. நம் கையில் இலவசமாகக் கிடைக்கும் இந்த வேதம் 1260 ஆண்டுகள் பாடுகள் பட்டு இருண்ட காலத்தற்குப்பின் 1798-ம் ஆண்டு உயிர்பெற்று வந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா?

*மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. (வெளிப்படுத்தல் 11:11)*

இந்த வசனம் வேதாகமத்தின் எழுச்சியைக் குறிக்கிறது. வேதாகமத்தைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. ஏனென்றால், வேதாகமம் உலகம் முழுவதும் சென்றது. மூன்று வருடங்களுக்குப்பின்பு, ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்து, அவர்கள் காலூன்றி நின்றார்கள் என்பது **வேதாகமத்தை தான் குறிக்கிறது.** உலகம் முழுக்க சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெற்ற அநேகர் எழுந்தார்கள். இதைப் பார்த்து உலகமே பயந்தது. அநேக மிஷனரிகள் உலகம் முழுவதும் பயணித்தார்கள். குறிப்பாக அமெரிக்காவில் மற்றும் இங்கிலாந்திலிருந்து பல மிஷனரிகள் உலகம் முழுவதும் சென்று பலரை சத்தியத்திற்குள் கொண்டுவந்தார்கள்.

*இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள். (வெளிப்படுத்தல் 11:12)*

இந்த வசனம் எதைக் குறிக்கிறது? தேவன் வேதாகமத்தை மிகவும் உயர்த்தினார். கி.பி. 1798-ம் ஆண்டிற்குப் பின்தான் வேதாகமத்தை அதிகமாக மக்கள் படித்தார்கள். பூட்டப்பட்ட சிறிய புத்தகம் கி.பி. 1800-ம் ஆண்டிற்குப் பின்பு திறக்கப்பட்டது என்று பார்த்தோம். அந்த சமயத்தில் மக்கள் வேதத்தை படிக்கத் துவங்கினார்கள், புரிந்துகொண்டார்கள். அறிவு பெருகியது, சத்திய வெளிச்சம் அதிகமாக கொடுக்கப்பட்டது. எப்படியென்றால், கி.பி. 1844-ம் ஆண்டில் தேவன் பரலோகத்தின் ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு போனார். மகா பரிசுத்த ஸ்தலம் திறந்துவைக்கப்படுகிறதினாலே சத்திய வெளிச்சம் மக்களுக்கு அதிகமாக கிடைத்தது.

## ஆசரிப்பு கூடார சத்தியம்

*அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின. (வெளிப்படுத்தல் 11:19)*

இங்கே பரலோக ஆலயம் திறக்கப்பட்டிருப்பதாகவும், உடன்படிக்கைப்பெட்டி அங்கிருப்பதாகவும், இடிமுழக்கங்களும் சத்தங்களும், பூமியதிர்ச்சிகளும் உண்டாகிறதாகவும் யோவான் பார்க்கிறார். உடன்படிக்கைப் பெட்டி மகாபரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறது. **கி.பி. 1844-ம் ஆண்டில் மகா பரிசுத்த ஸ்தலம் திறக்கப்பட்டதினாலே வேதாகமம் வானத்திற்கு உயர்த்தப்பட்டது.** சத்துருக்களெல்லாம் இதை பார்த்தார்கள். கற்பனையைக் குறித்த வேத அறிவு உலகம் முழுவதும் சென்றது. கி.பி. 1844-ம் ஆண்டிற்குப்பின் ஓய்வுநாளை பற்றி உலகம் புரிந்துகொண்டது. மில்லரைட் கூட்டத்தில் இருந்து வந்த ஏழாம் நாள் அட்வெந்து சபைக்குதான் ஓய்வுநாள் சத்தியத்தை தேவன் முதலில் வெளிப்படுத்தினார். இந்த சபையினர்தான் ஓய்வுநாள் சத்தியத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கிற உடன்படிக்கை பெட்டிக்குள்தான் பத்து கற்பனைகள் இருக்கிறது. இயேசு கிறிஸ்து மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு சென்றபின்பு தான் பத்து கற்பனையின் முழுமையான வெளிப்பாடு கிடைத்தது. அந்த சமயத்தில்தான் ஓய்வுநாள் மற்றும் கற்பனைகளின் வெளிச்சம் ஏழாம் நாள் அட்வெந்து சபைக்கு கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**கி.பி. 1844-ம் ஆண்டிற்குப்பின் வாழ்கிற நமக்கு தேவன் வைத்திருக்கிற பணி என்னவென்றால், வசனத்தை உள்ளதை உள்ளபடி போதிக்க வேண்டுமென்பதே.** இருண்ட காலத்தில் இருந்தது போன்ற பொய்யான உபதேசத்தை நாம் பேசாமல், வேதத்தை வானத்திலே உயர்த்திப் பிடிப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இது தான் நம்முடைய ஊழியம்.

## பிரெஞ்சு புரட்சி நமக்கு கற்றுத்தரும் பாடங்கள் என்ன?

1. **நாம் தேவனை சமுதாயத்தில் தவறாக சித்தரிக்கக் கூடாது.** ரோமன் கத்தோலிக்க திருச்சபை இயேசு கிறிஸ்து என்ற பெயரை சரியாக சொன்னது. ஆனால், இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு விரோதமாக எல்லாவற்றையும் செய்தது. இதன் காரணமாக, மக்கள் இறைவனே இல்லை என்ற நம்பிக்கைக்கு வந்த காரணத்தால் நாத்திகம் என்ற கொள்கையே உருவானது. இந்த காலக்கட்டத்தில் தான் சார்லஸ் டார்வினுடைய பரிணாம கொள்கை உருவானது. நாம் தேவனை சமுதாயத்தில் சரியாகத் தான் கூறுகிறோமா? தேவன் கூறியது போல் நம் வாழ்க்கை இருக்கிறதா? இல்லை பெயரளவில் கிறிஸ்தவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்போமேயானால், அநேகர் கிறிஸ்துவிடமிருந்து வழிவிலகுவதற்கு நாம் காரணமாகிவிடுவோம். இதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

2. **இருண்ட காலத்திலும் வேதாகமத்தைப் பாதுகாத்தார்கள்.** இருண்ட காலத்தில் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டு சாட்சிகளும் ஆண்டவருக்கு உண்மையாக தீர்க்கதரிசனம் கூறியது. இருண்ட காலத்தில் வேதாகமத்தை மக்கள் பாதுகாத்துவந்தார்கள். **ரகசியமாய் வேதத்தை பாதுகாத்து கைகளினால் எழுதி உலகமெங்கும் விநியோகித்தார்கள். சிலபேர் தங்கள் சொத்துக்களை விற்று வேதாகமத்தை வாங்கினார்கள்.** இருண்ட காலத்திலும் மக்கள் சாட்சியாக இருந்தார்கள். இன்று வேதம் நம்

கைகளில் இருக்கிறது. நாம் தேவனுக்கு சாட்சியாக இருக்கிறோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். **நம் வாழ்விலும் இருண்ட காலங்கள் வரும்போது வேதத்தைப் படிக்கிறோமா? கஷ்டத்தின் மத்தியில் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதே நம் பெலனாகும்.** கி.பி. 1844-ம் ஆண்டிற்குப்பின் தேவன் வேதத்தை வானபரியந்தம் உயர்த்தி பிடிப்பதற்கு நம்மை அழைத்திருக்கிறார். இன்று வேதத்தை நாம் விசுவாசிக்கிறோமா? வேதாகமத்தின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்கிறோமா? இந்த உடை உடுத்தாதீர்கள், இந்த உணவை சாப்பிடாதீர்கள், சபைக்கு நேரமாய் வாருங்கள் என்று கூறினால் பிடிக்காது. **நம் சுயத்தை உயர்த்தி பிடித்திருக்கிறோம். ஆனால், வேதத்தை உயர்த்திப்பிடிக்க வேண்டும்.** தேவனுடைய வார்த்தையை நம் மனதில் வைத்திருக்கிறோமா என சிந்தித்துப் பாருங்கள். சுயத்தை இன்னும் பிடித்துக்கொண்டு இருந்தோமானால் வீழ்ந்துபோவோம். இந்த உலகத்திற்கே நாம் சாட்சியாக வேதவசனங்களை உலகமெங்கும் கொண்டுசெல்லவேண்டும். வசனத்தை உள்ளபடி விளக்க வேண்டும். இதற்காகவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். பிரெஞ்சு புரட்சி என்பது முன்பாகவே வேதத்தில் தீர்க்கதரிசனமாக உள்ளது. இதிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களை நம் வாழ்க்கையில் கடைபிடித்து தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

3. **உலகத்தில் நடந்த ஒவ்வொரு முக்கிய சம்பவங்களும் வேதாகமத்தில் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது.** எனவே தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து படிப்பது நாம் விசுவாசத்தில் உறுதியடைவதற்கு உதவிசெய்கிறது.

அத்தியாயம் – 7

# மாபெரும் ஆன்மீகப் போராட்டம்



**ஆலோசனை: வெளிப்படுத்தல் 12 மற்றும் 13 அதிகாரங்களைப் படித்துவிட்டு, இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

மாபெரும் ஆன்மீகப் போராட்டம் என்றால் என்ன? வீட்டில் நடக்கிற சின்ன சின்ன சண்டைகள் தொடங்கி, உலகத்தில் நடக்கிற பெரியப் பெரிய யுத்தங்களை நாம் பார்க்கிறோம். ஆனால், **நம்முடைய கண்களால் பார்க்கக் கூடிய யுத்தங்கள், சண்டைகள், பிரச்சனைகளைக் கடந்து ஒரு மிகப்பெரிய ஆன்மீகப் போராட்டம் உலகத்தில் நடந்துகொண்டிருக்கிறது.** இதை நாம் கண்களால் பார்க்க முடியாது. இந்த யுத்தம் நம் கண்களுக்கு அப்பாற்பட்டு நடந்துகொண்டிருக்கிறது.

*அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. (வெளிப்படுத்தல் 12:1)*

(வரைபடம் - பக்கம் 193)

**இந்த யுத்தம் நன்மைக்கும், தீமைக்கும் - அதாவது கிறிஸ்துவுக்கும், சாத்தானுக்கும் இடையே நடக்கும் ஒரு யுத்தம்.** இந்த யுத்தத்தைப் பற்றிதான் *வெளிப்படுத்தல் 12*-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இங்கே ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருக்கிறாள். அவள் பாதத்திற்கு கீழாக சந்திரன் இருக்கிறது. அவளுடைய தலைக்குமேலாக 12 நட்சத்திரங்கள் உள்ள கிரீடம் இருக்கிறது. தீர்க்கதரிசனங்கள் சுயதோற்றமான பொருளை உடையவைகள் அல்ல (2 பேதுரு 1:21). ஆகவே, இங்கே சூரியன், ஸ்திரீ போன்ற வார்த்தைகளுக்கு ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது.

*புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து (எபேசியர் 5:25)*

இங்கே கணவன், மனைவி உறவு - கிறிஸ்து மற்றும் சபையோடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. **கிறிஸ்துவை மணவாளனாகவும், திருச்சபையை மணவாட்டியாகவும் பாவித்து பேசும் பல வசனங்கள் வேதத்தில் உள்ளது.** இதன்படி ஸ்திரீ என்ற பதம் திருச்சபையைக் குறிக்கிறது. அந்த ஸ்திரீ சூரியனை அணிந்திருந்ததற்கு அர்த்தம் என்ன?

*கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர் (சங்கீதம் 27:1)*

இங்கே சங்கீதக் காரனாகிய தாவீது இயேசு கிறிஸ்துவை வெளிச்சத்திற்கு ஒப்பிடுகிறார். அதைப்போல், *யோவான் 1:1-14* வசனங்களில் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதற்கு **ஒளி** என்ற வார்த்தையை யோவான் பயன்படுத்துகிறார். மேலும், இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதற்கு *மல்கியா 4:2*-ம் வசனத்தில் **நீதியின் சூரியன்** என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி சூரியன் என்கிற பதம் இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

**இந்த வசனங்களின்படி "ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள்" என்கிற வாக்கியம் நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவை உடைய ஒரு சபை என்பதே அர்த்தம்.**

**அந்த ஸ்திரியின் பாதங்களின் கீழே சந்திரன் இருந்ததற்கு என்ன அர்த்தம்?**

*அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள். (யோவான் 5:35,36)*

யோவான் எரிந்து பிரகாசிக்கிற ஒரு விளக்காய் இருக்கிறார் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

*யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு (யோவான் 5:36)*

இங்கே யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் என்னுடைய சாட்சி மேன்மையானதென்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இதன்படி யோவான் ஒரு சிறிய வெளிச்சமாக இருக்கிறார் என்றும், இயேசு கிறிஸ்துவே பெரிய வெளிச்சமென்றும் அறிந்துகொள்ளலாம். இதன்படி இயேசு கிறிஸ்து சூரியன் என்றால் அவருக்கு சாட்சிகொடுக்கிற யோவான் சந்திரன் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம்.

*வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவான் 5:39)*

இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான் மட்டுமே சாட்சி கொடுத்தாரா? வேதவாக்கியங்களும் அவரைக் குறித்து சாட்சிக் கொடுக்கிறதே! அப்படியானால், இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சிகொடுக்கின்ற அனைவரும் சிறிய வெளிச்சம் தான் என்பதை அறிந்துகொள்ளலாம்.

*தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். (ஆதியாகமம் 1:16)*

இதன்படி **சூரியன் என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும், சந்திரன் என்பது அவருக்கு சாட்சியாய் இருக்கிற வேதத்தையும் குறிக்கிறது.** எதற்காக வேதம் கீழே இருக்கிறது? ஒரு கட்டிடம் கட்டப்படும்போது அதன் அஸ்திபாரம் அதன் கீழே இருக்கும். அதைப்போல் இந்த சபை, நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவை உடையது. இதன் அஸ்திபாரம் சந்திரனாகிய வேதத்தை உடையதாகயிருக்கிறது என்பதே இதற்கு அர்த்தம்.

**உண்மையான சபை**

இதன்படி உண்மையான சபை இயேசு கிறிஸ்துவை உடையதாகவும், வேதத்தை அடிப்படையாக வைத்து உருவானதாகவும் இருக்க வேண்டும். அப்படியானால், அந்த ஸ்திரீயின் தலையில் உள்ள கிரீடத்தில் உள்ள **பன்னிரெண்டு நட்சத்திரங்கள் எதைக் குறிக்கிறது?**

*ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். (தானியேல் 12:3)*

இங்கே ஞானவான்கள் என்னும் பதம் தேவனுடைய பிள்ளைகளைக் குறிக்கிறது. அதன்படி **தேவனுடைய பிள்ளைகள் நட்சத்திரங்களுக்கு ஒப்பானவர்கள் என்பதே இவ்வசனத்தின் அர்த்தம்.**

அந்த கிரீடத்தில் மொத்தம் 12 நட்சத்திரங்கள் இருந்தது. **12 என்கிற எண் தேவ ஜனத்தைக் குறிக்கும் விசேஷமான எண்ணாகும்.** பழைய ஏற்பாட்டில் 12 கோத்திரங்கள் மற்றும் புதிய ஏற்பாட்டில் 12 அப்போஸ்தலர்கள் ஆகிய அனைத்தும் தேவ ஜனத்தையே குறிக்கிறது. மேலும், நாம் பார்க்கும் இந்த வெளிப்படுத்தல் 12-ம் அதிகாரம் தேவனுடைய உண்மையான சபையைப் பற்றி கூறுவது மற்றுமொரு சிறப்பு.

**தேவனுடைய திருச்சபை நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவை அணிந்திருக்கும். அதன் பாதப்படியில் சந்திரன் இருக்கும், அதாவது வேதத்தின் அடிப்படையில் அந்தத் திருச்சபை அமைந்திருக்கும். அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தை உடைய திருச்சபையாக இருக்கும்.**

*அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவவேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள். (வெளிப்படுத்தல் 12:2)*

அந்த பெண் ஒரு பிள்ளையைப் பெறும்படியாக இருக்கிறாள். **அந்த பெண் திருச்சபையைக் குறிக்கிறது. அந்த திருச்சபை பெற்றெடுத்த பிள்ளை எது?**

*சகல ஜாதிகளையும் இரும்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது. (வெளிப்படுத்தல் 12:5)*

இங்கே திருச்சபை பெற்றெடுக்கும் பிள்ளையின் குணங்களைப் பார்க்கிறோம். திருச்சபை பெற்றெடுக்கும் பிள்ளை ஒரு ஆண்பிள்ளை. அந்த ஆண்பிள்ளை சகலத்தையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்கிறது. தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்பிள்ளையாக இருக்கிறது. இதுவரைக்கும் தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட நபர் யார் என்றால் - அவர் இயேசு கிறிஸ்து மட்டுமே. அவர் தான் சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஒரு நபராக இருக்கிறார். இதன்படி, இங்கே **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் அந்தப் பிள்ளை** என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

இதைப் புரிந்துகொள்ள பழைய ஏற்பாட்டுகாலத்தில் என்ன சம்பவித்ததென்று பார்க்க வேண்டும். தேவன் ஒரு குறிப்பிட்ட ஜனத்தை தேர்ந்தெடுத்தார். அவர்கள் தான் இஸ்ரவேல் ஜனம். அவர்கள் ஆபிரகாமுடைய சந்ததியார். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இந்த சந்ததியில்தான் இயேசு கிறிஸ்து பிறப்பார் என்று முன்பே தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டது. இந்த சந்ததியை தேவன் பாதுகாத்தார். இவர்களுக்கு கற்பனைகளையும், நியாயங்களையும் கொடுத்து வழி நடத்தினார். இந்த இஸ்ரவேல் மக்கள்தான் பழைய ஏற்பாட்டின் தேவ ஜனம், பழைய ஏற்பாட்டின் திருச்சபை. இந்தப் பெண் பழைய ஏற்பாட்டின் திருச்சபையான இஸ்ரவேல் மக்களையும் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டின் திருச்சபையையும் குறிக்கிறது. இந்த இஸ்ரவேல் ஜனத்தில்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

*அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன்தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது. (வெளிப்படுத்தல் 12:3)*

**இந்த வலுசர்ப்பம் யாரைக் குறிக்கிறது?**

*உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். (வெளிப்படுத்தல் 12:9)*

**இந்த வலுசர்ப்பம் சாத்தானைக் குறிக்கிறது.** இந்த வலுசர்ப்பத்திற்கு ஏன் ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் இருக்கிறது? தலை என்பது ராஜ்யங்களைக் குறிக்கிறது. (தானியேல் 2:38) பத்துக் கொம்புகளும் ராஜ்யங்களையே குறிக்கிறது. (தானியேல் 7:24) இங்கே ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் உள்ள வலுசர்ப்பம், உலக ராஜ்யங்களுக்குப் பின்பாக இருந்து சாத்தான் செயல்படுகிறான் என்பதையே குறிக்கிறது.

*அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப்*

*பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது. (வெளிப்படுத்தல் 12:4)*

**வலுசர்ப்பம் தன் வாலை வைத்து வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கை இழுத்தது என்பது எதைக் குறிக்கிறது?**

*மூப்பனும் கனம்பொருந்தினவனுமே தலை, பொய்ப்போதகம்பண்ணுகிற தீர்க்கதரிசியே வால். (ஏசாயா 9:15)*

இதன்படி, **வால் என்பது பொய் போதகத்தைக் குறிக்கிறது.** பொய் போதகத்தை வைத்து சாத்தான் மூன்றில் ஒரு பங்கு தேவதூதர்களை வீழ்த்தினான் என்பதே இந்த வசனத்தின் கருத்து. *வெளிப்படுத்தல் 12*-ம் அதிகாரத்தை முழுமையாகப் படிக்கும்போது இந்தக் கருத்தை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். மேலும் *ஏசாயா 14*-ம் அதிகாரமும், *எசேக்கியேல் 28*-ம் அதிகாரமும் இந்தக் காரியத்தை இன்னும் விளக்கமாக கூறுகின்றன.

இங்கே இயேசு கிறிஸ்து பிறந்தவுடன் அவரைக் கொல்வதற்காக சாத்தான் முயற்சி செய்கிறான் என்று வசனம் கூறுகிறது. ஏரோது ராஜாவின் மூலமாக பெத்லகேமில் உள்ள 2 வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளைகள் அனைவரையும் கொலை செய்ததை சுவிசேஷப் புத்தகங்களில் பார்க்கலாம். இவ்வளவு கொடூரமான செயலுக்குப் பின்னாக சாத்தான் இருக்கிறான் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

மேலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையில் பார்க்கும்போது, அவரை எப்படியாவது வீழ்த்த வேண்டுமென்று பல வழிகளில் சாத்தான் செயல்பட்டான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை கொடுமையான முறையிலே சிலுவையில் அறைந்ததும் சாத்தானே. மனிதர்களுக்குப் பின்னிருந்து வஞ்சகமான காரியங்களை தொடர்ந்து செய்துவது சாத்தான்தான் என்பதை இதன் மூலம் புரிந்துகொள்ளலாம். இங்கே உண்மையான திருச்சபைக்கு எதிரியாக சாத்தான் இருக்கிறான். **இந்த மாபெரும் ஆன்மீகப் போராட்டம் தேவனுக்கும் சாத்தானுக்கும், தேவனுடைய பிள்ளைகளாகிய திருச்சபைக்கும், சாத்தானுடைய பிள்ளைகளுக்கும் நடந்துகொண்டே இருக்கிறது. இந்த யுத்தம் நம் கண்ணுக்குத் தெரியாமல் நடந்துகொண்டே இருக்கிறது.** நம்மை எப்படியாவது பாவத்திற்குள்ளாக வீழ்த்தவேண்டும், தேவனைவிட்டு வழிவிலகி தன் பக்கத்தில் இழுக்க வேண்டுமென்பதற்காக சாத்தான் மிகவும் தந்திரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறான்.

இந்த மாபெரும் ஆன்மீக யுத்தம் என்பது சாத்தானுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையில் ஆதாமின் காலம் முதல் நடந்துகொண்டிருக்கிறது.

*வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. (வெளிப்படுத்தல் 12:7)*

இந்த வசனத்தில் மீகாவேல் என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. **இயேசு கிறிஸ்தும் அவரைச் சேர்ந்த தூதர்களும், வலுசர்ப்பமாகிய சாத்தானுடன் யுத்தம் பண்ணினார்கள் என்று சொல்லப்படுகிறது. சாத்தானும் அவனைச் சேர்ந்த மூன்றில் ஒரு**

**பங்கு தூதர்களும் யுத்தத்தில் ஜெயம்கொள்ளவில்லை.** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜெயித்தார்.

*வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். (வெளிப்படுத்தல் 12:8,9)*

வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணாமல் போயிற்று. பரலோகத்திலிருந்து அவர்கள் தள்ளப்படுகிறார்கள். இதுதான் உலகத்தில் நடந்த முதல் யுத்தம். இந்த முதல் யுத்தத்திலே அவர்கள் தோற்றுப்போய்விட்டார்கள். அப்படி தோற்றுப்போன ஒரு நபரை கண்டு நாம் பயந்துகொண்டிருக்கிறோம். அவனுடைய சூழ்ச்சியில் வீழ்ந்துகொண்டிருக்கிறோம். உண்மையிலே நாம் அவனைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், **நாம் கிறிஸ்துவின் பக்கம் இருக்கும்போது நமக்கு நிச்சயமாக ஜெயம் உண்டு. சாத்தானை பரலோகத்திலேயே இயேசு கிறிஸ்து வீழ்த்திவிட்டார்.** இப்போது பூமியிலே அவனை வீழ்த்துவது அவருக்கு ஒரு பெரிய காரியம் கிடையாது. நாம் தேவனுடைய வல்லமையையும், பாதுகாப்பையும் பெற்றுக்கொள்ளுவது கிடையாது. நம்முடைய சுயத்தினால் செயல்படுகிறோம். கடைசியில் சாத்தானுடைய வஞ்சகத்திலே வீழ்ந்துபோகிறோம். **நாம் தேவனை மாத்திரம் சார்ந்திருக்கும்போது, நிச்சயமாக நமக்கு ஜெயம் உண்டு.**

*அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். (வெளிப்படுத்தல் 12:10)*

இந்த வசனத்திற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஒன்று - சாத்தான் பரலோகத்திலிருந்து வீழ்ந்தது. மற்றொன்று - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சாத்தானுடன் யுத்தம்பண்ணி ஜெயித்தது. முதலில் பரலோகத்திலிருந்து அவனை கீழே தள்ளினார். ஆனால், அவன் அதிகாரத்தை பூமியில் செலுத்திக்கொண்டிருந்தான். ஆனால், கிறிஸ்து அதற்கும் சிலுவையில் ஒரு முடிவுகட்டினார். பாவத்தை ஜெயித்து, சாத்தானை வென்றார். இந்த வெற்றியினிமித்தம் மனிதனுடைய இரட்சிப்பு உறுதியானது. அதுவரைக்கும் இந்த பூமி தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று சாத்தான் நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால், **இயேசு கிறிஸ்து பாவத்தை ஜெயித்ததினாலே மனிதர்கள் அனைவரும் பிசாசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையாகி, நித்திய ஜீவனைப் பெறுவதற்கான வாய்ப்பு பிறந்தது.** அதனால் மறுபடியும் சாத்தான் தாழத்தள்ளப்பட்டுபோனான். அப்பொழுது, வானத்தில் சத்தம் உண்டாகி இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய இராஜ்யமும் அவருடைய அதிகாரமும் உண்டாகிறது. அவரை சிலுவையில் அறைந்ததினால் இரட்சிப்பும் தேவ வல்லமையும், தேவனுடைய ராஜ்யமும் நமக்கு கிடைக்கிறது. மீண்டும் இயேசு கிறிஸ்துவினுடைய அதிகாரத்திற்குள்ளாக கொண்டுவரப்பட்டோம்.

## உலகத்தின் பிரதிநிதி - சாத்தான்

பூமியின் அதிகாரத்தை தேவன் ஆதாமிடம் கொடுத்தார். ஆனால், ஆதாம் அந்த அதிகாரத்தை சாத்தானிடம் இழந்துவிட்டார். **ஆதாம், ஏவாள் செய்த பாவத்தின் காரணமாக அந்த அதிகாரம் சாத்தானிடம் போனது.** இந்த பூமியினுடைய பிரதிநிதியாக சாத்தான் போகிறான். என்ன பேசுகிறான்? யோபு நல்லவனாக இருக்கிறானே என்று தேவன் சொல்லும்போது, நீர் பாதுகாப்பு கொடுத்திருக்கிறீர், ஆசீர்வதித்திருக்கிறீர் அதினால் அவன் நல்லவனாக இருக்கிறான் என்று சாத்தான் கூறுகிறான். எல்லாவற்றையும் எடுத்துப்போடுங்கள் .அப்பொழுது யோபு உமக்கு விரோதமாகப் பாவம் செய்வான் என்று சாத்தான் தேவனிடம் கூறுகிறான்.

**நம் பாவங்களைக் காட்டி, நமக்கு தண்டனையை வாங்கிகொடுக்கும் வேலையையே சாத்தான் செய்கிறான்.** ஆனால், நம்மிடம் தேவன் கடுமையாக நடந்துகொள்கிறார். அவர் அன்பே இல்லாதவர் என்று சொல்லி நம்மிடத்தில் பேசுவான். இப்படியாக அவன் தன் தந்திரமான செய்கைகளை வைத்து உலகத்தார் தேவன்மீது வைத்துள்ள அன்பையும் நம்பிக்கையையும் எடுத்துப்போட்டான். மேலும், கடவுளே இல்லை என்ற நம்பிக்கையையும் மக்களுடைய மனதில் கொண்டுவருகிறான்.

## இப்பொழுது உலகத்தின் பிரதிநிதி - இயேசு கிறிஸ்து

அப்பொழுது உலகத்தின் பிரதிநிதியாய் இருந்த சாத்தான் இரவும், பகலுமாக நம்மை குற்றம் சாட்டிக்கொண்டே இருந்தான். ஆனால், **இயேசு கிறிஸ்து சிலுவையில் பாவத்தை ஜெயித்ததினால், உலகத்தின் பிரதிநிதியாக இருந்த சாத்தானை தள்ளி, அவரே நம்முடைய பிரதிநிதியாக பரலோகத்தில் இருக்கிறார்.** இயேசு கிறிஸ்து நமக்காக பரிந்துபேசுவார். நம்மை குற்றப்படுத்தமாட்டார். நாம் குற்றங்கள் செய்தபோதும், மன்னிப்பு கேட்கும்போது: நமக்காக பிதாவுக்கு முன்பாக நின்று "அவன் தப்பு செய்தவன்தான். ஆனால் மனம் திரும்பிவிட்டான் அவனை ஒருமுறை மன்னியுங்கள். என் இரத்தத்தால் மீட்டுக்கொண்டேன். அதினிமித்தமாக மன்னியுங்கள். என்னுடைய நீதியை எடுத்துக்கொண்டு அதை அவனுக்குகொடுங்கள். அவனுடைய பாவத்தை நான் சுமக்கிறேன்" என்று நமக்காக பரிந்துப்பேசுகிறார்.

எவ்வளவு மேன்மையான ஒரு பாக்கியம். பரலோகத்தில் நடந்த யுத்தத்திலும் இயேசு கிறிஸ்து ஜெயித்தார். பூமியில் நடந்த யுத்தத்திலும் இயேசு கிறிஸ்து ஜெயிக்கிறார். அங்கு தன்னுடைய ராஜ்யத்தை ஏற்படுத்த நினைத்தான் சாத்தான். தோல்வியடைந்தான். பூமிக்கு வந்து பூமியிலையாவது ஆளுகை செய்யலாம், இங்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தலாம் என்று நினைத்தான். இங்கேயும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடத்தில் தோல்வியடைந்தான். மனிதனாகப் பிறந்து சாத்தானுடைய கட்டுக்களை உடைத்து இங்கும் நம்மை காப்பாற்றினார். இயேசு கிறிஸ்து பரலோகத்தையும் காப்பாற்றினார். தூதர்களையும் காப்பாற்றினார். மனிதர்களையும் காப்பாற்றினார்.

## கிறிஸ்து ஏன் தன்னை தூதன் என்கிறார்?

இங்கு ஏன் மீகாவேல் என்று ஒரு தூதனாக இயேசு கிறிஸ்துவை வேதம் அடையாளப்படுத்துகிறது? மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக மனிதரில் ஒருவராக செயல்பட்ட இயேசு கிறிஸ்து, **தூதர்களைக் காப்பாற்றுவதற்கு**

**தூதர்களில் ஒருவராகவும் அவர் செயல்பட்டார் என்பதற்காகவே வேதம் அவரை மிகாவேல் என்கிற தூதனாக அடையாளப்படுத்துகிறது.**

அனைவருக்கும் இரட்சிப்பையும், விடுதலையையும் தருகிற ஒரு நபராக இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவர் மனிதர்களில் ஒருவராக மட்டுமல்லாமல் தூதர்களில் ஒருவராகவும் செயல்பட்டிருக்கிறார். அதன் காரணமாகவே மீகாவேல் என்றும், தூதனானவர் என்றும் அழைக்கப்படுகிறார்.

*மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். (வெளிப்படுத்தல் 12:11)*

## தேவனுடைய பிள்ளைகள் சாத்தானை ஜெயிப்பார்கள்

தேவனுடைய பிள்ளைகள் சாத்தானை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், வசனத்தினாலும் ஜெயித்தார்கள் என்று பார்க்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் 40 நாட்கள் உபவாசம் இருக்கும்போது, சாத்தான் சோதிக்கிறான். அப்படி சோதிக்கப்படும்போது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வசனத்தை வைத்து அவனை ஜெயிக்கிறார். அதைப்போல், **தேவனுடைய பிள்ளைகளாகிய திருச்சபையாரும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினாலும், கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலும், அவருடைய வசனத்தினாலும் சாத்தானை ஜெயிக்கிறார்கள்.** மரணமே நேரிட்டாலும் நித்திய வாழ்வைப் பெற்று சாத்தானை ஜெயிக்கிறார்கள்.

*ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன். (வெளிப்படுத்தல் 12:12)*

## திருச்சபைக்கு செய்தி

இங்கே தேவன் திருச்சபைக்கு மிகப்பெரிய செய்தியைக் கொடுத்திருக்கிறார்.

1. முதலாவது **மெய்யான திருச்சபையினுடைய அடையாளத்தை** வைத்திருந்தார்.

2. இரண்டாவதாக சாத்தான் முன்பு பரலேகத்திலும், பின்பு சிலுவையிலும் தோற்கடிக்கப்பட்டான் என்றும், இனி அவன் **மனிதர்களை குற்றம் சாட்டமுடியாது** என்கிற ஒரு தூதை நமக்கு வைத்திருக்கிறார்.

3. மூன்றாவதாக சாத்தான் தோற்க்கடிக்கப்பட்டதினாலே அவனுக்கு **முடிவு சீக்கிரமாய் இருக்கிறது** என்பது அவனுக்குத் தெரியும் என்றும், அதனால் அவன் அழிந்துபோவது மாத்திரமல்லாமல், அவனோடு சோந்து அனைவரும் அழிந்துபோகவேண்டும் என்பதற்காக, மிகுந்தகோபத்துடன் நம்மிடத்தில் வருகிறான் என்றும், நம்மை எப்படியாவது வீழ்த்திவிடவேண்டும், நம்மை எப்படியாவது பாவம்செய்ய வைக்கவேண்டும், அவனோடு சேர்ந்து நாமும் அழியவேண்டும் என்பதே

அவனுடைய நோக்கமாக இருக்கிறது என்னும் முக்கிய செய்தியையும் தேவன் நமக்கு எச்சரிக்கையாகக் கொடுத்திருக்கிறார்.

## 1260 நாட்கள்

*வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது. ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 12:13,14)*

வலுசர்ப்பமாகிய சாத்தான் கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பின்பு சபையை துன்பப்படுத்தினதாகவும், சாத்தானிடத்திலிருந்து தப்பிப்பதற்காக சபை வனாந்தரத்திற்கு சென்றதாகவும் வசனங்கள் கூறுகிறது. அடுத்ததாக இந்த துன்பம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையும் வசனம் கூறுகிறது. ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் என்பது எத்தனை வருடங்களைக் குறிக்கிறது? இதைப்போன்ற ஒரு சம்பவத்தை *தானியேல் 7*-ம் அதிகாரத்தில் பார்க்கலாம். சின்னக்கொம்பின் ஆட்சிக்காலம் மூன்றரை வருடங்கள் என்று பார்க்கிறோம். காலம் என்பது வருஷத்தைக் குறிக்கிறது. *தானியேல் 4:16* ல் ஏழு காலம் என்பது ஏழு வருடங்களைக் குறிக்கிறது. அந்த கணக்கின்படி ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் எத்தனை வருடங்களைக் குறிக்கிறது என்பதைப் பார்ப்போம்:

ஒருகாலம் என்பது ஒரு வருடத்தைக் குறிக்கும்

காலங்கள் என்பது இரண்டு வருடங்களைக் குறிக்கும்

அரைக் காலம் என்பது அரை வருடத்தைக் குறிக்கும்

**இந்த கணக்கின்படி இந்த வசனம் சாத்தான், சபைக்குக் துன்பம் கொடுக்கும் 3½ வருடங்கள் நீடிக்கும் என்பது தெளிவடைகிறது.**

யூத நாட்காட்டியின்படி 1 வருடத்திற்கு 360 நாள். 3½ வருடத்திற்கு 1260 நாட்கள். ஒரு நாளுக்கு ஒரு வருடம் என்ற தீர்க்கதரிசன கணக்கின்படி (எண் 14:34) 1260 நாட்கள் என்பது 1260 வருடங்களைக் குறிக்கிறது. சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள் **கி.பி. 538 முதல் 1798 வரையுள்ள 1260 வருடங்களை இருண்ட காலமாக வரலாறு பதிவு செய்துள்ளது.** இந்தக் காலத்தில் சாத்தானுடைய நேரடி பிரதிநிதியாகிய போப்பின் தலைமையில் இயங்கும் ரோமன் கத்ததோலிக்க மார்க்கம் உலகை ஆண்டது. அந்த காலகட்டத்திலே இந்த கத்தோலிக்க மார்க்கத்தார் பல விதங்களில் தேவனுடைய சபையைக் கொடுமைப்படுத்தினார்கள். சுமார் பத்துக்கோடி உண்மைக் கிறிஸ்தவர்களை இந்த ரோமன் கத்தோலிக்கத்தார் இரக்கமின்றி கொலை செய்தார்கள்.

*ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது. (வெளிப்படுத்தல் 12:6)*

இந்த 1260 வருடங்கள் கணக்கு சரியானது என்பதற்கு இவ்வசனமே சாட்சி.

**இங்கே 1260 வருடங்களாக தேவனுடைய சபைக்கும், சாத்தானுடைய சபையான கத்தோலிக்க மார்க்கத்தாருக்கும் நடுவே ஆன்மீகப் போராட்டம் நடந்தது.** தேவனுடைய சபைக்காக இயேசு கிறிஸ்து யுத்தம் செய்தார். நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டாலும், தேவன் வனாந்தரத்திலே அவருடைய சபையை போஷித்தார். கடைசியாக இயேசு கிறிஸ்து வெற்றி பெற்றார் என்பதே வரலாறு.

### அமெரிக்காவைப் பற்றின தீர்க்கதரிசனம்

*அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டுபோகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது. பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது. (வெளிப்படுத்தல் 12:15,16)*

இங்கே **வெள்ளம் என்பது அழிவைக் குறிக்கிறது.** சாத்தான் சபையை அழிப்பதற்காக வெள்ளம் போன்ற துன்பத்தை ஊற்றுகிறான். ஆனால், சபைக்கு உதவியாக நின்று பூமி அந்த துன்பத்திலிருந்து காப்பாற்றுகிறது. அந்த பூமி யார்? *வெளிப்படுத்தல் 13*:11 உள்ள **பூமி அமெரிக்காவைக் குறிக்கிறது.** (இதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் நாம் படிப்போம்)

### உண்மையான சபையின் அடையாளங்கள்

*அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று. (வெளிப்படுத்தல் 12:17)*

வெளிப்படுத்தல் 12-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய உண்மையான சபையின் அடையாளங்கள் என்ன? **அவர்கள் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்வார்கள். இயேசு கிறிஸ்துவின் சாட்சி உடையவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கும் சாத்தானுக்குமே யுத்தம் நடைபெறும்.** இதன்படி எந்த சபை தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு இயேசு கிறிஸ்துவின் சாட்சியை உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களே தேவனுடைய உண்மையான சபை என்னப்படுவார்கள்.

### சபைக்கும், சாத்தானுக்கும் யுத்தம்

*உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். (ஆதியாகமம் 3:15)*

இந்த வசனத்திற்கு விளக்கமாக *வெளிப்படுத்தல் 12*-ம் அதிகாரத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம். இங்கே தேவன் சர்ப்பமாகிய சாத்தானைக் குறித்துப் பேசுகிறார். **உனக்கும் என்ற வார்த்தை சாத்தனைக் குறிக்கிறது. ஸ்திரீ என்ற வார்த்தை சபையைக் குறிக்கிறது. உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் என்பது சாத்தானுடைய பிள்ளைகளுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் என்று அர்த்தம். இதன் மூலம் அங்கே தேவன் இயேசு கிறஸ்துவுக்கும், சாத்தானுடைய பிள்ளைகளுக்கும் பகையை உண்டாக்கினார் என்பதை அறிந்துகொள்ளலாம்.**

முதலாவது யுத்தம் பரலோகத்தில் நடந்தது. அங்கே இயேசு கிறிஸ்துவின் தூதர்களுக்கும், சாத்தானுடைய தூதர்களுக்கும் யுத்தம் நடந்தது. அதிலே இயேசு கிறிஸ்து வெற்றி பெற்றார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் சபைக்கும், சாத்தானுக்கும் தொடர்ச்சியாக யுத்தம் நடைபெறுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேலர்களை வீழ்த்துவதற்காக சாத்தான் தொடர்ந்து போராடினான். விக்கிரக ஆராதனை, வேசித்தனம், விசுவாசமின்மை, பொருளாசை போன்ற அனைத்து பாவங்களினாலும் சபையைச் சோதித்தான். பின்பு, அவர்களை சாத்தானுடைய பிடியிலிருந்து மீட்பதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகிற்கு மனிதனாக வந்தார். இயேசு கிறஸ்துவை கொல்வதற்கு ஏரோது ராஜாவையும், அவரை வீழ்த்துவதற்கு பரிசேயரையும், சதுசேயரையும், ரோமர்களையும் பயன்படுத்தினான்.

**அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்பதற்கு என்ன அர்த்தம்?** இங்கே அவர் என்பது ஸ்திரீயினுடைய வித்தாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்ப்பமாகிய சாத்தானுடைய தலையை நசுக்குவார்,** அதாவது சர்ப்பத்தை ஜெயிப்பார் என்பதே இந்த வசனத்தின் கருத்து. எப்பொழுது இயேசு கிறிஸ்து சாத்தானை ஜெயித்தார்? சிலுவையில் ஜெயித்தார். **நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்னும் வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைக் குறிக்கிறது.** சாத்தான் சிலுவை மரணத்தின் மூலம் கிறிஸ்துவின் குதிங்காலை நசுக்கினாலும், அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து சாத்தானுடைய தலையை நசுக்கி வெற்றி பெறுவார் என்பதே இந்த வசனத்தின் முழுமையான கருத்து.

### நமக்கான நம்பிக்கை

*வெளிப்படுத்தல் 12*-ம் அதிகாரம் நமக்கு என்ன நம்பிக்கையைத் தருகிறது? எவ்வளவு உபத்திரவம் வந்தாலும் நாம் கவலைப்பட தேவையில்லை. ஏனென்றால், தேவன் நம்மோடு இருக்கிறார். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சாத்தானைப் பலமுறை ஜெயித்துவிட்டார். அவனுக்கு நிச்சயமாக அழிவும் இருக்கிறது. அதனால், **சாத்தானைக் கண்டு பயப்படதேவையில்லை.** தேவனைப் பற்றிக்கொண்டு இருந்தோமானால், **இயேசு கிறிஸ்து ஜெயிப்பவராக இருப்பதுபோல, நாமும் கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாவற்றையும் ஜெயிக்கிறவர்களாக இருப்போம் என்பதே** இந்த அதிகாரம் நமக்குக் கொடுக்கும் நம்பிக்கை.

## வெளிப்படுத்தல் 13

*வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தில் சாத்தானுடைய கூட்டத்தைப் பற்றியும், அவன் எப்படி உலக ராஜ்யங்கள் மூலமாகவும், உலகமக்கள் மூலமாகவும் செயல்படுகிறான் என்பதையும் பார்க்கலாம்.

வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரத்தை படிப்பதற்குமுன், தானியேல் 2 மற்றும் 7 ஆவது அதிகாரத்தைப்பற்றி பார்க்கலாம்

## **தானியேல் 2** (வரைபடம் - பக்கம் 194)

தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேசாருக்கு தேவன் ஒரு கனவு கொடுத்தார். அந்த கனவையும், அதன் அர்த்தத்தையும் யாராலும் சொல்ல முடியவில்லை. ஆனால், தானியேல் தேவ தயவால் அந்த கனவையும் அதன் அர்த்தத்தையும் ராஜாவிடம் விளக்கினான். அந்த **கனவில் ஒரு சிலை காண்பிக்கப்பட்டது. இந்த சிலையின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு உலோகத்தால் ஆனது. ஒவ்வொன்றும் ஒரு உலக ராஜ்யத்தை குறிக்கிறது. சிலையின் தலை பகுதி தங்கத்தால் ஆனது. இது பாபிலோன் சாம்ராஜ்யத்தை குறிக்கிறது என்று வேதாகமமே சொல்கிறது.**

*தானியேல் 2:38*
*சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப்*
*பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே.*

அதை அடுத்துள்ள பகுதிகள் எந்தெந்த ராஜ்யத்தை குறிக்கிறது என்று தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் இல்லை. ஆனால், சரித்திரத்தை படித்துப் பார்க்கும்போது, பாபிலோனுக்கு பின் மேதிய பெர்சியாவும், அதற்குபின் கிரேக்கம் மற்றும் ரோம் ராஜ்யங்கள் உலகை ஆண்டதாக பதிவுகள் உள்ளது.

### வேதாகமத்தில் இந்த ராஜ்யங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன

1. தானியேல் காலத்தில் பாபிலோன் சாம்ராஜ்யம் உலகை ஆண்டது.
2. எஸ்றா நெகேமியா காலத்தில் மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் உலகை ஆண்டது.
3. இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த காலத்தில் ரோம சாம்ராஜ்யம் உலகை ஆண்டது.

தானியேல் புத்தகத்திலே இந்த ராஜ்யங்களின் பெயர்கள் உள்ளன. தானியேல் 8-ஆம் அதிகாரத்தில் ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடா பற்றிய ஒரு தரிசனம் இருக்கிறது. இந்த இரண்டு மிருகங்களும் மேதிய பெர்சியா மற்றும் கிரேக்க ராஜ்யத்தை குறிக்கிறது என்று வசனமே சொல்கிறது.

*தானியேல் 8:20,21*
*20. நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெர்சியா தேசங்களின் ராஜாக்கள்;*
*21. ரோமமுள்ள அந்த வெள்ளாட்டுக்கடா கிரேக்கு தேசத்தின் ராஜா;*

வேதாகமம் மற்றும் சரித்திரம் இரண்டையும் இணைத்து பார்க்கும்போது, இந்த நான்கு இராஜ்ஜியங்கள் தான் உலகை ஆளும் என்பதை புரிந்துகொள்ளலாம்.

## உலோகங்கள் எதை குறிக்கிறது?

ஒவ்வொரு ராஜ்ஜியத்தை குறிப்பதற்கு ஒவ்வொரு உலோகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தங்கம் தொடங்கி வெள்ளி, வெண்கலம் மற்றும் இரும்பு. இது எதைக் குறிக்கிறது என்றால் - அடுத்தடுத்து வரும் ராஜ்ஜியங்கள் தரத்தில் குறைந்ததாயிருக்கும். அதாவது பாவம் அதிகமாக இருக்கும். தங்கத்தை விட வெள்ளி மதிப்பு குறைந்தது. அப்படியென்றால், பாபிலோனைவிட மேதிய பெர்சியா தரம் குறைந்ததாக இருக்கும், பாவம் அதிகமாகயிருக்கும். இதை வசனமே சொல்கிறது.

*தானியேல் 2:39*
*உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்.*

இந்த உலக ராஜ்ஜியங்கள் தேவனுக்கு விரோதமாக செயல்பட்டது. அவருடைய ஜனமாகிய இஸ்ரவேல் மக்களை அடிமைப்படுத்தியது. தானியேல் காலத்தில் பாபிலோனியர்களும், எஸ்றா நெகேமியா காலத்தில் மேதிய பெர்சியர்களும், புதிய ஏற்பாட்டின் காலத்தில் ரோமர்களும், இஸ்ரவேல் மக்களை அடிமைப்படுத்தினார்கள். இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது - இந்த ரோமர்கள்தான். உண்மையிலே சாத்தான்தான் இந்த உலக ராஜ்யங்களுக்குபின் இருந்து இந்த நாசவேலைகளை செய்துகொண்டிருந்தான். சிலையின் கடைசி பகுதியான பாதம் இரும்பும் களிமண்ணும் சேர்ந்து இருக்கிறது. இது எந்த ராஜ்ஜியத்தை குறிக்கிறது? இரும்பு ரோம ராஜ்யத்தை குறிக்கிறது என்று ஏற்கனவே படித்தோம். **களிமண் என்பது தேவனுடைய ஜனத்தை, திருச்சபையை குறிக்கிறது.**

*ஏசாயா 64:8*
*இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.*

ஆனால், தானியேல் 2-ல் உள்ள களிமண் என்பது அசுத்தமான களிமண்ணை குறிக்கிறது. ஆங்கில வேதாகமத்தில் படித்தால், இது “Miry Clay” என்றுள்ளது.(Daniel 2:41 - thou sawest the iron mixed with miry clay). எனவே, **இந்த அசுத்தமான களிமண் பொய்யான திருச்சபையை குறிக்கிறது.**

பாதம் இரும்பும் களிமண்ணும் சேர்ந்து உள்ளது. இதன் அர்த்தம் அந்த ராஜ்ஜியம் ரோமும் பொய்யான திருச்சபையும் சேர்ந்து இருக்கும். இதுவே உலகத்தை ஆளும் கடைசி ராஜ்ஜியம். இதைப்பற்றி விரிவாக பின்பு படிக்கலாம். கடைசியாக கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் அந்த சிலையை தகர்த்து நிலையாய் நின்றது. **அந்த கல் கிறிஸ்துவே.** பிசாசின் இந்த எல்லா உலக ராஜ்ஜியங்களையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய இரண்டாம் வருகையின்போது தகர்த்து போடுவார். அவருடைய அழியாத ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார்.

## இந்த தீர்க்கதரிசனம் நமக்கு கொடுக்கும் நம்பிக்கை என்ன?

இப்போது எந்த ராஜ்யம் உலகை ஆண்டாலும், யார் நம்மை ஒடுக்கினாலும் நாம் நம்பிக்கையற்று போகவேண்டியதில்லை. தேவன் சதா காலங்களையும் அறிந்திருக்கிறார். இந்த சாத்தானின் எல்லா உலக ராஜ்ஜியங்கள் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து தகர்க்கப்போகிறார். நமக்கு நித்திய இராஜ்ஜியத்தை தரப்போகிறார்.



## தானியேல் 7

**தீர்க்கதரிசனம் படிக்க பின்பற்ற வேண்டிய 2 முக்கிய விதிகள்:**

*1. வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது. - 2 பேதுரு 1:20*

*2. கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள். - ஏசாயா 34:16*

**முதல் விதி:** தீர்க்கதரிசனம் **சுயதோற்றமான பொருளையுடையதாயிராது.** இதன்படி தானியேல் 7:3ல் உள்ள மிருகம், மிருகத்தை குறிக்கவில்லை. அப்படியென்றால், மிருகம் என்பது எதை குறிக்கிறது?

**இரண்டாவது விதி: கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்.** மிருகம் எதை குறிக்கிறது என்று வேதத்தில் தேடினால், அதே தானியேல் 7ஆம் அதிகாரத்தில் 17வது வசனத்தில் பதில் உள்ளது. அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள். - தானியேல் 7:17 மிருகம் என்பது தீர்க்கதரிசனத்தில் ஒரு ராஜாவை அல்லது ராஜ்யத்தை குறிக்கிறது என்பதை வேதாகமமே நமக்கு தெளிவாக சொல்கிறது. வேதாகமம் சொல்கிற இந்த விதிகளை பின்பற்றாமல் போனதால்தான், இன்று அநேகர் தீர்க்கதரிசனங்களை தவறாக போதிக்கின்றனர்.

தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் நான்கு ராஜ்யங்களை பற்றி நேபுகாத்நேச்சாருக்கு ஒரு சொப்பனம் கொடுத்ததுபோல, தானியேல் 7ஆம் அதிகாரத்தில் தானியேலுக்கு ஒரு சொப்பனத்தை தேவன் கொடுக்கிறார். இதுவும் நான்கு உலக ராஜ்யங்களைப் பற்றிய சொப்பனம் தான்.

**தானியேல் கண்ட தரிசனம்**
சமுத்திரத்திலிருந்து நான்கு மிருகங்கள் எழும்பின. அது எழும்பப்போகிற நான்கு ராஜ்யங்களைக் குறிக்கிறது என்று வசனம் (தானி 7:17) சொல்கிறது. இந்த நான்கு ராஜ்யங்களும் தானியேல் இரண்டாம் அதிகாரத்திலுள்ள நான்கு ராஜ்யங்களும் ஒன்றுதான்.

**ஏன் இந்த நான்கு ராஜ்யங்களைப்பற்றி தேவன் மறுபடி மறுபடியும் சொல்கிறார்?**

ஏனென்றால், அது முக்கியமானதாக இருப்பதால். அதுமட்டுமல்ல மறுபடியும் சொல்லும்போது கூடுதல் தகவல்களை நமக்கு வெளிப்படுத்துவார்.

**தானியேல் கண்ட கனவு** (வரைபடம் - பக்கம் 194)

*தானியேல் சொன்னது: இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: இதோ, வானத்தின் நாலு*

*காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது. அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய*
*மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின. (தானியேல் 7:2,3)*

**சமுத்திரம்** என்பது **ஜனங்களை** குறிக்கிறது. (ஏசா 17:12,13, வெளி 17:15)
**காற்று** என்பது **யுத்தங்களை** குறிக்கிறது. (எரே 25:32, 49:36)
**மிருகம்** என்பது **ராஜ்யத்தை** குறிக்கிறது. (தானி 7:17)

"வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது" என்றால் ஜனங்களுக்குள், நாடுகளுக்கு இடையே யுத்தங்கள் நடந்தது. அதன்விளைவாக, நாலு பெரிய மிருகங்கள் - அதாவது நாலு பெரிய ராஜ்யங்கள் எழும்பியது என்று அர்த்தம்.

**அந்த நாலு பெரிய மிருகங்கள் யார்? யார்??**

**1. முதலாம் மிருகம் : சிங்கம்**

*முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது; அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது; நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது; அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது. (தானியேல் 7:4)*

**சிங்கம் என்பது பாபிலோனை குறிக்கிறது.** (எரே 50:17,4:7)
கழுகின் செட்டைகள் என்பது வேகத்தை குறிக்கிறது. (ஆபகூக் 1:6,8, புலம்பல் 4:19) "சிங்கத்திற்கு கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது" என்றால் பாபிலோன் ராஜ்யம் வேகமாக மற்ற நாடுகளை போரிட்டு கைப்பற்றியது என்று அர்த்தம். நேபுகாத்நேச்சார் தனது 25 வயதுக்கு முன்பாகவே உலகின் பெரும்பகுதிகளைக் கைப்பற்றிவிட்டான்.

"இறகுகள் பிடுங்கப்பட்டது" என்பது அந்த ராஜ்யம் பலவீனம் அடைந்ததை குறிக்கிறது. (தானியேல் 4:31,32). "மனுஷ இருதயம்"- பாபிலோன் பெலன்குன்றிப்போய், பாவம்செய்துகடைசியில் மற்றொரு ராஜ்யத்திடம் வீழ்ச்சியடைந்ததைக் குறிக்கிறது.

**2. இரண்டாம் மிருகம் : கரடி**

*பின்பு, கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்துநின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது; எழும்பி வெகு மாம்சம்தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது. (தானியேல் 7:5)*

**கரடி மேதியா பெர்சியா ராஜ்யத்தை குறிக்கிறது.** மேதியா பெர்சியா என்ற இரு அரசுகள் இணைந்து ஆட்சி புரிந்தாலும், மேதியாவைக்காட்டிலும் பெர்சியா சற்று வல்லமை மிகுந்து காணப்பட்டது. கரடியின் ஒரு பக்கமாய் சாய்ந்து நிற்கும் நிலை இதைக் குறிக்கிறது. கரடியின் வாயிலிருக்கிற **மூன்று விலா எலும்புகள் எதை குறிக்கிறது**

**என்றால், மேதியா பெர்சியா ராஜ்யம் - லிதியா, பாபிலோன், எகிப்து** என்ற மூன்று ராஜ்யங்களை வீழ்த்தினான், தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்தது. "எழும்பி வெகு மாம்சம்தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது." என்பதின் அர்த்தம் - மேதியா பெர்சியா ராஜ்யம் இன்னும் அநேக நாடுகளை போர்செய்து கைப்பற்றும் என்பதே.

### 3. மூன்றாம் மிருகம் : சிவிங்கி அல்லது சிறுத்தை

*அதின்பின்பு, சிவிங்கியைப்போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; அதின் முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது. (தானியேல் 7:6)*

**சிவிங்கி கிரேக்க ராஜ்யத்தை குறிக்கிறது.** மிருகங்களில் விரைந்து ஓடக்கூடிய மிருகம் - சிவிங்கி அல்லது சிறுத்தை. **மகா அலெக்சாண்டர் சிவிங்கியைப்போல் அதிவேகமாய் செயல்பட்டு, ஏறக்குறைய முழு உலகையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தான்.** நாலு செட்டைகள் அவன் மிக வேகமாக கைப்பற்றினான் என்பதை குறிக்கிறது. அவனுடைய மரணத்திற்குபின், கிரேக்க தேசம் நாலாகப் பிரித்து, அவனுடைய நான்கு தளபதிகளுக்கு கொடுக்கப்பட்டது. இதுவே,"அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது." என்பதாகும்.

### 4. நான்காம் மிருகம் : கெடியும் பயங்கரமும் மகா பலத்த மிருகம்

*அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இரும்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது;அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது. (தானியேல் 7:7)*

**இந்த மிருகம் ரோம ராஜ்யத்தை குறிக்கிறது.** இந்த மிருகத்திற்கு "பெரிய இரும்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது" என்பது ரோம அரசின் ஆளுகை முறையை சுட்டிக்காட்டுகிறது. தனக்கு எதிர்த்து நின்ற எவரையும் இந்த அரசு அழித்தது, அடிமையாக்கியது. ரோமாபுரியில் மூன்றுக்கு இரண்டு பேர் அடிமைகளாக இருந்தார்கள். இவர்களெல்லாரும் எதிரி நாடுகளிலிருந்து சிறைகைதிகளாகக் கொண்டுவரப்பட்டார்கள்.

நமது இரட்சகர் இயேசுவின் நாட்களில் ஆட்சி செய்து, அவரை மிகவும் கொடூரமான சிலுவை மரணத்திற்கு உட்படுத்திய அரசும் இந்த ரோமபேரரசுதான். (யோ 11:48, 19:23). இங்கு தானியேல் 7ஆம் அதிகாரத்தில் நாலாவது மிருகத்திற்கு "பெரிய இரும்புப்பற்கள்"(தானி 7:7) இருக்கிறது. அதைப்போல, தானியேல் 2 ஆம் அதிகாரத்திலும் நாலாவது ராஜ்யத்தை குறிக்க இரும்பு கால்கள் "நாலாவது ராஜ்யம் இரும்பைப்போல உரமாயிருக்கும்" (தானி 2:40) என்றுள்ளது.

இதிலிருந்து மிக தெளிவாக நாம் புரிந்துகொள்ளும் காரியம் என்னவென்றால், தானியேல் 2 வது மற்றும் 7வது அதிகாரங்கள் ஒரே காரியத்தைதான் பேசுகிறது.

**தானியேல் 2வது அதிகாரத்தை படிக்கும்போது, உலகத்தில் என்னென்ன ராஜ்யங்கள் எழும்பியது என்று பார்த்தோம். ஆனால், தானியேல் 7வது அதிகாரத்தை நாம் படிக்கும்போது, அந்த ராஜ்யங்கள் எப்படி மற்ற நாடுகளை கைப்பற்றின? எப்படி ஆளுகை புரிந்தது? எப்படி வீழ்ந்தது?? என்று அதைப்பற்றி இன்னும் அதிகமான சத்தியங்களை நம்மால் தெரிந்துகொள்ள முடிந்தது.**

*"கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது" (ஏசாயா 34:16)* என்று ஆண்டவர் உரைத்த வார்த்தை எவ்வளவு உண்மையான வார்த்தை!!! அவரை உண்மையாக தேடுகிற பிள்ளைகளுக்கு, அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். ஆண்டவர் சொல்கிறார், *"தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்" (லூக்கா 11:9).* நீங்கள் அப்படி வேதத்தை ஆண்டவர் சொன்னதுபோல தேடி வாசித்தது உண்டா?? இல்லையென்றால், இன்றே தேடுங்கள். அப்பொழுது நிச்சயமாக அவரை கண்டடைவீர்கள்.

**ரோம ராஜ்யத்திற்கு பிறகு என்ன நடந்தது? உலகில் அடுத்து என்ன அரசு வந்தது? நாம் இப்பொழுது என்ன ராஜ்யத்தில் இருக்கிறோம்?? அதைப்பற்றி வேதம் எதாவது சொல்கிறதா?? ஆம், வேதம் மிக தெளிவாக அதைப்பற்றி நமக்கு சொல்கிறது.** அதைப்பற்றி நாம் தொடர்ந்து படிப்போம்.

*அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இரும்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது;*
*அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது. (தானியேல் 7:7)*

இந்த நாலாவது மிருகம் ரோம் என்று கடந்த பகுதியில் பார்த்தோம். அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது. (தானியேல் 7:7) என்றுள்ளது.

### கொம்புகள் என்றால் எதை குறிக்கிறது?

*வேதாகமமே அதற்கு பதில் சொல்கிறது. அந்தப்* ***பத்துக்கொம்புகள்*** *என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும்* ***பத்து ராஜாக்களாம்;*** *(தானியேல் 7:24)*

தீர்க்கதரிசனத்தின்படி கொம்புகள் என்றால் ராஜாக்களை குறிக்கிறது. அப்படியென்றால், ரோம ராஜ்யத்திற்கு பின் பத்து ராஜ்யங்கள் அதிலிருந்து தோன்றும் என்பது தீர்க்கதரிசனம். தீர்க்கதரிசனம் நிறைவேறியதா? ஆம், நிறைவேறியது.

**ரோமை சுற்றியுள்ள ஜனத்தின் அநேக படையெடுப்புகளால், ரோம ராஜ்யம் வலுவிழந்து, கிபி 476 ல் கடைசி ரோமப்பேரரசர் ரோமுலஸ் அகஸ்ட்டுலஸ் தனது அரசுபதவியைத் துறந்தார்.** பின்பு, மேற்கு **ரோம் பத்து ராஜ்யங்களாக பிரிந்தது.** ஆண்டவர் முன்னுரைத்தபடியே நடந்தது. அதற்குபின் என்ன நடந்தது? அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; (தானியேல் 7:8) இந்த பத்து ராஜ்யங்களுக்கு இடையே வேறொரு சின்ன ராஜ்யம் எழும்பும் என்று வேதாகமம் சொல்கிறது.

## யார் இந்த சின்ன கொம்பு?

### 1. அவன் (சின்ன கொம்பு) முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப்போடுவான் (தானியேல் 7:24)

ரோம் பத்தாக பிரிந்தபின், அதில் மூன்றை வீழ்த்தி, எழுந்த ராஜ்யம்- **ரோமன் கத்தோலிக்கம்தான்.** இது முந்தின ராஜ்யங்களைவிட வேறுபட்டதாக இருக்கும் என்று வசனம் சொல்கிறது. எப்படியென்றால், இதற்கு முந்தின ராஜ்யங்களை அந்த நாட்டின் அரசர்கள் ஆண்டார்கள். ஆனால், ரோமன் கத்தோலிக் திருச்சபையின் தலைவராகிய போப் ஆளுகை செய்தார். அரசர்கள் போப்புவின் கைகூலிகளாக இருந்தனர். இதைத்தான், தானியேல் 2ஆம் அதிகாரத்தில் உள்ள சிலையின் பாதங்கள் குறிக்கிறது. அந்த சிலையின் பாதங்கள் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாக இருந்தது. அதாவது, **அரசாங்கமும், திருச்சபையும் சேர்ந்ததாக ஆளுகையிருக்கும்.** இதற்கு முன்பதாக உலகில் இப்படி இருந்ததில்லை. அதனால்தான் வேதம் “அவன் (சின்ன கொம்பு) முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்தான்”(தானியேல் 7:24) என்று சொல்கிறது.

### 2. அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது. (தானியேல் 7:8)

என்ன பெருமை பேசியது? யாருக்கு விரோதமாக பேசியது? ”உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி” (தானியேல் 7:24)

**போப்புமார்க்கம் கூறும் சில தூஷணமான காரியங்கள்:**

1. போப் -

- ❖ பரிசுத்த பிதா (Pope means ‘Holy Father’)
- ❖ பூமியின்மேல் மற்றொரு கடவுள்
- ❖ கிறிஸ்துவுக்குப் பதிலாளி (Vicarious Filii Dei)
- ❖ ஆசாரியனும் - அரசனும் அவரே

❖ தவறாமையுடையவர்
2. போப் பாவங்களை மன்னிக்க முடியும்.
3. ஒருவனை பரலோகத்துக்கு அல்லது நரகத்துக்கு அனுப்ப போப்புக்கு அதிகாரம் உண்டு. சின்ன கொம்பு (போப்பாதிக்கம்) இன்றும் தேவனுக்கு விரோதமாக பேசிக்கொண்டுதான் இருக்கிறது.

## 3.பரிசுத்தவான்களை ஒடுக்குவான் (தானியேல் 7:25)

ரோமன் கத்தோலிக்க திருச்சபை ரோமிலிருந்து வந்ததால், அஞ்ஞான கலாச்சாரமும், ஆண்டவர் வெறுக்கிற அருவருப்புகளும் சபையில் இருந்தது.

வேதத்தை படித்த உண்மை கிறிஸ்தவர்கள் இந்த காரியங்களுக்கு எதிர்த்து நின்றார்கள். இந்த உண்மை கிறிஸ்தவர்களை "மதப்புரட்டர்கள்" என்று சொல்லி, தன்னுடைய அரசியல் பலத்தின் மூலமாக தண்டித்தது. வேதத்தை யாரும் படித்துவிடக்கூடாது என்பதில் கவனமாயிருந்தார்கள். வேதாகமத்தின் வெளிச்சம் யாருக்கும் கிடைக்காமல் இருந்தது. அதனால்தான், போப்பின் ஆட்சி காலத்தை "இருண்ட காலம்" என்று அழைக்கப்படுகிறது. போப்புமார்க்கத்தால் 5 முதல் 10 கோடி உண்மைக்கிறிஸ்தவர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

அதை அந்த சபை மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளவும் செய்கிறது. "மனுக்குலத்திற்கிடையே இருந்திருக்கிற வேறே எந்த ஒரு நிறுவனத்தைக் காட்டிலும் ரோமாபுரியின் திருச்சபைத்தான் குற்றமற்ற இரத்தத்தை அதிகமாக சிந்தியிருக்கிறது" - Rise and Influence of the spirit of Rationalism in Europe, Page 32

## 4. காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான் (தானியேல் 7:25)

"தேவனுடைய பிரமாணங்களைக்கூட மாற்றுவதற்கு போப்புவுக்கு மிகுந்த அதிகாரமும் வல்லமையும் உண்டு" (Lucos Maris, Prompta Bibliotheca vi,29) என்று ரோமன் கத்தோலிக்கசபை கூறுகிறது.

## போப்புமார்க்கம்

1. ஒரு நாளின் துவக்கத்தை சூரிய அஸ்தமனத்திலிருந்து நள்ளிரவு 12 மணிக்கு மாற்றியது.
2. கிபி 431ல் எபேசு ஆலோசனைச் சங்கத்தின் தீர்மானப்படி, மரியாள் வணக்கத்தை அமுல்படுத்தியது.
3. கிபி 354ல் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடும் வழக்கம் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. "கிறிஸ்துமஸ்" என்ற பெயர் கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்பு அற்றதாகும். அது ஒரு பாபிலோனியப் பண்டிகை. ரோம கலாச்சாரத்தின், எகிப்திய கலாச்சாரத்தின் பண்டிகைகளான சாட்டர்னாலியா, ப்ருமாலியா மற்றும் சிகில்லாரியா ஆகியவற்றின் கலப்பட இறக்குமதி ஆகும்.

4. கிபி 1582ல் போப் 13ஆம் கிரிகோரி புதிய காலண்டரை அறிமுகப்படுத்தி ஜனவரி முதல் தேதியை புதுவருடப் பிறப்பாக்கினார். அதுவரைக்கும் ஏப்ரல் முதல் தேதியே புதுவருடப் பிறப்பாக இருந்தது.
**5. ஈஸ்டர் - இதுவும் ஒரு பாபிலோனியப் பண்டிகை** ஆகும். கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே, இப்பண்டிகை அஞ்ஞான மக்களிடையே புழக்கத்திற்குள் இருந்தது.

*6.* **இரண்டாம் பிரமாணத்தை வேதத்திலிருந்து நீக்கி, பத்தாம் பிரமாணத்தை இரண்டாகப் பிரித்தது.** சூசையப்பர், அருளப்பர், சின்னப்பர், ராயப்பர், அந்தோணியார், சவேரியார் மற்றும் அநேகரைப் பரிசுத்தவான்களாக்கி வணங்குவதற்கேதுவாக இந்தப் பிரமாணமாற்றத்தை போப்புமார்க்கம் மேற்கொண்டது.

**ஓய்வுநாள் மாற்றம்:**

மார்ச் 7, கிபி 321ல் ஓய்வுநாளை சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியது.

**ஓய்வுநாளை மாற்றினதற்கான கத்தோலிக்க ஆதாரம்:**

1957ல் அச்சிடப்பட்ட பீட்டர் கேயர்மேன் என்பவருடைய “The Convert’s Catechism of Catholic Doctrine” என்ற கத்தோலிக்க உபதேசநூலிலிருந்து கீழ்க்காணும் கேள்வி பதில்கள் கத்தோலிக்க மதத்தில் மாறுபவர்களுக்குக் கற்றுத்தரப்படும்.

கேள்வி: ஓய்வுநாள் எது?

பதில் : சனிக்கிழமையே ஓய்வுநாள் ஆகும்.

கேள்வி: சனிக்கிழமைக்கு பதிலாக ஞாயிற்றுகிழமையை ஏன் ஆசரிக்கிறோம்?

பதில் : கத்தோலிக்க திருச்சபை சனிக்கிழமையின் பரிசுத்தத்தை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியிருக்கிறபடியால் சனிக்கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறோம். ஏனெனில், **கத்தோலிக்கத் திருச்சபை கிபி 336ல் லவோதிக்கேயா ஆலோசனைச் சங்கத்தில் ஓய்வுநாளின் பரிசுத்தத்தை சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியது.**

கிறிஸ்துமஸ், சாம்பல் புதன், பெரிய வெள்ளி, ஈஸ்டர் மற்றும் இன்று காணப்படுகின்ற ஏராளமான கிறிஸ்தவப் பண்டிகைகளெல்லாம் கத்தோலிக்கத்தின் கண்டுபிடிப்புகளே ஆகும்.

## 5. சின்ன கொம்பின் ஆட்சி காலம் - ஒரு காலமும், காலங்களும், அரைக்காலம்.

*அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன்கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் (தானியேல் 7:25).*
*அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது; இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும். (தானியேல் 4:16)*
மேற்கண்ட வசனத்தில் நேபுகாத்நேச்சார் மிருகத்தைப்போல் 7 வருடம் இருப்பான் என்பதை 7 காலங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, காலம் என்பது வருடத்தை குறிக்கிறது. ஒரு காலம் என்பது 1 வருடம். காலங்கள் என்பது 2 வருடம். அரைக்காலம் என்பது அரை வருடம். ஆகமொத்தம் மூன்றரை வருடம்.

யூத நாட்காட்டியின்படி ஒரு வருடத்திற்கு 360 நாட்கள். மூன்றரை வருடத்திற்கு நாள் கணக்கின்படி 1260 நாட்கள். *எசேக்கியேல் 4:6, எண்ணாகமம் 14:34* படி ஒரு நாள் ஒரு வருடத்துக்குச் சமம் ஆகும். அப்படியென்றால் சின்ன கொம்பாகிய போப்பின் ஆட்சிகாலம் 1260 வருடங்கள்.

இந்த கால தீர்க்கதரிசனம் நிறைவேறியதா? ஆம். நிச்சயமாக நிறைவேறியது. போப்புமார்க்கம் **கிபி 538 முதல் கிபி 1798 வரை 1260 ஆண்டுகள் கொடூரமான முறையில் மிக நீண்ட காலம் ஆட்சிபுரிந்து தேவனுக்கும், அவரது மெய்யான சபைக்கும், மெய்விசுவாச மக்களுக்கும் விரோதமாக செயல்பட்டது.** வேறு எந்த மதத்திற்கோ, ராஜ்யத்திற்கோ இந்த காலம் பொருந்தாது. காலமும், காலங்களும், அரைக்காலமும் விசேஷ வல்லமையுடன் கொடூரமாக ஆளுகை செய்த சின்ன கொம்பு போப்பு மார்க்கமே ஆகும். சாத்தான் மக்களை தேவனிடமிருந்து பிரிப்பதற்காக யுகங்கள் நெடுகிலும் பலவிதமான தந்திரங்களை பயன்படுத்திவருகிறான்.

இதுவரை திருச்சபைக்கு வெளியிருந்து ஏமாற்றிக்கொண்டிருந்தவன், இப்பொழுது திருச்சபைக்கு உள்ளே இருந்து கள்ள உபதேசங்கள் மூலமாக மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறான். இன்று, ஆண்டவருடைய பிள்ளைகள அநேகர், இப்படிப்பட்ட கள்ள உபதேசங்களால் ஏமாற்றப்பட்டுள்ளனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதைக்குறித்து முன்பே நம்மை எச்சரித்திருக்கிறார்.

*“கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.” (மத்தேயு 24:24)*

இதற்கு முன்னால் இருந்த ராஜ்யங்களை விட (பாபிலோன், மேதியா-பெர்சியா, கிரேக்கம், ரோம்) இது அதிக வருடங்கள் இந்த பூமியிலே ஆட்சி செய்தது. அதுமட்டுமல்லாமல், “பரிசுத்தவான்களை ஒடுக்கினது. உன்னதமானவருக்கு விரோதமான வார்த்தைகளை பேசினது” என்று வேதாகமம் சொல்கிறது. இந்த ராஜ்யம் பிசாசினால் அதிகமாக பயன்படுத்தப்பட்டது. பிசாசு இதன் மூலமாக அதிகமான துன்பத்தை ஆண்டவருடைய ஜனத்துக்கு, பரிசுத்தவான்களுக்கு கொடுத்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். இது மிகவும் முக்கியமான ஒரு ராஜ்யமாக இருந்ததினால் தான் ஆண்டவர் முன்பே இதனுடைய ஆட்சிகாலத்தை நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறார். இங்கே மட்டும் கிடையாது. ஏழு இடங்களில் இதனுடைய ஆட்சி காலத்தை ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறார். **தானியேல் புத்தகத்தில் 2 இடங்களிலும், வெளிப்படுத்தல் புத்தகத்தில் 5 இடங்களிலும் உள்ளது.**

**சின்ன கொம்புவின் ஆட்சிகாலத்தைப்பற்றின வசனங்கள்:**

***தானியேல் 7:25***
*உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய*
*பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.*

***தானியேல் 12:7***
*அப்பொழுது சணல்வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலதுகரத்தையும் தம்முடைய இடதுகரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் என்றும்; பரிசுத்த ஜனங்களின் வல்லமையைச் சிதறடித்தல் முடிவுபெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்றும் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர்பேரில் ஆணையிடக் கேட்டேன்.*

***வெளிப்படுத்தல் 11:2,3***
*2. ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை*
*அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும்(நாள்கணக்கு 42*30 = 1260 நாட்கள்)மிதிப்பார்கள்.*
*3. என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்*

***வெளிப்படுத்தல் 12:6,14***
*6. ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால்*
*ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.*
*14. ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும்,*
*அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப்*
*பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது.*

***வெளிப்படுத்தல் 13:5***
*பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டுமாதம்*
*(நாள்கணக்கு 42*30 = 1260நாட்கள்) யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.*

# உபத்திரவத்தில் உண்மையாயிருந்த உண்மை கிறிஸ்தவர்கள்

ரோமர்கள்தான் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள். இயேசுவின் சீஷர்களை உபத்திரவப்படுத்தியதும் இவர்கள்தான். இதை வேதாகமத்தில் சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலர்கள் புஸ்தகத்தில் நாம் பார்க்கலாம். ஆனால், சில காலத்திற்குப்பின் ஒரு ரோம அரசர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறார். அவர் பெயர் காண்ஸ்டன்டைன். இதனுடைய விளைவாக உருவானதுதான் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை. என்ன தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறோம், கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று இவர்கள் சொன்னாலும் ரோமினுடைய அஞ்ஞான பழக்கவழக்கங்கள் பல இந்தத் திருச்சபையில் இருந்தது. இப்படி எல்லாம் நடக்கும் என்று இயேசு கிறிஸ்து முன்பே மத்தேயு 24-ம் அதிகாரத்தில் நமக்கு எச்சரித்திருக்கிறார்.

## ரோமன் கத்தோலிக்கத்தின் தவறான உபதேசங்கள்

1.சிலைகளை வணங்குதல்
2.பாதிரியார்கள் பாவத்தை மன்னிக்குதல்
3.பாவத்தை மன்னிப்பதற்காக பணம் வாங்குதல்
4.போப்பை பரிசுத்த பிதா என்றும், கிறிஸ்துவின் பதிலாளி என்றும் அழைத்தல்
5.மக்களிடம் அதிக பணத்தை வரியாக வசூலித்தல்

*அநேகர் வந்து என் நாமத்தை தரித்துக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள் (மத்தேயு 24:5)*

சத்தியத்தை தெரியாத அரசர்களும், நாட்டு மக்களும் ரோமக் கத்தோலிக்கத்தின் உபதேசத்தை கடவுளுடைய வார்த்தையாக நம்பினார்கள். போப் என்ன சொன்னாலும் நம்பினார்கள். அதற்குக் கீழ்படிந்தார்கள். **மக்களுடைய அறியாமையைப் பயன்படுத்தி அவர்களை ஏமாற்றியது இந்த ரோமன் கத்தோலிக்கம். பாவம் மன்னிக்கப்படவேண்டுமென்றால், பணம் கொடுங்கள், உங்கள் சொத்துக்களை விற்றுக்கொடுங்கள், அப்பொழுது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்.** மக்களிடம் அதிக பணத்தை ஆலயத்தின் வரி என்ற பேரில் வசூலித்து மக்களை ஏமாற்றினார்கள். ஏன் அரசர்களிடமிருந்தே அதிக வரி வசூலித்தார்கள். **இதனுடைய விளைவு தேசங்களுடைய பொருளாதார நிலைமை மிகவும் மோசமானது.** உழைத்துக்கொண்டிருக்கும் வர்க்கத்திடமிருந்து அதிக பணம் வரியாக வசூலிக்கப்பட்டதினால், அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஏன் அரசர்களே தங்களுடைய கஜானாவிலிருந்து அதிக பணத்தை இவர்களிடம் கொடுத்ததினால், அவர்களுக்கும் இது ஒரு பெரிய நெருக்கடியாக இருந்தது. அது மட்டும் கிடையாது, போப் என்பவர் கிறிஸ்துவின் பதிலாளி, அவர் பரிசுத்தர், அவரால் பாவங்களை மன்னிக்க முடியும், அதனால் அவருக்குப் பயந்து கட்டுப்பட்டு இருங்கள் என்று பல பொய்யான உபதேசங்களை சொல்லி மக்களை ஏமாற்றியது.

**இதனுடைய விளைவு கிறிஸ்துவினுடைய அன்பை மக்கள் தெரியாமலேயே போனார்கள். ஆண்டவர் தண்டிக்கிறார், அடக்குகிறார் என்ற தவறான எண்ணங்கள் மக்கள் மத்தியில் உருவாக ஆரம்பித்தது.** சத்தியத்தின் வெளிச்சம் இல்லாமல் மக்கள் இருளிலே இருந்தார்கள். ஆனால் ஆண்டவர் அப்படியே இருளில் இருக்கும்படியாக தம்முடைய மக்களை விட்டுவிடவில்லை. சத்தியத்தின் வெளிச்சத்தை உலகத்திற்கு தருவதற்காக சீர்திருத்தவாதிகளை பல தேசங்களில் எழுப்பினார் ஆண்டவர்.

## ஜான் விக்ளி.்.ப்

**"சீர்திருத்தத்தின் விடிவெள்ளி"** என்று ஜான் விக்ளி.்.ப்பை சொல்லுவார்கள். இங்கிலாந்தில் 14-ம் நூற்றாண்டில் பிறந்தவர் இவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்தவர். பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது வேதத்தைப்படிக்கிற ஒரு வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. வேதத்தை படித்தார். சத்தியத்தை தெரிந்து கொண்டார். தெரிந்த சத்தியத்தை போதிக்க ஆரம்பித்தார். இவருடைய பேச்சைக் கேட்ட மாணவர்கள் இவருக்கு **"காஸ்பல் டாக்டர்"** என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள். அநேக மக்கள் இவருடைய பேச்சை ஆவலாகக் கேட்டனர். ஏன் அரசர்களும் அதிலே அடங்கும். வேதத்தின் வெளிச்சம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், **இலத்தீன் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு வேதாகமத்தை மொழிபெயர்த்தார்.**

**இதன் விளைவு இங்கிலாந்து தேசம் முழுவதும் சீர்திருத்தம் உருவானது. சத்தியத்தை ஆர்வமாக மக்கள் படித்தனர். இயேசுவின் அன்பை உணர்ந்தனர். பாவ மன்னிப்பு இலவசம். ஆண்டவர் பாவத்தை மன்னிக்க பணம் தேவை இல்லை. அதிக வரி செலுத்த தேவையில்லை. புனித யாத்திரை போகத் தேவையில்லை என்பதை மக்கள் உணர்ந்தனர். இங்கிலாந்தில் மக்களில் கிட்டத்தட்ட பாதிபேர் விக்ளி.்.பினுடைய உபதேசத்தையும், சத்தியத்தினுடைய வெளிச்சத்தையும் பெற்றுக் கொண்டனர். அரசர்களும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். இங்கிலாந்தில் ஆரம்பித்த இந்த சீர்திருத்தம் ஐரோப்பிய தேசங்களிலும் பரவ ஆரம்பித்தது.**

ஐரோப்பா தேசத்தில் "போஹேமியா" என்ற இடத்தில் **ஜான் ஹஸ்** என்பவர் இருந்தார். அவரும் அவருடைய நண்பரான **ஜெரோமும்** விக்ளி.்.ப்பின் எழுத்தை படித்து, வேதத்தை படித்து சத்தியம் என்ன என்பதை உணர்ந்தனர். அவர்கள் சத்தியத்தை அவர்களுடைய தேசத்தில் பிரசங்கிக்க ஆரம்பித்தனர். அதற்குப் பின்பாக, **மார்டின் லூதர் ஜெர்மனியில் சத்தியத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். இவர் தான் புதிய ஏற்பாட்டை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தவர்.** அதற்குப் பின்பாக, பிரெஞ்ச் மொழியிலும் இன்னும் பல மொழிகளிலும் வேதமானது மொழிபெயர்க்கப்பட்டது. **சத்தியத்தின் வெளிச்சம் பல நாடுகளில் பரவ ஆரம்பித்தது.**

மக்கள் சத்தியம் என்ன? பொய் என்ன? என்பதை தெளிவாக புரிந்து கொண்டனர். **மார்டின் லூதர் போப்பினுடைய தப்பான 95 உபதேசங்களை**

**(31 Oct 1517) எழுதி, கத்தோலிக்க ஆலய கதவுகளில் அடித்தார்.** அதன் விளைவாக அநேகர் சத்தியத்தைத் தெரிந்துகொண்டனர். ஏன் அரசர்களும் அந்த சத்தியத்தை ஏற்றுக் கொண்டு வேதத்தை நம்ப ஆரம்பித்தனர். இதன் விளைவாக என்ன நடந்தது என்றால்? அநேகர் போப்புக்கு விரோதமாக எழும்ப ஆரம்பித்தனர். ரோமன் கத்தோலிக்கம் சொல்வது பொய் நாம் அவர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கத் தேவையில்லை. பாவ மன்னிப்புக்காக அவர்களிடம் போகத்தேவையில்லை. பாவ மன்னிப்பு இலவசம். நாம் அதிக பணத்தை வரியாக செலுத்தத் தேவையில்லை என்ற காரியங்களெல்லாம் மக்கள் உணர ஆரம்பித்தனர்.



இந்த சீர்திருத்தங்களையும், இந்த மாற்றங்களையும் பார்த்த ரோமன் கத்தோலிக்கம் இதை நிறுத்தும் படியாக பல முயற்சிகள் செய்தது. **வேதாகமத்துக்கு தடை விதித்தது. யாரும் அதை வாங்கக்கூடாது, யாரும் அதை விற்கக்கூடாது, யாரும் அதை மொழிபெயர்க்கக் கூடாது என்று மிகப்பெரிய தடை விதித்தது.** ஆனாலும், அந்தத் தடைகளெல்லாம் மீறி சத்திய வார்த்தையானது, வேதமானது எல்லோராலும் வாங்கப்பட்டது. **அநேகர் தங்களுடைய சொத்துக்களை விற்று, வேதாகமத்தை வாங்கினார்கள். அநேகர் தங்களுடைய உயிருக்கும் பயப்படாமல் அந்த வேதாகமத்தை எல்லா இடங்களுக்கும் கொண்டு மக்களிடம் சேர்த்தார்கள்.** இப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய எழுப்புதல் ஐரோப்பிய தேசம் முழுவதும் நடந்தது. இந்த சீர்திருத்தத்தை எப்படியாவது ஒழிக்கவேண்டும் இந்த சத்தியத்தினுடைய வெளிச்சத்தை மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடாது என்பதில் ரோமன் கத்தோலிக்கம் மிகத்தெளிவாக இருந்தது.

இதை நிறைவேற்றுவதற்காக சீர்திருத்தவாதிகளையும், இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற உண்மைக் கிறிஸ்தவர்களையும் கொலைசெய்யவும், உபத்திரவப்படுத்தவும், தீக்கிரையாக்கவும், அநேக முயற்சிகள் எடுத்தது. **கிட்டத்தட்ட 5 கோடியிலிருந்து 10 கோடி உண்மைக் கிறிஸ்தவர்களை இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் இவர்கள் கொன்றார்கள்.** இதில் அரசர்களும் அடங்கும். அநேக அரசர்களும், அதிகாரிகளும், படித்தவர்களும், கல்விமான்களும், உண்மையான

சத்தியத்தை விசுவாசித்திருந்தார்கள். அவர்களையும், இந்த ரோமன் கத்தோலிக்கம் விட்டுவைக்கவில்லை.

அவர்களுடைய அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களையும் கொலைசெய்தது. இதனுடைய விளைவாக கடைசியாக என்ன ஆனது என்றால் - தேசத்தில் உள்ள எல்லாக் கல்விமான்களும், நீதிமான்களும் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டவர்களும் இறந்துவிட்டார்கள். இனி தேசத்தில் ஆளும் வர்க்கத்தில் இருக்கிறவர்கள் கொடூரகுணம் கொண்டவர்களாக மக்களை சுரண்டுகிறவர்களாக இருந்தார்கள். மக்கள் கடினமாக உழைத்தார்கள். ஆனால், அவர்களுக்கு போதுமான வருமானம் கிடைக்கவில்லை. **அதிக பணத்தை வரியாக வசூலித்ததினால் மிகவும் குறைவான வருமானமே கிடைத்தது. மிகவும் கஷ்டப்பட்டார்கள். சபையின் மீது மிகப்பெரிய வெறுப்பு மக்களுக்கு உண்டானது.**

**பிரெஞ்ச் புரட்சி**

கடைசியாக, 1**793-ம் வருடம் பிரெஞ்சு நாட்டில் (சிவில் வார்) உள்நாட்டு யுத்தம் வெடித்தது.** மக்கள் இந்த ரோமன் கத்தோலிக்கதினுடைய ஒடுக்கு முறையை தாங்கிக் கொள்ள முடியாமல், அதற்கு எதிராகவும் ராஜாவுக்கு எதிராகக் கலகம் செய்யதனர். **மக்கள் "கடவுளே இல்லை" என்ற அளவுக்கு வெறுப்புடையவர்களாக மாறினார்கள். இதை "பிரெஞ்சு புரட்சி" என்று சரித்திரம் சொல்கிறது. இந்த பிரெஞ்சு புரட்சியில்தான் நாத்திகவாதிகள் - கடவுளை மறுக்கிறவர்கள் உருவாகினார்கள்.**

கடைசியாக மிகப்பெரிய ஒரு கலகத்திற்குப் பின்பாக, பிரெஞ்சு அரசாங்கம் போப்பை கைதுசெய்ய முடிவு செய்தது. ஏனென்றால், அவர்தான் இதற்கு எல்லாம் காரணம் என்பதை கடைசியாக அவர்கள் தெரிந்து கொண்டார்கள். பிரெஞ்சு ஆர்மி ரோமுக்குள்ளாக நுழைந்து போப்பை 1798-ல் கைது செய்கிறது.

**பைபிள் சொசைட்டி**

இறுதியாக, போப்பினுடைய இருண்டகால ஆட்சி முடிவுக்கு வந்தது. இதுவரைக்கும் சத்தியத்தினுடைய வெளிச்சம் பரவுவதற்கு தடையாக இருந்த சாத்தானுடைய ராஜ்ஜியம் வீழ்ந்து போனது. இந்தக் காலக்கட்டத்துக்கு பின்பாகத்தான், பைபில் சொசைட்டிஸ் பல தேசங்களில் உருவானது. **1804ல் பிரிட்டீஸ் பைபிள் சொசைட்டி உருவானது. 1816ல் அமெரிக்கன் பைபிள் சொசைட்டி உருவானது. வேதமானது 200-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. கோடிக்கணக்கில் அது அச்சிடப்பட்டு பல தேசங்களுக்கு பல மொழிகளில் சென்றது. சத்தியத்தினுடைய வெளிச்சம் இதற்கு பின்பாக உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது.** அநேக மிஷனரிகள் பல நாடுகளுக்குப்போய், சத்தியத்தின் வெளிச்சத்தைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

இந்த சீர்திருத்தத்தையும், இருண்டகாலத்தையும், நாம் படிக்கும் போது மனதுக்கு வருகிற ஒரு விஷயம் என்னவென்றால், அந்தக் காலத்தில் பைபிள் வைத்திருப்பதே ஒரு மிகப்பெரிய தண்டனைக்குரிய ஒரு

செயலாகவும், அதைப்படிப்பதும் அதை எடுத்துச் சொல்வதுமே ஒரு மிகப்பெரியத் தண்டனைக்குரிய செயலாகவும் இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு உபத்திரவத்திலும் ஆண்டவருடைய பிள்ளைகள் உண்மையாக இருந்தனர்.

**நாம் இன்றைக்கு இலவசமாக வேதாகமத்தை பெற்றுக் கொள்கிறோம். நாம் எவ்வளவு தூரம் அதை பயன்படுத்துகிறோம் என்பதை நாம் யோசித்துப்பார்க்கவேண்டும்.** என்னதான் பிரச்சனைகள், உபத்திரவங்கள் வந்தாலும், நாம் உண்மையாக ஆண்டவருக்காக நிலைநிற்க வேண்டும் என்கிற பாடத்தை இந்த உபத்திரவக் காலத்தை படித்துப் பார்க்கும்போது தெரிந்துகொள்ளலாம். உபத்திரவத்தின் மத்தியிலும் தாங்கள் உயிரே போனாலும் ஆண்டவருக்காக அநேக மக்கள் உண்மையாக இருந்தார்கள். ஆண்டவருக்கு உண்மையாக இருந்தவர்களைப் பார்க்கும்போது நாமும் அப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை நாம் எடுப்போம்.

*ஆண்டவர் சொல்கிறார், "முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்." - மத்தேயு 10:22*
யார் எல்லாம் உபத்திரவத்தையும் தாண்டி ஆண்டவருடைய அன்பிற்காக ஆண்டவருக்காக விசுவாசமாக நிற்கிறார்களோ, அவர்கள் தான் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை இந்தப்பாடத்தின் மூலமாக தெரிந்து கொள்கிறோம். நாம் ஆண்டவருக்கு உண்மையாக இருக்கிறோமா? உபத்திரவத்தின் மத்தியில் நம் விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? என்பதை நாம் சற்றே சிந்தித்து பார்ப்போம். சின்ன கொம்பின் ஆட்சிகாலம் கிபி 1798 ல் முடிவடைகிறது. அதற்குபின் என்ன நடந்தது? நாம் என்ன ராஜ்யத்தில் வாழ்கிறோம்? இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் அடையாளங்கள் என்னென்ன??? தொடர்ந்து படிக்கலாம்.

## வெளிப்படுத்தல் 13

**முதலாம் மிருகம்** (வரைபடம் - பக்கம் 195)

*பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன. (வெளிப்படுத்தல் 13:1)*

இங்கே ஒரு மிருகம் சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகிறது. **சமுத்திரம் என்பது ஜனக்கூட்டத்தைக் குறிக்கிறது.** ஜனக்கூட்டம் அதிகமாக உள்ள ஒரு இடத்திலிருந்து இந்த மிருகம் எழும்பி வருகிறது. இந்த மிருகம் யார்? *தானியேல் 7:17*-ம் வசனத்தின்படி மிருகம் என்பது ராஜ்யத்தைக் குறிக்கிறது. அசுத்தமான நாமம் உடையதாக இந்த மிருகம் இருப்பதினால், நிச்சயமாக இது சாத்தானுக்கு கட்டுப்பட்ட ஒரு ராஜ்யமாகவே இருக்கும்.

*நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின்*

*வாயைப்போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. (வெளிப்படுத்தல் 13:2)*

**அந்த மிருகத்தின் அடையாளம் என்ன?**

**அந்த மிருகம் சிறுத்தையைப் போல் காட்சியளித்தது. அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன.** வலுசர்ப்பமானது தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.

சிறுத்தை, கரடி, சிங்கம் போன்ற ராஜ்யங்களைப் பற்றி *தானியேல் 7*-ம் அதிகாரத்தில் பார்க்கலாம். இந்த மூன்று மிருகங்கள் உலகத்தில் தோன்றுகிற மூன்று மாபெரும் சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது.

1. சிங்கம் பாபிலோன் சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது.
2. கரடி மேதியா – பெர்சியா சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது.
3. சிறுத்தை கிரேக்க சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது.

*பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 13:5)*

அந்த மிருகம் யார்? இங்கே அந்த மிருகத்திற்கு 42 மாதங்களாக யுத்தம் பண்ண அதிகாரம் கொடுக்கப்பட்டதாகப் பார்க்கிறோம். தீர்க்கதரிசன கணக்கின்படி 42 மாதங்கள் என்பது 1260 வருடங்களைக் குறிக்கிறது. 1260 ஆண்டுகள் உலகத்தை ஆண்டது யார்? சரித்திரத்தின்படி 1260 ஆண்டுகள் உலகை ஆண்டது ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் மட்டுமே.

**எல்லா ராஜ்யங்களுடைய கலவையாக இந்த ரோமன் கத்தோலிக்க ராஜ்யம் இருக்கும் என்பதை குறிப்பதற்காகத்தான் எல்லா மிருகத்தின் கலவையாக இந்த மிருகம் குறிப்பிடப்பட்டுள்ளது.** இது எதைக் குறிக்கிறது? **தனக்கு முன்னே இருந்த எல்லா அஞ்ஞான ராஜ்யத்தினுடைய தீய பழக்கத்தையும், தீய கொள்கைகளையும் கடவுளுக்கு விரோதமான காரியத்தையும் தனக்குள் உடையதாக அந்த மிருகம் இருக்கும் என்பதே இதற்கு அர்த்தம்.** சிலைவழிபாடு போன்ற தேவன் அருவருக்கிற காரியங்கள் எல்லாம் இருக்கும் என்பதை இந்த வசனங்கள் உணர்த்துகிறது.

*அது தேவனைத் தூஷிக்கும்படி தன்வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது. மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும் படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 13:6,7)*

இங்கே கொடுக்கப்பட்டுள்ள இந்த மிருகத்தின் குணங்களும் *தானியேல் 7*-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள சின்னக் கொம்பின் குணங்களும் ஒத்துப்போவதை நாம் பார்க்க முடிகிறது. ஆகவே, எந்த சந்தேகமுமின்றி

இது ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தைப் பற்றிதான் கூறுகிறது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

*உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்யாவரும் அதை வணங்குவார்கள். (வெளிப்படுத்தல் 13:8)*

இந்த ரோமன் கத்தோலிக்க ராஜ்யத்தின் பிரமாண்டத்தின் காரணமாக அநேகர் அதைப் பின்பற்றினார்கள். **அதிகமான சலுகைகள், இலவசங்கள் என்று பொன்னையும், பொருளையும் காண்பித்து அநேகரை தனக்குள்ளாக இழுத்துகொண்டது.** தன்னை எதிர்த்து நின்ற, வேதத்திற்கு உண்மையாக வாழ்ந்த கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி கொலை செய்தது. அநேகர் தண்டனைக்குப் பயந்தும், சலுகைகளை நினைத்தும், செல்வத்தைப் பார்த்தும் பின்சென்றார்கள். இந்த மிருகத்தைப் பின்பற்றிப் போகிறவர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

*சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும். (வெளிப்படுத்தல் 13:10)*

யாரெல்லாம் இந்த மிருகத்தால் தண்டிக்கப்படுகிறார்களோ அவர்கள் தண்டிக்கப்பட்டும், பட்டயத்தால் கொல்லப்படுகிறார்களோ அவர்கள் கொல்லப்பட்டும், சிறை போகிறார்களோ போகட்டும் என்று தேவன் கூறுகிறார். இது என்ன தேவன் அக்கரையில்லாதவர் போல பேசுகிறார் என்று நமக்கு தோன்றலாம். ஆனால், அது தவறு. ஒருவனுக்கு உபத்திரவம் என்று வரும்போதே அவன் உண்மையிலேயே விசுவாசிக்கிறானா இல்லை அவனிடம் அவிசுவாசம் இருக்கிறதா என்பதை அறிய முடியும். நம்முடைய வாழ்க்கையை எடுத்துக்கொண்டால், நாம் சந்தோஷமாக எல்லாவிதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கும் போது தேவனைத் துதித்துப்பாடுவோம். ஆனால், கஷ்டம் வரும்போது அவர்மேல் கோபித்துக்கொள்கிறோம். விசுவாசம் இல்லாமற்போகிறது. இதன்படி உபத்திரவம் வரும்போதுதான் நம்முடைய மனதில் எவ்வளவு தூரம் ஆண்டவர் மீது விசுவாசம் இருக்கிறது, அன்பு இருக்கிறது, பற்று இருக்கிறது என்பது வெளிப்படும். அதன் காரணமாகவே பரிசுத்தவான்களுடைய பொறுமையும், விசுவாசமும் விளங்கும் என்று வசனம் கூறுகிறது. யார் பொறுமையாய் இருக்கிறார்கள், விசுவாசமாக இருக்கிறார்கள், யாரிடத்தில் உண்மையிலேயே பரிசுத்தம் இருக்கிறது போன்ற அனைத்தும், உபத்திரவத்தின் போதுதான் வெளிப்படும். அதன் காரணமாகவே தேவன் உபத்திரவத்தை அனுமதிக்கிறார்.

**இரண்டாம் மிருகம் : ஆட்டுக்குட்டி** (வரைபடம் - பக்கம் 195)

*பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது. (வெளிப்படுத்தல் 13:11)*

இது மிகவும் வித்தியாசமான ஒரு மிருகம். ஏனென்றால் இதற்கு முன்பு எழும்பிய மிருகமெல்லாம் பயங்கரமானதாகவும், அசுத்தமானதாகவும் இருந்தது. ஆனால், இந்த மிருகத்தைப் பார்த்தால் ஆட்டுக்குட்டியைப்

போல இருக்கும். **ஆட்டுக்குட்டி என்பது இயேசு கிறிஸ்துவை குறிக்கிற ஒரு மிருகமாக இருக்கிறது.** இந்த ராஜ்யம் பார்ப்பதற்கு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல இருக்கிறது. இதற்கு முன்னிருந்த மிருகமெல்லாம் சமுத்திரத்திலிருந்து எழும்பியதை *தானியேல் 7*-ம் அதிகாரத்தில் பார்க்கலாம். *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்திலும் முதல் மிருகம் சமுத்திரத்திலிருந்துதான் வருகிறது. ஆனால், இந்த மிருகம் பூமியிலிருந்து எழும்பியது. சமுத்திரம் ஜனக்கூட்டத்தைக் குறிக்கிறது. இந்த ராஜ்யங்கள் ஜனக்கூட்டம் அதிகம் உள்ள ஐரோப்பா கண்டத்திலிருந்து எழும்பியது. சமுத்திரம் ஜனங்கள் அதிகமாக இருக்கிற இடமென்றால் **பூமி ஜனங்கள் குறைவாக இருக்கிற இடம் என்பதே அதன் அர்த்தம். இந்த மிருகம் அதிக மக்கள் இல்லாத ஒரு இடத்திலிருந்து எழும்பியது.** அந்த மிருகம் வரும்போது ஆட்டுக்குட்டியைப் போல் இருந்தது. **அதாவது இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல ஆரம்பத்தில் இருந்தது. ஆனால், பின்பு வலுசர்ப்பத்தைப் போல பேசுகிறது.** அதாவது இந்த ராஜ்யம் வலுசர்ப்பத்தை பின்பற்றிப்போகும் என்பதைக் குறிக்கிறது. இந்த ஆட்டுக்குட்டி எந்த ராஜ்யத்தைக் குறிக்கிறது?

- ✓ முதலாவதாக இது ஜனக்கூட்டம் அதிகமாக இல்லாத இடத்திலிருந்து உருவான ராஜ்யமாய் இருக்க வேண்டும்.
- ✓ இரண்டாவதாக இது ஆட்டுக்குட்டியைப் போல இருக்க வேண்டும். அதாவது, இயேசு கிறிஸ்துவை ஆரம்பத்தில் பின்பற்றின ராஜ்யமாக இருக்க வேண்டும்.
- ✓ மூன்றாவது இது வலுசர்ப்பத்தைப் பின்பற்றிப்போன ஒரு ராஜ்யமாக இருக்க வேண்டும்.
- ✓ நான்காவதாக, இது ரோமன் கத்தோலிக்கத்திற்கு அடுத்து வருகிற ராஜ்யம். ஆகவே, ரோமன் கத்தோலிக்கத்தின் ஆட்சி முடிவுக்கு வந்த கி.பி. 1798-ம் ஆண்டிற்குப் பின்புள்ள ஒரு ராஜ்யமாக இருக்க வேண்டும்.
- ✓ ஐந்தாவது இந்த மிருகம் ஒரு வல்லரசாக இருக்க வேண்டும். ஏனென்றால், தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்படும் ராஜ்யங்கள் அனைத்துமே உலகை ஆண்ட ராஜ்யங்கள் ஆகும். பாபிலோன், மேதியா-பெர்சியா, கிரேக்கம், ரோம், ரோமன் கத்தோலிக்கம் போன்ற அனைத்துமே உலகை தன் கட்டுப்பாட்டில் வைத்த ராஜ்யங்களாகும்.

மேற்கண்ட அனைத்தும் பொருந்தும் ராஜ்யம் எது? ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் ஆட்சி செய்த 1260 வருடங்களை இருண்டகாலம் என்று வரலாறு பதிவு செய்திருக்கிறது. அப்பொழுது மத சுதந்திரம் பறிக்கப்பட்டது. தேவனை உண்மையாக தொழுதுகொள்ளமுடியாது என்ற நிலை நீடித்தது. இந்த ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாரின் பிடியிலிருந்து தப்பித்து தேவனை உண்மையாகவும், சுதந்திரமாகவும் தொழுதுகொள்வதற்காக பல உண்மைக் கிறிஸ்தவர்கள் 14 முதல் 15-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஓடிப்போனார்கள்.

## ஆட்டுக்குட்டி - அமெரிக்கா தேசம்

இப்படியாக தஞ்சம் புகுந்த உண்மைக் கிறிஸ்தவர்கள் உருவாக்கியதே இந்த அமெரிக்கா தேசம். உண்மைக் கிறிஸ்தவர்கள் அங்கே வாழ்ந்த

காரணத்தால் தேவன் அந்த தேசத்தை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தார். அந்த தேசம் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டது. பொருளாதாரம், விஞ்ஞானம், பாதுகாப்பு போன்ற எல்லாத் துறைகளிலும் அபரிவிதமான வளர்ச்சியைக் கண்டு மிகப்பெரிய வல்லரசாக உருவானது. சரித்திரத்தைப் பார்க்கும்போது இந்த அமெரிக்கா தேசம் சரியாக கி.பி. 1798-ம் ஆண்டில் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் வீழ்ச்சியடைந்த காலத்தில் எழும்பியது.

இந்த அமெரிக்கா தேசம் உண்மைக் கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்ட தேசமாக இருக்கிறது. வேதாகமத்தை அடிப்படையாக வைத்து செயல்படுகிற தேசமாக ஆரம்பத்திலே இருந்தது. ஆனால், காலப்போக்கில் தேவனைவிட்டு வழிவிலகிப் போனது. இப்பொழுது இருக்கிற அமெரிக்காவில் அதிகமான பாவங்களும், தேவனுக்கு விரோதமான காரியங்களும் நடைபெறுகிறது. இந்த தீர்க்கதரிசனத்தின்படி ஆட்டுக்குட்டியைப்போல் இருந்த அமெரிக்கா தேசம் வலுசர்ப்பத்தைப் போல மாறியது.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் கட்டுப்படுத்தும் நாடு எது என்று கேட்டால், சிறு பிள்ளைகளும் அமெரிக்கா என்றுதான் சொல்லுவார்கள். தொழில்நுட்பம், மருத்துவம், பொருளாதாரம் போன்ற அனைத்திலும் அமெரிக்கா உச்சத்தில் இருக்கிறது. உலகிலே பெரிய இராணுவம் அவர்களுடையதே. உலக வங்கி அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. உலகத்திலே எங்கே பிரச்சனை நடந்தாலும் இவர்கள்தான் போய் பஞ்சாயத்து செய்வார்கள்.

## ஆட்டுக்குட்டியின் இரண்டு கொம்புகள்

அந்த மிருகத்திற்கு இரண்டு கொம்புகள் இருந்ததாக வசனம் சொல்லுகிறது. அந்த இரண்டு கொம்புகள் எதைக் குறிக்கிறது? கொம்பு என்பது ராஜ்யத்தைக் அல்லது ஆளுகையை குறிக்கும் என்பதை *தானியேல் 7*-ம் அதிகாரத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். இங்கே இந்த இரண்டு கொம்புகளும் இந்த மிருகத்தின் இரண்டு வகையான ஆளுகையைக் குறிக்கிறது. அந்த மிருகம் **இரண்டுவிதமான ஆளுகையை** பின்பற்றுகிறது. அது என்னவென்றால் மத சுதந்திரம் மற்றும் தனிமனித சுதந்திரம்.

## அமெரிக்காவும், ரோமன் கத்தோலிக்கமும்

*அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது. (வெளிப்படுத்தல் 13:12)*

இதற்கு முந்தின மிருகம் ரோமன் கத்தோலிக்கம் என்பதைப் பார்த்தோம். அந்த ரோமன் கத்தோலிக்கத்தினுடைய காயத்தை சொஸ்தமாக்கி, பூமியில் இருக்கிற எல்லோரையும் வணங்கும்படியாக அமெரிக்கா செய்யும் என்பதே இந்த வசனத்தின் அர்த்தம். இப்பொழுது அமெரிக்கா வல்லரசாக இருக்கிறதைப் பார்க்கிறோம். காலம் செல்ல செல்ல இந்த அமெரிக்கா மக்களை போப்பு பக்கம் திருப்பும். இந்தக் காரியம் எப்படி நடைபெறும்? உலகத்தில் பிரச்சனைகள், கொள்ளைநோய்கள், என்று பல குழப்பங்கள் நடைபெறும். தற்போது கொரோனா என்ற கொள்ளை நோய் உச்சக்கட்டத்தில் இருக்கிறது. உலகத்தையே

ஆட்டிப்படைத்துக்கொண்டு இருக்கிறது. இதைப் போன்ற பல பிரச்சனைகள் வரும்போது அமெரிக்காதான் ஆட்டிப்படைக்கும் சக்தியாக இருக்கும். எல்லாவற்றிலும் தலையிடும், எல்லோரும் அமெரிக்காவை திரும்பி பார்த்துக்கொண்டிருப்பார்கள். அப்பொழுது **அமெரிக்க போப்பையும், ரோமன் கத்தோலிக்கத்தையும் உயர்த்திப் பிடிக்கும்.** போப்பு சொல்வதை கேட்போம். அவர் சொன்னால் சரியாக இருக்கும் என்று சொல்லி ரோமன் கத்தோலிக்கத்தை உயர்த்திப் பிடிக்கும் ஒரு செயலை அமெரிக்கா செய்யும் என்பதே இந்த தீர்க்கதரிசனம்.

*அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. (வெளிப்படுத்தல் 13:13,14)*

பழைய ஏற்பாட்டில் எலியா வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணினார். (1 இராஜா 18) அது தேவனுடைய வல்லமையைக் குறிக்கிறது. அதைப்போல, கடைசிகாலத்தில் அமெரிக்கா தேசம் வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணுமாம். அப்பொழுது மக்கள் அனைவரும், எலியாவின் காலத்திலே நடந்ததுபோல பெரிய அற்புதம் நடக்கிறது. இது உண்மையிலேயே தேவனுடைய வார்த்தை என்று சொல்லி அமெரிக்காவின் பின்பாக செல்வார்கள். மேலும், ரோமன் கத்தோலிக்கத்திற்கு ஒரு சொருபத்தைப் பண்ணவேண்டும் என்று அமெரிக்கா பூமியின் குடிகளை மோசம்போக்குமாம்.

இதன்படி *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தில் உள்ள இந்த **இரண்டு மிருகங்களில் ஒன்று ரோமன் கத்தோலிக்கம் என்றும், மற்றொன்று அமெரிக்கா** என்றும் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். இந்தக் காரியங்கள் சரித்திரத்தோடும் ஒத்துப்போகிறது. அமெரிக்கா அற்புதம் செய்யும் என்றால் என்ன அர்த்தம்? அமெரிக்கா தலைவர் அற்புதம் செய்வாரென்று அர்த்தமா?

*ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். (மத்தேயு 24:24)*

**இந்த வசனத்தின்படி வானத்திலிருந்து அக்கினி இறங்கிவரச் செய்வது யார் என்றால் கள்ளத் தீர்க்கதரிசிகளும் கள்ளக் கிறிஸ்துக்களுமே.**

இதன் மூலம் அமெரிக்காவிலிருந்து மிகப்பெரிய அளவில் கள்ளத் தீர்க்கதரிசிகளும், கள்ளக் கிறிஸ்துக்களும் எழும்புவார்கள் என்பது தெளிவடைகிறது. மிகவும் குழப்பமான சூழ்நிலையில் இவர்கள் எழும்புவார்கள். கொரோனா போன்ற தீர்வற்ற பிரச்சனையின் காரணமாக மக்கள் புலம்பி தவிக்கும்போது இதைப்போன்ற கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்புவார்கள். பெரிய அற்புதங்கள் செய்து எல்லாருக்கும் சுகத்தையும், நம்பிக்கையையும், ஆறுதலையும் கொடுப்பார்கள். இந்தக் காரியம் அமெரிக்காவில் அதிகமாக நடைபெறும். அனைவருடைய கவனமும் அங்கு திரும்பும். இதுவரைக்கும்

மதநம்பிக்கை, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும்கூட நம்புவார்கள். அந்த சமயத்தில் அமெரிக்கா கத்தோலிக்க மார்க்கத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டும் என்று சொல்லும்.

*மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 13:15)*

இங்கு தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது. மிருகத்தைப் பின்பற்றுவதையும், பின்பற்றாமல் இருப்பதையும் நாம் தேர்ந்தெடுக்க முடியாது. அவர்கள் இதை சட்டமாக்கப்போகிறார்கள். நீங்கள் ரோமன் கத்தோலிக்கம் சொல்வதைத்தான் கேட்கவேண்டும். இல்லை என்றால் மரண தண்டனை கொடுக்கப்படும். இருண்டகாலத்தில் எப்படி ரோமன் கத்ததோலிக்க மார்க்கம் பத்துக் கோடி உண்மைக கிறிஸ்தவர்களைக் கொலைசெய்ததோ, அதைப்போல **மீண்டும் ஒரு பெரிய உபத்திரவம் உண்மை கிறிஸ்தவர்களுக்கு காத்துக்கொண்டு இருக்கிறது.** இது எதிர்காலத்தில் நடக்கப்போகிற தீர்க்கதரிசனம். புது ஆண்டில் தீர்க்கதரிசனம் சொல்லுகிறதுபோல இந்த ஆண்டு சமாதானத்தின் ஆண்டு, ஐஸ்வர்யத்தின் ஆண்டு என்று பலகாரியங்கள் சொல்லுவார்கள். ஆனால், இனி சமாதானம் கிடையாது, பெரிய உபத்திரவம் நமக்கு காத்துக்கொண்டு இருக்கிறது என்று வேதாகமத்தின் தீர்க்கதரிசனம் கூறுகிறது. சாத்தான் முன்பு எப்படி செயல்பட்டானோ அதைப்போல். அமெரிக்காவின் மூலமாக நம்மை துன்புறுத்தக் காத்துக்கொண்டு இருக்கிறான். நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மிகவும் ஆறுதலான வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு இருந்துவிடக் கூடாது. தேவன் நமக்கு என்ன எச்சரிப்பு கொடுக்கிறார் என்பதை கவனமாக கேட்கவேண்டும்.

*அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது. (வெளிப்படுத்தல் 13:16,17)*

அந்த மிருகம் ரோமன் கத்தோலிக்கம் என்று பார்த்தோம். அதற்கென்று ஒரு முத்திரை இருக்கிறதாம். அந்த முத்திரையை நாம் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், நாம் வாங்கவும் முடியாது விற்கவும் முடியாது. நாம் துரத்தப்படுவோம். கொலைசெய்யப்படுவோம். எவ்வளவு பெரிய உபத்திரவங்கள் நமக்கு முன்பாக இருக்கிறது. இந்தக் காரியங்கள் சம்பவிப்பதற்கு அதிக நாட்கள் செல்லாது. இதை நாம் உண்மையிலேயே உணர்ந்திருக்கிறோமா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

## அத்தியாயம் – 8

# மிருகத்தின் முத்திரை என்றால் என்ன?



வெளிப்படுத்தல் புஸ்தகத்தைப் பற்றி பேசும்போது அநேகர் கேட்கக்கூடிய ஒரு பிரசித்தமான கேள்வி - மிருகத்தின் முத்திரையைப் பற்றியதே. மிருகத்தின் முத்திரை என்றால் என்ன? மிருகத்தின் நாமம் என்ன? இலக்கம் என்ன? அல்லது 666 என்றால் என்ன? போன்ற கேள்விகள் அனைத்தையும் கேட்பது வழக்கம். **இந்த மிருகத்தின் முத்திரை கடைசிகாலத்திலே தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு சோதனையாக இருக்கப்போகிறது.** இதன் மூலமாகவே சாத்தான் சோதிக்கப்போகிறான் என்று நம்பப்படும்போது, அந்த மிருகத்தின் முத்திரை என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

*மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 13:15)*

## சொரூபம் என்றால் என்ன?

வேதத்தில் உள்ள பல காரியங்கள் நிகழ்காலத்தில் உள்ள சம்பவங்களை புரிந்துகொள்வதற்கென்றே கொடுக்கப்பட்டுள்ளது. வேதத்தின் சரித்திரப் பகுதியில் உள்ள சில சம்பவங்கள் மீண்டும் எதிர்காலத்தில் நடக்கும் என்று வேத அறிஞர்கள் கூறுவதுண்டு. இதனைக் குறிப்பதற்கு ‘வரலாறு மீண்டும் திரும்பும்’ (History Repeats) என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவார்கள். இங்கே சொரூபம் பண்ணுவதென்றால் என்ன என்பதை அறிந்துகொள்வதற்கு பழைய ஏற்பாட்டில் உள்ள வரலாற்றைப் பார்க்க வேண்டும்.



வெளிப்படுத்தல் புத்தகத்தில் உள்ள காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு தானியேல் புத்தகம் உதவி செய்யும். சொரூபத்தைப் பற்றி கற்பிக்கும் ஒரு சம்பவம் தானியேல் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த சம்பவத்தை *தானியேல் 3*-ம் அதிகாரத்தில்

பார்க்கலாம். அங்கே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு பொன் சிலையை உண்டுபண்ணி வைப்பார். அந்த **பொன் சிலை பாபிலோன் ராஜ்யத்தையும் நேபுகாத்நேச்சாரையும் குறிக்கிறது.** மக்கள் அனைவரும் அந்த சிலையை வணங்கவேண்டும் என்கிற ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதாவது, பாபிலோன் ராஜ்யத்தில் உள்ள அனைவரும் நேபுகாத்நேச்சாரை தொழுதுகொள்ள வேண்டும். அவருடைய வார்த்தையை கடவுளுடைய வார்தையாகக் கருதி, அவருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவருடைய ராஜ்யத்திற்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

அங்கே மூன்று நபர்களைத் தவிர மக்கள் அனைவரும் அந்த சிலையை வணங்குகிறார்கள். அந்த மூன்று நபர்கள் யார்? அவர்கள் தானியேலுடைய நண்பர்களான அனனியா, மீஷாவேல் மற்றும் அசரியா என்பவர்கள். இவர்கள் ஏன் ராஜாவின் கட்டளையை மதித்து சிலையை வணங்கவில்லை? இவர்கள் உண்மையான தேவனை ஆராதிப்பவர்கள். உண்மையான தேவனுடைய வார்த்தையாகிய வேதம் சிலைகளை வணங்கக்கூடாது என்று கூறுகிறது. அதன்படி தேவன் ஒருவரே தொழுகைக்குரியவர். அவரைத் தவிர மற்ற எதையும் வணங்கமாட்டோம் என்று உறுதியாக நின்றார்கள். (வரைபடம் - பக்கம் 196)

**இவர்கள் சிலையை வணங்காத காரணத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டது?** இவர்களை கொலைசெய்யும்படியாக ராஜா இவர்களை அக்கினி சூளையில் போடுகிறார். அக்கினிசூளையில் போடும்போது அங்கே மனுஷகுமாரனுக்கு ஒப்பான ஒரு நபர் அவர்களோடு உலாவுகிறார். அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான். அவர்கள் அக்கினியிலே போடப்பட்டபோது, இயேசு கிறிஸ்து அவர்கள் மத்தியிலே நின்று அக்கினி சூளையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுகிறார். இந்த சம்பவத்தைப் பார்த்த ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவர்கள் தேவன் தான் மெய்யான தேவன் என்று அறிக்கை செய்கிறார். இந்த சம்பவத்தில் சொரூபம் எது? ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவருடைய ராஜ்யமும், அதிகாரமுமே சொரூபத்தைக் குறிக்கிறது. அந்த சொரூபத்தின் அடையாளமாகவே பொற்சிலை நிறுத்தப்படுகிறது.

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எதற்காக இந்த பொற்சிலையை உருவாக்கினார்? இதற்கான பதில் *தானியேல் 2*-ம் அதிகாரத்தில் உள்ளது. ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனத்தைக் காண்கிறார். அதில் பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு மற்றும் களிமண் போன்ற உலோகங்களால் செய்யப்பட்ட ஒரு சிலையைக் காண்கிறார். அந்த சிலையில் உள்ள ஒவ்வொரு உலோகத்தால் ஆன பகுதிகள் ஒவ்வொன்றும், உலகை ஆளப்போகிற ராஜ்யங்களைக் குறிக்கிறது. பொன்னினால் உருவாக்கப்பட்ட அந்த சிலையின் தலையானது பாபிலோன் ராஜ்யத்தைக் குறிக்கிறது என்பதை தானியேலின் மூலமாக அறிந்துகொண்ட ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முழுவதும் பொன்னால் செய்யப்பட்ட ஒரு சிலையை நிறுத்தினார். **தன்னுடைய ராஜ்யம் தான் என்றும் நிலைத்திருக்கவேண்டும். தன்னுடைய ராஜ்யத்தை மட்டும்தான் அனைவரும் தொழுதுகொள்ள வேண்டும் என்கிற ஒரு எண்ணத்தில் அவர் இந்தக் காரியத்தை செய்கிறார். இங்கே சொரூபம் என்பது பாபிலோன் ராஜ்யத்தின் அதிகாரத்தைக் குறிக்கிறது.**

இந்த சம்பவத்தை மனதில் வைத்து *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தைப் படித்தால் சொரூபம் எதைக்குறிக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கு அமெரிக்கா உதவி செய்யும் என்பதை *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரம் நமக்கு தெளிவுபடுத்துகிறது. இதன் மூலம் மிருகமாகிய ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாருக்கு சொரூபம் பண்ணுவது அமெரிக்கா என்பதை அறிந்துகொள்ளலாம்.

ரோமன் கத்தோலிக்கத்திற்கு ஒரு அரசியல் அதிகாரத்தைக் கொடுத்து போப் சொல்வதையே நாம் கேட்போம், அவர் சொல்வதையே நாம் சட்டமாக்கிக்கொள்வோம் என்று அமெரிக்கா சொல்லும். **சொரூபம் என்னும் வார்த்தை அதிகாரத்தைக் குறிக்கிறது.** அமெரிக்கா தனக்கு கிடைத்த இந்த அதிகாரத்தை மிருகத்திற்கு கொடுக்கும். மிருகத்திற்கு ஒரு சொரூபம் செய்யும். எப்படி நேபுகாத்நேச்சார் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டிருந்தார்களோ, அதைப்போல் மிருகத்தினுடைய சொரூபத்தை எல்லாரும் வணங்குங்கள், போப்பின் அதிகாரத்திற்கு எல்லோரும் கட்டுப்பட்டிருங்கள் என்று சொல்லும் - இந்த அமெரிக்கா.

ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாரின் அதிகாரத்திற்கு யாராவது கட்டுப்படவில்லை என்றால் அவர்களுக்கு விரோதமாக சட்டம் இயற்றப்படும். என்ன சட்டம் இயற்றப்படும்? ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தான் நிறுத்திய பொற்சிலையை வணங்காதவர்களை அக்கினிச்சூளையில் போட்டு கொலை செய்வதற்கு உத்தரவிட்டதுபோல, அதிகாரத்திற்கு கீழ்ப்படியாத அனைவரையும் கொலை செய்யும்படியான சட்டம் இயற்றப்படும்.

இந்த 21-ம் நூற்றாண்டில் இப்படிப்பட்ட மூடத்தனம் நடப்பதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று சிந்திக்கிறீர்களா? கடந்த 1 ½ வருடங்களாக கொரோனா என்கிற வைரஸ் உலகத்தையே ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுமென்றும், பள்ளிகள் ஒரு வருடத்திற்கும் மேலாக மூடப்படுமென்றும் நாம் நினைத்திருப்போமா? அறிவியல், தொழில்நுட்பம், மற்றும் மருத்துவம் வளாச்சியடைந்த நிலையில் இருக்கும் இந்தக் காலத்தில் கண்ணுக்கு தெரியாத வைரசுக்கு பயந்து வீடுகளில் ஒளிந்துகொள்வோமென்று கனவில்கூட நினைத்திருக்க மாட்டோம். விஞ்ஞானத்தின் மீது அளவுக்கு மீறி நம்பிக்கையாக இருந்தோம். ஆனால், இந்த வைரஸ் மனிதனுடைய அறிவு ஒன்றுமே இல்லை என்பதை நிரூபித்தது. இதுவரைக்கும் இதற்கு ஒரு முறையான தீர்வு இல்லை. ஏன் இப்படிப்பட்ட அழிவுகள் நடக்கிறது? கடைசிகாலத்தில் கொள்ளை நோய்கள் வருமென்று வேதம் கூறுகிறதை நாம் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? வேதம் கூறும் கொள்ளை நோய்கள் வருகிறதுபோல மற்ற காரியங்களும் நடைபெறுவது நிச்சயம். உலகத்திலே பெரிய மாற்றங்கள் நடைபெறும். இப்படிப்பட்ட காரியங்கள் எதற்காக நடக்கிறது என்று அறியாமல் மக்கள் அனைவரும் குழப்பத்தில் இருப்பார்கள்.

இவ்வளவு பிரச்சனைகள் இருக்கும்போது இதற்கு ஒரு தீர்வுகிடைக்காதா என்று மக்கள் ஏங்கிக்கொண்டு இருப்பார்கள். அந்த சமயத்தில் அமெரிக்கா பல அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து மக்களை தன்பக்கம் ஈர்க்கும். போப்பை பின்பற்றும்படியாக செய்யும்.

போப் என்ன சொல்கிறாரோ அதை சட்டமாகவும், வேதவாக்காகவும் பின்பற்றும்படியாக செய்யும்.

**இந்த மிருகம் போப்பைதான் குறிக்கிறதா என்பதை அறிந்துகொள்வதற்கு வேறு அடையாளம் இருக்கிறதா?**

*இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு. (வெளிப்படுத்தல் 13:18)*

இந்த மிருகத்தைக் குறிக்கும் ஒரு எண் இருக்கிறது. அந்த எண் 666. இந்த எண்ணுக்கும் போப்பிற்கும் என்ன சம்பந்தம்? தீர்க்கதரிசனம் என்பது நேரடியாக சொல்லப்படாது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதனால், நீங்கள் போப்புடைய வண்டியின் எண்ணையோ, தொலைப்பேசியின் எண்ணையோ தேட வேண்டாம். மேலும், புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன் என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, போப் சம்பந்தப்பட்ட காரியங்களை ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். போப்பிற்கென்று ஒரு பிரத்தியேக தலைப்பு இருக்கிறது. அந்த தலைப்பு போப்பின் கிரீடத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. “VICARIUS FILII DEI (கிறிஸ்துவினுடைய பதிலாளி)” என்னும் இந்த தலைப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு லத்தீன் மொழியிலிருந்து, மொழிபெயற்க வேண்டும். அந்த வாசகத்தை ரோம இலக்கத்தின்படி கணக்கிட்டுப் பார்த்தால் 666 என்ற இலக்கத்தை அடையலாம்.

(வரைபடம் - பக்கம் 197)

| V | I | C | A | R | I | U | S | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 100 | 0 | 0 | 1 | 5 | 0 | 112 |

| F | I | L | I | I | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 0 | 1 | 50 | 1 | 1 | 53 |

| D | E | I | மொத்தம் |
|---|---|---|---|
| 500 | 0 | 1 | 501 |

| | |
|---|---|
| மொத்த இலக்கம் | 666 |

இந்த கணக்கின்படி வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட மிருகத்தின் இலக்கம் போப்பிற்கு சரியாகப் பொருந்துகிறது. இந்த மிருகம் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தைதான் குறிக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரம்.

# A KEY TO THE MYSTIC NUMBER



**666**

**LATIN**

| | | |
|---|---|---|
| V | = | 5 |
| I | = | 1 |
| C | = | 100 |
| A | = | 0 |
| R | = | 0 |
| I | = | 1 |
| U | = | 5 |
| S | = | 0 |
| F | = | 0 |
| I | = | 1 |
| L | = | 50 |
| I | = | 1 |
| I | = | 1 |
| D | = | 500 |
| E | = | 0 |
| I | = | 1 |
| | | **666** |

## "VICARIUS FILII DEI",

OR

## "VICAR OF THE SON OF GOD",

IS A FORMAL LATIN TITLE OF THE LEADING **"MAN"** OF THE PAPAL SYSTEM.

CERTAIN LETTERS OF THE LATIN ALPHABET HAD NUMERICAL VALUE, AND IT IS SIGNIFICANT THAT THE NUMERICAL EQUIVALENT OF THE ABOVE TITLE IS **666**

## மிருகத்தின் முத்திரை என்றால் என்ன?

மிருகத்தின் முத்திரை என்ற வார்த்தை *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மிருகம் போப்பின் தலைமையில் இயங்கிக்கொண்டிருக்கும் ரோமன் கத்தோலிக்கத்தை குறிக்கிறது. ***தானியேல் 7*-ம் அதிகாரத்திலுள்ள சின்னக் கொம்பும் *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்திலுள்ள மிருகமும் ஒன்றுதான் என்பதற்கு பல ஆதாரங்களைப் பார்த்தோம்.**

ரோமன் கத்தோலிக்கம் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெற்றவுடன் என்ன நடக்கும்? 'வரலாறு மீண்டும் திரும்பும்'. அதாவது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எப்படி தன் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக பொற்சிலையை செய்து அனைவரையும் வணங்கும்படி உத்தரவிட்டானோ, அதைப் போன்ற சம்பவம் மீண்டும் நடைபெறும்.

*அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும் படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது. (வெளிப்படுத்தல் 13:16,17)*

இங்கு என்ன நடக்கிறது? சிறியோர், பெரியோர், அடிமை, சுயாதீனர் போன்ற அனைவருக்கும் மிருகத்தின் முத்திரை போடப்படுகிறது. இந்த முத்திரையை எங்கே போடுகிறார்கள்? வலது கையிலும், நெற்றியிலும் போடுகிறார்கள். இந்த முத்திரையைப் பெறாத எவரும் வாங்கவும் விற்கவும் கூடாதபடிக்குத் தடை செய்யப்படுவார்கள்.

மிருகத்திற்கு ஒரு முத்திரை இருக்கிறதென்றால், தேவனுக்கும் ஒரு முத்திரை இருக்க வேண்டுமல்லவா? ஒரு எண் இருக்க வேண்டுமல்லவா? தேவனுடைய முத்திரை என்பது என்ன? தேவனுடைய எண் எது? தேவனுக்கு எதிரானவனே சாத்தான். ஆகவே, தேவனுடைய முத்திரை என்னவென்று கண்டுபிடித்தால், அதற்கு எதிரான மிருகத்தின் முத்திரையையும் எளிதாக கண்டுபிடிக்கலாம். தேவனுடைய வார்த்தையிலிருந்து அப்படியே அதற்கு நேர் எதிராக எதோ ஒன்றைக் கொண்டு வருவான் சாத்தான். சிலைகளை வணங்கக் கூடாது என்றால், சிலைகளை வணங்கும்படி எதாவது செய்வான். இப்படி போலியை உண்டாக்குவது தான் பிசாசினுடைய வேலை. தேவனுடைய முத்திரை என்ன என்று தெரிந்துகொண்டால் இவன் செய்கிற போலியான முத்திரையாகிய மிருகத்தின் முத்திரை என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

## தேவனுடைய முத்திரை

*2.ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்;*

*3. நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும்*

*மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான். (வெளிப்படுத்தல் 7:2,3)*

இந்த வசனத்தின்படி தேவனுடைய முத்திரை என்று ஒரு காரியம் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். தேவனுடைய முத்திரை எது?

*கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது; பலத்த கையினால் கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; (யாத்திராகமம் 13:9)*

இந்த வசனத்தைப் பார்க்கும்போது இதில் உள்ள குணாதிசயங்களுக்கும், மிருகத்தின் முத்திரையை பற்றின குணாதிசயங்களுக்கும் ஒத்துப்போகிறதை அறிந்துகொள்ளலாம். தேவனுடைய நியாயப்பிரமாணமாகிய பத்து கற்பனைகள் கையில் அடையாளமாகவும், கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்க வேண்டுமென்று வசனம் கூறுகிறது. நாம் எங்கே சிந்திக்கிறோம் அல்லது நினைக்கிறோம்? மூளையின் மூலமாகவே. **கண்களுக்கு நடுவில் இருக்கும் மூளையின் பகுதியானது சிந்தனைக்குரிய பகுதியாக இருக்கிறது. இதன்படி தேவன் நியாயப்பிரமாணத்தைக் குறித்து நீ சிந்தித்துக்கொண்டே இருக்க வேண்டுமென்று கூறுகிறார்.** இதுவே கண்களுக்கு நடுவாக நினைப்பூட்டுதலாக இருக்கட்டும் என்று கூறும் வசனத்திற்கு அர்த்தம்.

கையிலே ஒரு அடையாளமாக இருக்கக்கடவது என்பது எதைக் குறிக்கிறது? **கை என்பது செயலைக் குறிக்கிறது. நியாயப்பிரமாணத்தைப் பற்றி சிந்தித்துக்கொண்டே இருந்தால் மாத்திரம் போதுமா? அதை செயலிலும் காட்ட வேண்டும். நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியையை செய்யவேண்டுமென்று தேவன் கூறுகிறார்.**

மிருகத்தின் முத்திரையைப் பற்றி பார்க்கும்போது கையிலும், நெற்றியிலும் என்று பார்த்தோம். இவை இரண்டும் ஒன்றையே குறிக்கிறது. கண்களுக்கு நடுவே இருப்பது நெற்றி. இந்த இரண்டிற்கும் வார்த்தைகளில் வேறுபாடுகள் உள்ளது ஆனால் பொருள் ஒன்றே.

## ஓய்வுநாளே - தேவனுடைய முத்திரை

இந்தக் காரியங்களை வைத்துப் பார்க்கும்போது, **தேவனுடைய முத்திரை என்பது நியாயப்பிரமாணத்தையே குறிக்கிறது.** ஆனால், நியாயப்பிரமாணத்தின் எல்லா பகுதியுமே முத்திரை என்று சொல்லமுடியாது. ஏனென்றால் பத்துக் கற்பனைகளை இரண்டாகப் பிரிக்கலாம். அதில் முதல் நான்கு கற்பனைகள் மனிதன் தேவனுக்கு காண்பிக்கும் அன்பு. கடைசி ஆறு கற்பனைகள் மனிதன், சகமனிதனுக்கு காண்பிக்கும் அன்பு. இதன்படி தேவனுடைய முத்திரை தேவனுக்கு காண்பிக்கும் அன்பை பற்றியதாகவே இருக்க வேண்டும்.

முதல் நான்கு கற்பனைகளையும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று - முதல் மூன்றுவரை உள்ள கற்பனைகள் எதை செய்ய வேண்டாமென்று கூறுகிறது. ஆனால், நான்காம் கற்பனை எதை செய்ய வேண்டுமென்று கூறுகிறது. ஒரு காரியத்தை செய்யாமல் இருப்பது முத்திரையாக இருக்க முடியாது. எதை செய்ய வேண்டுமோ அதுவே

முத்திரையாக இருக்க முடியும். இதன்படி ஓய்வுநாளைப் பற்றின நான்காம் கற்பனைதான் தேவனுடைய முத்திரை என்பதை அறிந்துகொள்ளலாம்.

*நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன். (எசேக்கியேல் 20:12)*

தேவனுக்கும், நமக்கும் அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது. ஆதியாகமம் புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரங்களிலேயே ஓய்வுநாளைப்பற்றிய சிறப்பை அறிந்துகொள்ளலாம். தேவன் ஆறுநாளைக்குள்ளே எல்லாவற்றையும் படைத்தார். அவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து, அந்த நாளை ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்தினார்.

மற்ற ஆறுநாளிலும் உலகத்திலுள்ள காரியங்களைப் படைத்தபோது, அது நல்லது என்று கூறினார். ஆனால், ஏழாம் நாளை மட்டும் விசேஷப்படுத்தினார். எதற்காக இந்த நாளை தேவன் விசேஷப்படுத்தினார்? மனிதனோடு உறவு கொள்வதற்காகவே தேவன் ஏழாம் நாளை விசேஷப்படுத்தினார். அந்த நாளில் நாம் அவரை சந்திக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதன் காரணமாகவே பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு காலத்தில் ஏழாம் நாள் சபைகூடுதலின் நாளாக இருந்தது. அந்த நாளை தேவனோடு செலவிடும்போது விசேஷித்த ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். வேறு எந்த நாளுக்கும் இப்படிப்பட்ட சிறப்புகள் இல்லை. அதை சபைகூடுதலின் நாளாக வைத்து ஒரு நினைப்பூட்டுதலாகவும், அடையாளமாகவும் வைத்திருக்கிறார். ஆகவே, **ஏழாம் நாளாகிய ஓய்வுநாளே தேவனுடைய முத்திரை என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.**

இதற்கு இன்னும் ஒரு விளக்கம் இருக்கிறது. பொதுவாக ஒரு முத்திரை என்றால் **3 காரியங்கள்** இருக்கவேண்டும்.

1. முத்திரையிடுபவரின் பெயர்
2. அவரின் பதவி
3. அவரின் எல்லை

இந்த 3 காரியங்களும் நியாயப்பிரமாணத்தின் நான்காவது கட்டளையில்தான் உள்ளது. (வரைபடம் - பக்கம் 197)

***கர்த்தர்* *(பெயர்)* *ஆறுநாளைக்குள்ளே* ***வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும்*** *(எல்லை)* ***உண்டாக்கி,*** *(பதவி)* *ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.* ***- யாத் 20:11***

இந்த வசனத்தின்படி: -

| | |
|---|---|
| முத்திரையிடுபவரின் பெயர் | கர்த்தர் |
| அவரின் பதவி | சிருஷ்டிகர் |
| அவரின் எல்லை | வானம், பூமி, சமுத்திரம் |

ஓய்வுநாளே தேவனின் முத்திரை என்பது இதன்மூலமாக தெளிவாக நமக்கு தெரிகிறது.

### ஆவியானவர் தேவனுடைய முத்திரையா?

ஆனால், ஒருசிலர் எபேசியர் 1:13 வசனத்தை வைத்து, பரிசுத்த ஆவியானவர் தான் தேவனுடைய முத்திரை என்று சொல்கிறார்கள். அது சரியா?


*நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.*
*- எபேசியர் 1:13*

இல்லை. **பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளுதல், நீங்கள் விசுவாசிகளானதற்கான அடையாளம் என்பதுதான் இந்த வசனத்திற்கான அர்த்தமே தவிர, ஆவியானவர் தேவனுடைய முத்திரை என்று சொல்லப்படவில்லை.**

இதற்கு இன்னும் ஒரு அர்த்தம் இருக்கிறது. இந்த வசனத்தில், "பரிசுத்த ஆவியானவரால் முத்திரை போடப்பட்டீர்கள்" என்றுதான் உள்ளதே தவிர, பரிசுத்த ஆவியானவர் தான் முத்திரை என்று சொல்லவில்லை. தேவனுடைய முத்திரையை நமக்குள் கொண்டுவருகிறவர்தான் ஆவியானவர். அதாவது, தேனுடைய முத்திரையாகிய நியாயப்பிரமாணத்தை நாம் கீழ்படிவதற்கு உதவிசெய்கிறவர்தான் ஆவியானவர்.

ஆதிமுதல் தேவனுடைய கற்பனையை மீறச் செய்யும்படி மக்களை தூண்டுவதே சாத்தானுடைய வேலையாக இருக்கிறது. தேவன் அடிமைத்தனத்திலிருந்து தம் ஜனங்களை விடுவிப்பார். மறுபடியும் சாத்தான் மக்களை விக்கிரக வழிபாட்டிற்குள் கொண்டுபோவான். அதன் காரணமாக மறுபடியும் அடிமைத்தனத்திற்குள்ளாகப் போய்விடுவார்கள். இப்படியாக சாத்தான் அவர்களை வஞ்சித்துக் கொண்டே இருக்கிறான்.

இன்றைக்கு உலகம் முழுவதும் ஏழாம் நாளை ஒதுக்கிவிட்டு முதல்நாளை சபை கூடுதல் நாளாகவும் ஓய்வுநாளாக ஆசரித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது யார்? விழுந்துபோன ரோமன் கத்தோலிக்க திருச்சபைதான் ஓய்வுநாளை சனிக்கிழமையாகிய ஏழாம் நாளிலிருந்து முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியது. இதை அவர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய சபையின் ஆவணங்களிலேயே இதைப்பற்றின குறிப்புகள் இருக்கிறது. கி.பி. 321-ம் ஆண்டில் இந்த மாற்றத்தை செய்தார்கள். இன்றைக்கு இந்த பழக்கம் எல்லா திருச்சபைகளிலும் இருக்கிறது. அதன் காரணமாகவே கத்தோலிக்க மார்க்கத்தை எல்லா அருவருப்புகளுக்கும் தாய் என்று வேதம் கூறுகிறது. (வெளி 17). கூகுளில் "Who changed Sabbath" என்று டைப் செய்தால், ரோமன் கத்தோலிக்க சபையை உருவாக்கிய ரோம அரசரான கான்ஸ்டன்டைன் தான் என்று வரும்.




## ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பே மிருகத்தின் முத்திரை

தேவனுடைய முத்திரைக்கு எதிரானதே மிருகத்தின் முத்திரை என்று பார்த்தோம். இதன்படி தேவனுடைய முத்திரையாகிய ஏழாம்நாள் ஓய்வுநாளுக்கு எதிராக சாத்தான் கொண்டுவந்த ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பே மிருகத்தின் முத்திரை என்பதை அறிந்துகொள்ளலாம்.

இந்தக் காரியத்தைக் குறித்து *தானியேல் 7*-ம் அதிகாரத்தில் காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மிருகத்திற்கு 666 என்கிற எண்ணைப்போல, தேவனுக்கும் ஒரு எண் இருக்கிறது. அந்த எண் 7 ஆகும். ஏனென்றால், தேவன் ஆறுநாளுக்குள்ளே எல்லாவற்றையும் செய்து முடித்து ஏழாம் நாளை தனக்கான நாளாக தேர்ந்தெடுத்தார்.

அதுமட்டுமல்லாமல், வேதம் முழுவதுமாக பல இடங்களில் 7 என்கிற எண் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. விசேஷமாக, வெளிப்படுத்தல் புத்தகத்தில் மட்டும் 7 சபைகள், 7 எக்காளங்கள், 7 முத்திரைகள், 7 வாதைகள், 7 நட்சத்திரங்கள் என 58 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால், 7 என்கிற எண் தேவனுடைய எண்ணாக இருக்கிறது.

**கடைசிகாலத்திலே மிருகத்தின் முத்திரையாகிய ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக கொண்டுவரும் சட்டத்தை அமெரிக்காவும், கத்தோலிக்க மார்க்கத்தாரும் இணைந்து இயற்றுவார்கள்? இந்த ஞாயிறு ஆசரிப்பு சட்டம் நான்கு நிலைகளில் நடைமுறைப்படுத்தப்படும்.**

1. **முதல் நிலை:** உலகத்தில் நடக்கும் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வாக ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டுமென்று போப்பு கூறுவார். இந்தக் காரியம் ஏற்கெனவே நடந்துவிட்டது. மே 2015-அன்று கத்தோலிக்க மார்க்கத்தின் தலைவரான போப் பிரான்சிஸ் எழுதிய கலைக்களஞ்சியத்தின் (கடிதம் அல்லது புத்தகம்) பெயரே "**Laudato si'** (லவ்டாட்டோ சி)." இதில் **உலக வெப்பமயமாகுதலுக்கும், இயற்கை சீற்றங்களுக்கும் கத்தோலிக்க மார்க்கத்தின் கட்டளையால் மாற்றப்பட்ட ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்காததே காரணம் என்று கூறியுள்ளார்.** அதாவது, அமேசான் மற்றும் ஆஸ்திரேலியா காடுகள் எரிந்தது, துருக்கியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம், போன்ற அனைத்து இயற்கை பேரழிவுகளுக்கும், குடும்பங்கள் பிரிந்துபோகிறதற்கும், சமூக சீர்கேடுகளுக்கும், ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்காததே காரணம் என்பதே அவருடைய கருத்தாக இருக்கிறது. ஞாயிற்றுக் கிழமையில் எந்த தியேட்டரும், எந்த கடையும், எந்த தொழிற்சாலையும் வேலைசெய்யக் கூடாது. வாரத்தில் ஒரு நாள் ஓய்வை உலகம் முழுவதுமாக ஆசரிக்கும்போது, காற்றில் உள்ள மாசு குறையுமென்றும் போப்பு கூறுகிறார். மேலும், இதன் காரணமாக சரீரத்திற்கு ஒரு நாள் ஓய்வு

கொடுக்கிறோம். கடைகள் மற்றும் வேறு இடங்களுக்குப் போகாமல் குடும்பத்தோடு சேர்ந்து நேரத்தை செலவிடுகிறோமென்றும், இதனால் பல பிரச்சனைகளைத் தவிர்க்கலாமென்றும் போப்பு கூறுகிறார். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட போப், பல நாட்டின் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்களோடு பேசினார். முதலில் உலக அமைதிக்காகவும், குடும்ப அமைதிக்கேற்ற சுற்றுப்புற சூழலை காப்பாற்றுவதற்காகவும் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் ஆசரிக்கப்பட வேண்டுமென்ற அழைப்பு கொடுக்கப்படும்.

2. **இரண்டாம் நிலை:** இந்த சட்டத்திற்குப்பின்பு உலகத்தில் பிரச்சனைகள் இன்னும் அதிகமாகும். **கொள்ளைநோய்கள், வெப்பமயமாகுதல், மாசுபடுதல் போன்ற ஏகப்பட்ட பிரச்சனைகள் வரும்.** அப்பொழுது அமெரிக்காவில் கள்ளகிறிஸ்துக்களும், கள்ளதீர்க்கதரிசிகளும் எழும்பி பல அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள். மக்கள் எல்லோரும் அவர்களிடம் போய் சுகம்பெறுவார்கள். எல்லா நோய்களுக்கும் சுகம் கிடைக்கும். அப்பொழுது அவர்கள் ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தமாக ஆசரிப்போம் வாருங்கள் என்று அழைப்பார்கள். மக்கள் எல்லாம் அவர்கள் பேச்சைக்கேட்டு ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தநாளாக ஆசரிப்பார்கள். இந்த சமயத்தில் இது சட்டமாக இயற்றப்படாவிட்டாலும், அதிகமான முக்கியத்துவம் பெறும்.

3. **மூன்றாம் நிலை:** அப்பொழுது உலகத்திலே பிரச்சனைகள் அதிகமாகிக்கொண்டே இருக்கும். அப்பொழுது ஞாற்றுக்கிழமையை பரிசுத்தமாக ஆசரிக்காத காரணத்தால்தான் இந்தப் பிரச்சனைகள். இந்த நாளை அனைவரும் பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டுமென்ற சட்டம் இயற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை பலமாக எழுப்பப்படும். அப்பொழுது ஞாயிறு ஆசரிப்பு சட்டம் இயற்றப்படும். ஞாற்றுக்கிழமையில் கட்டாயமாக சபை கூடுதல் நடைபெற வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்படும்.

4. **நான்காம் நிலை:** அதற்குப் பின்பு பிரச்சனைகள் இன்னும் அதிகமாகும். அப்பொழுது கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளக்கிறிஸ்துக்களும் ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தமாக ஆசரிக்கவேண்டும் அப்போது தான் எல்லாப் பிரச்சனைக்கும் தீர்வுவரும் என்று நாங்கள் கூறினோம். ஆனால், நம்முடைய வார்த்தையைக் கேட்காமல், ஒரு கூட்டத்தார் ஏழாம் நாளை பரிசுத்தமாக ஆசரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகவே உலகத்தினுடைய எல்லா பிரச்சனைகளும் நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லி, **ஏழாம் நாளாகிய தேவனுடைய ஓய்வுநாளை கடைபிடிக்கிற அவருடைய பிள்ளைகளை குற்றவாளிகளாகப் பார்ப்பார்கள்.**

அந்த சமயத்தில் *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்திலுள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறும். அது என்ன என்றால் மிருகத்தினுடைய முத்திரையை பெற்றுக்கொள்ளாத, அதாவது ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்ற ஒரு சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத மக்கள், வாங்கவும் விற்கவும் கூடாதபடிக்கு தடை செய்யப்படுவதற்கும், கொலை செய்யப்படுவதற்கும் சட்டம் இயற்றப்படும்.

உலகத்தில் நடக்கிற எல்லாப் பிரச்சனைகளுக்கும், முதல் நாளை ஆசரிக்காமல் ஏழாம் நாளை ஆசரிக்கிற கூட்டத்தாரால் தான் வருகிறது என்று நினைக்கும்படி உலகத்தை தேவனுடைய ஜனத்திற்கு எதிராக சாத்தான் திருப்புவான். **கடைசியாக மிருகத்தின் முத்திரையாகிய ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்புக்கு கீழ்ப்படியாத தேவ ஜனத்திற்கு உபத்திரவம் வரும்.**

தானியேலின் நண்பர்கள் மூன்றுபேரும் அக்கினியிலே போடப்பட்டது போல, தேவனுடைய ஜனம் உபத்திரவத்தை சந்திக்கும். அவர்களுக்கான அரசாங்க சலுகைகள் அனைத்தும் இரத்துசெய்யப்படும். அவர்களுடைய அரசு ஆவணங்கள், வங்கி கணக்கு, அடையாள அட்டை, வாக்காளர் அட்டை என எல்லாமே தடை செய்யப்படும். அவர்கள் எங்கேயும் போகமுடியாது. எந்தக் கடைகளிலும், எதுவும் வாங்கமுடியாது. ஒரு தீவிரவாத கூட்டத்தை தடுப்பதுபோல அவர்களை தடுத்து ஒதுக்கிவிடுவார்கள். இப்படிப்பட்ட உபத்திரவம் தேவ ஜனத்திற்கு காத்திருக்கிறது.

ரோமன் கத்தோலிக்கம் முன்பு அதிகாரத்தில் இருந்தபோது உண்மையான கிறிஸ்தவர்களை எப்படி கொலைசெய்ததோ, ஒடுக்கினதோ அதைபோல கடைசிகாலத்திலும் மறுபடியும் தன் அதிகாரத்தை செலுத்தும். அநேகர் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

அப்போஸ்தலர் புத்தகத்தில் கிறிஸ்துவை பின்பற்றிய பலர் சிறையில் அடைக்கப்பட்டதைப் பார்க்கிறோம். பேதுரு மற்றும் பவுலை எந்தக் காரணமும் இல்லாமல் சிறையில் அடைத்ததைப் பார்க்கிறோம். அதைப்போன்ற அனுபவம் நமக்கும் காத்திருக்கிறதை அறிந்துகொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட உபத்திரவங்களிலிருந்து நம்மை காத்துக்கொள்வது எப்படி? தானியேல் புத்தகத்தில் ஒரு பொற்சிலையை ஏற்படுத்தி அதை வணங்கச்சொன்னபோது, தானியேலின் நண்பர்களாகிய அனனியா, மீஷாவேல் மற்றும் அசரியா ஆகியோர் என்ன செய்தார்கள்? நாங்கள் ஆராதிக்கும் தேவன் எங்களை விடுவிக்க வல்லவராக இருக்கிறார். ஒருவேளை அவர் எங்களை விடுவிக்காமற்போனாலும் நாங்கள் இந்த சிலையை வணங்கமாட்டோம் என்று கூறினார்கள். தேவன் அவர்களை அந்த அக்கினிச்சூளையிலிருந்து காப்பாற்றினார். அவர்களைக் காப்பாற்ற வல்லவராயிருந்த தேவன் நம்மையும் காப்பாற்ற வல்லவராயிருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும்.

ஆனால், ஒருவேளை அந்த உபத்திரவத்திலே நாம் இரத்தசாட்சியாக மரிக்க ஒப்புக்கொடுக்கப்பட்டாலும், அதைப்பற்றி கவலைப்படாமல், தானியேலின் நண்பர்களாகிய அனனியா, மீஷாவேல் மற்றும் அசரியாவைப்போல விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட விசுவாசம் நமக்கு இருக்கிறதா என்பதே நாம் நம்மிடம் கேட்கவேண்டிய ஒரு கேள்வி. அப்படிப்பட்ட ஒரு விசுவாசம் இல்லையென்றால், இனி வரும் உபத்திரவத்தை நாம் சந்திக்க முடியாது. தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாக இருக்கிறது.




அப்படிப்பட்ட விசுவாத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் நம்மை தாழ்த்தி, ஆண்டவரே எனக்கு விவாசத்தைக் கொடுங்கள், என்னை பலப்படுத்துங்கள் என்று கேட்கவேண்டும். அப்படி கேட்கும்போது, தேவன் நிச்சயமாகக் கொடுப்பார். நம்முடைய பெலத்தினாலே எந்த உபத்திரவத்தையும் நாம் சந்திக்கமுடியாது. தேவன் நமக்குள்ளாக வாசம் செய்ய வேண்டும். அவர் நமக்குள்ளே இருந்தால், நாம் எதையும் செய்யமுடியும். அப்படிப்பட்ட ஒரு நெருக்கமான உறவை இந்த வேளையில் நாம் நாடவேண்டும். இயேசு கிறிஸ்துவோடு நெருங்கி இருந்தோம் என்றால் எந்த உபத்திவத்தையும் நாம் ஜெயிக்கலாம். நாம் அவரைவிட்டு விலகி இருந்தோம் என்றால் எதையுமே மேற்கொள்ள முடியாது.

காலம் சமீபமாய் இருக்கிறது, உபத்திரவம் மிகவும் பக்கத்தில் இருக்கிறது. நாம் கடவுளோடு நெருங்கி இருக்கிறோமா? கிறிஸ்து நமக்குள் இருக்கிறாரா? கிறிஸ்துவின் குணம் நமக்குள் இருக்கிறதா? அப்படி இல்லை என்றால் உபத்திரவத்தை நாம் சந்திக்கமுடியாது. இதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்படியாக நாம் விசுவாசத்தில் இருக்கும்போது, கிறிஸ்து நமக்குள் இருக்கும்போது எவ்வளவு பெரிய உபத்திரவம் வந்தாலும் நாம் அதை நிச்சயமாக எதிர்கொள்வோம். எதைப் பற்றியும் கவலைப்படமாட்டோம். மரணமே நேரிட்டாலும் அதைப் பற்றி கவலைப்படமாட்டோம். தேவனுடைய அன்புக்காக நாம் எதையும் செய்கிறவர்களாக இருப்போம்.

## ஓய்வுநாளின் சிறப்புகள்

ஓய்வுநாள் மோசேயின் காலத்தில் கொடுக்கப்பட்டது என்று பலர் சொல்லுகிறார்கள். அது தவறான கருத்து. ஓய்வுநாள் ஆதியிலிருந்து இருக்கிறது.

## 1. சிருஷ்டிப்பில் ஓய்வுநாள்:

வேதத்தின் முதல் புத்தகமான *ஆதியாகமம் 2*-ம் அதிகாரத்திலேயே ஓய்வுநாளைப் பற்றி பார்க்கலாம். ஓய்வுநாள் என்பது சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாகும். (ஆதியாகமம் 2:2,3)

## 2. புதிய வானம் புதிய பூமியில் ஓய்வுநாள்:

*அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 66:23)*

இங்கே மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் என் முன்னால் வந்து தொழுதுகொள்வார்கள் என்று வசனம் கூறுகிறது. இதன்மூலம் ஓய்வுநாள் ஆதியிலிருந்து இருந்ததென்றும், இனி வரப்போகிற புதியவானம், புதிய பூமியிலும் இருக்குமென்றும் அறிந்துகொள்ளலாம்.

ஓய்வுநாள் ஆதியிலும் இருந்திருக்கிறது, புதிய வானம், புதிய பூமியிலும் இருக்கும் என்றால், இடைப்பட்ட காலத்திலே மட்டும் சனிக்கிழமையிலிருந்து, ஞாயிற்றுக்கிழமைக்கு மாறிவிட்டது என்றால் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அதை மாற்றுவதற்கு மனிதனுக்கு ஏதாவது அதிகாரம் இருக்கிறதா? நிச்சயமாக இல்லை.

## 3. இயேசு கிறிஸ்து ஆசரித்த ஓய்வுநாள்

இயேசு கிறிஸ்து ஓய்வுநாளை ஆசரித்தார். இயேசு கிறிஸ்துதான் நமக்கு ஒரு முன்னுதாரணம். அவரும் ஆசரித்திருக்கிறார்.

*தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். (லூக்கா 4:16)*

இயேசு கிறிஸ்து ஓய்வுநாளை ஆசரித்ததற்கு இந்த வசனமே ஆதாரம்.

## *4.* சீஷர்கள் ஆசரித்த ஓய்வுநாள்

*பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து (அப்போஸ்தலர் 17:2)*

பவுல் தன் வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஆசரித்திருக்கிறார். அதற்கு இந்த வசனமே சாட்சி.

இதற்கு சிலர் வேறொரு விளக்கம் சொல்கிறார்கள். அந்த காலத்தில் யூதர்கள் ஓய்வுநாளை ஆசரித்ததினால், பவுல் யூதர்களுக்கு சுவிசேஷம் சொல்வதற்காகவே சென்றாரே தவிர, ஓய்வுநாளை ஆசரிப்பதற்காக அங்கு செல்லவில்லை என்று விளக்குகிறார்கள். ஆனால், இது தவறு. *அப்போஸ்தலர் 16*-ம் அதிகாரத்தில் பார்க்கும்போது ஓய்வுநாளிலே, அவர்கள் வெளியே போய் ஆற்றங்கரையிலே ஜெபம் செய்கிறார்கள் என்று பார்க்கிறோம். ஓய்வுநாளை கடைப்பிடிப்பதற்காக போனார்கள். அப்படியானால், அவர்கள் ஓய்வுநாளை ஆசரித்தார்கள் என்றுதானே அர்த்தம்?

## கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம், செயலினால் அல்ல


அநேகர், "கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம், செயலினால் அல்ல" என்று சொல்கிறார்கள். அது உண்மைதான். நம்முடைய செயலினால் இரட்சிப்பை வாங்கமுடியாது. ஆண்டவருடைய சுத்த கிருபையினால் தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம். அதனால் நாம் ஆண்டவருடைய வார்த்தையை, பிரமாணத்தை கடைப்பிடிக்க தேவையில்லை என்று அர்த்தம் இல்லை. கிருபைக்கும் செயலுக்கும், விசுவாசத்திற்கும் கிரியைக்கும் உள்ள தொடர்பை நாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

*20. வீணான மனுஷனே, **கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று** நீ அறிய வேண்டுமோ?*

*21. நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்?*

*22. விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, **கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று** காண்கிறாயே.*
*24. ஆதலால், **மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று** நீங்கள் காண்கிறீர்களே. - யாக்கோபு 2:20-24*

மேற்கண்ட வசனங்கள் நமக்கு கிருபைக்கும் செயலுக்கும், விசுவாசத்திற்கும் கிரியைக்கும் உள்ள தொடர்பை தெளிவாக விளக்குகிறது. விசுவாசம் இல்லாமல் கிரியை இல்லை, கிரியை இல்லாமால் விசுவாசம் இல்லை. இரண்டுமே இருந்தால் தான் நாம் இரட்சிப்பை அடையமுடியும்.



## பத்து கற்பனையில் ஒன்றில் தவறினாலும் பாவமே

*எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். (யாக்கோபு 2:10)*

இங்கே ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாக இருப்பான் என்று வசனம் கூறுகிறது. பத்துக் கற்பனைகளில் ஓய்வுநாள் கற்பனை மட்டும் மாறிவிட்டது என்று கூறினால் அதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? நான் ஓய்வுநாளைத் தவிர எல்லா கற்பனைகளையும் கைக்கொள்கிறேன் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், ஒன்றில் தவறினாலும் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான் என்று வேதம் கூறுகிறது.

*சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள். (யாக்கோபு 2:12)*

இங்கே சுயாதீனப்பிரமாணம் என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது. நியாயப்பிரமாணம் நமக்கு விடுதலையை தருவதால் அது சுயாதீனப்பிரமாணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நாம் நியாயப்பிரமாணத்தைப் பார்த்து பாவியாக இருப்பதை உணர்ந்து, இயேசு கிறிஸ்துவிடம் போய் விடுதலையைப் பெற்றுக்கொள்கிறோம். இதன்படி நியாயப்பிரமாணம் விடுதலைக்குள்ளாக நம்மை வழிநடத்துகிறது. இந்த நியாயப்பிரமாணத்தை வைத்துதான் தேவன் நம்மை நியாயம் தீர்க்கப்போகிறார். நியாயப்பிரமாணம் அழிந்துவிட்டதென்றால், அதைவைத்து எப்படி நியாயத்தீர்ப்பு கொடுக்க முடியும்.

## சிலுவையில் குலைத்த கட்டளை எது?

*நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. (கொலோசெயர் 2:14-16)*

“தேவன் நமக்கு எதிரிடையாக இருந்த கட்டளைகளையும், பிரமாணங்களையும் சிலுவையில் குலைத்துபோட்டார்” என்கிறதற்கு இந்த வசனங்களே ஆதாரம் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால், தொடர்ச்சியாக உள்ள வசனங்களை வாசித்துப்பார்த்தால், நமக்கு எதிரிடையாகவும் விரோதமாகவும் இருந்த காரியங்களைத்தான் தேவன் குலைத்துப்போட்டார் என்று வசனம் கூறுகிறது. அவைகள் என்ன என்பதை அடுத்த வசனங்களில் சொல்லியிருப்பார்.

மேலும், மாதப்பிறப்பையாவது ஓய்வுநாட்களைக் குறித்தாவது யாரும் உங்களை குற்றப்படுத்த வேண்டாம் என்று வசனம் கூறுகிறது. இங்கே ஓய்வுநாட்கள் என்பது பத்துக் கற்பனையில் உள்ள ஓய்வுநாளைக் குறித்து சொல்லப்படவில்லை. பண்டிகைகளில் உள்ள ஓய்வுநாட்களைப் பற்றி கூறுகிறது.

பண்டிகை ஓய்வுநாட்கள் ஏழாம் நாளைக் குறிப்பது அல்ல. லேவியராகமம் (அதிகாரம் 23) புத்தகத்தைப் படிக்கும்போது, சில பண்டிகைகள் ஓய்வுநாட்களாக கொண்டாடப்படும். அந்த பண்டிகை ஓய்வுநாட்களும் வார ஓய்வுநாட்களும் வேறு.

*அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள். அது உங்களுக்கு விசேஷித்த ஓய்வுநாள்; அதில் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தவேண்டும்; அந்த மாதத்தின் ஒன்பதாந்தேதி சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம்மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார். (லேவியராகமம் 23:27,32)*

நிழலாகவும் எதிரிடையாகவும் இருந்த காரியங்கள் பலி முறைகள் மற்றும் பண்டிகைகள்தான். அவைகள்தான் பாவத்திற்கு பின்பாக வந்தது. ஓய்வுநாள் பாவத்திற்கு முன்பே இருக்கிறது. அதனால் இந்த இரண்டு காரியங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த பலிமுறைகளும், பண்டிகைகளும் அதில் வருகிற ஓய்வுநாட்களையும்தான் இயேசு கிறிஸ்து சிலுவையில் ஒழித்துப்போட்டார். ஏன் ஒழித்துப்போட்டார்? அவைகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையே குறிக்கிறது.

இயேசு கிறிஸ்து வந்தப்பின் அவைகள் தேவையில்லை. அதனால் ஆண்டவர் அவைகளை ஒழித்துவிட்டார். ஆனால், ஓய்வுநாள் என்பது அப்படி அல்ல. அது தான் தேவனுடைய முத்திரை. அதுதான் தேவனுடைய அடையாளமாக இருக்கிறது. அது நித்தியமானது. அந்த நாளிலே நாம் அவருக்கு கீழ்ப்படிந்து, கூடி தொழுதுகொள்ளும்போது அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். நம்மை பரிசுத்தப்படுத்துகிறார், நம்மை உயர்த்துகிறார்.

ஓய்வுநாள் ஆசரிப்பு மிகவும் முக்கியமானது. அதற்கு நாம் உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அது தான் நமக்கு கடைசிகாலத்திலே சோதனையாக இருக்கப்போகிறது.

அத்தியாயம் – 9

# உலகத்திற்கான கடைசி தூது



**ஆலோசனை: வெளிப்படுத்தல் 14 அதிகாரத்தைப் படித்துவிட்டு இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

*பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து (வெளிப்படுத்தல் 14:6)*

(வரைபடம் - பக்கம் 198)

இந்த வசனத்தின்படி பூமியில் வாழ்கின்ற அனைவருக்கும் அறிவிக்கத்தக்க நித்திய சுவிசேஷத்தை வானத்தின் மத்தியிலே பறந்துகொண்டிருந்த தூதனிடம் இருக்கிறது என்பதே. **சுவிசேஷம் என்ற வார்த்தைக்கு நற்செய்தி என்று அர்த்தம்.** உபத்திரவத்தின் மத்தியில் இந்த கடைசி காலத்தில் நாம் இந்த நற்செய்தியைத்தான் உலகிற்கு அறிவிக்க வேண்டும். அது தான் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வேலை.

சாத்தானுடைய தொந்தரவுகள் மற்றும் சோதனைகளின் மத்தியில் தேவன் நம்முடைய கரத்தில் கொடுத்த செய்தியைக் உலகத்திற்கு அறிவிப்பதற்கு கடனாளிகளாயிருக்கிறோம். *வெளிப்படுத்தல் 14*-ம் அதிகாரம் நமக்கே உரிய அதிகாரம். **நாம் என்ன செய்யவேண்டும்? நம்முடைய பணி என்ன? உலகத்திற்கு நாம் அறிவிக்கவேண்டிய சுவிசேஷம் என்ன என்பதை இந்த அதிகாரத்திலே பார்க்கலாம்.** நம்முடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன என்று யாராவது கேட்டால் இந்த அதிகாரத்தை எடுத்துக்காட்டவேண்டும். **தேவன் இப்படி ஒரு தூதை அறிவிக்கும்படியாக எனக்குக் கொடுத்திருக்கிறார். அது தான் என்னுடைய வாழ்க்கையின் நோக்கம்.** இதை உலகத்திலுள்ள சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும் என்னைச் சுற்றியுள்ள எல்லோருக்கும் சொல்வதுதான் என்னுடைய வாழ்க்கையின் நோக்கம் என்று சொல்லவேண்டும். தேவன் அப்படிப்பட்ட உயர்ந்த ஒரு நோக்கத்திற்காகத்தான் நம்மை அழைத்திருக்கிறார்.

*வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தை பார்க்கும்போது, ஆறாவது எக்காளத்திற்கு கீழாக அது வருகிறது. அதில், தேவன் ஒரு கூட்டத்தை எழுப்பப்போகிறார். அந்த கூட்டத்தை உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக அனுப்புகிறார். அந்தக் கூட்டம் யார்? மில்லரைட் இயக்கத்திலிருந்து வந்து, அட்வென்டிஷ்ட் இயக்கமாக செயல்பட்டு, ஏழாம்நாள் அட்வெந்து சபையாக இயங்கிக்கொண்டிருக்கும் சிறு கூட்டமே. இவர்கள் சரியாக ஆறாவது எக்காளத்தின் காலத்தில் எழும்புகிறார்கள். சிறு புத்தகமாகிய தானியேலை உலகத்திற்கு வெளிப்படுத்துகிறார்கள். வேதாகமத்தின் தீர்க்கதரிசனத்தின்படி, அதே காலக்கட்டத்தில் எழுந்து, வேதம் குறிப்பிடுகிற அந்த சிறு புத்தகமாகிய தானியேல் புஸ்தகத்தைப் பற்றிய வெளிச்சத்தை உலகத்திற்கு கொடுத்தது அந்த சிறு கூட்டம் தான். இது தேவன் எழுப்பின கூட்டம் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

## முத்தூது

மேலும் *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தின் கடைசியில் சகல ஜாதிக்கும் சகல கோத்திரத்திற்கும் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே குறிப்பிடப்பட்ட தீர்க்கதரிசனம் என்ன என்றால் *வெளிப்படுத்தல் 14*-ம் அதிகாரத்தில் உள்ள தீர்க்கதரிசனமாகிய நித்திய சுவிசேஷம் தான். இந்த நித்திய சுவிசேஷம், முத்தூது என்றும் சொல்லப்படுகிறது. **இந்த சுவிசேஷத்திலே மூன்று தூதுகள் இருக்கிறது.** இந்த மூன்று தூதை உலகத்திற்கு அறிவிக்கிறதற்காகதான் தேவன் தன்னுடைய உண்மையான திருச்சபையை எழுப்பியிருக்கிறார். அந்த திருச்சபை ஏழாம் நாள் அட்வெந்து திருச்சபைதான். தேவனுடைய திருச்சபைக்கென்று கொடுக்கப்பட்ட தூது இந்த முத்தூது. ஆகவே, கிறிஸ்தவர்களாக இருக்கும் நம்முடைய நோக்கம் இந்த நித்திய சுவிசேஷமாகிய முத்தூதை உலகத்திற்கு அறிவிப்பதாகவே இருக்க வேண்டும்.

*மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான். (வெளிப்படுத்தல் 14:7)*

இந்த நித்திய சுவிசேஷம் உலகத்தில் உள்ள அனைவருக்கும் கொடுக்கப்பட்டதென்று பார்த்தோம். அதன் உள்ளடக்கம் என்ன? **தேவன் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நேரம் வந்தது என்பதே இந்த வசனத்தின் முக்கிய கருத்தாக இருக்கிறது.** தேவன் நியாயத்தீர்ப்பு கொடுக்கப்போகிற காரணத்தால் அவருக்கு பயந்து, அவரை மகிமைப்படுத்தி உலகைப் படைத்த அவரையே தொழுதுகொள்ள வேண்டுமென்பதே நித்திய சுவிசேஷம். நித்திய சுவிசேஷம் என்றால் நல்ல செய்தி என்று அர்த்தம். **தேவன் நியாயத்தீர்ப்பு செய்வது நல்ல செய்தியா அல்லது நமக்கு பயத்தை தரக்கூடிய செய்தியா?** தேவனுக்கு பிரியமாக வாழ்கிற பிள்ளைகளுக்கு இது ஒரு சந்தோஷமான செய்திதான். ஏனென்றால் தேவன் சீக்கிரமக நியாயந்தீர்க்கப்போகிறார். அதற்குப் பின்பு சீக்கிரம் வரப்போகிறார் என்பது ஒரு சந்தோஷமான செய்தியாக இருக்கும்.

ஒருவேளை நம் வாழ்க்கை தேவனுடைய வார்த்தையின்படி இல்லை என்றால் நியாயத்தீர்ப்பு என்பது நமக்கு ஒரு பயம் தரக்கூடிய செய்தியாக இருக்கும். நித்திய சுவிசேஷத்தில் மூன்று தூதுகள் அடங்கி இருக்கிறது. அதில்

### வெளிப்படுத்தல் 14:7-10

**முதல் தூது** நியாயத்தீர்ப்பின் வேளைவந்தது என்பதாக கூறுகிறது. **இரண்டாம் தூது** பாபிலோன் மகாநகரம் விழுந்தது! விழுந்தது! அவளைவிட்டு வெளியே வாருங்கள் என்பதே. **மூன்றாம் தூது** மிருகத்தினுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு அழிவு உண்டு என்பதே.

இந்த மூன்று தூதுகளைத் தான் உலகம் முழுவதற்கும் அறிவிக்கவேண்டும். முதல் தூது என்னவென்றால் உண்மையான தொழுகையைப் பற்றினது. தேவன் நியாயம் தீர்க்கப்போகிறார், அவரை மகிமைப்படுத்தவேண்டும், பயந்திருக்கவேண்டும், அவரைமட்டும் தொழுதுகொள்ள வேண்டும் என்பது முதல் தூது.

## முதலாம் தூது

முதலாம் தூதில் 'நித்திய சுவிசேஷம்' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இது எதைக் குறிக்கிறதென்று முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

*ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)*

இதன்படி உலகத்தினுடைய முடிவாகிய இயேசு கிறிஸ்துவினுடைய வருகை யார் கையில் இருக்கிறது? நம்முடைய கையில்தான் இருக்கிறது. நமக்கு கொடுக்கப்பட்ட நற்செய்தியை உலகத்திற்கு சாட்சியாக சொல்லி முடித்துவிட்டோம் என்றால் இயேசு கிறிஸ்துவினுடைய வருகை வந்துவிடும்.

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19,20)*

இங்கு இயேசு கிறிஸ்து என்ன கட்டளை கொடுக்கிறார்? நீங்கள் அனைவரும் போய் சுவிசேஷத்தை அறிவித்து, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள் என்றும், நான் உங்களுக்கு கொடுத்த கட்டளைகளை அவர்களுக்கு உபதேசம் செய்து அவர்கள் கைக்கொள்ளும்படியாக செய்யுங்கள் என்றும் கூறுகிறார்.

நாம் உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். இயேசு கிறிஸ்து என்ன உபதேசம் செய்தாரோ அந்த உபதேசங்களை மற்றவர்களும் கடைபிடிக்கச் செய்யவேண்டும். இதுதான் நமக்கு கொடுக்கப்பட்ட வேலை. சுவிசேஷம் என்பது ஒன்றுதானா அல்லது பல சுவிசேஷங்கள் இருக்கிறதா?

*இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். (மத்தேயு 24:4,5)*

இந்த வசனத்தின்படி தேவன் கொடுத்த ஒரு சுவிசேஷம் நம்மிடம் இருக்கிறது. அந்தச் செய்தி மக்களுக்குப் போய்ச்சேரக்கூடாதபடிக்கு சாத்தான் பல்வேறு சுவிசேஷங்களைக் கொண்டுவருகிறான். கிறிஸ்துவின் நாமத்தை சொல்லிக்கொண்டு தவறான உபதேசம் செய்கிறவர்களாக அநேகர் கடைசி காலத்தில் வருவார்கள் என்று வசனம் கூறுகிறது. கடைசிகாலத்தில் என்ன காரியங்கள் நடக்கும் என்று தம்முடைய சீடர்களுக்கு இயேசு கிறிஸ்து சொன்ன காரியங்கள் மத்தேயு 24-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கடைசிகாலத்திலே தேவனுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு அநேக பொய்கள் உலகத்தில் பரப்பப்படும். எதற்காக தேவனுடைய பெயரைச் சொல்லி

பொய்கள் பரப்பப்படுகிறது? தேவன் வைத்திருக்கிற மெய்யான சுவிசேஷசத்தை மக்கள் புரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காகதான்.

*பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம். (1 யோவான் 2:18)*

2000 வருடங்களுக்கு முன்பாக யோவானுடைய காலத்திலும் அநேக அந்திக்கிறிஸ்துக்கள் இருந்தார்களாம். அந்திக்கிறிஸ்து என்பது வேறு யாரும் கிடையாது, கிறிஸ்துவின் பெயரைச் சொல்லிக்கொண்டு கள்ள உபதேசம் செய்கிறவர்கள் தான் அந்திக்கிறிஸ்து. 2000 வருடங்களுக்கு முன்பாகவே கள்ள உபதேசங்கள் வந்துவிட்டது என்றால், இப்பொழுது இருக்கிற கிறிஸ்தவத்திலே எவ்வாறு பொய்யான உபதேசங்கள் இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

*ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான். (2 யோவான் 1:10,11)*

அதாவது தவறான உபதேசம் செய்கிறவர்கள் நம்முடைய வீட்டிற்குள் வந்தால், அவர்களை ஏற்றுக்கொள்ளாமலும் அவர்களுக்கு வாழ்த்துதல்கள் கூட சொல்லாமலும் இருக்க வேண்டுமென்று வசனம் கூறுகிறது. இதன் மூலம் தேவன் எவ்வளவாக கள்ள உபதேசங்களை வெறுக்கிறார் என்பதை அறிந்துகொள்ளலாம். நாம் வேதத்தில் இல்லாத, மனிதனுடைய புத்தியினாலே உண்டான கள்ள உபதேசங்களுக்கு ஒருபோதும் செவிசாய்க்கவே கூடாது. இப்படிப்பட்டவர்களை நாம் ஏற்றுக்கொள்ளவும் கூடாது.

*இயேசுகிறிஸ்துவைக்குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப்பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய்ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். (ரோமர் 1:4,5)*

இந்த பாவ உலகத்திலிருந்து மனிதனை மீட்கும்படியாக, தேவனே மனிதர்களில் ஒருவராக வந்து பிறந்து, மரித்து, உயிர்த்தெழுந்து நமக்காக பரலோகத்தில் இருக்கிறார் என்பதே சுவிசேஷம். தேவன் எனக்காக மரித்தார், என்னுடைய பாவத்தை சுமந்தார், நான் கிறிஸ்துவுக்குள்ளாக விடுதலை பெற்றுக்கொண்டேன், கிறிஸ்துவுக்குள்ளாக இரட்சிப்பை பெற்றுக்கொண்டேன் என்பதே நமக்கான நற்செய்தி.

## கிறிஸ்துவின் பரிந்துபேசும் ஊழியம்

ஆனால், இந்த நற்செய்தி இத்துடன் முடிந்துவிடவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பொழுதும் பரலோகத்திலே நமக்காக பிதாவோடு பரிந்துபேசிக்கெண்டு இருக்கிறார் என்பதும் நற்செய்தியின் ஒரு பகுதியே.

அநேகர் நற்செய்தியை கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதலோடு முடித்துவிடுகிறார்கள். ஆனால், அதோடு நற்செய்தி முடியவில்லை. கிறிஸ்துவின் சிலுவை மரணம் எவ்வளவு முக்கியமோ, உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியமோ, கிறிஸ்து நமக்காக பரலோகத்தில் பரிந்துபேசிக்கொண்டு இருக்கிறார் என்பதும் அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நற்செய்தியாகும்.

*"எங்கள் இருவர்மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே"* என்று யோபு (9:33) தன்னுடைய இக்கட்டான காலத்திலே புலம்புகிறார். இப்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக பரலோகத்தில் பிதாவிடம் பரிந்துபேசுகிறார். நம்முடைய குறைகள், பாவங்கள், அசுத்தங்கள் எல்லாவற்றையும் மன்னித்து எல்லாவற்றையும் மறந்து, பிதாவுக்கு முன்பாக நம்முடைய இரட்சிப்புக்காக நமக்கு இரக்கம் காட்டும்படியாக, தம்முடைய இரத்தத்தை காட்டி, பிதாவே இவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று பரிந்துபேசுகிறார். என்னுடைய நீதியைபார்த்து, என்னுடைய தியாகத்தைப் பார்த்து அவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி பிதாவிடம் அவர் மன்றாடுகிறார். பிதாவும் கிறிஸ்துவினுடைய குணத்தைப் பார்த்து, அவருடைய தியாகத்தைப் பார்த்து, நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மை ஏற்றுக்கொள்கிறார். அது எவ்வளவு பெரிய ஒரு நற்செய்தி என்று கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள்.

உதாரணத்திற்கு ஒரு அப்பா இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு ஒரு மகன் இருக்கிறான். அந்த மகன் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கிறான். மிகவும் குறும்பு செய்கிறவனாகவும், கீழ்ப்படியாத பையனாகவும் இருக்கிறான். படிப்பது கிடையாது, வகுப்பிற்கு ஒழுங்காக வருவதும் கிடையாது. மற்ற மாணவர்களை அடிக்கிறது, மரியாதை இல்லாமல் நடந்துகொள்ளுவது என்று அவன் செய்த தவறுகள் ஏராளம். பள்ளி முதல்வர் அந்த பையனுடைய அப்பாவை கூப்பிட்டு உங்கள் பையன் இப்படியெல்லாம் செய்கிறான். நீங்கள் அவனைக் கண்டித்து சரிசெய்யுங்கள், இல்லையெனில் நாங்கள் அவனை பள்ளியிலிருந்து வெளியே அனுப்பி விடுவோம் என்று கூறுகிறார். உடனே அப்பா தயவு செய்து பள்ளியிலிருந்து என் மகனை நீக்கிவிடாதீர்கள். அவனுக்கு இன்னும் ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று சொல்லி, பள்ளி முதல்வரிடம் மிகவும் கெஞ்சுகிறார். முதல்வரும் நீங்கள் இவ்வளவுக்கு கெஞ்சுவதினால், நான் அவனுக்கு ஒரு வாய்ப்பு தருகிறேன் என்று கூறுகிறார்.

பின்பு, அப்பா மகனிடம் உனக்காக உன் பள்ளி முதல்வரிடம் கெஞ்சினேன், எப்படியாவது நீ மனம்திரும்பு, உன் குணங்களை மாற்றிக்கொள் என்று மிகவும் அன்பாகக் கூறுகிறார். சில நாட்கள் கடந்தது மீண்டும் பள்ளி முதல்வர் அந்த அப்பாவைக் கூப்பிடுகிறார். இன்னும் உங்கள் மகன் மோசமாகதான் இருக்கிறான். திருந்தவே இல்லை என்று கூறுகிறார். மறுபடியும் அப்பா என் மகனை மன்னித்திடுங்கள் என்று கெஞ்சுகிறார். இதைபோல் 2வது, 3வது, 4வது முறை நடந்தால் அப்பாவுடைய உள்ளத்தில் எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். தன்னுடைய மகன் செய்த தவறையே தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறான். அவனுக்காக பேசுவது மிகவும் அவமானமாக இருக்கிறதே என்று அவர் நினைத்திருப்பார்.

நாம் எல்லோருமே குறைவுள்ள மனிதர்கள் தான். ஆனால் மற்றவர்களுடைய குறைகளை மன்னிக்கும்படியாக வேறொருவரிடம் பரிந்துபேசும்போது நமக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்ட அனுபவத்தை நாம் கடந்து வந்திருப்போம். வேறு ஒருவருடைய குறைகளை மன்னிக்கும்படியாக மற்றவரிடம் முதல் முறை போய் பேசுவதே கஷ்டம். அதே தவறை மறுபடியும் மறுபடியும் செய்துகொண்டிருக்கும்போது, அவருக்காக மறுபடியும் மறுபடியும் போய் பேசும்போது எவ்வளவு கஷ்டமாக இருக்கும். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்தில் நம் பிதாவுக்கு முன்பாக இருக்கிறார். **நம்முடைய குறைகள் எல்லாவற்றையும் பிதாவுக்கு முன்பாக மன்றாடி மன்னிப்பை நமக்கு பெற்றுத்தருகிறார். இது சாதாரணமான ஊழியமே கிடையாது.** அவருடைய சிலுவை மரணத்தை, பாடுகளை பற்றி மிகவும் உருக்கமாக பேசுவதை நாம் கேட்டிருப்போம். அது எவ்வளவு தூரம் கஷ்டமோ, அது எவ்வளவு தூரம் வேதனை தருகிறதோ, அதைப்போல ஒரு அனுபவமாகத்தான் பரிந்துபேசுகிற அனுபவமும் இருக்கும்.

பரிந்துபேசுதல் சாதாரணமான ஒரு காரியம் கிடையாது. உண்மையிலேயே கிறிஸ்து கிருபையுள்ளவராகவும், இரக்கம் உள்ளவராகவும் தம்மை தாழ்த்துகிறவராக இருப்பதினால்தான், நாம் மன்னிப்பை பெற்றுக்கொண்டு சந்தோஷமாக இருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் எத்தனைமுறை செய்த தவறை திரும்ப திரும்ப செய்திருப்போம். ஆனால், ஒவ்வொரு முறையும் மன்னிப்பு கேட்கும்போது இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவுக்கு முன்பாக பரிந்துபேசி, மன்னிப்பை பெற்றுத்தருகிறார். ஏன் இதைக் குறித்து அதிகமாக பேசப்படுவதில்லை? இயேசு கிறிஸ்து வாழ்ந்து, மரிந்து உயிர்த்தெழுந்த சம்பவம் பூமியில் நடந்த சம்பவம். அநேகர் அந்த சம்பவங்களைக் கண்களாலே பார்த்தார்கள். ஆனால், பரலோகத்தில் நடக்கிற இந்த காரியம் மனித கண்களுக்கு எட்டாத ஒன்றாக இருக்கிறது. அதை நாம் பார்த்து அறிந்துகொள்ளமுடியாது. விசுவாசிக்கத்தான் முடியும். நாம் விசுவாசத்தினாலே இந்த பரிந்துபேசுகிற ஊழியத்தை புரிந்துகொண்டு, அதை உணர்ந்துகொண்டு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

## முதலாம் தூது

நாம் உலகத்திற்கு கொடுக்க வேண்டிய முத்தூதில் ஒன்றான முதலாம் தூதில் (வெளிப்படுத்தல் 14:7) உள்ள 4 முக்கிய காரியங்கள் என்னவென்றால்:

1. தேவனுக்கு பயந்து.
2. அவரை (தேவனை) மகிமைப்படுத்துங்கள்.
3. அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது.
4. சிருஷ்டிகரை தொழுதுகொள்ள வேண்டும்.

## தேவனுக்குப் பயப்படுதல் என்றால் என்ன?

*காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. (பிரசங்கி 12:13)*

தேவனுக்கு பயப்படுதல் என்றால் அவரைக் கண்டு பயந்து நடுங்குவது என்று அர்த்தம் அல்ல. அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தைகளைக் கடைபிடிப்பதாகும். **அவருடைய கற்பனையை கைக்கொள்வதே 'தேவனுக்கு பயப்படுதல்' என்கிற சொற்றொடருக்கான அர்த்தம்.** இதன் கருத்தை தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு ஆதியாகமம் புத்தகத்திலிருந்து ஒரு சம்பவத்தைப் பார்ப்போம்.

*அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்றான். அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். (ஆதியாகமம் 22:11,12)*

இங்கே தேவன், நீ உன்னுடைய பிள்ளையை எனக்கு தந்ததினால், நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று நான் இப்போது அறிந்திருக்கிறேன் என்று கூறுகிறார். இங்கே ஆபிரகாம் பயந்து நடுங்குகிறான் என்று அர்த்தமல்ல. ஆபிரகாம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, அவருக்கு கீழ்ப்படிந்து, தன் ஒரே மகனையும் பலியாக ஒப்புக்கொடுத்தார். இதன்படி - **கீழ்ப்படிதலை, "பயப்படுதல்" என்று வேதம் கூறுகிறது.** தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி வாழ வேண்டும் என்பதே கடைசிகாலத்தில் நாம் அறிவிக்க வேண்டிய ஒரு தூது.

## தேவனை மகிமைப்படுத்துங்கள் என்றால் என்ன?

*இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5:16)*

நாம் நல்ல காரியங்களை செய்யும்போது, அதைப் பார்த்து பரலோகத்தில் இருக்கிற பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்துவார்களாம். நாம் நல்ல விதமாய் நடந்துகொள்ளும்போது சமுதாயத்திலே இவர்களெல்லாம் கிறிஸ்தவர்கள், இவர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்று கூறினார்கள் என்றால் அங்கு யாருடைய நாமம் மகிமைப்படுகிறது? இயேசு கிறிஸ்துவின் நாமமே மகிமைப்படுகிறது. தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள் என்றால் என்ன? **தேவனை மகிமைப்படுத்தும்படியாக நாம் வாழ்வது, தேவனுக்கு உண்மையாக வாழ்ந்து மற்றவர்களுக்கு தேவனுடைய அன்பை வெளிப்படுத்தும்போது, அவர்கள் அதைப் பார்த்து பிதாவின் நாமத்தையும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தையும் மகிமைப்படுத்துவார்கள்.** தேவனுக்கு பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள் என்றால் என்ன அர்த்தம்? தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்து மற்ற எல்லோரும் தேவனுடைய நாமத்தை துதிக்கத்தக்க வாழ்க்கையை வாழ்வதுதான்.

## ஓய்வுநாள் - சிருஷ்டிப்பின் அடையாளம்

அடுத்ததாக வானத்தையும், பூமியையும், நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடவுளை தொழுதுகொள்ளுங்கள் என்று

சொல்லியிருக்கலாம். ஆனால், எதற்காக **வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும், நீரூற்றுகளையும், உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது?** சிருஷ்டிப்பின் தேவனையே தொழுதுகொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. **நம்மைப் படைத்தவரை மட்டுமே தொழுதுகொள்ளவேண்டும்.** மற்ற எதையும் நாம் தொழுதுகொள்ளக்கூடாது என்பதே இதன் அர்த்தம். யார் நம்மைப் படைத்தவர்? அவரைக் கண்டுப்பிடிப்பதற்கான அடையாளம் என்ன? அந்த அடையாளம் எங்கு இருக்கிறது. இவைகளை அறிந்துகொள்வதற்கு நாம் படைப்பின் சரித்திரத்தைப் படிக்கவேண்டும். ஆதியாகமம் புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரங்களைப் படிக்கும்போது, தேவன் ஆறு நாளுக்குள்ளாக அனைத்தையும் படைத்தார் என்றும், ஏழாம் நாள் படைப்பின் அடையாளமாகவும், தேவனுடைய நாளாகவும் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். அதன் காரணமாக தேவன் அந்த நாளைப் பரிசுத்தப்படுத்தி, அதை ஆசீர்வதித்தார். இந்த ஏழாம் நாளை ஓய்வுநாள் என்று வேதம் சொல்லுகிறது. இந்த ஓய்வுநாளைப் பற்றி பத்துக் கட்டளைகளில் படிக்கும்போது, சிறப்பான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

*ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே* ***வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்;*** *ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். (யாத்திராகமம் 20:8-11)*

இங்கே வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் தேவன் ஆறு நாளுக்குள்ளே உண்டாக்கி, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று நான்காம் கற்பனை கூறுகிறது. இதே வார்த்தைகளைத்தான் *வெளிப்படுத்தல் 14:7*-ம் வசனத்தில் பார்க்கிறோம்.

வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் படைத்த தேவனே மெய்யான தேவன் என்பதற்கும், வேதம் சொல்லும் அனைத்தும் சத்தியம் என்பதற்கும் சாட்சியாக விளங்குவது வாரச் சுழற்சியாகும். ஒரு நாள் எப்படி கணக்கிடப்படுகிறதென்றும், ஒரு மாதம் எப்படி கணக்கிடப்படுகிறதென்றும், ஒரு ஆண்டு எப்படி கணக்கிடப்படுகிறதென்றும் விஞ்ஞானப் பூர்வமாக விளக்கம் சொல்லலாம். ஆனால், **ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள் எப்படி வந்தது என்பதற்கு விஞ்ஞான பூர்வமான எந்த விளக்கமும் கிடையாது.** இதற்கு விடை கூகுளிலும் இல்லை. **ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள் என்கிற கணக்கை விளக்கும் ஒரே புத்தகம் வேதம் மட்டுமே.** தேவன் ஆறு நாட்களுக்குள்ளாக உலகத்தில் உள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்பதே இதற்கான விளக்கம்.

## ஓய்வுநாள் - ஞாயிற்றுக்கிழமையா?

சாத்தானுடைய வஞ்சகத்தின் காரணமாக ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக மாற்றினார்கள். இன்று கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் ஞாயிற்றுக்கிழமையையே ஓய்வுநாளாக ஆசரிக்கிறார்கள். **தேவன் பரிசுத்தப்படுத்தி, ஆசீர்வதித்து, சிருஷ்டிப்பின் அடையாளமாக வைத்த ஏழாம் நாளான சனிக்கிழமையை உலகம் மறந்துபோனது.** இந்த முதலாம் தூதின் ஒரு பகுதியாக: முதல் நாள் தேவனுடைய நாள் அல்ல, ஏழாம் நாளே தேவனுடைய நாள். அவரே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் உண்டாக்கினவர் என்பதற்கான அடையாள நாளாக அது இருக்கிறது. **அந்த நாளில்தான் சபைகூடுதலை ஆசரிக்க வேண்டுமென்று உலகத்திற்கு அறிவிக்க வேண்டும்.**

## நியாயத்தீர்ப்பு

இந்த முதல் தூதில் சொல்லப்படும் மற்றொரு முக்கிய காரியம் நியாயத்தீர்ப்பை பற்றியது. **நியாயத்தீர்ப்பு எப்பொழுது துவங்கியது?**

*கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். (ஏசாயா 34:16)*

நாம் வேதத்தை தேடி வாசிக்கவேண்டும். தேடி வாசிக்கும்போது, புரியாத சத்தியங்களையும் புரிந்துகொள்ளலாம். தேவன் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது என்று வசனம் கூறுகிறது. அது எப்பொழுது வந்தது என்பதை அறிவதற்கு, நியாயத்தீர்ப்பைப் பற்றி வேதத்தில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். இந்த ஆராய்ச்சியை தானியேல் புத்தகத்திலிருந்து துவங்க வேண்டும். ஏனென்றால், வெளிப்படுத்தல் புத்தகத்திற்கும், தானியேல் புத்தகத்திற்கும் நேரடி தொடர்பு உள்ளது.

*நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போலத் துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. (தானியேல் 7:9,10)*

**பூலோக நீதிமன்றம் போன்று பரலேகத்தில் ஒரு நீதிமன்றம் இருப்பதைப்போல இந்த வசனத்தில் பார்க்க முடிகிறது.** இங்கே தானியேலுக்கு கிடைத்த தரிசனத்தில், பரலோக சிங்காசனத்தில் நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருக்கிறார். அது பிதாவானவரைக் குறிக்கிறது. அங்கு ஆயிரம் ஆயிரம் பேர் கோடான கோடி பேர் அவருக்கு முன்பாக நிற்கிறார்கள். சேவித்துக்கொள்கிறார்கள். நியாயசங்கம் உட்கார்ந்தது. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. நியாயசங்கம் என்பது நியாயத்தை வழங்கக்கூடிய ஒரு இடம். பிரச்சனைகளை விசாரிக்ககூடிய இடம்,

நீதிமன்றம் என்றும் சொல்லலாம். இந்த நியாயசங்கம் பரலோகத்திலே கூட்டப்பட்டது. அப்படி என்றால் அங்கு என்ன நடக்கிறது நியாயத்தீர்ப்பு நடக்கிறது. தானியேலுக்கு கொடுக்கப்பட்ட இந்த தரிசனம் நியாயத்தீர்ப்பைப் பற்றின தரிசனமாக இருக்கிறது. இங்கு புத்தகங்கள் திறக்கப்பட்டதாக வசனம் கூறுகிறது. இங்கே திறக்கப்பட்ட இந்தப் புத்தகங்கள் எவை?

### சாட்சியிடும் புத்தகங்கள்

*அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. (பிலிப்பியர் 4:3)*

### 1. ஜீவ புத்தகம்

**ஜீவ புத்தகம் என்று ஒரு புத்தகம் இருக்கிறது. அதில் தேவனை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு பிள்ளைகளுடைய நாமமும் எழுதப்பட்டிருக்கிறது. இதுவே பரலோகத்தில் உள்ள முதல் புத்தகம்.**

### 2. ஞாபகப் புத்தகம்

*அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. (மல்கியா 3:16)*

**கர்த்தருக்கு பயந்திருக்கிறவர்களுக்காகவும், அவருடைய நாமத்தை தியானிக்கிறவர்களுக்காகவும் தேவன் ஞாபகப் புத்தகத்தைப் பரலோகத்தில் வைத்திருக்கிறார்.** அந்த புத்தகத்திலே நம்மைப் பற்றிய நல்ல காரியங்கள் அனைத்தும் பதிவு செய்யப்படும். தேவனுக்காக நாம் சிந்தின கண்ணீர், அவருக்காக பட்ட கஷ்டங்கள், அவமானங்கள் சகித்துக்கொண்ட ஏளனமான பேச்சுக்கள் அனைத்தையும் தேவன் ஞாபகப்புத்தகத்தில் எழுதி வைத்திருப்பார். இதன்படி, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின், நம்முடைய பெயர் ஜீவப்புஸ்தகத்திலும், நாம் செய்த நல்ல காரியங்கள் அனைத்தும் ஞாபகப் புஸ்தகத்திலும் இடம்பெறும் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

### 3. பாவப் புத்தகம்

மூன்றாவது புஸ்தகம் மற்ற புத்தகங்களைப் பார்க்கிலும் எதிர்மறையானது. மூன்றில் ஒரு பங்கு என்ற கணக்கை ஏழு எக்காளங்களில் பார்த்திருக்கிறோம். மூன்றில் ஒன்று என்பது விழுந்துபோன தூதர்களைக் குறிக்கிறது. மூன்றில் ஒருபங்கு சேதப்பட்டு போகிறது என்றால், பூமியில் உள்ள அனைவருக்கும் நியாயத்தீர்ப்பு கிடையாது. விழுந்துபோன மூன்றில் ஒரு பங்கு துன்மார்க்கர்களுக்குத்தான் நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது. மூன்றில் ஒன்று என்பது தீர்க்கதரிசனத்தின்படி எதிர்மறையான காரியமாக இருக்கிறது. மூன்றில் ஒன்றான இந்த கடைசிப் புத்தகத்தின் பெயர் பாவப் புத்தகம்.

*இதோ, அது எனக்கு முன்பாக எழுதியிருக்கிறது; நான் மவுனமாயிராமல் சரிக்குச் சரிக்கட்டுவேன். உங்கள் அக்கிரமங்களுக்கும் மலைகளில் தூபங்காட்டி, மேடைகளின்மேல் என்னை நிந்தித்த உங்கள் பிதாக்களுடைய அக்கிரமங்களுக்கும் தக்கதாக அவர்கள் மடியிலே சரிக்கட்டுவேன்; நான் அவர்கள் முந்தின செய்கையின் பலனை அவர்கள் மடியிலே அளப்பேனென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 65:6,7)*

**நாம் செய்த அக்கிரமங்கள் அனைத்தையும் தேவன் எழுதி வைத்திருக்கிறார்** என்று வசனம் கூறுகிறது. இங்கே பாவப் புத்தகத்தைக் குறித்தே வசனம் கூறுகிறது.

உலகத்தில் உள்ள நீதிமன்றங்களில் குற்றவாளிகளை விசாரணை செய்வார்கள். ஆனால், பரலோக நீதிமன்றத்தில் மனிதர்கள் யாரும் விசாரிக்கப்படமாட்டார்கள். விசாரிக்கப்படும் நபருக்கு பதிலாக புத்தகங்களில் பதிவு செய்யபட்ட அவர்களுடைய செய்கைகள் பேசும்.

## நியாயவிசாரணை

யாருடைய வழக்கு முதலில் விசாரிக்கப்படும்? **நியாயத்தீர்ப்பு அவருடைய வீட்டிலிருந்து தொடங்கும் (1 பேதுரு 4:17) என்று வேதம் கூறுகிறது.** அதாவது ஆதாமிலிருந்து யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மரித்தார்களோ, அவர்களுடைய வழக்குகள் முதலில் விசாரிக்கப்படும். வழக்குகள் எந்த அடிப்படையில் விசாரிக்கப்படும்? ஆதாமுடைய வழக்கு முதலில் விசாரிக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். முதலில் பாவப் புத்தகத்தில் உள்ள அவருடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டதா என்று பார்க்கப்படும். ஆதாமுடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டிருந்தால், அவர் பரலோகத்திற்குப் பாத்திரவானாக எண்ணப்படுவார். ஒருவேளை பாவப் புத்தகத்தில் ஆதாமுடைய பெயரில் மன்னிக்கப்படாத பாவங்கள் எதாவது இருந்தால், அவருடைய பெயர் ஜீவப் புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும். இங்கே தேவன் நீதிபதியாகவும், இயேசு கிறிஸ்து வக்கீலாகவும் செயல்படுவார்.

மோசேயின் சரித்திரத்தைப் பார்க்கும்போது தேவன் இஸ்ரவேல் ஜனங்களை அழிப்பேன் என்று கூறியபோது, மோசே ஜீவப் புத்தகத்திலிருந்து என்னுடைய பெயரை கிறுக்கிப் போடுங்கள் (யாத் 32:32) என்று கூறுவார். இதன்படி நியாயத்தீர்ப்பைக் குறித்த காரியங்களை மோசே அறிந்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.


இந்த நியாயத்தீர்ப்பு எப்பொழுது தொடங்கியது? நியாயத்தீர்ப்பு தொடங்கிய காலத்தை அறிந்துகொள்வதற்கு மீண்டும் வேதத்தை தேட வேண்டும். இந்தக் கேள்விக்கும் பதில் தானியேல் புத்தகத்தில்தான் இருக்கிறது.

*அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான். (தானியேல் 8:14)* (வரைபடம் - பக்கம் 191)

**பரிசுத்த ஸ்தலத்தின் சுத்திகரிப்பு என்பது பாவ நிவாரண நாள் பண்டிகையை குறிக்கிறது. அந்த பண்டிகையின்போது, பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வார். தேவன் அந்த நாளில் மக்களை நியாயம்தீர்ப்பார். அந்த நாளில் மக்கள் ஆண்டவர்**

**சமுகத்தில் தங்களைத் தாழ்த்தியிருக்க வேண்டும். இது நியாயத்தீர்ப்பை குறிக்கிற ஒரு பண்டிகை.(லேவியராகமம் 16:29-31)** இந்த 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்திற்கும், நியாயத்தீர்ப்பிற்கும் தொடர்பு இருக்கிறது என்பதை ‘பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்’ என்ற சொற்றொடரை வைத்து கண்டுபிடிக்கலாம். 2300 இராப்பகல் என்பது 2300 நாட்களைக் குறிக்கிறது. தீர்க்கதரிசன கணக்கின்படி **2300 நாட்கள் என்பது 2300 வருடங்களைக் குறிக்கிறது.** இதன்படி 2300 வருடங்கள் முடிவடையும்போது நியாத்தீர்ப்பு பரலோகத்தில் ஆரம்பமாகும் என்பதை அறிந்துகொள்ளலாம். ஆனால், இந்த 2300 வருடங்களின் கணக்கு எந்த வருடத்தில் துவங்குகிறது என்பதைக் கண்டுப்பிடித்தால் மட்டுமே நியாயத்தீர்ப்பின் ஆரம்ப காலத்தைக் கண்டுப்பிடிக்க முடியும். இந்த ஆரம்பப் புள்ளியை அறிந்துகொள்ள மீண்டும் வேதத்தை தேட வேண்டும். மீண்டுமாக இந்தக் கேள்விக்கான விடையும் தானியேல் புத்தகத்தில்தான் கொடுக்கப்பட்டுள்ளது.


*இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும். (தானியேல் 9:25)* (வரைபடம் - பக்கம் 191)




இந்த எழுபது வார தீர்க்கதரிசனம் என்பது 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தின் முதல் பகுதியாகும். **எருசலேம் ஆலயம் மீண்டும் எடுத்துக்கட்டப்படுவதற்கு கட்டளை வெளிப்படும் காலமே எழுபது வார தீர்க்கதரிசனத்தின் ஆரம்பமாகும். இந்த எழுபது வார தீர்க்கதரிசனத்தின் ஆரம்பமும், 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தின் ஆரம்பமும் ஒரே காலத்தையே குறிக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.**

எருசலேம் ஆலயம் எப்பொழுது மீண்டும் கட்டுகிறார்கள்? எஸ்றா மற்றும் நெகேமியாவின் காலத்தில், அதற்கான கட்டளையை அர்த்தசாஸ்டா என்ற ராஜா கொடுக்கிறார். அந்த கட்டளை கொடுக்கப்பட்ட ஆண்டு கி.மு. 457 என்று வரலாறு கூறுகிறது. இதன்படி கி.மு. 457-ம் ஆண்டிலிருந்து 2300 வருடங்களைக் கணக்கிட்டால் கி.பி. 1844-ம் ஆண்டில் இந்த தீர்க்கதரிசனம் முடிவடையும் என்பதை அறிந்துகொள்ளலாம். இந்த

தீர்க்கதரிசன கணக்கை வில்லியம் மில்லர் தன்னுடைய வேத ஆராய்ச்சியின் மூலம் புரிந்துகொண்டார். எதற்காக கி.பி. 1844, அக்டோபர் 22-அன்று இந்த 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம் முடிவடைகிறது என்று மில்லரைட் இயக்கத்தினர் முடிவு செய்தார்கள்?




*அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள். (லேவியராகமம் 23:27)*

## பாவநிவாரண நாள் (லேவியராகமம் 16)

ஏழாம் மாதம் பத்தாம் தேதி பாவநிவிர்த்தி செய்யும் நாள் என்று வசனம் கூறுகிறது. யூதர்களின் நாட்காட்டியின்படி கி.பி. 1844-ம் ஆண்டில் ஏழாம் மாதம் பத்தாம் தேதி அக்டோபர் 22-ஐ காட்டியது. அதன் காரணமாகவே குறிப்பிட்ட இந்த நாளில் இந்த தீர்க்கதரிசனம் நிறைவடைந்தது என்று கணக்கிடப்பட்டது. இதன்படி பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்து கி.பி. 1844, அக்டோபர் 22-அன்று பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப்போய் நியாயத்தீர்ப்பை தொடங்குவார் என்பதே இந்த தீர்க்கதரிசனம்.

இஸ்ரவேல் மக்கள் ஏழு பண்டிகைகளை கொண்டாடுவார்கள். ஒவ்வொரு பண்டிகையும் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை குறிக்கிறது. இதில் 6-வது பண்டிகை தான் பாவநிவாரண நாள். இந்த பண்டிகையில் என்ன நடக்கும்? அந்த நாளை உபவாச நாளாக இஸ்ரவேல் மக்கள் கடைபிடித்தார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரித்து, ஜனங்களின் பாவ மன்னிப்பிற்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்வது வழக்கமாக இருந்தது. ஒரு வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் போக முடியும். இந்த நாளில் அனைவருடைய வழக்கையும் தேவன் திருப்பிப் பார்ப்பார். அந்த நேரத்தில் மக்கள் உபவாசம் செய்து பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும். ஒரு வேளை பாவம் அறிக்கை செய்யப்படாமல் இருந்ததானால், அந்த நபர் இஸ்ரவேல் தேசத்திலிருந்து அறுப்புண்டு போவான் என்பதாக வேதம் கூறுகிறது.

இந்த பண்டிகையின் வழக்கத்தின்படியே பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகாபரிசுத்த ஸ்தலத்திற்குப்போவார். அங்கே நியாய விசாரனை ஆரம்பமாகும். பரலோகத்தில் எப்படி நியாயத்தீர்ப்பு நடக்கப்போகிறது என்பதை மனிதர்கள் உணர்ந்துகொள்ளும்படியாகவே தேவன் இந்தப் பண்டிகையை வைத்திருக்கிறார். நியாயத்தீர்ப்பு நாளில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். **இயேசு கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தில் பிதாவுக்கு முன்பாக நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நம்முடைய பாவம் மன்னிக்கப்படாமல் இருந்ததானால், ஜீவப் புஸ்தகத்திலிருந்து நம் பெயர் கிறுக்கிப்போடப்படும்.** இதை நாம் உணர்ந்துகொள்வதற்காக பாவநிவாரண பண்டிகை கொண்டாடப்பட்டது.

பரலோகத்தில் நியாயத்தீர்ப்பு துவங்கப்பட்டு சுமார் 170 வருடங்களுக்கு மேலாக ஆகிவிட்டது. இயேசு கிறிஸ்து நியாயத்தீர்ப்பின் வேலையைத் தொடங்கிவிட்டார். பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் போய்விட்டார். அங்கே ஆதாம் முதற்கொண்டு ஒவ்வொருவருடைய வழக்கையும் பார்த்துக்கொண்டு இருக்கிறார். நம்முடைய வழக்கு எப்பொழுது விசாரணைக்கு வரும் தெரியாது. திடீரென்று நாளைக்கே நம் வழக்கை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எடுத்துப் பார்க்கும்போது, பாவ புத்தகத்தில் நம்முடைய பாவம் மன்னிக்கப்படாமல் இருந்ததானால், நிச்சயமாக நம்முடைய பெயர் ஜீவப்புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும்.

பாவப் புத்தகத்திலே நம்முடைய பாவம் ஒன்றும் இருக்கக்கூடாது. அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடவேண்டும். தேவனுக்கு பயந்து அவருக்கு மகிமையாக வாழவேண்டும்.

நமக்காக வாதாடுவதற்காக இயேசு கிறிஸ்து இருக்கிறார். நம் பாவத்தை மாத்திரம் விட்டுவிட்டு அவரிடத்தில் வந்தோமென்றால், அவர் நம்மை பரிசுத்தப்படுத்தி அவருடைய குணங்களையும், அவருடைய நீதியையும் நமக்குள் வைப்பார். தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமானாக வைப்பார். இந்த மாபெரும் சத்தியத்தை உலகத்திற்கு சொல்லுவதற்காகத் தான் தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

## எதற்காக கால தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டது?

1. முதலாவதாக, (தானியேல் 9:24-27 - 70வார தீர்க்கதரிசனம்) கி.மு. 457 - எருசலேம் ஆலயம் மீண்டும் கட்டப்படுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தக் காரியம் பூமியில் தான் நடந்தது.

2. **கி.பி. 27 - இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம்** எங்கு நடந்தது? பூமியில் தான் நடந்தது.

3. **கி.பி. 31 - இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்.** அதுவும் பூமியில்தான் நடந்தது.

4. **கி.பி. 34 - ஸ்தேவான் கல்லெறியப்பட்டான்.** அதுவும் பூமியில்தான் நடந்தது.

5. அதற்குப்பின், **1260 வருட தீர்க்கதரிசனம் போப்பின் ஆட்சிக்காலத்தின் முடிவு (கிபி 1798).** அதுவும் பூமியில்தான் நடந்தது.

6. **கி.பி. 1840 - ஒட்டமன் ராஜ்யத்தின் வீழ்ச்சி** அதுவும் பூமியில் தான் நடந்தது.

**7. ஆனால், கி.பி. 1844-ல் முடிந்த 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தின் முடிவு பூமியில் நடைபெறவில்லை. பரலோகத்தில் நடந்தது.**

கி.பி. 1844-ம் ஆண்டில் பரலோகத்தில் நடக்கப்போகும் காரியத்தை நம்பவைப்பதற்காகவே அனைத்து காலத் தீர்க்கதரிசனங்களும் பூமியில் நிறைவேறியது. பூமியில் நிறைவேறிய 6 தீர்க்கதரிசனங்களை பார்க்க முடியும். பரலோகத்தில் நடந்த 7வது தீர்க்கதரிசனத்தை பார்க்கமுடியாது. ஆனால், இதுவரை நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் சரியாக, துல்லியமாக நிறைவேறியதால், இந்த 7வது தீர்க்கதரிசனமும் சரியாகத்தான் இருக்கும் என்று புரிந்துகொள்ள முடியும்.

**காலத் தீர்க்கதரிசனங்களில், ஆறு தீர்க்கதரிசனங்கள் பூமியில் நிறைவேறியது. ஏழாவது தீர்க்கதரிசனம் மட்டும் பரலோகத்திலே நிறைவேறியது.** இந்த மாபெரும் தேவ இரகசியத்தை மனிதர்கள் தெரிந்துகொள்ள கூடாது என்பதற்காகவே சாத்தான் பல கள்ள கிறிஸ்துக்களையும், கள்ளத்தீர்க்கதரிசிகளையும் கள்ளத் திருச்சபைகளையும், கள்ள உபதேசங்களையும் உலகிற்கு கொண்டுவந்தான். இந்த மெய்யான சுவிசேஷத்தை ஒருவரும் அறியக்கூடாது என்பதற்காகவே பல சதிகளை செய்கிறான்.

ஒருவேளை இந்த செய்தியை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் நியாயத்தீர்ப்பைப் பற்றிய அறிவு நமக்கு இருக்காது. நியாயத்தீர்ப்பைப் பற்றின அறிவு இல்லை என்றால் பாவத்தை நாம் உணரமாட்டோம், பாவ அறிக்கை செய்யமாட்டோம். பாவத்தை அறிக்கை செய்யவில்லை என்றால் பாவ புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நம் பாவம் மன்னிக்கபடமாட்டாது. அப்பொழுது ஜீவப் புத்தகத்திலிருந்து நம் பெயர் கிறுக்கிப்போடப்படும். ஆகவே, இந்த முக்கியமான சத்தியத்தை அறிந்த நாம், இதை உலகிற்கு வெளிப்படுத்துவோம். அழிவிலிருந்து மக்களை காப்பாற்றுவோம். இதுவே தேவன் நமக்கு கொடுத்த மாபெரும் கடமை.

அத்தியாயம் – 10

# நியாயம்தீர்க்கும் தேவன்




**ஆலோசனை: வெளிப்படுத்தல் 15-18 அதிகாரங்களைப் படித்துவிட்டு, இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

## இரண்டாம் தூது

*வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான். (வெளிப்படுத்தல் 14:8)*

*வெளிப்படுத்தல் 14*-ம் அதிகாரத்தில் உலகத்திற்கு அறிவிக்கவேண்டிய மூன்று முக்கியமான தூதுகள் இருக்கிறது. அதில் முதல் தூது நியாயத்தீர்ப்பை பற்றினதாக இருக்கிறது. பாபிலோன் விழுந்தது! விழுந்தது! என்று கூறும் இரண்டாவது தூது எதைப் பற்றியது? **பாபிலோன் என்கிற பொய் திருச்சபைகளையும், அதனுடைய பொய் போதகத்தையும் பற்றியது.** இதைப் பற்றி வெளிப்படுத்தல் 14 மற்றும் 17 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பாபிலோன் என்னும் வேசி

இந்த வசனத்தில் பாபிலோனை ஒரு பெண்ணாக பாவித்து பேசப்படுகிறது. இந்த வசனத்திற்கான விளக்கத்தை அறிந்துகொள்வதற்கு நாம் *வெளிப்படுத்தல் 17*-ம் அதிகாரத்தைப் படிப்பது அவசியம். அங்கே வேசித்தனம் செய்யும் ஒரு ஸ்திரீயைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இந்த இரண்டாம் தூது எதற்காக கொடுக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ளலாம். பாபிலோனைப் பற்றின முழு விவரங்களை அறிந்தால் மட்டுமே இந்த தூதின் கருத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

*வெளிப்படுத்தல் 17*-ம் அதிகாரத்தில் அந்த வேசியினுடைய தலையில் பாபிலோன் என்னும் நாமம் எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால், பாபிலோன் என்பது இந்த வேசியைத்தான் குறிக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

## திரளான தண்ணீர்மீது அமர்ந்திருக்கும் வேசி

*ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகாவேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே; (வெளிப்படுத்தல் 17:1)*

(வரைபடம் - பக்கம் 199)

திரளான தண்ணீர் மீது ஒரு மகா வேசி உட்கார்ந்திருக்கிறாள். அந்த வேசியிடம் பூமியின் இராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்கள். அவள் தன் வேதித்தனமாகிய மதுவை பூமியிலிருக்கிறவர்களுக்கும் குடிக்கக் கொடுத்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே திரளான தண்ணீர் எதைக் குறிக்கிறது?

*பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம். (வெளிப்படுத்தல் 17:5)*

**அந்த திரளான தண்ணீர் ஜனங்களைக் குறிக்கிறது.** இதன்படி அந்த வேசி ஜனத்தின் மீது உட்கார்ந்திருக்கிறாள் என்பதே வசனத்தின் பொருள். ஒருவன் மீது மற்றொருவன் அமர்ந்தால் என்ன அர்த்தம்? மேலே இருக்கிறவன், கீழே இருக்கிறவனைக் கட்டுப்படுத்துகிறான் என்றே அர்த்தம். அதைப்போல் **இந்த வேசி ஜனத்தின்மேல் அமர்ந்திருக்கிறாள்**

**என்பது அவள் ஜனத்தைக் கட்டுப்படுத்துகிறாள் அல்லது ஆளுகை செய்கிறாள்** என்பதையே குறிக்கிறது.



**வேசித்தனமாகிய மது:**

இந்த வேசி எப்படி ஜனங்களைக் கட்டுப்படுத்துகிறாள்? தன் மதுவால். **மது என்பது கள்ள உபதேசத்தைக் குறிக்கிறது.** கிறிஸ்துவைப் பற்றின தன்னுடைய பொய்யான உபதேசத்தால், பொய்க்கு கீழாக ஜனங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறாள். உலகத்தில் உள்ள அனைவரும்

மோசம் போனார்கள். உலகத்தில் உள்ள அனைவரும் மிருகத்தையும் அதற்கு அதிகாரம் கொடுத்த வலுசர்ப்பத்தையும் தொழுதுகொண்டார்கள் என்று *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அங்கே சொல்லப்பட்டிருக்கும் மிருகமும், இங்கே சொல்லப்பட்டிருக்கும் வேசியும் ஒன்றே.

இந்த **மிருகம் போப்பைக் குறிக்கிறதாகப் பார்த்தோம்.** போப்பையும், அந்த வலுசர்ப்பத்தையும் மக்கள் வணங்குகிறார்கள். இது அவர்களுடைய அரசியல் வல்லமையைக் குறிக்கிறது. இங்கு இருக்கிற **வேசி விழுந்துபோன சபையைக் குறிக்கிறது. அந்த சபை ரோமன் கத்தோலிக்க சபைதான்.** *வெளிப்படுத்தல் 17*-ம் அதிகாரம் மத வல்லமையைப் பற்றி பேசுகிறது. தன்னுடைய பொய்யான மத உபதேசத்தால் பூமியிலுள்ள எல்லோரையும் இந்த சபை மோசம் போக்கினது. அப்படிப்பட்ட அதிகாரத்தை வைத்துக்கொண்டு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களுடைய இரத்தத்தை சிந்தினது என்று பார்த்தோம். அரசியல் வல்லமையை வைத்து பரிசுத்தவான்களை எல்லாம் அழித்தது.

## பூமியின் ராஜாக்களோடே வேசித்தனம் பண்ணினாள்:

அடுத்ததாக மகா வேசி பூமியின் ராஜாக்களோடு வேசித்தனம்பண்ணினாள் என்று பார்க்கிறோம். அந்த வேசி ஒரு மிருகத்தின் மீது உட்கார்ந்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசனத்தில் **மிருகம் என்பது ராஜ்யத்தைக் குறிக்கிறது.** *தானியேல் 7*-ம் அதிகாரத்தில் நான்கு மிருகங்களைப் பற்றி பார்க்கிறோம். அந்த நான்கு மிருகங்களும் நான்கு ராஜ்யங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால், மிருகத்தின் மேல் இந்த வேசி உட்கார்ந்திருக்கிறாள் என்பது எதைக் குறிக்கிறது? ராஜாக்களோடு இணைந்திருக்கிறாள். வேசித்தனம் பண்ணுகிறாள் என்பதைதான் குறிக்கிறது.

*நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான். (வெளிப்படுத்தல் 17:18)*

அந்த ஸ்திரீ பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரம் என்று வசனம் கூறுகிறது. அதன் காரணமாகவே அந்த மிருகத்தின்மீது அந்த ஸ்திரீ அமர்ந்திருக்கிறதுபோல இந்த தரிசனம் காட்டப்படுகிறது. அந்த மிருகம் பூமியின் ராஜாக்களைக் குறிக்கிறது. **பூமியின் ராஜாக்கள்மீது ராஜ்யபாரம் பண்ணுகிற ஒரு பெண்ணாக விழுந்துபோன சபை இங்கே சித்தரிக்கப்பட்டிருக்கிறது.**

அப்படியானால், இந்த உருவகங்களை வைத்துப் பார்க்கும்போது விழுந்துபோன ஒரு திருச்சபையைத் தான் குறிக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். **விழுந்துபோன திருச்சபை உலக அரசாங்களோடு தொடர்பு உடையதாக இருக்கும்.** அதுமட்டுமல்லாமல், அவர்களை ஆளுகை செய்யும். உலகத்திலேயே ஒரு திருச்சபை, ராஜாக்களை கட்டுப்படுத்தியது என்றால் அது ரோமன் கத்தோலிக்க திருச்சபை மாத்திரமே. வேறு எந்த திருச்சபையும் உலக சரித்திரத்திலே ராஜாக்களை அல்லது ராஜ்யங்களைக் கட்டுப்படுத்தி, ராஜாக்கள் என்ன செய்யவேண்டுமென்றும், அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்றும் சட்டம் போடவோ, கட்டுப்படுத்தவோ கிடையாது.

## ஏழு தலைகள் மற்றும் 10 கொம்புகள் உள்ள மிருகத்தின்மீது அமர்ந்திருக்கும் ஸ்திரீ:

*வெளிப்படுத்தல் 17:2,3* வசனங்களில் ஒரு மிருகம், அந்த மிருகத்திற்கு 7 தலைகள் 10 கொம்புகள். அந்த மிருகத்தின் மீது இந்த ஸ்திரீ இருப்பதுபோல காண்பிக்கப்படுகிறது. இந்த மிருகம் எந்த ராஜ்யத்தைக் குறிக்கிறது? ஏன் இந்த மிருகத்திற்கு 7 தலைகளும், 10 கொம்புகளும் இருக்கிறது? 7 தலை என்றால் என்ன? 10 கொம்புகள் என்றால் என்ன?

## ஏழு தலைகள்

*வெளிப்படுத்தல் 17:9*-ம் வசனத்தின்படி 7 தலை என்பது ஏழு மலைகளைக் குறிக்கிறது. மலை என்றால் என்ன? *வெளிப்படுத்தல் 17:10*-ம் வசனத்தின்படி இந்த **மலைகள் ஏழு ராஜாக்களாம்.** இந்த ஏழு ராஜாக்கள் யார் என்று பார்க்கும்போது மூன்று காலங்களைப் பற்றி வசனங்கள் கூறுவதை அறிந்துகொள்ளலாம்.

1. கடந்த காலம் - விழுந்துபோன ஐந்து ராஜாக்கள் யார்?
2. நிகழ்காலம் - இருக்கிற ஒரு ராஜா யார்?
3. வருங்காலம் - வரப்போகிற ஒரு ராஜா யார்?

இந்த மூன்று காலங்களை நாம் எப்படி புரிந்துகொள்வது? *வெளிப்படுத்தல் 17:8*-ம் வசனத்தில் மிருகத்தைப் பற்றின விளக்கத்திலும் மூன்று காலங்களைப் பற்றி பார்க்கமுடிகிறது. முன் இருந்ததாம், இப்பொழுது இல்லையாம், இனிமேல் பாதாளத்திலிருந்து ஏறிவந்து நாசமடையப்போகிறதாம். இங்கே *வெளிப்படுத்தல் 17:8* மற்றும் *10*-ம் வசனங்களுக்கு நேரடி தொடர்பு இருப்பதை அறிந்துகொள்ளலாம். அப்படியானால், இந்த *8-ம்* வசனத்திற்கு கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலத்தை சரியாக கண்டுபிடித்துவிட்டால் எந்த ராஜாக்ளை என்று கண்டுபிடித்துவிடலாம்.

*நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 17:8)*

*உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்யாவரும் அதை வணங்குவார்கள். (வெளிப்படுத்தல் 13:8)*

இந்த இரு வசனங்களுக்கும் நேரடி தொடர்பு உள்ளது. *வெளிப்படுத்தல் 13:8*-ம் வசனத்தில் உள்ள மிருகம் ரோமன் கத்தோலிக்க மார்க்கமே. ஏனென்றால், அந்த மிருகத்தை தான் உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத குடிகள் வணங்குவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரியான சொற்றொடர் *வெளிப்படுத்தல் 17:8*-ம் வசனத்தில் உள்ள மிருகத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மிருகமும் ரோமன் கத்தோலிக்கத்தை தான் குறிக்கிறது என்பது தெளிவடைகிறது.

வேசியும் ரோமன் கத்தோலிக்கத்தை தான் குறிக்கிறது. மிருகமும் ரோமன் கத்தோலிக்கத்தைதான் குறிக்கிறது. பின்னர், எதற்காக இரண்டு விதமாக உருவகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன? **மிருகம் என்பது அரசியல்**

**வல்லமையைக் குறிக்கிறது. வேசி என்பது மதம் சார்ந்த வல்லமையைக் குறிக்கிறது.**

முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை, அது பாதாளத்திலிருந்து ஏறி வரும் என்று சொல்லப்பட்டிருக்கும் மிருகம் யார்?

*பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. (வெளிப்படுத்தல் 13:5)*

தீர்க்கதரிசனக் கணக்கின்படி 42 மாதங்கள் என்பது 1260 வருடங்கள் என்று பார்த்தோம். இதன்படி அந்த மிருகத்தின் ஆட்சி சுமார் 1260 வருடங்கள் நீடிக்கும். வரலாற்றைப் பார்க்கும்போது இந்த தீர்க்கதரிசனத்தின்படி கி.பி.538-ம் ஆண்டில் தொடங்கிய போப்பின் ஆட்சி கி.பி. 1798-ம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. அதற்குப் பின்பு இப்பொழுதுவரை போப்பு மார்க்கம் அரசியல் அதிகாரத்தைப் பெறவில்லை. இந்தக் காரியத்தை "முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை, அது பாதாளத்திலிருந்து ஏறி வரும்" என்கிற வசனத்தின் கருத்தோடுப் பொருத்திப் பார்க்கும்போது: முன்னே இருந்தது என்றால் **கி.பி.538-ம் ஆண்டிலிருந்து கிபி.1798-ம் ஆண்டு வரை** இருந்திருக்கிறது. கி.பி.1798-ம் ஆண்டிற்குப்பின் இல்லை. ஆனால், இந்தப் போப்பு மார்க்கம் மீண்டும் பாதாளத்திலிருந்து மறுபடியும் எழுந்து வரப்போகிறது. அது மீண்டும் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் என்பதையே குறிக்கிறது. இப்பொழுது காலத்தைக் கண்டுபிடித்துவிட்டோம். இதே கருத்தை ஏழு ராஜாக்களுக்கும் பொருத்திப் பார்ப்போம்.

*ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம். அவைகள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை; வரும்போது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்கவேண்டும். (வெளிப்படுத்தல் 17:9,10)*

இங்கே கடந்த காலம் என்பது கி.பி. 1798-ம் ஆண்டிற்கு முந்தைய காலத்தைக் குறிக்கிறது. *தானியேல் 2,7*-ம் அதிகாரங்களில் ராஜ்யங்களின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் பார்க்கிறோம். அதன்படி விழுந்துபோன ஐந்து ராஜாக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?

1. பாபிலோன்
2. மேதியா - பெர்சியா
3. கிரேக்கம்
4. ரோம்
5. ரோமன் கத்தோலிக்கம்

**ஒருவன் இருக்கிறான் என்பது எந்த ராஜ்யத்தைக் குறிக்கிறது?**

ரோமன் கத்தோலிக்கத்திற்குப் பின் வந்தது எந்த ராஜ்யம்? *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தில் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான ஒரு மிருகம் எழும்புகிறது. அது அமெரிக்கா என்று நாம் பார்த்தோம். இப்பொழுதும் அமெரிக்கா உலகத்தைக் கட்டுப்படுத்துவதை நாம் பார்க்க

முடிகிறது. இதன்படி **ஒருவன் இருக்கிறான் என்பது அமெரிக்காவையே குறிக்கிறது.**

### மற்றவன் இன்னும் வரவில்லை வரும்போது அவன் கொஞ்சகாலம் தரித்திருப்பான் என்னும் தீர்க்கதரிசனம் யாரைக் குறிக்கிறது?

காயப்பட்ட மிருகம் சொஸ்தமாகும் என்று *வெளிப்படுத்தல் 13:12*-ம் வசனத்தில் பார்க்கிறோம். சொஸ்தமாகும் என்பதற்கு இழந்த வலிமையைப் பெறும் என்பதே அர்த்தம். **கடைசியாக சொல்லப்படும் ஏழாவது ராஜ்யம் அமெரிக்காவும் ரோமன் கத்தோலிக்கமும் இணைந்து செயல்படும் காலத்தைக் குறிக்கிறது. வெறும் அமெரிக்கா மட்டுமல்ல உலக இராஜ்ஜியங்கள் அனைத்தும் ஒன்றிணைவதை குறிக்கிறது. இதை New World Order என்று சொல்கிறார்கள்.** உலகம் முழுவதும் ஒரு குடைக்குள் வரும். ஒரே அரசாங்கம், ஒரே மதம், ஒரே பொருளாதாரம் என்ற நிலை வரும். பின்பு எல்லோரும் போப்புவுக்கு அதிகாரத்தைக் கொடுப்பார்கள். இந்த காலம் குறுகிய காலமாக இருக்கும். ஏனென்றால் அவன் கொஞ்சக் காலம் தரித்திருப்பான் என்று வசனம் கூறுகிறது. அவர்கள் இரண்டுபேரும் உலகம் அறிய ஒன்று சேர்ந்தப்பின்பு, கொஞ்சகாலத்திலே உலகத்தின் முடிவு வந்துவிடும் என்பதே தீர்க்கதரிசனம்.

வேதத்தில் ஒரு காரியம் மீண்டும் சொல்லப்படும்போது, அது முக்கியத்துவம் வாய்ந்ததென்றும், அதைப் பற்றின கூடுதல் விவரங்கள் கிடைக்கப்போகிறது என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். *வெளிப்படுத்தல் 17*-ம் அதிகாரத்தில் மீண்டும் பாபிலோனைப் பற்றி பார்க்கிறோம். பாபிலோனைப் பற்றின கூடுதல் தகவல்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தில் சாத்தான் எப்படி போப்பின் மூலமாக செயல்படுவான், முத்திரையைக் கொண்டுவருவான் என்பதைப் பார்த்தோம்.

*வெளிப்படுத்தல் 17*-ம் அதிகாரத்தில் அரசாங்கமும், மதமும் இணைந்து செயல்படும்போது என்ன நடக்கும் என்பதைப் பார்க்கிறோம். **அரசாங்கமாக பார்க்கும்போது, மிருகத்தின் முத்திரையைக் கொண்டுவந்து எல்லோரையும் வாங்கவும், விற்கவும் கூடாதபடிக்கு சட்டம் போடுவார்கள். மதமாக பார்க்கும்போது தவறான மத உபதேசங்களை திருச்சபை உலகத்திற்குள்ளாக பரப்பிக்கொண்டு இருப்பார்கள்.** இவர்களுடைய தவறான உபதேசங்களைப் பற்றி ஒரு பெரிய பட்டியலே தயார் செய்யலாம்.

1. சிலைவழிபாடு
2. பாவங்களை மனிதன் மன்னிப்பது
3. பாதிரியாரிடம் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளலாம்
4. பாவத்தை மனிதனிடம் அறிக்கை செய்யலாம் என்று சொல்லுவது
5. போப்பை புனிதர் என்று கூறுவது
6. திருச்சபைக்கு தேவனுடைய பிரமாணத்தை மாற்ற அதிகாரம் இருக்கிறது என்று கூறுவது

7. ஓய்வுநாளை ஏழாம் நாளிலிருந்து முதல் நாளுக்கு மாற்றியது, அதாவது சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றினார்கள். இப்படியாக, இந்த பட்டியல் நீண்டுக்கொண்டே செல்லும்.

மேலும், உலகத்திலே எந்த ராஜ்யங்கள் உலகை ஆளும் என்பதைப் பற்றியும் *வெளிப்படுத்தல் 17*-ம் அதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

### பத்து கொம்புகள்

*நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை; இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். (வெளிப்படுத்தல் 17:12,13)*

ஒரு மணி நேரம் என்பது மிகவும் குறுகிய காலத்தைக் குறிக்கிறது. இந்த பத்து ராஜாக்களும் மிருகத்தோடு இணைந்திருப்பார்களாம். கடைசிகாலத்திலே எல்லா உலக ராஜ்யங்களும் போப்புவை பின்பற்றிப் போகும். பத்து என்பது ஒரு பூரண எண். இந்த **பத்து ராஜாக்கள் என்பது ஒரு அடையாளகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.** இது, எண்ணிக்கையைக் குறிக்காமல் உலகம் முழுவதும் உள்ள அரசியல் அதிகாரத்தைக் குறிக்கிறது. **கடைசிகாலத்தில் அனைத்து தேசங்களின் அரசாங்கமும், போப்புடைய வார்த்தையைச் சட்டமாக ஏற்றுக்கொள்வார்கள்.** போப்புடைய வார்ததையை தேவனுடைய கட்டளையாக ஏற்றுக்கொண்டு செயல்படுவார்கள். கிறிஸ்துவுக்குள் நாம் ஒரே சிந்தையாக இருக்க வேண்டும் என்று வசனம் வாசிக்கிறோம். அந்த வசனத்திற்கு நேர்மாறாக இவர்கள் அனைவரும் போப்புடன் ஒரே சிந்தையாக இருப்பார்கள். ரோமன் கத்தோலிக்கம் - அதாவது போப் அவருடன் சேர்ந்து உலகத்திலுள்ள எல்லா ராஜாக்களும் ஒரே சிந்தையோடு இருப்பார்கள்.

*இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான். (வெளிப்படுத்தல் 17:14)*

ஒரே சிந்தையோடு ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு கிறிஸ்துவோடு யுத்தம் செய்வார்களென்று வசனம் கூறுகிறது. இந்த யுத்தம் எப்பொழுது நடைபெறும்? மிருகத்தின் முத்திரையின் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு, முத்திரையை வணங்காதவர்கள் விற்கவும் வாங்கவும் முடியாத சூழ்நிலை ஏற்படும். அதன் பின்பாக இந்த யுத்தம் நடைபெறும்.

ஞாயிறு ஆசரிப்பின் ஒரு பகுதியாக, ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தமாக ஆசரிக்காத உண்மைக் கிறிஸ்தவர்களை கொலை செய்ய வேண்டுமென்று சட்டம் பிறப்பிக்கப்படும். ஆனால், அந்த யுத்தத்தில் ரோமன் கத்ததோலிக்க மார்க்கமோ, உலகின் அரசியல் அதிகாரமோ வெற்றிபெறாது. இயேசு கிறிஸ்துவே வெற்றி பெறுவார் என்பதை இந்த வசனம் தெளிவுப்படுத்துகிறது.

## இரண்டாம் தூது

*அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம்பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச் செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான். பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். (வெளிப்படுத்தல் 18:2-4)*

**இந்த இரண்டாம் தூதனுடைய செய்தி கி.பி.1844-ம் ஆண்டிலிருந்து பிரசங்கிக்கப்பட்டது.** முதல் தூது - தேவனுக்கு பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள், அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது என்று கூறுகிறது. இதன்படி கி.பி. 1844, அக்டோபர் 22-அன்று நியாயத்தீர்ப்பு துவங்கியது.

இந்தக் கத்தோலிக்க மார்க்கம் தான் வீழ்ந்தது மட்டுமல்லாமல், உலகத்தில் உள்ள மக்களையும் தன் தவறான போதகம் என்னும் மதுவினால் வீழ்த்திக்கொண்டிருக்கிறது. அதன் காரணமாகவே தேவன் தன்னுடைய பிள்ளைகளை எச்சரித்து அவளைவிட்டு வெளியே வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறார். இது ரோமன் கத்தோலிக்க திருச்சபை மட்டுமல்ல, தவறான உபதேசம் செய்கின்ற ஒவ்வொரு திருச்சபைக்கும் பொருந்தும்.

## சிறிய கூட்டம் சொல்லும் பெரிய உண்மை

அவர்கள் செய்கின்ற தவறான உபதேசங்களில் பிரதானமானது மாறுபாடான ஓய்வுநாள் ஆசரிப்பு. ஓய்வுநாளை சனிக்கிழமையிலிருந்து, ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியது ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாரே. இந்த மாற்றத்திற்கான வேலையை கி.பி. 321-ம் ஆண்டு முதல் துவங்கினார்கள். பின்பு ஓய்வுநாளைப்பற்றின வெளிச்சம் கி.பி. 1844-ம் ஆண்டில் தேவனுடைய ஜனக்கூட்டத்திற்கு கொடுக்கப்பட்டது. ஏழாம் நாளாகிய சனிக்கிழமைதான் ஓய்வுநாள் என்று அவர்கள் உலகிற்கு பிரசங்கித்தார்கள். *வெளிப்படுத்தல் 10*-ம் அதிகாரத்தில் சொல்லப்படும் சிறு கூட்டமானது மில்லரைட் இயக்கமாக செயல்பட்டது. பின்னர், அந்தக் கூட்டம் ஏழாம்நாள் அட்வெந்து சபையாக எழும்பியது. அந்த சிறிய கூட்டமே ஏழாவது நாள்தான் உண்மையான ஓய்வுநாள் என்பதை உலகிற்கு அறிவித்தது.

ஓய்வுநாளின் சத்தியத்தோடு சேர்த்து பாபிலோன் மகா நகரம் விழுந்தது. அதிலிருந்தே வெளியே வாருங்கள் என்ற அன்பான அழைப்பும் கொடுக்கப்பட்டது. தன் தவறான உபதேசத்தால் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் பல மக்களையும், பல திருச்சபைகளையும் வீழ்த்தியுள்ளது. ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து வெளியே வந்துவிட்டோம் என்று கூறும் புரோட்டஸ்டன்ட் சபையினரும் ஞாயிறுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கிறார்கள்.

தேவன் எல்லா திருச்சபைகளிலும், எல்லா இடங்களிலும் தம்முடைய பிள்ளைகளை வைத்திருக்கிறார். ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் தேவனுக்கு உண்மையான அநேக பிள்ளைகள் இருக்கிறார்கள். எல்லா திருச்சபைகளிலும், தேவனுக்கு உண்மையான பிள்ளைகள் இருக்கிறார்கள். **எல்லா மதங்களிலும் தேவனுக்கு உண்மையான பிள்ளைகள் இருக்கிறார்கள்.** அவர்கள் அனைவரையும் தேவன் அழைக்கிறார். தேவன் அவருடைய பிள்ளைகளை எங்கே அழைக்கிறார்? **அவருடைய மெய்யான சபைக்கு, அவருடைய மெய்யான ஜனக்கூட்டத்திற்கு, அவருடைய வார்த்தையை சரியாகப் போதிக்கிற இடத்திற்கு அழைக்கிறார்.** மெய்யான ஓய்வுநாளைப் பற்றின செய்தியும், மிருகத்தின் முத்திரை மற்றும் தேவனுடைய முத்திரையைப் பற்றின செய்தியும், கி.பி. 1844-ம் ஆண்டிலிருந்தே பிரசங்கிக்கப்பட்டு வருகிறது.

இந்த முத்தூதின் செய்தியானது சுமார் 170 வருடமாக உலகம் முழுவதிற்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது.

## ஞாயிறு ஆசரிப்பு

தீர்க்கதரிசனத்தின்படி இனி நடக்கப் போகிற காரியம் என்ன? மிருகத்தின் முத்திரை. மிருகத்தின் முத்திரையை கொண்டுவருவற்கான காரியங்கள் கடந்த ஐந்து வருடங்களாக நடந்துகொண்டு இருக்கிறது. போப் ஒரு கடிதம் வெளியிட்டார் (Laudato Si) . அதிலே ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பைக் குறித்து பேசியிருக்கிறார். உலகில் நடக்கின்ற இயற்கை சீற்றங்கள் அனைத்திற்கும் காரணம் ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தமாக ஆசரிக்காததுதான் என்பதே அந்த கடிதத்தின் மையமாக இருக்கிறது. ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக கடைபிடித்து, எந்த நிறுவனமும் இயங்காமல் இருந்தால், புகையினால் உண்டாகும் மாசு கட்டுப்படும், உலகத்திற்கும் மனிதனுக்கும் ஓய்வு கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பரவிக்கொண்டிருக்கும் கொரோனா போன்ற கொள்ளை நோய்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும்போது, அனைவரும் ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டுமென்று சட்டமாக இயற்றப்படும். அந்த சட்டங்களுக்கு கீழ்ப்படியாதவர்கள் விற்கவும் வாங்கவும் கூடாதபடிக்கு தடைகள் போடப்படும்.

## பரலோகத்தில் சம்பவிப்பது என்ன?

இப்படிப்பட்ட காரியங்கள் உலகத்தில் நடக்கும்போது பரலோகத்தில் என்ன சம்பவிக்கும்? இயேசு கிறிஸ்துவானவர் தன்னுடைய ஆசாரிய ஊழியத்தை (நியாயத்தீர்ப்பை) முடித்துவிடுவார். அதன் பின்பு என்ன நடக்கும்?

*இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது; அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். (வெளிப்படுத்தல் 15:5,6)*

இங்கே பரலோகத்தின் தேவாலயம் திறக்கப்படுகிறது. அப்பொழுது ஏழு வாதைகளுடைய தூதர்கள் புறப்பட்டார்கள். தேவாலயம் திறக்கப்பட்டது

எதைக் குறிக்கிறது? இயேசு கிறிஸ்து தன் ஆசாரிய ஊழியத்தை முடித்தார் என்பதைக் குறிக்கிறது. ஏனென்றால், அவர் தன் ஆசாரிய ஊழியத்தை செய்துகொண்டிருக்கும்போது ஆலயம் பூட்டிய நிலையிலேயே இருக்க வேண்டும்.

*அப்பொழுது அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது. அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது. (வெளிப்படுத்தல் 15:7,8)*

## கிருபையின் காலம் முடிவடைதல்

ஒரு பாவி மனந்திரும்புவதற்கான வாய்ப்பு எதுவரை இருக்கிறது? இயேசு கிறிஸ்து பரிந்து பேசும் ஆசாரிய ஊழியத்தை முடிக்கும்வரை பாவிகள் மனந்திரும்புவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. இயேசு கிறிஸ்து நமக்காக பரிந்து பேசினால் மட்டுமே பிதாவினிடத்திலிருந்து மன்னிப்பு கிடைக்கும். இயேசு கிறிஸ்து பரிந்து பேசாவிட்டால் நமக்கு மன்னிப்பு கிடைக்காது. ஆலயம் திறக்கப்படுகிறது என்றால், இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழியத்தை முடித்துவிட்டார், அதாவது நமக்கு கிருபையின் காலம் முடிந்துவிட்டது என்றே அர்த்தம். அதன்பின்பு தண்டனையின் காலம் ஆரம்பமாகும்.

## ஏழு வாதைகள்

இயேசு கிறிஸ்துவின் பரிந்துபேசும் ஊழியம் முடியும்போது, மனம்திரும்பாதவர்களுக்காக அந்த ஏழுவாதைகள் காத்துக்கொண்டிருக்கும். இயேசு கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியம் முடிவடையும்போது, ஏழு தூதர்கள் வாதைகளை பூமியில் ஊற்றுகிறார்கள். ஏன் தேவன் இந்த பூமியின் மீது வாதைகளை ஊற்ற வேண்டும்? தேவன் அன்பானவர் அல்லவோ? வெளிப்படுத்தல் முதல் அதிகாரத்திலிருந்து பார்க்கும்போது தேவனுடைய திருச்சபையை சாத்தான் பலவிதங்களில் துன்பப்படுத்தினான். அநேகரை கொலை செய்திருக்கிறான். அவர்கள் அனைவரையும் தேவன் எதுவரைக்கும் நியாயம் தீர்க்காமல் இருப்பார் என்று கேட்கப்பட்டதாக வசனத்தைப் பார்த்தோம். இதுவரைக்கும் பொறுமையாக இருந்த தேவன் சாத்தானுக்கும் அவனைப் பின்பற்றுகிற ராஜ்யங்களுக்கும், திருச்சபைக்கும் ஒரு முடிவு கட்டுகிறார். என்ன தீமை செய்தார்களோ, என்ன உபத்திரவம் கொடுத்தார்களோ, அதற்கு தக்கபடி இந்த ஏழு வாதைகளையும் ஊற்றுகிறார் என்று *வெளிப்படுத்தல் 16*-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

தேவன் தன்னுடைய ஜனத்திற்காக, தான் நேசிக்கிற ஜனக்கூட்டத்தை துன்பப்படுத்தினவர்கள் மீது இந்த வாதைகளை ஊற்றுகிறார். தனக்கு உண்மையாக இருக்கிற ஜனத்திற்காக நியாயம் தீர்க்கிறார்.

*அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங்களைப்*

*பூமியின்மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன். (வெளிப்படுத்தல் 16:1)*

ஏழு எக்காளங்களின் செய்தியில் ஒரு தூதன் தூபகலசத்தை எடுத்து பூமியிலே கொட்டுகிறார் என்று பார்த்தோம். அதன்படி **தூபகலசத்தை கொட்டும் காரியம் தேவன் நியாயம் தீர்க்கிறார் என்பதைக் குறிக்கிறது.** ஏழு எக்காளங்களின் செய்தியில் தேவன் அந்தந்த காலத்திலே அவருடைய திருச்சபையை உபத்திரவப்படுத்தின எதிரிகளை எப்படி நியாயம் தீர்த்தார் என்று பார்த்தோம். எருசலேமுடைய அழிவும், அதற்குப் பின்பு ரோம ராஜ்யத்தினுடைய வீழ்ச்சியும், அதற்குப் பின்பு ரோமன் கத்தோலிக்கத்தை இஸ்லாமியர் ஒடுக்கியதையும், பிரெஞ்சு புரட்சியையும் பார்த்தோம்.

ஆனால், இந்த ஏழு வாதைகள் எக்காளங்களின் நியாயத்தீர்ப்பிலிருந்து சற்று வித்தியாசமானது. இங்கே கடைசி காலத்திலே உலகம் முழுக்க இருக்கிற துன்மார்க்கர் மீது தேவன் ஊற்றப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து பேசுகிறது.

**மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொண்டவர்களை மட்டுமே, ஊற்றப்பட்ட இந்த வாதை பாதிக்கிறது.** எகிப்தின் ஜனங்களை மோசேயின் மூலமாக தேவன் வாதித்தபோது, அதே இடத்தில் வசித்த இஸ்ரவேலர்களை அந்த வாதைகள் பாதிக்காததுபோல், இந்த வாதைகளும் பூமியில் வாழ்ந்த பரிசுத்தவான்களை பாதிக்காது.

மிருகத்தின் முத்திரையை பெற்றுக்கொள்ளாதவர்கள் வாங்கவும் விற்கவும் கூடாதபடிக்கு சாத்தான் தடைசெய்வான் என்றும், கொலை செய்ய முயற்சி செய்வான் என்றும் *வெளிப்படுத்தல் 13*-ம் அதிகாரத்தில் பார்த்தோம். மனிதர்களுக்கு பயந்து மிருகத்தின் முத்தரையைப் பெற்றுக்கொண்ட அனைவரும் தேவனுடைய கோபாக்கினைக்கு ஆளாவார்கள் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம். தேவனுடைய கிருபையின் காலம் முடிவடைகிறதற்கு முன்பாக அனைவருக்கும் அழைப்பு கொடுக்கப்படும். நோவாவின் காலத்தில் வாழ்ந்த அனைவருக்கும் சுமார் 120 வருடங்களாக பிரசங்கத்தின் மூலம் அழைப்பு கொடுக்கப்பட்டு, பின்னர் பேழையின் கதவு அடைக்கப்பட்டதுபோல, பூமியில் வாழும் அனைவருக்கும் அழைப்பு கொடுக்கப்படுவதற்கு முன்பாக இயேசு கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியம் நிறைவடையாது. அந்த சமயத்தில் வாழும் அனைவரும் மிருகத்தின் முத்திரை எது, தேவனுடைய முத்திரை எது என்று அறிந்திருப்பார்கள். இவைகளை அறிந்தும் வாங்கவும், விற்கவும் தடைவந்துவிடக்கூடாது, எந்த தண்டனையையும் பெறக்கூடாது, எந்த பிரச்சனையும் வந்து விடக்கூடாது என்று சுயநலமாக தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மக்கள் அநேகர் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள்.

## முதல் வாதை

*முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று. (வெளிப்படுத்தல் 16:2)*

### இரண்டாம் வாதை

*இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான்; உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின. (வெளிப்படுத்தல் 16:3)*

### மூன்றாம் வாதை

*மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின. அப்பொழுது தண்ணீர்களின் தூதன்: இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர். அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன். பலிபீடத்திலிருந்து வேறொருவன்: ஆம், சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்லக்கேட்டேன். (வெளிப்படுத்தல் 16:4-7)*

எதற்காக தேவன் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும்இரத்தமாக மாற்றுகிறார்? துன்மார்க்கராகிய சாத்தானுடையவர்கள் பரிசுத்தவான்களை கொடுமைப்படுத்தினார்கள். பரிசுத்தவான்களை துன்பப்படுத்தி, அநேகரை கொலை செய்தார்கள். ரோமன் கத்தோலிக்கம் தன் ஆட்சிக்காலத்தில் மட்டும் சுமார் 10 கோடி உண்மைக் கிறிஸ்தவர்களை கொலை செய்தது. அதற்கான விளைவுதான் இது. நம் மனதில் ஒரு கேள்வி எழும்பலாம். மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொண்ட அனைவரும் பரிசுத்தவான்களை கொடுமைப்படுத்தியிருக்கமாட்டார்கள். அப்படியிருக்க தேவன் எதற்காக அனைவருக்கும் இந்த தண்டனையைக் கொடுக்கிறார்? தேவனை நிராகரித்ததாலும், பிசாசை பின்பற்றியதாலும், செய்த பாவத்திற்கு தக்க தண்டனைகள் வழங்கப்படும்.

### நான்காம் வாதை

*நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை. (வெளிப்படுத்தல் 16:8,9)*

நான்காம் வாதை சூரியன்மேல் ஊற்றப்படுகிறது. இதன் காரணமாக, சூரியன் மனிதர்கள் தாங்க முடியாத வெப்பத்தை கக்குகிறது. சூரியனுடைய வெப்பத்தை தாங்க முடியாத மனிதர்கள் தேவனை தூஷித்தார்கள் என்று பார்க்கிறோம். தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறவர்கள், பிசாசின் குணத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். மிருகத்தின் முத்திரையை பெற்றுக்கொண்ட காரணத்தால் வாதிக்கப்படுகிறார்கள்.

கடைசிகாலத்தில் மனிதர்கள் அனைவரும் ஒன்று தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால்

மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மூன்றாவதாக தேர்வு செய்வதற்கு எந்தக் காரியமும் இல்லை. இரண்டு பக்கத்திலும் ஒரு கால் வைத்திருப்பவர்கள் அனைவரும் சாத்தானுடைய கூட்டத்தினராகவே கருதப்படுவார்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

முதல் வாதை கொடிய புண், இரண்டாவதாக சமுத்திரம் இரத்தமாக மாறியது, மூன்றாவதாக ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாக மாறியது, நான்காவது சூரியனுடைய வெப்பம். எதற்காக இந்த வாதை? ரோம் கலாச்சாரத்தின்படி ஞாயிற்றுக்கிழமை என்பது சூரியனுடைய நாள். சூரியனை தெய்வமாக தொழுதுகொள்கிறவர்களின் நாள்தான் வாரத்தின் முதல் நாள். அதை மனிதர்கள் மகிமைப்படுத்தினார்கள். **சூரியன் கடவுளல்ல, சூரியனையும் கட்டுப்படுத்தும் ஒரு தேவன் இருக்கிறார் என்பதை அவர்கள் உணர்வதற்காகவே, சூரியன் தாங்க முடியாத வெப்பத்தைக் கொடுப்பதற்கு வழி விடுகிறார்.**

கடைசிகால ஏழு வாதைகளுக்கும், எகிப்தின் பத்து வாதைகளுக்கும் (யாத்திராகமம் 7-11) நேரடி தொடர்பு உள்ளது. அங்கே அவர்கள் சிலைகளாக வைத்து வணங்கிய ஜீவன்களே அவர்களுக்கு வாதைகளாக வருவதற்கு தேவன் உத்தரவிட்டார். ஏனென்றால், அவர்கள் வணங்கும் உயிரினங்களின் சிலைகள் கடவுள் அல்ல. உண்மையான தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை எகிப்தியர்கள் அறிந்துகொள்வதற்காகவே தேவன் அங்கே அப்படிப்பட்ட வாதைகளை ஏற்படுத்தினார். அதைப்போலவே, இந்த கடைசிகால வாதைகள் - அனைத்திற்கும் மேலாக தேவன் இருக்கிறார் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது.

## ஐந்தாம் வாதை

*ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு, தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை. (வெளிப்படுத்தல் 16:10,11)*

இங்கே மிருகத்தினுடைய ராஜ்யம் ரோமன் கத்தோலிக்கத்தைக் குறிக்கிறது. ரோமன் கத்தோலிக்கத்திற்கு மிகப்பெரிய ஒரு இருளை தேவன் கொடுக்கிறார். புண்களும் வருத்தங்களும் அவர்களுக்கு அதிகமாக வரும். ஏனென்றால், அவர்கள் பரிசுத்தவான்களை அதிகமாக கொடுமைப்படுத்தினவர்களாக இருக்கிறார்கள். இந்த வாதையின் நாட்களில் கூட ஏழாம் நாளாகிய ஓய்வுநாளை கனப்படுத்துகிறதினாலேயே இவைகள் வருகிறது என்று சொல்லி மக்களை ஏமாற்றுவார்கள். ஆனால், கடைசியில் அந்த வாதை அவர்களுக்கே வரும். அந்த வாதையினாலே மிகவும் கஷ்டப்பட்டாலும், மனம்திரும்பாமல் தேவனை தூஷிப்பார்கள். ரோமன் கத்தோலிக்கத்தினுடைய வல்லமை குன்றிப்போவதை இங்கே பார்க்கிறோம்.

**ஆறாம் வாதை**

*ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று. (வெளிப்படுத்தல் 16:12)*

இங்கே ஆறாம் தூதன் தன் கலசத்தில் உள்ளதை ஐபிராத் நதியில் ஊற்றுகிறான். அப்பொழுது சூரியன் உதிக்கும் திசையில் ராஜாக்கள் வருவதற்கு வழி ஆயத்தமாகிறது. இந்தக் காரியம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.

*ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; (வெளிப்படுத்தல் 7:2)*

இங்கே தேவனுடைய தூதன் சூரியன் உதிக்கிற திசையிலிருந்து வருகிறார். இதன்படி சூரியன் உதிக்கிற திசையிலிருந்து வருகிற ராஜா இயேசு கிறிஸ்துவே என்பதை அறிந்துகொள்ளலாம். இந்த ஐபிராத்து நதி பாபிலோனில் ஓடுகிறது. *தானியேல் 5*-ம் அதிகாரத்தில் இதைப் பற்றி பார்க்கலாம். ஐபிராத்து நதியின் அந்த ராஜ்யத்திற்கு நீர் ஆதாரமாக இருந்தது. இந்த பாபிலோன் ராஜ்யத்தை வீழ்ந்த வந்த கோரேஸ் ராஜா, இந்த தண்ணீரை வற்றப்பண்ணி தண்ணீர் போகிற வழியாக அவர் படையோடு சென்று அந்த ராஜ்யத்தை வீழ்த்தி கைப்பற்றினார்.

இதன்படி ஐபிராத்து நதி வற்றிப்போகிற காரியம் பாபிலோனின் வீழ்ச்சியைக் குறிக்கிறது. ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பார்க்கும்போது பாபிலோன் ரோமன் கத்தோலிக்கத்தைக் குறிக்கிறது. ஐந்தாம் வாதையில் அதனுடைய சிங்காசனம் இருளடையும் என்று பார்த்தோம். அதற்கு முன்புவரைக்கும் பலவிதமான அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து பூமியிலுள்ள ராஜாக்களையும் மக்களையும் தன் பக்கமாக இழுத்து தன் கைக்குள்ளே வைத்திருந்தது இந்த ரோமன் கத்தோலிக்கம். ஆனால், இந்த வாதையின் நாட்களிலே அதினுடைய அதிகாரத்தை இழந்தது.

பல அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்த ரோமன் கத்தோலிக்கம், இந்த வாதையின் நாட்களில் எதையுமே செய்யமுடியவில்லையே என்று மக்கள் பார்ப்பார்கள். கடைசியாக அவர்களுக்கே அந்த வாதை வரும்போது மக்கள் அனைவரும் அவர்கள் மீதுண்டான நம்பிக்கையை இழந்துவிடுவார்கள். ரோமன் கத்தோலிக்கத்திற்கு விரோதமாக திரும்பிவிடுவார்கள். அதுவரைக்கும் அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள், இந்த வாதையின் நாட்களில் அவர்கள் பேச்சை கேட்காமல் அவர்களுக்கே அந்த வாதை வந்ததினால் அவர்களிடமிருந்து விலகிக்கொள்வார்கள். தண்ணீர் என்பது தீர்க்கதரிசன பார்வையில் ஜனக்கூட்டத்தைக் குறிக்கிறது. அப்படியானால், பாபிலோனிலிருந்து தண்ணீர் வற்றிப்போவது - அதற்கு கிடைத்த மக்களுடைய ஒத்தாசையும், உதவியும் இப்போது கிடைக்காமல் போகிறது என்பதைக் குறிக்கிறது. இந்த காரியங்கள் சூரியன் உதிக்கும் திசையிலிருந்து ராஜா வருவதற்கு வழியை ஆயத்தம்பண்ணும்.

அதாவது இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு, இந்தக் காரியங்கள் எல்லாம் உதவியாக இருக்கும் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

## மூன்று அசுத்த ஆவிகள்

*அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன். (வெளிப்படுத்தல் 16:13)*

**மூன்று வல்லமைகளான வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்தரிசி மூன்று பேர்களுடைய வாயிலிருந்து தவளைக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டது.** தவளை அசுத்தத்தைக் குறிக்கிறது. அப்படியானால், வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி மூன்று பேர்களும் சேர்ந்து தவளைக்கு ஒப்பான ஒரு அசுத்த ஆவியைக் கொண்டுவருவார்கள் என்பதே இதற்கு அர்த்தம். மக்களை இன்னும் மோசம் போக்குவதற்கு ஏதோ ஒரு காரியத்தை அவர்கள் மூன்று பேர்களும் இணைந்து செய்வார்கள். அது என்ன? **வலுசர்ப்பம் என்பது சாத்தானைக் குறிக்கிறது.** சாத்தான் முதல் முதலில் சொன்ன பொய் என்ன? ஏவாளிடம் நீங்கள் சாகவே சாகமாட்டீர்கள் என்று சொன்னான். இது பொய்யா? உண்மையா? இது பொய்தான். பாவம் செய்கிற அந்த ஆத்துமா சாகவே சாகும். ஆனால் சாத்தான் நீங்கள் சாகவே சாவதில்லை என்று சொல்லுகிறான். இந்த கருத்துதான் பல மதங்களில் ஆத்மாசாகாது, ஆத்மா அழியாது, இறந்தபின்பும் ஆத்மா உலாவிக்கொண்டிருக்கும் என்றெல்லாம் கூறுகிறார்கள். ரோமன் கத்தோலிக்கத்திலும் அப்படியொரு கொள்கை இருக்கிறது. உத்தரிக்கும் ஸ்தலம் என்கிற ஒரு இடம் இருக்கிறது. அங்கே தான் எல்லோரும் இருக்கிறார்கள். அவர்களுக்காக நாம் ஜெபித்தால் அவர்கள் பாவம் மன்னிக்கப்பட்டு அவர்கள் பரலோகத்திற்கு போவார்கள் என்று கூறுவார்கள்.

### 1. ஆவிமார்க்கம் - முதல் அசுத்த ஆவி

**ஒருமிகப்பெரிய வஞ்சகத்தின் ஆவியை சாத்தான் கொண்டு வரப்போகிறான். அது ஆவிமார்க்கம்.** ஆத்துமா அழியாது என்கிற ஒரு கொள்கையை மக்கள் மத்தியிலே விதைத்து அதன் மூலமாக மக்களை வஞ்சிக்கப்போகிறான். நமக்கு நெருக்கமான உறவினர்கள். நண்பர்கள் இறந்து போயிருப்பார்கள். அவர்களைப் போல பிசாசானவன் தோன்றி நம்மை வஞ்சிப்பான். எப்படி வஞ்சிப்பான்? ஓய்வுநாள் என்பது முதல்நாள் தான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாற்றிவிட்டார் என்று கூறுவான். நான் மாற்றினேன் என்று சாத்தான் கிறிஸ்துவைப்போல தோன்றி சொல்லுவான். நீங்கள் இதைத்தான் ஆசரிக்கவேண்டும். இந்த வாதை வருவதற்கு காரணம் இந்த ஏழாம் நாளைப் பரிசுத்தப்படுத்துகிற கூட்டத்தின் காரணமாகவே என்று சொல்லுவான். நமக்கு மிகவும் நெருக்கமானவர்கள் அப்படியாக வந்து சொல்லும்போது மக்கள் நிச்சயமாக ஏமாந்துபோவார்கள்.

### 2. அற்புதங்கள், அடையாளங்கள் - இரண்டாம் அசுத்த ஆவி

இந்த மிருகத்தின் வாயிலிருந்து வரும் ஆவி எதைக் குறிக்கிறது? போப்பைக் குறிக்கிறது. இந்த மிருகம் என்னசெய்யும்? **ரோமன் கத்தோலிக்கம் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து மறுபடியும் மக்களை ஏமாற்றும்.**

### 3. கள்ள தீர்க்கதரிசிகள் - மூன்றாம் அசுத்த ஆவி

கள்ளத்தீர்க்கதரிசிகள் வாயிலிருந்து வரும் ஆவி எதைக் குறிக்கிறது? விழுந்துபோன Protestant திருச்சபையைக் குறிக்கிறது. இன்று **அநேகர் கிறிஸ்துவின் பெயரை சொல்லிக்கொண்டு கள்ள உபதேசம் செய்கிறார்கள்.** அப்படிப்பட்டவர்களையே குறிக்கிறது. இந்த மூன்று பேரும் சேர்ந்து அநேக அற்புதங்களை செய்யப்போகிறார்கள். அநேக கள்ள உபதேசங்களை சொல்லப்போகிறார்கள். ஆவிமார்க்கம் மூலமாக அநேக மக்களை ஏமாற்றப்போகிறார்கள். ஐந்தாம் வாதையிலே மக்கள் போப்பின் மீதும், ரோமன் கத்தோலிக்கத்தின் மீதும் இந்த கள்ளதீர்க்கதரிசிகள் மீதும் ஒரு நம்பிக்கை இழந்தவர்களாக இருப்பார்கள். அப்படியாக அவர்கள் நம்பிக்கை இழந்து வரும்போது மறுபடியும் இவர்கள் இந்த கள்ளத்தீர்க்கதரிசிகளும் போப்பும், இந்த ஆவிமார்க்கங்களும் சேர்ந்து மறுபடியும் பெரிய அற்புதங்களை செய்து மக்கள் எல்லோரையும் கூட்டி சேர்ப்பார்கள்.

*அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. (வெளிப்படுத்தல் 16:14)*

அப்படி கூட்டிச் சேர்த்த பின்பு என்ன நடக்கும்? மக்கள் அனைவரையும் மறுபடியும் வஞ்சித்து, மறுபடியும் தேவனுடைய ஜனத்தை உபத்திரவப்படுத்தும்படியாக கூட்டிக்கொண்டு போகிறது. இந்த நேரத்தில் தான் ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கும் கூட்டத்தின்மீது மரண தண்டனையை சட்டப்பூர்வமாக இயற்றி அவர்களை கொலை செய்யதேடுவார்கள்.

*இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். (வெளிப்படுத்தல் 16:14)*

இங்கே **வஸ்திரம் என்பது தேவனுடைய நீதியைக் குறிக்கும்.** தேவனுடைய நீதியைக் காத்துகொண்டு, நீதியை உடையவனாக இருக்கிறவன் பாக்கியவான் என்று வசனம் கூறுகிறது. *வெளிப்படுத்தல் 3*-ம் அதிகாரத்தில் ஏழாவது திருச்சபையாகிய லவோதிக்கேயா திருச்சபையைப் பற்றி பேசும்போது நீ நிர்வாணியாக இருக்கிறாய். ஆனால், அதை நீ உணராமல் இருக்கிறாய் என்று தேவன் கூறுகிறார். நாம் நிர்வாணிகள் என்பதை உணர்ந்து தேவனிடத்தில் வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டால் இந்த வாதையின் காலத்திலே காப்பாற்றப்படுவோம்.

*அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான். (வெளிப்படுத்தல் 16:15)*

சாத்தான் அர்மகெதோன் என்னப்பட்ட இடத்தில் துன்மார்க்கரை கூட்டிச் சேர்ப்பான் என்று வசனம் சொல்கிறது. **அர்மகெதோன் என்கிற எபிரேய வார்த்தைக்கு "மலையில் ஒரு கூட்டம்" என்று அர்த்தம்.** இது ஒரு இடத்தை குறிக்கவில்லை. கடைசிகாலத்தில் ஆண்டவருக்கு விரோதமாக சாத்தான் எல்லோரையும் கூட்டிச்சேர்த்து செய்யப்போகும் யுத்தத்தை குறிக்கிறது. ஏசாயா 14:13,14 ன்படி பரலோகத்திலே வடபுறத்திலே ஒரு பர்வதம் இருக்கிறது. அங்கே ஆண்டவரை தொழுதுகொள்ளும்படியாக

அங்குள்ள பரிசுத்தவான்கள் எல்லோரும் கூடுவார்கள். தேவதூதர்கள் எல்லோரும் கூடுவார்கள். இந்த இடத்திலே சாத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறான்.

சாத்தான் எப்பொழுதுமே தேவன் எதை செய்கிறாரோ, அதற்கு நேர் எதிராகவே எதையும் செய்வான். பரலோகத்திலே அவன் ஆராதனை பர்வதத்திலே நான் உட்காரவேண்டும் என்று ஆசைப்பட்டான். இதை பரலோகத்திலே செய்ய முடியவில்லை. அதனாலே, இங்கே எல்லோரையும் கூட்டிச்சேர்க்கிறான். தேவன் எப்படி ஆராதனைக் கூட்டத்தில் வீட்டிருந்தாரோ, எல்லோரும் அவரை தொழுது கொண்டார்களோ, அதைப்போல இங்கே அனைவரும் தன்னை பின்பற்றும்படியாகவும் தன்னைத் தொழுதுகொள்ளும்படியாக கூட்டிச்சேர்க்கிறான். அவர்களைக் கூட்டிச்சேர்த்து தேவனுடைய பிள்ளைகள் மீது யுத்தம் செய்ய புறப்படுகிறான்.

### ஏழாம் வாதை

*ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது. சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை. அப்பொழுது மகா நகரம் மூன்றுபங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகாபாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்குமுன்பாக நினைப்பூட்டப்பட்டது. தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின. தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது; அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடிதாயிருந்தது. (வெளிப்படுத்தல் 16:17-21)*

யுத்தம் செய்வதற்காக சாத்தான் ஜனங்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கிறான். அந்த சமயத்தில் ஏழாவது தூதன் தன் கலசத்தில் உள்ளதை ஆகாயத்தில் ஊற்றுகிறான். அப்பொழுது சிங்காசனத்திலிருந்து ஆயிற்று என்று ஒரு சத்தம் வருகிறது. பெருஞ்சத்தமும், இடிமுழக்கமும், மின்னல்களும் உண்டாகிறது. பூமி மிகவும் அதிர்ந்தது. பூமியில் மனிதர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படி ஒரு சத்தம் உண்டாகவில்லை. இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.

துன்மார்க்கர் அனைவரையும் தேவனுடைய ஜனங்களை எதிர்த்து போர்செய்யும்படியாக கூட்டிச்சேர்க்கிறான். அப்படி கூட்டிச்சேர்க்கும் போது ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக பரலோகத்தைவிட்டு, பூமிக்கு வருவார் என்பதை தான் இது குறிக்கிறது.

தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு மிகப்பெரிய உபத்திரவம் காத்துக்கொண்டு இருக்கிறது. மிருகத்தின் முத்திரையை தரித்துக்கொள்கிறவர்களால் அவர்களுக்கு மிகப்பெரிய உபத்திரவம் காத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால், அவர்கள் அதைக் கண்டு

பயப்படத்தேவையில்லை. அவர்கள் மீது தேவன் இந்த ஏழு வாதைகளை ஊற்றி நியாயம் தீர்க்கிறார்.

அந்த ஏழு வாதைகளை பார்த்தும் அவர்கள் மனம் திரும்பாமல் தேவனுடைய ஜனம் தான் இதற்கு காரணம் என்று சொல்லி அவர்களுக்கு விரோதமாக வருவார்கள். அப்பொழுதும், அவர்கள் கவலைப்பட தேவையில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களுக்காக யுத்தம் செய்து தம்முடைய பிள்ளைகள் அனைவரையும் காப்பாற்றுவார்.

## மிருகத்தின் முத்திரையா? தேவனுடைய முத்திரையா?

நாம் எந்த கூட்டத்தில் இருக்க போகிறோம்? மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொண்டு மிருகத்தின் கூட்டத்தில் இருக்கப்போகிறோமா அல்லது தேவனுடைய முத்திரையைத் தரித்துக்கொண்டு தேவனுக்கு உண்மையாக வாழப்போகிறோமா?

மிருகத்தினுடைய முத்திரையைப் பெற்றுக்கொண்டால், நாம் தேவனுடைய கோபாக்கினைக்கு பாத்திரவான்களாக இருப்போம். தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொண்டால் தேவன் நிச்சயமாக நம்மைக் காப்பாற்றுவார்.

நமக்கு முன்பாக இரண்டும் வைக்கப்பட்டிருக்கிறது. மிருகத்தின் முத்திரை அல்லது தேவனுடைய முத்திரை ஆகிய இவற்றில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும். வேதம் சொன்னபடி மெய்யான ஓய்வுநாள் ஆசரிப்பாகிய ஏழாம்நாள் ஆசரிப்பு அல்லது உலகத்தில் போகிறபடி முதல் நாளை ஓய்வுநாளாக ஆசரிப்பது. இதுதான் கடைசிகாலத்தில் நமக்கு இருக்கப்போகிற மிகப்பெரிய ஒரு வஞ்சகம். இந்த வஞ்சகத்தைக் குறித்து நாம் ஜாக்கிரதையாக இருப்போமாக.

## அத்தியாயம் – 11

# புதிய எருசலேம்



**ஆலோசனை: வெளிப்படுத்தல் 19-22 அதிகாரங்களைப் படித்துவிட்டு, இந்த அத்தியாயத்தைப் படிக்கவும்.**

(வரைபடம் - பக்கம் 200)

வெளிப்படுத்தல் புத்தகத்தில் மூன்று நபர்களை குறித்து பார்க்கிறோம்.

- ✧ முதலாவது தேவன்
- ✧ இரண்டாவது தேவனுடைய மணவாட்டியாகிய திருச்சபை
- ✧ மூன்றாவது சாத்தான்

தேவனுடைய திருச்சபை அவருக்கு உண்மையாக இருக்கிறது. சாத்தான் தேவனுடைய திருச்சபையை உபத்திரவப்படுத்துகிறான். தேவன் பிசாசினிடமிருந்து தம்முடைய திருச்சபையை காப்பாற்றுகிறார். தேவனுடைய திருச்சபை மணவாளனுக்கு உண்மையாக இருந்து சத்தியத்தை சுமந்துகொண்டு போகிறது. மணவாளனும் பிசாசிடமிருந்து தன்னுடைய மணவாட்டியை காப்பாற்றுகிறார். **தேவன் திருச்சபையை எவ்வளவாக நேசிக்கிறார், பாதுகாக்கிறார், மீட்டுக்கொள்கிறார் என்பதே வெளிப்படுத்தல் புத்தகத்தின் மையக்கருத்தாக இருக்கிறது.** வெளிப்படுத்தல் புத்தகம் தேவன் மணவாட்டியாகிய திருச்சபையின்மேல் வைத்துள்ள அன்பை வெளிப்படுத்தும் புத்தகமாகும்.

## ஆயிரம் வருட அரசாட்சி

தேவன் தன்னுடைய திருச்சபையை ஒவ்வொரு பிரச்சனையிலிருந்தும் மீட்டுக்கொள்கிறார். ஏழு திருச்சபையின் மத்தியில் தேவன் இருக்கிறார் என்றால், தம்முடைய ஜனக்கூட்டத்தின் மத்தியில் இருக்கிறார் என்று

பொருள். ஒவ்வொரு திருச்சபைகளிலும் தவறுகள் நடந்தாலும், மனந்திரும்புதலுக்குள் திருச்சபையை வழிநடத்துகிறார். ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு நல்ல வெகுமதிகளையும், பரிசுகளையும் அறிவிக்கிறார். **ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு கிடைக்கும் ஒரு வெகுமதிதான் இந்த ஆயிரம் வருட அரசாட்சி.**

*ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன்கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். (வெளிப்படுத்தல் 20:1,2)*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய இரண்டாம் வருகையின்போது தம்முடைய பரிசுத்தவான்களை பரலோகத்திற்கு கூட்டி செல்வார். அதன் பின்பாக பிசாசு பூமியிலே தனித்துவிடப்படுவான். இது வரைக்கும் ஆயிரக்கணக்கான வருடங்களாக, உலகில் உள்ள எல்லா ஜனங்களையும் மோசம்போக்கிக் கொண்டிருந்த பிசாசு, இப்பொழுது எந்த ஜனமும் இல்லாமல் வெறுமையான பூமியில் ஆயிரம் வருடங்களாக தனித்து இருக்கப்போகிறான் என்று இந்த வசனம் கூறுகிறது.

*அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும். அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். (வெளிப்படுத்தல் 20:3,4)*

இவர்கள் தேவனுக்கு உண்மையாக இருந்த கூட்டத்தார். இவர்கள்தான் சிங்காசனத்தின் மேல் இருக்கிறவர்கள். இவர்களுக்கு தான் நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனே ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது மரித்த பரிசுத்தவான்களை உயிரோடே எழுப்புவார். அவர்களும் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் இயேசுகிறிஸ்துவோடு ஆயிரம் வருடம் ஆளுகை செய்வார்கள். அந்த ஆளுகையின் காலத்தில் அவர்கள் நியாயத்தீர்ப்பு செய்யப்போகிறார்கள்.**

## நியாயத்தீர்ப்பு செய்வதென்றால் என்ன?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 1844-ம் ஆண்டிலேயே நியாயத்தீர்ப்பை தொடங்கிவிட்டார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அப்படியானால், இங்கு எந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து தேவன் சொல்லப்படுகிறார்? நியாயத்தீர்ப்பிலேயே மூன்று வகைகள் உள்ளது.

1. முதலாவது குற்றவாளியா? இல்லையா? என்று விசாரித்தல். (Investigative Judgement)

2. இரண்டாவதாக தண்டனையை எழுதுதல், அறிவித்தல் (Announcement of the Judgement)

3. மூன்றாவது தண்டனையை நிறைவேற்றுதல். (Executive Judgement)

உதாரணமாக, ஒரு நபர் செய்த குற்றத்திற்காக 20-ஆம் தேதி தூக்கு தண்டனை என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு எழுதப்பட்டாலும், 20-ஆம் தேதி அன்றுதான் அந்த தண்டனையை நிறைவேற்றுவார்கள். இயேசு கிறிஸ்து 1844-ம் ஆண்டில் தொடங்கியது நுட்ப நியாய விசாரணை ஆகும். நுட்ப நியாய விசாரணையின்போது, ஆதாம் முதல் ஒவ்வொரு வழக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மன்னிக்கப்படாத பாவம் எதுவும் இருக்கிறதா என்று பார்த்து, ஜீவப்புஸ்தகத்திலிருக்கும் அவர்கள் பெயரை கிறுக்கிபோடலாமா அல்லது விட்டுவிடலாமா என்ற முடிவு எடுக்கப்படும். விசாரணை முடிந்தப்பின் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தீர்ப்பு கொடுக்கப்படும். ஜீவப் புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் அவரோடேகூட பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். **ஆயிரவருட அரசாட்சிக்குப்பின் இயேசு கிறிஸ்து மூன்றாம் முறை வரும்பொழுதே முடிவு செய்யப்பட்ட தண்டனைகளை நிறைவேற்றுவார்.** நுட்ப நியாய விசாரணையின்போது நித்திய ஜீவனுக்குரியவர்களாகவும், ஆக்கினைக்குரியவர்களாகவும் தீர்க்கப்பட்ட தீர்ப்பு ஆயிரம் வருட அரசாட்சியின்போது நீதிமான்களிடம் கொடுக்கப்படும். இதன் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சரியானது என்பதைப் புரிந்துகொள்வார்கள். ஏனென்றால், இந்த பரிசுத்தவான்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் பங்குபெறவேண்டும். அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சரியாகத் தான் இருக்கிறதெனப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே தேவன் ஆயிரம் வருடங்கள் அவகாசம் கொடுத்திருக்கிறார். தேவனுடைய தீர்ப்பை உணர்ந்துகொள்ள மனிதனுக்கு 1000 வருடங்கள் தேவைப்படுகிறது. இதன் மூலம் அவைகள் நியாயமுள்ளதாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். தேவன் இரண்டாம் வருகையிலேயே எல்லா துன்மார்க்கரையும் அழித்துவிட்டு தம்முடைய ஜனங்களை கூட்டிக்கொண்டு போயிருக்கலாம். ஆனால், மனிதர்கள் நியாயத்தீர்ப்பை புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே இவ்வளவு கால அவகாசத்தை தேவன் கொடுக்கிறார். அவருடைய அளவற்ற அன்பையே இந்த செயல் உணர்த்துகிறது.

ஒருவேளை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதே பாவிகள் அனைவரும் அழிக்கப்பட்டிருந்தால், அவர்களெல்லோரும் எதற்காக அழிக்கப்பட்டார்கள் என்பதற்கான முழுமையான விளக்கம் உயிர்த்தெழப்பட்ட பரிசுத்தவான்களுக்கு தெரியாமல் இருந்திருக்கும். நம்முடனே இருக்கும் சில நபர்கள் பரலோகத்திற்கு வருவார்கள் என்று நாம் நினைத்திருப்போம். ஒருவேளை அவர்கள் அங்கு வரவில்லையென்றால், ஏன் அவர்கள் பரலோகம் வரவில்லை என்று நமக்குள் ஒரு கேள்வி எழும்பும். சிலர் வரமாட்டார்கள் என்று நாம் நினைத்திருப்போம். ஆனால், அவர்கள் வந்திருப்பார்கள். நம் கண்களுக்கு பாவம் செய்துகொண்டிருந்தவர்கள் பரலோகம் வந்திருப்பது

நமக்கு ஆச்சரியத்தை அளிக்கும். இந்த குழப்பங்களுக்கு பதில் அளிக்கும்விதமாக தான் - இந்த ஆயிர வருட அரசாட்சியை தேவன் வைத்திருக்கிறார்.

இந்த ஆயிர வருட அரசாட்சி மனந்திரும்புவதற்கான வாய்ப்பு என்று சிலர் தவறான போதனைகள் செய்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து வருவதற்கு முன்பதாகவே அந்த கிருபையின் காலம் முடிந்துவிட்டது. ஆலயத்தின் கதவுகள் மூடப்பட்டதென்று *வெளிப்படுத்தல் 16*-ம் அதிகாரத்தில் பார்த்தோம். அதற்கு என்ன அர்த்தம்? இயேசு கிறிஸ்து, தனது ஆசாரிய ஊழியத்தை முடித்துவிட்டார். பரிந்து பேசும் ஊழியத்தை முடித்துவிட்டார். மனந்திரும்புவதற்கான வாய்ப்பில்லை என்றே அர்த்தம். எல்லோருக்கும் அழைப்பும் வாய்ப்பும் கொடுக்கப்பட்டது. ஆனால், மக்கள் தேவனுடைய முத்திரையை நிராகரித்து, மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொண்டு வாதையை அனுபவிக்கிறார்கள். போதுமான காலத்தையும், வாய்ப்பையும் அழைப்பையும் ஆண்டவர் கொடுத்துவிட்டார். அதனால், நிச்சயமாக இந்த ஆயிர வருட அரசாட்சி மக்கள் மனந்திரும்புவதற்காக அல்ல, தேவனுடைய நியாயத்தீர்பை உணர்ந்துகொள்ளுவதற்கான ஒரு வாய்ப்புதான் என்பதை அறிந்துகொள்ளலாம்.

**முதலாம் உயிர்த்தெழுதல்:**

*மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். (வெளிப்படுத்தல் 20:5)*

**இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிரடையும் பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலே முதலாம் உயிர்த்தெழுதல்.** அந்த சமயத்தில் துன்மார்க்கர் உயிர்த்தெழவில்லை. ஆயிரம் வருட அரசாட்சியின்போது துன்மார்க்கர் உயிர்த்தெழவில்லை என்பதே இந்த வசனத்தின் கருத்து.

*முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். (வெளிப்படுத்தல் 20:6)*

முதலாம் உயிர்தெழுதலில் உயிரடைந்தவர்கள் பரிசுத்தவான்களும் பாக்கியவான்களுமாய் இருக்கிறார்கள். அவர்கள் நித்தியமாக வாழ்வார்கள் என்பதே இந்த வசனத்தின் கருத்து.

**இரண்டாம் மரணம் என்றால் என்ன?**

நாமெல்லோரும் வயதாகி மரிப்பது முதலாம் மரணம். பரிசுத்தமான வாழ்க்கையை வாழும் நீதிமான்கள் மரித்தாலும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எழுந்திருப்பான் என்று வேதாகமம் கூறுகிறது. **இரண்டாம் மரணம் என்பது நித்திய மரணத்தை குறிக்கிறது.** முதலாம் மரணத்திற்குப்பின் உயிர்த்தெழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இரண்டாம் மரணத்திற்குப்பின் உயிர்த்தெழுவதற்கான வாயப்புகள் கிடையாது. **இரண்டாம் மரணம் தேவன் நியாயத்தீர்க்க போகிற நித்திய ஆக்கினையைக் குறிக்கிறது.**

முதலாவது உயிர்த்தெழுதலில் எழுந்தவர்கள் இயேசு கிறிஸ்துவோடு பரலோகம் சென்று ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். அந்த ஆயிர வருடங்கள் நிறைவாகும்போது சாத்தான் தன் காவலில் இருந்து விடுதலையடைகிறான்.

*அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். (வெளிப்படுத்தல் 20:7,8)*

ஆயிரம் வருடம் முடிந்து நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தம்முடைய திருச்சபையோடு பூமிக்கு வரும்போது, மறுபடியும் சாத்தான் விடுதலையாக்கப்படுவான். அப்பொழுது மரித்த துன்மார்க்கர் எல்லோரும் உயிர்த்தெழுவார்கள். அந்த சமயத்தில் சாத்தான் தேவனுடைய புதிய எருசலேமுக்கும், திருச்சபைக்கும் முன்பாக யுத்தம் செய்வதற்கு நான்கு திசைகளிலும் இருந்து, எல்லா துன்மார்க்கரையும் கூட்டிச்சேர்ப்பான். புதிய எருசலேமுக்கு எதிராக போர் செய்து, அதைக் கைப்பற்றுவோம் வாருங்கள் என்று அநேக பொய்களைச் சொல்லி உயிர்த்தெழுந்த துன்மார்க்கரைக் கூட்டடிச்சேர்ப்பான். அர்மகெதோன் யுத்தத்தைப்போலவே இந்த யுத்தமும் நடக்கும்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, ஆறாம் வாதையில் பார்த்தபடி மூன்று தவளைக்கு ஒப்பான அசுத்த ஆவிகள் யுத்தத்திற்கு கூட்டி சேர்த்தது போல, மூன்றாம் வருகையின்போதும், எல்லோரையும் கூட்டிசேர்த்து, தேவனுக்கும், தேவனுடைய ஜனத்திற்கும் விரோதமாக திசைதிருப்புகிறான். ஆறாவது எக்காளத்திற்கு கீழாக இருக்கிற தீர்க்கதரிசனம் அந்த சமயத்தில் மட்டுமல்லாமல், இந்த சமயத்திற்கும் பொருந்தும். இது இரண்டு நிறைவேறுதலைக் கொண்ட தீர்க்கதரிசனமாகும்.

*அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது. (வெளிப்படுத்தல் 20:9)*

**சாத்தான் துன்மார்க்கமான ஜனத்தோடு யுத்தத்திற்கு வரும்போது, தேவன் வானத்திலிருந்து அக்கினியால் அவர்களை பட்சித்துபோடுவார்.**

*மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:10)*

இது அவர்களுடைய நித்திய அழிவைக் குறிக்கிறது. கடைசியாக மூன்றாம் வருகையில் எருசலேம் நகரம் இறங்கி வரும்போது, சாத்தானும் அவன் கூட்டத்தாரும் எருசலேமுக்கு விரோதமாக வரும்போது, வானத்திலிருந்து வருகின்ற அக்கினியின் மூலமாக அவர்களை நித்தியமாக அழிப்பார்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக ஆயத்தம் செய்திருக்கும் நகரத்தைப் பற்றின சுவாரஸ்யமான காரியங்களைப் பார்க்கலாம்:

**1. பரலோகத்தில் தேவன் நமக்காக ஆயத்தம் பண்ணின நகரத்தின் பெயர் என்ன?**

*யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. (வெளிப்படுத்தல் 21:2)*

பரலோகத்தில் தேவன் நமக்கு ஆயத்தம் செய்கிற நகரத்தின் பெயர் **"புதிய எருசலேம்"** ஆகும். இதை தேவன் நமக்காக கட்டிக்கொண்டு இருக்கிறார்.

**2. புதிய எருசலேம் கட்டிட வடிவமைப்பாளரும் அதை கட்டினவரும் யார்?**

*ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே. (எபிரேயர் 11:10,16)*

பரலோகத்தின் தேவன் இவைகளை வடிவமைத்துக் கட்டுகிறார்.

**3. பரலோகத்தில் உள்ள புதிய எருசலேமின் அமைப்பை வேத வாக்கியங்கள் எவ்வாறு விவரிக்கின்றன?**

*அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது. (வெளிப்படுத்தல் 21:16)*

அதன் வடிவம் சதுரமாயிருந்தது. அகலமும் நீளமும் ஒன்றாய் இருக்கும். பன்னீராயிரம் ஸ்தாதி என்றால் என்ன? ஒரு மைல்-ஐ எட்டாக பிரித்தால், அதன் ஒரு பகுதி தான் ஸ்தாதி. 1800 மைல் அல்லது 2300 கிலோ மீட்டர் அளவிற்கு நீளமும், அகலமும் இருக்கும். அதாவது காஷ்மீர் துவங்கி, கன்னியாகுமாரி வரையுள்ள தூரம் எவ்வளவோ, அவ்வளவு தூரம் அகலமும், நீளமும், உயரமும் கொண்டதாக இருக்கிறது.

*அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது. அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது. (வெளிப்படுத்தல் 21:17,18)*

மிகவும் விலை மதிப்புள்ள பொருட்களால் தேவன் அதன் மதிலைக் கட்டியிருக்கிறார்.

*அதற்குப் பெரிதும் உயரமுமானமதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன. (வெளிப்படுத்தல் 21:12,13)*

**நகரத்திற்கு ஒவ்வொரு பக்கமும் மூன்று வாசல்கள் இருந்தன என்று பார்க்கிறோம். அந்த வாசல்களில் பன்னிரெண்டு கோத்திரத்தாரின் நாமங்கள் எழுதப்பட்டிருக்கிறது.** பன்னிரெண்டு என்னும் எண் தேவ ஜனத்தை குறிக்கிறது.

*நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன. (வெளிப்படுத்தல் 21:14)*

திருச்சபைக்கு இந்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் தான் அஸ்திபார கற்களாக இருந்தார்கள் என்று இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

மேலும், தன் புருஷனுக்காக அலங்கரிக்கபட்ட மணவாட்டியைப்போல இந்நகரம் காட்சியளித்தது என்று *வெளிப்படுத்தல் 21:2*-ம் *வசனம்* கூறுகிறது.

### 4. புதிய எருசலேமில் உள்ள ஜீவ விருட்சத்தின் கனியை பற்றி வேதவாக்கியம் என்ன விவரிக்கிறது?

*நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். (வெளிப்படுத்தல் 22:2)*

ஜீவ விருட்சம் நகரத்தின் வீதியின் மத்தியிலும், நதியின் இருக்கரைகளிலும் இருக்கிறது. இது நமக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது. ஜீவ விருட்சத்தைப் பற்றி ஆதியாகமம் புத்தகத்திலும் பார்க்கலாம். அங்கு பாவம் செய்ததால் மனிதர்கள் ஜீவவிருட்சத்தின் கனியை இழந்தார்கள். ஆனால், தேவனுக்கு உண்மையாக வாழ்ந்ததால் மீண்டும் ஜீவவிருட்சத்தின் கனியை பெற்றுக்கொண்டார்கள்.

### 5. பாவத்திற்கும் பாவிகளுக்கும் என்ன சம்பவிக்கும்?

இந்த ஆயிர வருட அரசாட்சியின் முடிவின்போது, புதிய எருசலேம் நகரம் இறங்கி பூமிக்கு வந்தடையும். அப்பொழுது துன்மார்க்கர்கள் சாத்தானோடு சேர்ந்து புதிய எருசலேம் நகரத்தை கைப்பற்ற வருவார்கள். அப்பொழுது, அவர்கள் அனைவரையும் தேவன் அக்கினியால் அழித்துப்போடுவார்.

### 6. பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்களுக்கு என்ன ஆச்சரியமான வாக்குதத்தங்களை தேவன் அருளுகிறார்?

*மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். (வெளிப்படுத்தல் 21:3)*

தேவன் நம்மோடிருப்பார் என்பது மிகப்பெரிய பாக்கியம். எருசலேம் பூமிக்கு வந்து இறங்கியபின் புதிய வானம் புதிய பூமியாக உலகம்

மாற்றப்படும். அப்பொழுது நாம் தேவனோடு இருப்போம். தேவன் இருப்பதனால் புதிய எருசலேம் பிரபஞ்சத்தின் மையப்பகுதியாக இருக்கும். மனந்திரும்பிய பாவிகளாகிய நம்மோடு, தேவன் நித்தியமாக இருக்கபோகிறார்.

*ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு. (சங்கீதம் 16:11)*

தேவனுடைய சமூகத்தில் இருக்கும்பொழுது, பரிபூரண ஆனந்தமும் பேரின்பமும் நமக்கு கிடைக்கும்.

*அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. (வெளிப்படுத்தல் 21:4)*

பாவத்தின் காரணமாக ஏற்பட்ட மரணம், துக்கம் மற்றும் அலறுதல் அங்கே இல்லை. ஏனென்றால், தேவன் பாவத்தை முற்றிலுமாக ஒழித்தார்.

*தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். (வெளிப்படுத்தல் 21:27)*

தீய காரியங்கள் எதுவும் அங்கே இருக்காது.

### 7. பரலோகத்திற்கு செல்ல காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவன் கொடுக்கும் நம்பிக்கை என்ன?

*அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகமறுரூபப்படுத்துவார். (பிலிப்பியர் 3:21)*

உயிர்தெழுதலின்போது, நம் உடலில் உள்ள குறைகள், பலவீனங்களையெல்லாம் போக்கி மகிமையுள்ள சரீரத்தை தேவன் நமக்குக் கொடுப்பார்.

### 8. பாவம் நிறைந்த பூமியைக் காட்டிலும், புதிய பூமி எவ்விதம் மாறுபட்டிருக்கும்?

இன்று பூமியின் நான்கில் மூன்று பங்கு சமுத்திரத்தால் நிறைந்திருக்கிறது. *வெளிப்படுத்தல் 22:1*-ம் வசனத்தின்படி புதிய பூமியில் சமுத்திரங்கள் இருக்காது. மேலும், பாலைவனங்கள் தோட்டமாக மாறும். ஒரு மிருகம் இன்னொரு மிருகத்தை அடித்து சாப்பிடும் பழக்கம் அங்கே இருக்காது. மிருகங்கள் அனைத்தும் கட்டுப்பட்டு இருக்கும். ஒரு சிறு பிள்ளை எல்லாவற்றையும் நடத்துவான் என்று ஏசாயா புஸ்தகம் கூறுகிறது. *(ஏசாயா 11:6-9, 65:25)*

### 9. மரிக்கின்ற சிறு குழந்தைகள் தேவனுடைய ராஜ்யத்தில் இருப்பார்களா?

*நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரேமியா 31:16,17)*

*நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதின் வீதிகளில் நிறைந்திருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 8:5)*

இறந்துபோன சிறு குழந்தைகள் அனைவரையும் தேவன் இரட்சித்து நித்திய ஜீவனைக் கொடுப்பார்.

**10.பரலோகத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள் தனக்கு அன்பானவர்களை பார்த்து அடையாளம் கண்டுகொள்ளுவார்களா?**

நிச்சயம் கண்டுகொள்ளுவார்கள். மகிமையான சரீரத்தைப் பெற்றுக்கொண்டாலும் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

**11. பரலோகத்தின் மக்கள் மெய்யான மாமிசமும் எலும்பும் உடையவர்களாக காணப்படுவார்களா?**

இயேசு கிறிஸ்து உயிர்தெழுந்து தம்முடைய சீடர்களுக்கு தரிசனமாகிறார். அனைவரும் ஆவி வந்துவிட்டது என்று பயப்படுவார்கள். அப்பொழுது இயேசு என்னை தொட்டுபாருங்கள் என்று சொல்லி மனிதனைப்போல் மாமிசமும், எலும்பும் உடையவராக இருப்பார் என்பதை உறுதிசெய்தார். அதைப்போலவே, பரலோகம் செல்லும் பரிசுத்தவான்களும் இருப்பார்கள்.

**12. புதிய பூமியில் நீதிமான்கள் தங்களது நேரத்தை எவ்விதமாக செலவு செய்வார்கள்?**

*வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள். (ஏசாயா 65:21)*

ஆதாமும், ஏவாளும் எப்படி தங்கள் நேரத்தை தோட்டத்தில் செலவு செய்தார்களோ, அதைப்போல் நீதிமான்களும் தங்கள் நேரத்தைப் பயனுள்ளதாக செலவு செய்வார்கள்.

**13. இன்னும் வேறு என்னென்ன ஆச்சர்யமான வேலைகளில் நீதிமான்கள் பங்குகொள்வார்கள்?**

- பரலோக இசையை மீட்டி பாடுவார்கள். *(ஏசாயா 35:10)*
- ஒவ்வொரு ஓய்வுநாளையும் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக ஆசரிப்பார்கள். *(ஏசாயா 66:22,23)*

- இப்பொழுதுபோல் மரங்களும் விருட்சங்களும் வெயிலில் வாடிப்போவதோ கருகிப்போவதோ கிடையாது.
- முற்பிதாக்களையும், தீர்க்கதரிசிகளையும் இன்னும் பலரை சந்திப்பார்கள். ஆதாம் முதற்கொண்டு எல்லாரையும் சந்திப்பது நிச்சயம்.
- புதிய பூமியின் மிருகங்களைக் குறித்து ஆராயலாம். இயற்கையைப் பற்றிய தெளிவான அறிவு நமக்குக் கொடுக்கப்படும்.
- சோர்வடையாமல் எப்பொழுதும் பயணித்துக்கொண்டு புதிய காரியங்களைக் கண்டுகொள்ளலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக தேவனோடு நித்தியமாக வாழும் மேலான ஆசீர்வாதத்தை நாம் பெறலாம்.

## 14. புதிய எருசலேமிற்குள் பிரவேசிக்கும் உரிமை யாருக்கு கிடைக்கும்?

*ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். (வெளிப்படுத்தல் 22:14)*

கற்பனைகளின்படி நடக்கிறவர்கள் மட்டுமே பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேமிற்குள் பிரவேசிப்பார்கள். வீணாக என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று கூப்பிடுகிறவர்கள் பிரவேசிக்கமாட்டார்கள் என்று மத்தேயு புத்தகத்தில் இயேசு கிறிஸ்து கூறுகிறார். உம்முடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம், பிசாசுகளை விரட்டினோம் என்று சொல்லுகிறவர்களை நோக்கி "அற்பவிசுவாசிகளே, தேவனின் சித்தத்தை செய்கிறவர்களே தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள்" (மத்தேயு 7:21-23) என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

நாம் பெயர் கிறிஸ்தவர்களாக இல்லாமல், தேவன் நமக்குச் செய்த அநேக நன்மைகளை நினைத்து, அவர் மீது உண்மையான அன்பு வைத்து, அவருக்கு உண்மையாக வாழும்போது தேவன் பரலோக ராஜ்யத்திற்குள் நம்மை பிரவேசிக்கப்பண்ணுவார்.

சாத்தான் சபைக்கு எப்படிப்பட்ட உபத்திரவங்களைக் கொடுத்தாலும், ஏமாற்றினாலும், வஞ்சித்தாலும், தேவன் திருச்சபையை அற்புதமாக வழிநடத்தி வருகிறார் என்பதை வெளிப்படுத்தல் புத்தகம் நமக்கு கற்றுத்தருகிறது. எச்சரிக்கைகளை கொடுத்த தேவன், "உன் கூடவே இருக்கிறேன்" என்ற நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறார். தன் உயிரை நமக்காக கொடுத்த அன்பு தேவன், எதிர்காலத்தில் சம்பவிக்கப்போகிறவைகளையும் வெளிப்படுத்தி, தம்முடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படியாக அன்புடன் கேட்கிறார்.

நம் மூலமாக அவர் லாபம் பெறுவதற்காக அல்ல. நாம் நித்தியமாக மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமென்பதற்காகவே.

## இவ்வளவு இரகசியங்களை ஏன் தேவன் கொடுக்க வேண்டும்? ஏன் சபையுடன் தேவன் இருக்கவேண்டும்?

ஏனென்றால், அன்பான தேவனாகிய நம் இயேசு கிறிஸ்து நம்மை நேசிக்கிறார். நாம் பாவங்கள் செய்திருந்தாலும், தேவன் நம்மை நேசிக்கிறார். நாம் சாத்தானிடம் ஏமாந்துவிடக் கூடாதென்று, அவனைக் குறித்த அநேகம் காரியங்களை இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தின் மூலம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுது நாம் நினைத்துபார்க்க முடியாத அளவிற்கு ஆசீர்வாதத்தை தேவன் தருவார். அப்படிப்பட்ட மேலான பாக்கியத்தை பெறுவதற்கு தேவன் நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

## துணைபுரிந்த நூல்களின் பட்டியல் (Bibliography):


1. Studies in Revelation by Pastor Stephen Bhor

(https://secretsunsealed.org/studies-in-revelation-pdf-download/)

2. Salvation in Symbols and Signs - 3ABN

(https://www.youtube.com/playlist?list=PLZE9r6f37K0AJPuImVU9DX-Y1Ntikqv0R)

3. 14000 - Literal or Symbolic by Dr. Michael Pedrin

(https://clearbibleanswers.org/books-michael-pedrin/144-000-literal-or-symbolic-book-pastor-michael-pedrin.html)

4. Book of Revelation by Norman McNulty

(https://www.audioverse.org/english/sermons/seriess/97/alistair-huong-and-norman-mcnulty-the-book-of-revelation.html?pageNum=1)

5. வெளிப்படுத்தல் by Pastor Dass Kumar

6. வெளிப்படுத்தல் புத்தகம் படிப்பது எப்படி? by Peter Madhavan

(https://www.youtube.com/watch?v=gQVBB8KEJDo,

https://www.youtube.com/watch?v=4qcGOKDKehU)